பிஸ்மில்லா ஹிர் றஹ்மா னிர் ற[illegible].

குணங்குடி மஸ்தான் ஸ[illegible]

அவர்கள் திருவாய்மலாந்தரு[illegible]

திருப்பாடற்றிரட்டு

இஃது

கோட்டாறு

தா. ப. ஷெய்குத்தம்பிப் பாவலரவர்கள்

பார்வையிடப்பட்ட பிரதிக்கிணங்க

சென்னை, திருவல்லிக்கேணி,

ஹாஜி M. A. ஷாஹுல் ஹமீது & ஸன்ஸ்,

அவர்களால் தங்களது

ஷாஹுல் ஹமீதிய்யா பிரஸில்

பதிப்பிக்கப்பட்டது.

இதன் விலை] **1964** *[ரூ. 3*

இலாதமி.

குணங்குடி மஸ்தான் ஸாஹிபு அவர்கள் பேரில்

மகா வித்வான் திருத்தணிகை

சரவணப் பெருமாளைய ரவர்கள் பாடிய

நான்மணி மாலை.

காப்பு.

நேரிசை வெண்பா.

எண்சீர்க் குணங்குடிமஸ் தான்றன் குருமணிமேல்
வண்சீர்த் தமிழ்நான் மணிமாலை—பண்சேர்க்கேன்
கற்பகத்தை ஐம்முகனைக் கைத்தொழுது பலவினையாம்
கற்பவை நீத்திடுவான் காப்பு.

நூல்.

நேரிசை வெண்பா.

பொன்றுதி யாம்போய்ப் பொருளீது புன்மைதந்த
மின்றுமென் றென்னா வீரிமிலே—விள்ளே
குணங்குடியா னஞ்செய் குருவாகி என்ற
கணங்குடியா னஞ்செய் வருத்தம். (1)

1

கட்டளைக் கலித்துறை.

வழுத்துந் தொழும்படை யன்பமைந் தோர்தமை மாநிலருள்
பழுத்துங் குணங்குடியான்கரை காண்டரு பண்புடைத்தாய்
முழுத்தும் பவக்கட லைக்கடப் பித்திசை முற்றுறவே
யழுத்துங் கரைபெற லில்லாத வானந்த மாங்கடலே (2)

அறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

கடல்சூழ் புவியி னுளத் திருளைக் கருணை யொளியினாற் களைந்து, விடல்சூழ்பவரிற் குணங்குடியான் மிக்கோ னெனற்கோர் தடையுளதோ, மிடல்சூழ் புறத்தின் விழி மறைத்து மேவுமிருளை விரிகதிரா, லடல்சூழ் பொருள்கள் பலவுநினை மலரியுயர்வாய்த் தோன்றுறுமே. (3)

நேரிசை யாசிரியப்பா.

தோன்றுபல் பாதகத் தொகுதியா மைந்தரை
யீன்று வளர்க்குமா வென்னுமிக் கலிதனிற்
காட்சியிற் புலப்படாக் கடவுளுண் டெனவு
மாட்சியி னவனையா மருவலுண் டெனலு
முடலமீ தன்றிவே றுயிருள தெனலுந்
துயினுண வொழித்துத் தொடர்புல னடக்கிப்
பயிலும வேலையம் பண்ணலுண் டெனலுங்
கண்டவர் யாரிவை கட்டுரை யாமெனக்
கொண்டரு நூலையுங் குருவையும் பழித்துத்
தவத்தொழில் சிறிதுந் தழுவாது கைவிட்
டவத்தொழின் முழுவது மஞ்சாது புரியுங்
கொடியவர் கெட்டுளங் குலைந்துடல் விதிர்ப்ப
வொடிவரு பத்தியி னுற்றவர் தமக்கெலாங்
கடவுளை யவனடி காண்டரு திறத்தினைச்

சடமுறு முயிரவன் றன்னின்வே றன்மையை
வியத்தகு மைம்புலன் வென்றுமன் னடக்குறு
நயத்தமி குயோகமெய்ஞ் ஞானநல் லியல்பினை
யையந் திரிபற வருளினு ளுள்ளங்
கையுறு நெல்லிக் கனியென வுணர்த்து
மிணங்கு மெய்ப் புகழொடு மிசைந்தான்
குணங்குடி யானெனக் குலவுமா தவனே. (4)

நேரிசை வெண்பா.

மாதவஞ்சேர் மேலோர் வழுத்துங் குணங்குடியான்
றீதவஞ்சேர் நம்மவித்தைத் தீர்க்குமெனக்—காதல்
விரைந்துபுகழ்ந் தோர்யிகழ்ந்தோர் மேவுவர்மெய்ப் போதம்
வரைந்து பிழைக்கும் வழி. (5)

கட்டளைக் கலித்துறை.

வழிசேர் குணங்குடியானெனு மாரியன் மல்கருள்கூர்
விழிசேர் திருமுகத்திங்கள்கண் டார்க்கன்றி மேவலுண்
பழிசேர் மனவிந்துகாந்த முருகுறும் பண்பினோடு [டோ
மொழிசேரஞ் ஞானமெனு மிருணீங்கு முறைமையுமே.

எண்சீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

முறைமுறைவந் தரசரெல்லாம் வணங்கச் சீர்சான்
முடிபுனைந்து புடவிமுழு தாளும் பேறு
மறைதருமோர் வீட்டினுக்கே யவாவுண் மேவி
யரைக்கருங்கோ சிகமொழித்துக் கந்தை சூழ்ந்து
பொறையுறுநின் றிருவருள்பெற் றைய மேற்றுண்
புண்ணியரா லொருபொருளென் றெண்ணற் காமோ
குறைவறுநற் புகழ்பரம யோகி யென்னுங்
குணங்குடியா னேவிளங்கக் கூறுவாயே. (7)

நேரிசை யாசிரியப்பா.

வாயினுற் பலநூல் வகைதெரிந் துரைத்துங்
காயமேல் வெண்பொடி கவினுறப் பூசியுஞ்
செய்கல் லாடையைத் திகழ்ந்திட வுடுத்துந்
துய்ய சடைமுடி துதைதர முடித்துந்
தண்டுக மண்டலஞ் சால்புறத் தாங்கியு
மண்டல மிசைவிரி மாண்ரேவி னிருந்தும்
படர்புலச் சூறையிற் படுசிறு துரும்பென
விடர்கெழு மனத்தரா யிருக்கின் றனர்பலர்
தெளிதிரைக் கடல்சூழ் நெடும்பெரும் புவிமிசை
யளிவளர் குணங்குடி யானொரு மமல
சாற்றுமச் சாதனந் தானென்றி லாமலும்
போற்று முனதருள் பொருந்திய வொருசில
ரொருதன தியல்புணர்ந் திருவினை யகற்றி
மூவா சைத்திற மோவாது விடுத்து
நாற்கதி நணுகுரு மேற்கதி விரும்பி
யைம்பொறிக் கெதிர்வற மெம்புல னடக்கி
யறுசம யங்களி னெறிநிலை தேறி
யெழுப்பிறப் பிறந்ததென் விழுமிய செருக்கிற்
பத்தியார் படரெலா மொருவி
நித்தியானந்த நிலையரா யினரே. (8)

நேரிசை வெண்பா.

ஆயுங்கா லன்பி னழியாத் துணையாகுங்
காயுங்கா லன்படர்ந்து காதவுடன்—மாயுங்கா
ணீதிக்கும் போதயனே கோரங் குணங்குடியான்
போதிக்கும் போதப் பொருள். (9)

கட்டளைக் கலித்துறை.

பொருட்செல்வம் புல்லியதென்றே விடுத்திந்தப் பூதலத்தி
னருட்செல்வ மெய்துங் குணங்குடி யானருளாதரித்தோர்
தெருட்செல்வ நன்கெய்தி யைம்புலன் மாளச்செகுத்தினியா
மிருட்செல்வ மல்ல மெனவே மகிழ்வுற் றிருப்பார்களே.

எண்சீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

கள்ளுண்டுங் கொலைபுரிந்துங் கபடஞ் செய்துங்
கனிகையர்தம் புணர்ப்பினுறு காமநோயா
லெள்ளுண்டுந் திருக்கொடும் பாதகத்தோர் தாமு
மிணையில்குணங் குடியானே யிறைவா வுன்றன்
விள்ளுண்ட கமலவடி படுந்தூளொன்று
மேற்படப்பெற் றிடினவர்வெவ் வினைகளெல்லாந்
தள்ளுண்டு சிறுசிலையோன் றெடுத்துவீசத்
தருநிறைபு குழாமெனவே பறந்துபோமே. (11)

நேரிசை யாசிரியப்பா.

மேதகு நிலையினை மேவிவாழ் வித்தக
வோதக விருடனை வொழிக்கு மாமணியே
யன்பினர் மகிழ்சொள வருள்பொழி முகிலே
யின்பநன் குதவுறு மினியதெள் ளமுதே
துகளற வோங்கிய துறவினர்க் கரசே
திகழறந் தாங்குபு சேர்குணங் குடியாய்
நின்னை வணங்கினோர் நெஞ்சா லயந்தொரு
முன்னை யிருத்திவே றுறைகின் றனையா
லொருவனே பலரோ வொருநீ
தெரிதரப் புகல்கநின் றிருவுள மகிழ்ந்தே. (12)

நேரிசை வெண்பா.

தேவருக்கு மெய்தரிய சிற்சுகத்தைத் தற்புகழ்ந்தோர்
யாவருக்கும் பாரினொழி யாதெளிதி—னீவனயக்
தொப்பில் பெருந்தவத்தி னேங்கு குணங்குடியான்
செப்பும் வினையனைத்துந் தீர்த்து. (13)

கட்டளைக் கலித்துறை.

துதியும்பழியு மமுதமும் புற்கையுந் துப்புமப்பு
நிதியுஞ் சிலையுங் கலவையுஞ் சேருநிகருறவே
வதியுந் திறத்திற் குணங்குடி யானருள் வாய்த்தவன் பாற்
பதியுங்கருத்துடையார்கள் கருத்துடைப்பார் கண்மெய்யே

எழுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

மெய்யுறுசீர்க்குணங்குடியா னெனும்பவனே பாரினிவ்
விரி நீர்வைப்பி, னய்யுறுபித் தொடுவாதமல்கியை மேலிடி
னுகாடி கோக்கி, யுய்யுறுநன்னிலை பெறவோர் மாத்திரை
தன்னுளமிரங்கி யுரைத்தால்செய்யும், பொய்யுறுமிப் பவ
கோயை யொழித்திணை யிலாதசுகம் பொருத்து மாறே.

நேரிசை யாசிரியப்பா.

மாறுகொண் டென்மன மாகிய பரியை
வீறுகொண் டவாவெனும் வீரனிங் கொருவ
னழுக்கா றெனுங்கல் லணைமிசை யார்த்தாங்
கிழுக்கா றுடைசின மெனுங்கலி னஞ்சேர்த்
தளியறு செருக்குமிக் காகிமே லிவர்ந்து
வலியெனும் வாதுவன் வாய்த்துடன் றொடர்தரப்
பொறியெனுங் கொடுவழி புகுந்திடச் செய்தலு

நெறிபிறழ்க் தப்பரி நீள்புலக் கான்புகுக்
தரிவையர் முயக்கென மளற்றினுள் வீழ்க்துக் (15)

தெரிபொன் னெனும்வனத் தீமிதித் தழுங்கியும்
பகர்மண் ணெனுங்கொடும் பாறைதாக் குற்று
மிகுபெருக் துன்பொடு மெலிக்துழல் கின்றதா
லின்குணங் குடியா னெனுக்தவர்க் கரசே
நன்குமற் றதனைநீ நல்வழி திருப்பியே
யருளெனும் வாளினவ் வீரனைத் துமித்துக்
கருதுமக் கல்லணை யாதிகள் களைக்தொழித்
தென்வச மாக்குவை யெனின்யா
னின்வச மாகுவ னினதியல் புகழ்க்தே (16)

நேரிசை வெண்பா.

புகழ்க்து குணங்குடியான் பொங்கிசையை நெஞ்சக்
திகழ்க்து புலவீர்பாடல் செய்மி—னிகழ்க்து
மலத்திருக்கை மாற்றி நிலை மாறுவின் பெய்தி
ரலத்திருக்கை நல்கு நயக்து. (17)

கட்டளைக் கலித்துறை.

நயமேவு கஞ்ச முகமுங் கருணை நயனமுஞ்சீர்ப்
பயமேவு செம்போ னுறழ்மேனி யும்மெழிற் பாதுகைசேர்
சயமேவு தாளுக் தலைவிரிகோலமுஞ் சார்க்தன்ரி
தயமேவு மென்றுங் குணங்குடி யானெனுஞ் சற்குருவே.

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

குருவாயடுத்தோர்க்கருள் சுரக்குங் கோதில் குணஞ்சேர்குணங்குடியா, னுருவாயருவா யுபயமுமா யொன்றாய்ப் பலவாயறிஞர்விழை, திருவாய்விளங்கும் பரநிலையைத்

தெரிக்கு மெனின்மற் றவன்பெருமை, ஒருவாயுடை
யோனும் புகழ்வே னோராயிரம்வா யுறினொருங்கே. (19)

நேரிசை யாசிரியப்பா.

ஒருங்கிய மனத்தொடு மொருகாசு மிலனாய்க்
கருங்கடற் புவிமிசைக் காதன்மீ தூர
வழுத்தி யன்புடை வந்திரக் கின்றவ
னெழிற்குணங் குடியா னெனுமருட் செல்வ
தன்னையு மிழப்ப தல்லா
லென்னை யவன்பெற வியம்பருள் சுரந்தே. (20)

நேரிசை வெண்பா.

சுரக்குமணற் கேணியினீர் தோண்டுந் தொறுமைக்
தாக்குங் குணங்குடியா னன்பர்க்—கிரக்கமொடு
மானந்தத் தேறல் வரப்புகல்வ தால்தோறு
மானந்தத் தேரல்சுரப் பாம். (21)

கட்டளைக் கலித்துறை.

ஆக்துணை நாடிற் குணங்குடியானென் றறிக்தவன்பாற்
போக்துணை யோடன்பு செய்தவர் செய்தவர் பூதலத்திற்
சாக்துணையுங்கை வடிச்செவ் வாய்ச்சியர் தாட்கமலப்
பூக்துணை யூட லொழித்தாங்குபுல்லினர் புல்லினரே. (22)

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

புல்லியு மல்லி சேர்க்து பொலிவுறு மணத்ததாகுக்
தொல்லியல் வழுவா வண்மை தொடற்குணங் குடியா
கல்லியன் ஞானமூர்த்தி காமமுற்றிடுத லாலே [னென்னு
சொல்லியவெனது சொல்லுக் தோன்றுறுஞ் சிறப்பினுற்றே

நேரிசை யாசிரியப்பா.

உற்றிளங் கெழுமிய நற்றிற வன்பொடுங்
குணங்குடி யானருட் கிணங்கினோ ரியார்க்கும்
பகைமையுங் கேண்மையும் புகனிலையெனலென்
னெடுங்கா லத்தமை நீங்காது பழகிய
கொடுங்கோன் மாயையைக் கொல்பெரும் பகைவராய்க்
கதுவிய கேண்மையிற் கலப்பர்
புதிதென வெய்திய போதந் தனக்கே. (24)

நேரிசை வெண்பா.

தனக்குத்தா னேநிகராந் தத்வத் துவனு
மினக்குத்தா னன்றி யெவர்க் குண்டு—நினைக்குங்காற்
கூறு மளிசேர் குணங்குடியா னேவிமலா
தேறுதவ யோகமுயல் சீர். (25)

கட்டளைக் கலித்துறை.

சீரை விரும்பினர்க் கின்றுமு லோபமெய் சேருநசை
போரை விரும்பினர்க் கின்று மனநிலை பூவையர்தம்
மோரை விரும்பினர்க் கின்றுங் குணங்குடியானிடஞ்செய்
நாரை விரும்பினர்க் கின்று முலகர் நவிலவரே. (26)

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

நவிலுமிளமையு மதனைவுறுமுடலு மதனையுள வயந்து
காக்கக், குவிபொருளும் புனற்குமிழி போலநிலை யல்ல
வெனுங் குணத்தையோர்ந்து, புவிபுகழுமெய்ஞ்ஞானக்
குணங்குடி யான்றிருவருளைப் பொருந் தற்கெண்ணார்,
தவலறுசீ ரகண்ட பரிபூரணமாஞ் சிற்பரன்றாள் சார்த
லுண்டே. (27)

நேரிசை யாசிரியப்பா.

உண்டு முடுத்து முறுபொரு ளீட்டியு
மெண்டகு வாழ்கா ளியாவையுங் கழித்தே
யணங்குசெய் வினைமுய லசடருக் கறிவருங்
குணங்குடி யானருட் குரிசி லிசையிசை
நாவாய் நாவா யாகு
மேவாப் பவக்கட லொழிந்து கரைபெறற்கே. (28)

நேரிசை வெண்பா.

பெறற்கரும்பே றென்றுளதோ பேருலகில் யார்க்குந்
தெறற்கரும்மா யைக்கழிவு செய்யும்—விறற்கிசைந்த
மன்னருளங் கொண்டு மதிக்குங்குணங்குடியான்
றன்னருளிங் குற்றூர் தமக்கு. (29)

கட்டளைக் கலித்துறை.

குவலைய மெங்கு மொருசாண் வயிற்றின் குழிநிறைப்பக்
கவலை யடைந்திரக் கேயுழல் வீர்பயன் கண்டதுண்டோ
நுவலைய நீக்குங் குணங்குடியானரு ளேக்கிவிழித்
திவலைய ருவன் பிற் சேரினுண் டாங்கடை தீர்சிறப்பே.

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

சிறக்கும் புகழுமதித்தோங்குஞ் செறிதீ வினைகளெல் லாம் விடுத்துப், பறக்கும் வித்தையிருணீங்கும் பக்தி யுளத்தின் மேன்மேலும், பிறக்குமதிதப் பெருவாழ்வு பெருகுமுலகிற் பேத நிலை, துறக்கு முரவோன் குணங்குடி யான் சொல்லு நெறிமைத் தினர்க்கே. (31)

நேரிசை யாசிரியப்பா.

துன்னுறு திரைக்கடல் சூழ்பெரும் புவிமிசை
பன்னுறு நிலைகெழு பலசம யங்களு
ளெச்சம யத்தவ ரெவ்வாறு கருதினு
மச்சம யத்தவர்க் கவ்வா றிருந்தருள்
பலவடி வங்களும் பலநா மங்களு
நலமுற மருவிய நாயக னாகியு
முருவும் பெயருமொன் றுறாது வேறாகிச்
செருவளர் சமயா தீதமுற் றொளிருஞ்
சிற்பரம் பொருளினைத் தெரிக்கு
நற்குணங் குடியானெனு நாயகனே. (32)

நேரிசை வெண்பா.

நாயகனார் நல்வரவை நாடுங் குலமகள்போற்
றூயகமாக் தற்பரனைத் தாங்காண—நேயமுளங்
கொண்டோர்க் கலது குணங்குடியான் கண்ணருட்டே
றுண்டோவிப் பூதலத்தி னுள். (33)

கட்டளைக் கலித்துறை.

உள்ளினுங் கண்மு னெழுதினுங் காதி னொருவர்சொலக்
கொள்ளினு நாவினிற் கூறினு மின்பங்கொழிக்குமுன்பேர்
கள்ளினு நெஞ்சை யழிக்கின்ற காமக் கரிசிலரைத்
தள்ளினுஞ் சூழுங் குணங்குடி யானெனுந் தற்பரனே.

கலி விருத்தம்.

பரம யோகியைப் பற்றொன் றிலான்றனைக்
கரவி லாத கருணைக் கடலினைக்

குரவ னாகுங் குணங்குடி யான்றனைப்
பரவி னார்க்குப் பவப்பிணி யில்லையே. (35)

நிலமண்டில வாசிரியப்பா.

இல்லையோ வுளதோ விடையென மருண்டு
முல்லையி னரும்பே முறுவலென் றுரைத்துங்
கொங்கையைச் செம்பொனிற் குடமென வியந்துஞ்
செங்கையைக் காந்தட் செழுமல ரென்றும்
விழியைக் கூர்கெடு வேற்படை யென்று
மொழியை கறுஞ்சுவை முதிரமிழ் தென்று
மிதழினைக் கொவ்வையி னெழிற்கனி யென்று
நுதலினைப் பிள்ளைப் பிறையென நுவன்றும்
வனிதையர் மயக்கிடை மயங்கிவீழ்ந் தழுதுந்
துணியுறு வோர்மனச் சோர்வினை யொழித்திட
மறைபுகன் ஞான வளமினி தருளுங்
குறைவரு நற்குணங் குடிகொண் டிருத்தலா
லுன்பெயர்க் காரணத் துறுபொரு ளுணர்ந்தனங்
கொன்பெறு புகழ்வளர் குணங்குடியானே. (36)

நேரிசை வெண்பா.

யானென தென்னுஞ் செருக்கற் றியாவுமொரு
தானென வேகொள்ளுந் தகையாகு—நானிலத்திற்
கூறும் கருணைக் குணங்குடியான் சந்நிதியி
னேறுங்கருத்தோர் நிலை. (37)

கட்டளைக் கலித்துறை.

நிலையுறுசத்துச்சித் தானந்த மாக நிறைபொருளைக்
கலையுறு மாட்சியிற் றூனுற்றி யாரையுங் காட்டவல்லோன்

புலையுறு மியாக்கை வருந்துற நோக்கும் புனிதர் புகழ்
தலையுறு சீர்கொள் குணங்குடி யானெனுஞ் சற்குணனே.

கலி விருத்தம்.

குணங்குடி யானருள் கூடி னலத்தி
னிணங்கிய சிந்தையை ரேத மகற்றி
யணங்கறு மின்பி னமர்ந்துல கத்தோர்
வணங்கிய வழுத்துறு மான்பொடு வாழ்வார். (39)

நிலமண்டில வாசிரியப்பா.

வார்தருங் கூந்தலார் வரிவிழிக் கணையு
மேர்தரு மதனவே ளெறிமலர்க் கணையு
மூறு செயப்பெறு தோளிர்திரு மேனியோய்
கூறுபல் புகழ்வளர் குணங்குடியானே
இயலுறு மன்புகொண் டெய்தினோ ரியார்க்கும்
யாவரு மதிகிலே யருள் செய நின்று
மண்ணுலகத்தனில் வழங்குகின்றனை நீ
விண்ணுல கந்தனில் விளங்குபொன் னெனவே. (40)

ஷெ குணங்குடி-மஸ்தான் ஸாஹிபு அவர்கள் மீது
ஷெ யார் மாணாக்கராகிய சிவயோகி

ஐயாசாமி முதலியாரவர்கள்பாடிய

தோத்திரப்பா.

எழுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

தன்னுத கத்தின்குணமழ லவிக்குந் தன்மையா யிருந்து
மோர்கடத்தி, னண்ணிய போதவழவினைற் கொதித்து

கலிவுறு கியாயம்போ லுடலில், பண்ணியவான்மாபொருந்தி யிக்தியத்தாற் பண்மையால்விளங்குவதல்லா, லெண்ணிய பந்தமாதியவுளவோ வியம்பிடாய் குணங்குடிவாழ்வே. (1)

மதிதன துருவிற் களங்கமில்லாமல் வான்மிசை வயங் குறப் புவியின், விதமுறு சாயை யாற்களங்குள தாய் விளங் குறுங் தகைமைபோலான்மா, சதிசெயுமனதால் விகற்ப சங் கற்பத் தன்மைகொண்டியங்குவதல்லா, விதமகிதத்துட் சார்வனவுளவோ வியம்பிடாய்குணங்குடிவாழ்வே (2)

மன்னியபடி கங்கட்களங்கமதாய் வழங்கினுஞ் சகச மாய்த் தோன்றுங், தன்னிழற்சாயையாற் கறுப்புள தாய்க் தயங்குறுக் தன்மைபோலான்மா, துன்னுமாணவத் திலைபி மானச்சுழ வினின்றியங்குவதல்லா, வின்னல் செய் துவித பேதமதுளவோ வியம்பிடாய் குணங்குடி வாழ்வே. (3)

மாசிலாதொளிரும் பெருவெளியாய வானிடைகீனிறம துதா, னேசுறு மித்தியா ரோபமாய்த் தோன்றி யிலகுறு முறைமைபோலான்மா, வாசுறு மவித்தியா மலசகிதத்தா லவத்தையிற் றியங்குவதல்லா, லீசனுச்சிவ னிரண்டு ளவோ வியம் பிடாய்குணங்குடிவாழ்வே. (4)

வானிடையொளியைப் பரப்புமேபரிதி மன்னியசலத்தி னுட் டோன்றி, லானதிலுருவ மச்சலமசைவி னசை வுருஞ் செய்கைபோ லான்மா, கானலிகர்த்த புனலிடையக்தக் காரண மோடிலங்குவதல்லா, லீனமாக்தனுவா தியபல வுளவோ வியம் பிடாய்குணங்குடிவாழ்வே. (5)

பகாரும்புணரன் னிதம் வெளுப்புடைய பான்மை யோடிருக்கினும் பார்க்கிற், சகசமாய்க்கரிய நிறமுறவிளங்குந் தன்மை போனித்தியவான்மா, தகையுறுமாயா மயக்கொடு தியங்கித் தனைமறந்துறங்குவதல்லா, லிகழுறுமமலத யகத்தைகளுளவோ வியம்பிடாய்குணங்குடிவாழ்வே. (6)

அழிவுறும்பிருதி வேகமாயிருந்து மசலமேழுதலியபல கல், லெழிலுறு முருக்க டோன்றி நின்றிலங்கு மியற்கை போனித் தியவான்மா, வொழிவுறுகாறு விதமுறு காமரூபமோடுறை குவதல்லா, விழிவுறுஞ்சிருட்டி யாதிய வுளவோ வியம்பிடாய்குணங்குடிவாழ்வே. (7)

வெள்ளைவா கனத்தின் விளங்கு வெண்மதிதன் மேற்பறந்தோடுதன் முகிலென், லுள்ளுறத்தெளியா தொளிர்மதியோடு தெனச்சொலுமுவமைபோ லான்மா, கள்ள மஞ்ஞான மாதியவவத்தை களுக்குள்ளாய்க் கலங்குவதல்லா, லெள்ளுருங் கொடிய சஞ்சலமுளவோ வியம்பிடாய்குணங்குடிவாழ்வே. (8)

எங்கணு மாகா யம்புவியாகி யிருந்து மண்ணுதிய பலவின், சங்கமாய் மறைபட் டதினதி னுருவாய்த் தடித்தொளிர்த் தன்மைபோலான்மா, பொங்கிய தாதான்மியத்திரை யதனுட் பொருந்தி நின்றிலங்கு வதல்லா, லிங்குளதங்கே யிலையெனலாமோ வியம்பிடாய் குணங்குடிவாழ்வே.

சுடரி லகியசெங் தீப்புகை யின்றிச் சொல்லும்பிரகாசமோடிருந்து, மடருறும் விறகாற் புகையுள தாகி யவிர்தரும் பான்மை போலான்மா, மடைமையஞ் ஞான விருத்திபே

தத்தான் மாசடைத்திலங்குவ தல்லா, விடர்பகையுறவா
தியதுய ருளவோ வியம்பிடாய்குணங்குடிவாழ்வே. (10)

சிந்தைசெய் மாயை யெனுங்கரு வியினு ளிகழ்தரும்ப்ர
பஞ்சபே தாதி, கந்தமுநானு விதமுமுரூப கண்ணியகாம
மாதிகளை, முக்குறக்கான னிரெனச் சிருட்டி முதலிய
தொழிற் பரப்பியது, னிக்கிரசால மல்லவோவுள வோ
வியம்பிடாய் குணங்குடிவாழ்வே. (11)

என்னகத்திருக்கு மெனக்குணீ யுனக்கு ளிருந்ததும்யா
னெனைமறக்தே, யென்னகத்திருக்கு மெனையன் றித்தேடி
யெங்கெங்கு மோடியா னிளைத்தே, னென்ன கத்திருக்கு
மெனையன் றியாவு மிலையிலை யிலையெனவறிந்தே, னென்ன
கத் திருந்து மெனக்கொளித்ததுவென் னியம்பிடாய்
குணங்குடிவாழ்வே. (12)

மாசிலாமணியேமுனிவர்களிறையே வள்ளலாய் வந்த
கண்மணியே, தேசிகனுகத் திரண்டுருவெடுத்த சித்தனே
யொளிர் சிந்தாமணியே, ஈசனேதேசோ மயந்தந்தரட்
கொண்ட வென்னுயிர்க்குயிரதாந்துணையே, போசனே
வாழி குணங்குடிவாழும் பூரணமௌனதேசிகனே. (13)

இகபரமிரண்டி லுயிரினுக்குயிரா யியங்கியவரசியா
மலரை,முகந்தகமகிழ்ந்து காதகிதங்கண் முழங்கியபேரின்ப
வீட்டிற், சுகமுறச்சும்மா விருக்கவாவெனவென் றுயர்பவக்
கடல்கடப் பித்தாய், புகழ்பிரகாசக் குணங்குடிவாழும்
பூரண மௌனதேசிகனே. (14)

பெருகுமட் டாங்க யோகமெஞ் ஞானப் பேரின்பக் கடலமுதாட்டி, குருமணி யணிந்த மார்பினி லணைத்துக் கொண்டு பின் முத்திதந் துவப்பாய், மருவியென் றனக்கு விருந்தெனக் களித்த வாசியாய் வந்திரு கலையின், புரிமயச் சுடராங் குணங்குடி வாழும் பூரணமௌனதே சிகனே. (3)

மூலத்து ளெழுந்த நாடிமூன் றுடனே முயங்கிய நாத வா யுவினுட், சிலமா முக்கண் குவித்தகக் கண்ணைத் திறந் தொளிர் வாசியை நோக்கி, மேலுமே னடனச் சிலம்பொலி காண விளக்கியெற் கின்னமு தளித்தாய், போலுரு தடருங் குணங்குடி வாழும் பூரணமௌனதே சிகனே. (4)

கதிரில கியதூண் டாமணி விளக்கின் கதிர் தருமண் டபமதனுட், டுநியுற விருத்தி யின்னமு தளித்துத் துன் னுமேழ்பவத்தொடர் பகற்றித், ததும்புறு தென்னைத் தயவுதந் தாண்டாய் சச்சிதா னந்ததற்பரமாம், பொது மையா மின்பக் குணங்குடி வாழும் பூரணமௌன தேசிகனே. (5)

குறிகுண தீத வகண்டிதா காரங் கொண்டுளங் கனிக் தமு தொழுகிச், செறிமணி நாத விளக்கினால் விளக்குத் திகழ் சுழி முனையெனு மனைகின், னெறிகிலை நிறுத்தி யென்னையாட் கொண்டாய் நித்தனே நின்மலா னந்தப், பொறிபொரித் துயருங் குணங்குடி வாழும் பூரணமௌன தேசிகனே. (6)

கண்ணிய சுவாச மெனும்பொரு ளதனை காணுக்கு காட் குறைக் திடவென், றெண்ணியே கொள்ளைக் களவு செய் கள்வ ரென்னுகால் வரையுமே பிடித்துத், திண் ணுறும் வாசி நூல்விலங் களித்துச் சிக்கெனச் சிறையினி

லடைத் தாய், புண்ணிய னென்னுங் குணங்குடி வாழும் பூரண மௌனதே சிகனே. (7)

உடலுயிர்க் குயிரா யுரைத்ததே பொருளென் றுரை யுவ மையுமிலா திறையைத், திடமுறக் கரத லாமல கம் போற் றெளிவறத் தெளிக் தெனுட் காட்டிச், சடமனித் தியம்பொய் பொய்யெனத் தேருந் தரமளித் தாயிரு வினை யைப், பொடி பொடியாக்குங் குணங்குடி வாழும் பூரண மௌனதே சிகனே. (8)

சுத்தவட் டாங்க யோகமே காட்டிச் சுடரினைத் துலங் கிடக் கூட்டிச், சித்தசாஞ் சல்ய மின்றியுண் ணூட்டித் திகழ்தரத் தெளித்தரு ளூட்டி, வத்துதா னென்னு நிலை யினிற் பூட்டி வருமம தைகளற வோட்டும், புத்திதந் தாண்டாய் குணங்குடி வாழும் பூரணமௌனதே சிகனே. (9)

எத்தனை லறியப் படும்பொரு ளியாவு மெனக்களித் திப மென விசைத்து, மந்திர வைம்பத் தோரெழுத் ததனின் மருவியா னினைவையு மறக்கத், தந்திர மாக வோர்மொழி மொழிக்தாய் தற்பரா னந்தமெய் யோகம், புந்தியி னொளிருங் குணங்குடி வாழும் பூரண மௌன தேசிகனே. (10)

பிறிவிலா முகந்தர்ப் பணத்திரு மையினைப் பெற்று மோர் முகமெனு மதுபோற், குறியிலாப் பரமே சிவனாய் விளங்குங் கொள்கையீ திரண்டல வெனவென், னறிவினை விளக்கி யகண் டமாய் விளங்கு மக்கெறி நெறியென நிறுத் தாய், பொறுமைசே ரின்பக் குணங்குடி வாழும் பூரண மௌனதேசிகனே. (11)

சணங்குடி கேய தந்தைதன் தாயார் தன்மக்களொடு மனை வியினுற், பணங்கொடு தேடும் பவக்கட நீந்திப் பர வெளி யெனுமுப்பாழ்க் கடந்து, யிணங்கிடா திணங்கும் பின்னொடு முன்னிற் பேரின்ப வீட்டினைக் காட்டும், குணங் குடி வாழு மௌனதே சிகவெங் குருபதஞ் சிரத்தின்மேற் கொள்வாம். (12)

கீர்த்தனம்

இராகம்-சௌராஷ்டிரம்.

பல்லவி.

அவனன்றி யோரணுவு மசையாதென்ப
தறியாயோ நெஞ்சமே.

அநுபல்லவி.

தவநின் றொளிருமறந் தாங்கி வளருமோன
தற்பர நித்யசிற் போதன்-மகி
மூற்புத மானவி னோதன்-என்று
செப்புங் குணங்குடி நாதன் (அவனன்றி)

சரணங்கள்

1. ஈயெரும் பாதி தொடாமலேந் நேரமு
மேதுக்கில் வாழ்க்கையை நாடி-யதில்
நேய மதாகவே நீ யபி மானித்து
நின் றனை யேகிதந் தேடி-சுடுந்
தீயஞ்சும் வெஞ்சொல் லெனும்பொய் யுரைத்துத்
தியக்குறும் புன்னிதக் கோடி-சற்றுந்

தூயதொன் றின்றிப் புவிமிசை நின்றழு
வாசையற் றேய்ந்து மெய் வாடி-யுழல்
மாயமொழிக்கிடக் கூடி-யரு
ளீயுங் குணங்குடி காதன் (அவனன்றி)

2. நன்மைவந் துற்றாலுந் தீமைவந் துற்றாலு
நானென்று நின்றுக்கொள் ளாமல்-நானும்
புன்மை நிறைந்திடும் வாரியில் மூழ்கிப்
புதைந்தனை யேனோதள் ளாமல்-புகல்
இம்மை மறுமை யிரண்டற வொன்றுள
தென்றதை யின்றேவிள் ளாமல்-இகழ்
மன்னுந் தொழிற்செய நேர்ந்தனையோ கெடு
வாழ்விதென் றெண்ணியெள் ளாமல்-அகந்
தன்னைக் கடிந்துகிள் ளாமல்-நின்ற
தென்னே குணங்குடி காதன் (அவனன்றி)

3. பொறியும் புலனைந்து பூதமும் பேதமும்
புகல்கா ரணங்கடந் தோனே-மலஞ்
செறியுஞ்சஞ் சலமென்னும் பொருளும் வினையிரண்டுஞ்
செய்யுந் தொழிலுமிடந் தோனே-நல்ல
நெறியும் பலசமயக் குறியுநாதாந்தத்துண்
ணினையு நனவும் படர்ந் தோனே-யோகந்
தறியுங் குறியுந்துண் ணிறையும் பரவெளியின்
நடருங் கடவில்கடந் தேசனே-விட்டுப்
பிறியாத அருள் தொடர்ந் தேசனே-எனக்
கறிவாங் குணங்குடி காதன் (அவனன்றி)

ஷெ மஸ்தான் ஸாஹிபு அவர்களின் மீது

வெங்கடராய பிள்ளைக் கவிராயரவர்கள் பாடிய

தோத்திரப்பா.

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

எல்லா மறிந்து மனமிலேயோ விரக்க மிலேயோ வுன்னெஞ்சங்
கல்லாவுரைக்க வாயிலேயோ காண வருத்தங் கண்ணிலேயோ
பொல்லா ரெனினுமடிமையென்று புகுந்த வடியார் தமைக்காக்க
வல்லா யலவோ குணங்குடியாய் வாழு மமுதே மகதேவே.

மாவே தனையிலடியார்கள் வருந்தப் பார்த்து மனமிரங் காக், கோவே நினக்கு மெவர்கள்குணங் குடியா னெனவும் பெயர் கொடுத்தார், பூவே மணமே யுக்காமம் பொருந்தும் வகை நீ புரியாயே, நீவே றெனவு முலகமெலா நிக்தை கூறு மிது நிசமே. (2)

வேத நிலேயோ வறியிலேயோ வேணி யானு மிலேயோ வோர், காத நிலேயோ பலகோடி காமம் படைத்த தேவர் களும், போத விலேயோ முறையிடிற்கேட் போருமிலேயோ பொருளிலேயோ, நீத மிலேயோ குணங்குடியாய் நீயு மிலேயோ புகலாயே. (3)

தருண மறிக்துங் காவாய்நீ தரணி மிசைநின் னடி யார்க்குங், கருணை புரியுங் குணங்குடியாங் கடவு ளென்ப தமகேயோ, பெருகு மிலவு காத்தகிளி பெரும்பே றலதென் பயன் கொளுவா, ரருமை யொடுநின் பதம்பாவி யழுது கனியுந் தொண்டர்களே. (4)

ஏச மனமும் வரவிலேயே மீயார் புகழ்பே சாதுன் புகழ், பேச மனமும் வரவிலேயே பெருகு பசிக்கு மோய் விலேயே, வாச மிலகு குணங்குடியாய் வருத்து மிவையெல் லாமறக்கப், பாச கமனும் வரவிலேயே பாவி யடியேன் படுவதென்னே. (5)

கல்லா ருறவும் பெரும்பசியும் கழிந்து போகும் வகை யுரைத்து, கல்லா ருறவு நின்பதமு காயே னடையும் படி புரிவா, யெல்லா ராலு மறியவொண்ணு விறைவா விந்த வேழையொடு, மல்லா டுவதென் குணங்குடியாய் வாழு மமுதே மகதேவே. (6)

அடியே னிங்கா ளுரைத்தவண்ண மாக விதையு மெண் ணியிருக், திடிலார் கதிசொல் குணங்குடியா யெல்லாங் கடவுள றியாதோ, கொடியா ரிடத்திற் சென்றுமனங் கூசிக் கைகா லலேந்தலேந்து, மடியாப் பிணம்போன் மடி வதற்கோ வகுத்தா னெனேநான் முகத்தானே. (7)

செய்யும் வகையுக் தெரியவிலே தேவர் மனமுக் தெரிய விலே, வையு மடையர் தமையடுத்து வாழ்த்தி துதித்துப் பற்காட்டி, கையு மேற்க மனமுமிலே கருத்து கிலேயா நிற்க வில்லே, பெய்யுங் கருணேக் குணங்குடியாய் பேதை யேற் கோர் வழியருளே. (8)

சொந்த மிலேயோ பன்னுளுந் தொழுத திலேயோ வடிமை யெனும், பந்த மிலேயோ பிள்ளேகளேப் படைத்த திலேயோ வருக்துமவர், சிந்தை யறியுஞ் செயலிலேயோ தேவா வாழுங் குணங்குடியாய், முந்த வினேக ளேத்தடுக்க முதல்வா வேண்டுக் தருணமிதே. (9)

பெரியோ ரெவரும் புகழ்ந்தேத்தும் பெரிய வுனையிப்
பேதையனுந், தெரியா வறிஞ னேதேதோ திகைத்துக்
கவியாற் சொன்னவெலாஞ், சரியா யுரைக்குந் துதியெனவே
தங்கு முனது மனங்கொண்டு, பரிவா யருளக் குணங்குடி
யாய் பல்கா லுன்னைப் பணிவேனே. (10)

நீயே யீன்ற தாய்தந்தை நீயே குருவி னெடுதெய்வ
நீயே யடியார்க் குதவுபொரு ணீயே சமய மறியும்வஸ்து
நீயே ஞான நெறிவிளக்க நீயே விளங்குங் குணக்குன்ற
நீயே யெங்கும் குணங்குடியாய் நிறைந்திவ் வடியைக் காப்பதுவே.

மஸ்தான் ஸாஹிபு அவர்கள் மீது

கோவளம் அருணாசல முதலியாரவர்கள் குமாரர்

சபாபதி முதலியாரவர்கள் பாடிய

பஞ்சரத்தினம்.

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

ஏர் பூத்த நயமுகமு மருள் பூத்த விருவிழியு மெழிற்
செவ்வாயும், தார்பூத்த மணிமார்பு மடியாரைப் பரிந்தணைத்
துத் தாங்குங் கையும், நீர்பூத்த மலர்த்தாளுங் கண்டெளி
யேன் தொழுவதென்றோ நிகழ்த்தல் வேண்டுஞ், சீர்பூத்த
சென்னை யில்வாழ் குணங்குடியே மெய்ஞ்ஞான தேவ
தேவே. (1)

வையமதி லெனக் கெனவக் திடும்பாழாங் கொடிய விருண் மாயைநீங்கத், துய்யநின தருளைக்கே விளக்கென வக் தடுத்தினியுன் றுணைத்தா ணல்காய், மெய்யடியா ருளத் தின்முளைத் திடுகரும்பே மதுரமெல்லாம் விளைந்த தேனே, செய்ய மணிச் செழுஞ்சுடரே குணங்குடியே மெய்ஞ்ஞான தேவதேவே. (2)

பாவநெறிக் குடன்படுத்து மடமாதர் மயக்கில்விழும் பதகனேனை, வாவென நின் றிருநோக்கா லழைத்திடுதலெக் காளோ வழுத்தல் வேண்டு, மாவலுறும் பழவடியா ருன்னுகின்ற பொருளனைத்து மளிக்க நாளுக், தேவதரு வாய்விளங்குங் குணங்குடியே மெய்ஞ்ஞான தேவ தேவே. (3)

பருதிதேர்ப் பாகனைவக் திருளணுகு மோகினது பது மத்தானைக், கருதுமடி யவர்கள்சூழாத் திருக்குமெனை யஞ் ஞானங் கல்ப்ப துண்டோ, சுருதிகளு முணர்வரிய பரம் பொருளே யேழுவகைத் தோற்றத்திற்குந், திருதியாய் நின் றளிக்குங் குணங்குடியே மெய்ஞ்ஞான தேவ தேவே. (4)

தொல்வினையாக் திரையெறியும் பவக்கடலிற் சுழலு கின்ற துரும்ப னேற்குக், கல்வியினைத் தந்தறிய ஞானவழி காட்டலுன்றன் கடமை யையா, பல்வளஞ்சேர் சென்னை நக ருறைவாழ்வே பேரின்பப் பரமானந்தச், செல்வமேதவப் பேறே குணங்குடியே மெய்ஞ்ஞான தேவ தேவே. (5)

மஸ்தான் ஸாஹிபு அவர்கள் மீது

காயற்பட்டணம்

ஷெய்கப்துல் காதிர் நயினார் லெப்பை

ஆலிம்புலவ ரவர்கள் பாடிய

ஒருபாவொருபஃது.

பதினான்கு சீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

அருவுருவ முருவுருவ மிருவுருவ முடனமையு
மடனுலவை யெரிய முனுமேல்

அறைபுனலும் விரிமணலு மறைவெளியு மெனவிவைகள்
அணுவினணு வினுமளவிலா

மருவுருவ மலைகடலு மெறும்புடவி படர்ககனு
மதியினொடு கதிர்ப ரிதியும்

மணியினிதி யுலகுமெரி காகுமவண் முயலமரர்
வகையுமிவை நனிபல னுறாஉம்

ஒருவுருவ மனுவுமெதிர் பகையுறவு கணமும்மை
ஒருவனருள் பெருகு கபிகள்

உரையொழுகி வருமுதிய வறிஞரினு முயர்பதவி
யொலிகளென நிலைமை புரிவீர்

வொருவுருவ முளமுடைய நமதடியர் துயரகல
விழிகருணை யானோக் கியே

வேதா குணக்குடியி னாதா வருந்தவ
வினோதா புரந்த ருள்கவே. (1)

காணாத நீர்க்ன லானாகு மாறுய
காலோக மாமா யையும்

காயாது பூவாது தானேக மாயோடு
காலேற வாவா னதும்

காணாது கோணாது கானேய லாதேதெ
னுவானு வாகா ரமும்

காடாத பாலோடி யூடாடு திவேக
காயோடு பேயா னதும்

தோணாது பாழாக மேலேகு மான்மாக
ரூபாகி சாலோ கமெய்

சூழாத சாமீப சாரூப மாய்வாழி
தாய்தான மேல்வாழ் குவீர்

வீணான வீணாள ராகாம னோராக
விழிகருணை யானோக் கியே

வேதா குணங்குடியி னாதா வரூந்தவ
வினோதா புரந்த ருள்கவே.

துதிமொழிக ளோயாது மனவுறுதி சாயாது
தொழுகைநிலை மாயா துசீர்

தொடர்நியம மாடாது விரதமுறை கோடாது
சுருதிநயம் வாடா துமேல்

குதிகொள்வினை காணாது கசடுபல பூணாது
கொடுமைவலி வேணா துவீண்

குலவுகளை பாவாது பலபொருளின் மேவாது
கொலைகளவு தாவா துநேர்

அதிகருண மாயோக தவமுயலு மேலோர்க
ளருமையொடு மாறு துறும்
அடியிணைக ளேசூடி யினியபல பேருன
தனிபவர்க ளேகோ டியே
விதிமறையி னுலாளு மொருவனருட் டானை
விழிகருணை யானேக் கியே
வேதா குணங்குடியி னுதா வருந்தவ
வினேதா புரந்த ருள்கவே. (3)

மனுநீதி யுணராத பெருமூடர் முதியோர்கள்
மரியாதை தெரியா தவர்
மதிவேறு மொழிவேறு பொருள்வேறு படுவார்கள்
மலிகோர நிறைநா வினர்
சினமூறு மனமாய மறியார்கள் குறியாத
சிறியோர்கள் வெறியாள் பவர்
திருமாது பகையாளர் மலர்மாது வசையாளர்
திறமாது மறமாள் பவர்
துனிசேரு நடையாளர் பெரியோர்க ளடையாளர்
துயர்வாழு மிடையா ளர்கள்
தொழுதாலு மகலாத கெடுபாவ முடியார்கள்
சுகமேது பெறுவார் களோ
வினவாத வினையாவு மொருபோது மணுகாமல்
விழிகருணை யானேக் கியே
வேதா குணங்குடியி னுதா வருந்தவ
வினேதா புரந்த ருள்கவே. (4)

போரத வன்புடைய தாய்தந்தை தந்துணைவர்
பேராசை தந்த மனையார்

பேருன மைந்தர்புடை சூழ்சால் பெருங்கிளைஞர்
பேரா நிறைந்த வுறவார்

ஆரா ரிருந்திடினு மாராரு வந்திடினும்
ஆதார மொன்று மிலையால்

ஆகாத வன்செயலி னாலே யெதிர்ந்தவினை
யாடாத கன்றொ ழியமேற்

சாராது வெம்பவ மெலாமோட வெங்கணிலை
தாழாதி கம்ப ரமுநீர்

தாமாக நின்றருளி னள்வீர்க ளென்றுமது
சார்பா யடைந்த வெளியேம்

வேராதி கொண்டமண மார்பா விரிந்தமலர்
விழிகருணை யாநோக்கியே

வேதாகு ணங்குடியி னாதா வருந்தவ
விநோதா புரந்த ருள்கவே. (5)

சுற்றிப் பிடித்தகொடி யொத்துப் பெருத்தபல
சுற்றத்தார் மற்று ளர்களும்

துக்கச் சுகித்துடை யுடுக்கத் தரிக்ககைக
சுட்டுத் தடுத்தி டுதலால்

பற்றித்தொடத் தொடுமு னெய்த்துப் பசப்புமெழில்
பச்சைக் கிளிக்கு தலையார்

பட்சத் திடத்துயிர்த்தி கைப்பச் செறுத்தரிவு
பட்டுப் புறப்படுதலால்

எற்றித் தவத்தினைமு றித்துக் கருத்தினை
யெடுத்துக் குலப்ப கையைமேல்

எட்டிப் பிடிக்கமதி யற்றுப் பவத்தொழி
லிழைத்துப் பிழைத்து முல்வரே

வெற்றிக் குணக்குரிசி லெத்திக்கு மெய்ப்பகிறை
விழிகருணை யானேக் கியே

வேதாகு ணங்குடியி ஞைதா வருந்தவ
விநோதா புரந்தருள் கவே. (6)

முன்பொன்றி நின்றுறுதி யின்சிந்தை விந்தையின்
மொழிந்தண்டு கின்ற முநியோர்

மூங்கும் பெருந்துறையி ருந்தங் கெழும்புகழ்
முகந்திங் கிதம்பொ ழியவே

அன்பொன்று கின்றபல னன்றன் றுவந்துமகிழ்
வங்கம் பெருந்த கையுளார்

அந்தந்த மன்பதைக ளும்பந்த முங்குளிர்
அகங்கொண்டு வந்து தொழுவே

என்பொன்று மின்பகிலே கண்கண் டிழிந்தகுண
மெங்குங் கடிந்த ரசர்கள்

எம்பந்த மெய்பொருள்கள் நுந்தஞ்ச மென்றடியி
னென்றுஞ் சரண்பு குதவே

மின்பொன் றுலங்குகுண கன்கின் றருங்குரிசில்
விழிகருணை யானேக் கியே

வேதா குணங்குடியி ஞைதா வருந்தவ
விநோதா புரந்த ருள்கவே. (7)

பாற்றேட்டைத் தேத்திரளை மாச்சோற்றைத் தீக்கனிகள்
பாற்சோற்றைத் தேட்டமதுபோல்
பார்த்தூட்டற் கேய்ப்பவறி வாற்றேக்கித் தேற்றநெறி
பாற்சேர்த்துக் காத்தி டுதலால்
காற்றேட்டக் கேத்திரமெய் மேற்போக்குக் கீழ்க்கழிவு
காற்பச்சற் பூட்டி கடுவிற்
காப்பரக்கக் கோட்டைவெளி கூத்தாட்டுக் கோட்பைகனி
காப்பாற்றிக் காட்டு தவினல்
தோற்றூட்சிக் காக்கியது பார்ப்போக்குப் பார்க்கரிய
தோப்பாய்க்கத் தாத்தகைய தாய்த்
தூர்த்தாங்கிற் பூத்தகனி காய்த்தாக்கத் தாற்குலவு
சூழ்பேட்டைப் போக்கி டுதலால்
வேற்றூட்டத் தோற்றாவு கூத்தோட்டிப் போற்றிசெய
விழிகருணை யானேக் கியே
வேதா குணங்குடியி னுதா வருந்தவ
விளேதா புரந்த ருள்கவே (8)

வையமொரு கையினுற மெய்யில்கள் பொய்யினுற
மையல்வலே பெய்யு மடவார்
வள்ளியிடை விள்ளுமுறை வெள்ளிவிழி துள்ளவரு
வள்ளமுறு கள்ளே விடலால்
பையமதி தொய்யவறி வுய்யவுணர் வையநெறி
பையினிடு கைய தளினல்
பள்ளமிகு வெள்ளமிசை தள்ளவிழு முள்ளழிகொள்
பள்ளேயர்த முள்ள கிலேயாய்த்

துய்யமகள் செய்யமகள் மெய்யின்மகள் கையின் மகள்
தொய்யிலணி வைய மகளும்

துள்ளிமல ரள்ளியெதிர் கொள்ளுமது பள்ளியிடை
துள்ளிவிசை தெள்ளி யுறலால்

வெய்யவினை யையவருள் செய்யுமென தையநிறை
விழிகருணை யானேக் கியே

வேதா குணங்குடியி னுதா வருந்தவ
விநோதா புரந்த ருள்கவே. (9)

கண்ணுமதி யுண்ணிணைவி னண்ணுமன வெண்ணமது
கண்ணுடியி லொண்ணு பொழுதும்

கண்ணான்மொழி யன்னநடைமின்னினிடை பொன்னனையர்
கன்னிநல மன்னு பொழுதும்

ஒண்ணிதிக னுண்ணுதொழில் பண்ணபொழு தன்னமுத
வுண்ணலொடு தின்னு பொழுதும்

உம்மையல திம்மையுள தெம்முறையும் வெம்மையற
வும்மருவல் பல்மு பொழுதும்

தன்மையொடு மென்மையொடு பெண்மையொடு மொண்
தன்மையொடு திண்மை கொளலால் [மையழி

தன்மகிமை யின்மைபெற வன்மையற நின்மையொடு
தன்மைபுரி சொன்மை யருள்வீர்

விண்ணுலகு மண்ணுலகு மெண்ணவரு மண்ணல்நிறை
விழிகருணை யானேக் கியே

வேதாகு ணங்குடியி னுதா வருந்தவ
விநோதா புரந்த ருள்கவே. (10)

வண்டனைச் சண்டனைக் கொடியனைக் கடியனை
வாதாடு மொழிகேடனை

வஞ்சனைப் புஞ்சனைக் கோபியைப் பாபியை
மாபாத கத்தொழிலனை

மிண்டனைக் கண்டனைக் கதியனைக் கொதியனை
வீணனை வீணனனை

வெஞ்சனைக் கொஞ்சனைக் கொலையனைப் புலையனை
வேகா வருங்கண்ணனை

அண்டனைக் கண்டனைத் தண்டனைத் தொண்டனை
யாகாத புன்செயலனை

ஆதியி னிடத்திரந் தன்பினொடு மென்பிழை
யகன்றொழிய வருள்புரிகுவீர்.

விண்டலமு மண்டலமு மெண்டிசையு மண்டுபுகழ்
விழிகருணை யானேக் கியே

வேதாகு ணங்குடியி னதா வருந்தவ
விநோதா புரந்தருள்கவே. (11)

இதுவுமப் புலவர் பாடிய

தோத்திரப்பா.

ஆதியொரு வன்கருணை யக்கட விடைப்படிந்
தானியுட வின்செயலெலா

மமையுமுறை போனிதீ இ யெழுவகைத் தோற்றத்தி
னடுமெழு பண்பி னியல்பே

வீதியொடு மொருமைப் படக்கண்டு முருவங்க
ணிலைபேறு தலைமா றிடா

நீடொளிவி னுதயநில னென்றுகொண் டும்பொருளை
நிச்சயித் தொன்று படவே

சோதியுள நினைவினு லைம்பூத வியல்பையுஞ்
சோரவிட் டும்பெரு குணக்

தோன்றலான் முழுமையு மாய்க்துசுய வஸ்துவாய்
தூய்மைபெற நின்ற வொலியே

போதிய குணங்குடிக் குரிமைபூண் டுயர்சென்னை
புரமீ தமர்ந்து கொண்டீர்

போற்றுமெளி யோர்க்குதவி யாற்றுமிறை யோன்றன்மை
புகழுமஸ் தான்ஸா ஹிபே. (1)

குவியுமுய ரறிவினர் பலவாக நினைவினைக்
கும்பித்து வாயு வுடனே

குறிபெற நிறுத்தியுள் ளெழுகாத விசையினிற்
கூர்ந்துடலி னியல்பொ ழித்துச்

செவியொலி யொதுக்கிவிழி தெரியா தடக்கிவரு
தேகபரி சந்த கைத்துத்

தேற்றுது வாசனைக ளோர் சுவையு மேற்றுது
சிக்தையா கந்த முறவே

கவினிரவு பகலற்று நிற்குநிலை நின்றுயிர்
கலந்திடத் தப்சு செய்தீர்

காலையம் பருவத்தி னுலகக் துறந்துவெகு
காரணம் விளைத்த வொலியே

புவிபுகழு மக்குவன் குருகொண்ட மெய்மொழியே
புவி நமர்க்கு கொள்வர்

பெற்றுமெனி மொத்தருளி மற்றுமிழை பொன்பதமை
புகழுவன் நாளை நபியே. (2)

அருதிய வல்லுனரை மெய்நகொரு வல்லருளே
வலிதர கொழுத்த கடலிற்

கதிரவ விழிந்தருந் தரியொரு கவிரதர்
கதிரெழ வலித்த தெதிலிற்

வெளிதுதவு முறைமொளரம் வல்லிமைல் இவைகவி
பிசெத்தி விதர வகைவரவ்

மிகிலை தநிமொரு மெட்டுமிந் திருவைவது
பெற்றிலை கேடுந் தருள்செய்

வலியவ மிறையவர்பு வழதவு மொர்வைவுமெய்
வலியுமுத நிக்க துதியு

வராசக டக்கிமது தரவிலெ நேரத்தமெனி
பருதைவட கொண்ட குமிலே

பொருளிய மக்குவன் குருகொண்ட குஞ்சொல்லே
புவி நமர்க்கு கொள்வர்

பெற்றுமெனி மொத்தருளி மற்றுமிழை பொன்பதமை
புகழுவன் நாளை நபியே. (3)

வல்லைதரு மொழிதிட்டு வரவர்ஞரை மதிதிட்டும்
வரசைவமொடு சிரவை விட்டு

வருமுனவை சிலைவிட்டு வந்துமைட பொடதிட்டு
வவமொசிரு பொருளை விட்டுல்

[illegible]

(4)

[illegible]

புங்கநிலை பொங்குநற் குடிகுணங் கொடுசென்னை
புரமீ தமர்ந்து கொண்டீர்
போற்றுமெளி யோர்க்குதவி யாற்றுமிறை யோன்றன்மை
புகழுமஸ் தான்ஸா ஹிபே. (5)

சொல்லினு லறிவுமுது பொருளினு னயமுமதி
தொடர்பினு லுயர்ஞா னமுந்
துதியினு லொருமையெழு நினைவினு விருதியுந்
துறவினு னனிவாழ்க் கையு
மல்லினுற் றனிமையும் பகலினுற் கவலலும்
மருளினு விகப ரமுமே
யன்பினுற் பேறுமடு துன்பினுற் சுகமுமற்
றுவியால் யோக நிலையு
மல்லினுற் கொண்டோங்கு மாதவர்க் கொருமா
மணிச்சுட ரெனத்தி கழவே
மகிமையொடு செய்தவப் புஞ்சமே யஞ்சுமன
மருளற்ற தெளிவ ருளுவீர்
புல்லினுற் பெருகுசுக நற்குணங் குடிசென்னை
புரமீ தமர்ந்து கொண்டீர்
போற்றுமெளி யோர்க்குதவி யாற்றுமிறை யோன்றன்மை
புகழுமஸ் தான்ஸா ஹிபே. (6)

கோவைதரு சொற்றொடரி னுற்கவிதை யுஞ்சீர்மை
கொண்டிடு முனாஜாத் துகாட்
கொளுவார மோதிடுது வாவுமிறை யோனருள்
குலாவுதிக் றும்பல் பலத்

தேவுக ளொடுங்கிவர் தடிதொழச் செயுமறைத்
திருவாக் கியத்தி சுழுமே
சேருமடி யார்க்காக வறபினுற் செய்துமித்
தேசத்தா ருந்த மிழினுற்
பாவகை யனந்தமு முயற்றிவளர் கல்வரு
பயிற்றி முறையா லுலகெலாம்
படர்கீர்த்தி யறிவினெடு துறவுமா யொன்றுபோற்
பரிவுற் றெழுந்த வொலியே
பூவுலகி லுயர்குணங் குடிபெற்ற பின்சென்னை
புரமீ தமர்ந்து கொண்டீர்
போற்றுமெளி யோர்க்குதவி யாற்றுமிறை யோன்றன்மை
புகழுமஸ் தான்ஸா ஹிபே. (7)

எத்தெந்தத் திசைதோறு முறுஞான யோகிக
ளிசைத்தடி பணிந்து நெறியி
னியல்புகடை யொழுகுமதன் வகையுமிக விவரமா
யெப்போது முற்ற றிந்து
சந்தத்த ருஞ்சிந்தை யானந்த வாரியிற்
ருழ்ந்துவந் தினிது போற்றுந்
தக்கவர் செறிந்தவனு மந்தக்கு டிக்குள்வளர்
தருசெய்கு சாகிப் பேரா
தந்தந்த சமயமுற் றினுமுள்ள சூட்சிக
ளனைத்து மொரு மதிமதிக்க
வறிவா ளொதுக்கிவிட் டொருசார முப்பற்றி
யடராது கண்டித் துமேற்
பொக்தென்று நற்குணங் குடிகொண்ட பின்சென்னை
புரமீ தமர்ந்து கொண்டீர்

போற்றுமெளி யோர்க்குதவி யாற்றுமிறை யோன்றன்மை
புகழுமஸ் தான்ஸா ஹிபே. (8)

மகிழோங்க வுள்ளமறி வுகளோங்க கன்னிலையின்
வழியோங்க மொழியு மோங்க
மறையோங்க வுண்மையது துறையோங்க மாதவமெய்
வகையோங்க மிசையு மோங்க
விகழோங்கு தீவினையி னிகழோங்கு முலககடை
யெதிரோங்கி டாம லுடலி
னியல்போங்கு மைம்பொறிக ளயர்போங்க விட்டுறுதி
யிகமோங்க மகமோங் குவீர்
அகமோங்கு பாவிமன முகிழோங்கு பன்னிலைவி
னடலோங்க விடமா றினின்
றகமோங்க வெக்துயரி னகையோங்கி டக்குழறி
யழுதோங்கன் முறையா குமோ
புகழோங்கு கற்குணங் குடியோங்க வுஞ்சென்னை
புரமீ தமர்ந்துகொண்மர்
பொற்றுமெளி யோர்க்குதவி யாற்றுமிறை யோன்றன்மை
புகழுமஸ் தான்ஸா ஹிபே. (9)

கலனூர்ந்த முகிலினிறை கடலினுங் காட்டினுயிர்
கனிதுன்று கிரிக டமினும்
கான்செய்கதிர் மதியினுக் தாரகை கணத்தினும்
கருமணிகொள் பொற்ப தியினும்
வலனூர்ந்த மற்றுள்ள செல்வத்தி னும்பெற்றின்
வகையினும் பலபே தமாய்
வருகின்ற வோரொளியை வெளிகின்ற வறிவது
வாம்பினற் றடைப டுத்திப்

பலனூர்த்த ஷெய்குசுல்த் தானப்துல் காதிர்லெப்
பையாலீ மென்ற புகழைப்

பல்லோர்க ளும்பித்தன் மஸ்தா னெனப்புவி
பயிற்சிகொளு மாநா தரே

புலனூர்ந்த நற்குணங் குடிகொண்ட ருஞ்சென்னை
புரமீ தமர்ந்து கொண்டீர்

போற்றுமெளி யோர்க்குதவி யாற்றுமிறை யோன்றன்மை
புகழுமஸ் தான்ஸா ஹிபே. (10)

ஷெ புலவரவர் பாடிய

வாயுறைவாழ்த்து

நேரிசை யாசிரியப்பா.

கார்நனி விசும்புங் கதிரு மதியு
நீர்நணி கடலு நிலனு மலையு
மைம்பெரும் பூதமு மவற்று ளேங்குந்
தம்பெருங் குணமுந் தழுஉஞ்சா மசாமுஞ்
சென்ற வாணையிற் சிதையா நிலையினு
நின்ற முறையே நிகழ்தலி னுனு
மேறுமா றுகா வேறுவேறுக
மாறுகூ றுகா மன்னுரை யாலுஞ்
சாதியுந் தொழிலுந் தக்கன பண்பும்
பேதியா தியங்கும் பெறுமுறை யாலுங்
கோன்மைமிற் பாகங் கொள்ளுங் கூட்டின்
பான்மையொன் றில்லா வல்லயத் தாலே
யொன்றே யனைத்தையு முடையவுண் மைப்பொரு

ளென்றே மறைவிலா தியங்கு கின்றதை
விதிபடு திரைகளால் விளங்கா தாய்த்துங்
கதிபடு மனத்தாற் கலங்கு மக்கா
ணேர்வழி முயல்வா னிலைத்த சிந்தையி
னேர்வழி முயல்வா னுணரு மக்காள்
பதையா திருக்கும் பண்புடைச் சான்றீ
ரிதையா சனஞ்சித் திலங்கிய சான்றீர்
கற்கருத் துடையீர் கனியறி வுடையீ
றெற்கருத் தியம்புவ னினிதினிற் கேண்மின்
பதியிற் சிறந்த பதியா மதுரைப்
பதியிற் பிரபல மகேகம் படைத்தவ
ரருங்கலைக் கடலை யதமெனுங் கலத்தா
லொருங்களக் தறியா வுயர்கரை கண்டவ
ராலயக் கபாடத் தலைதா டிறக்க
மேலவர் துதிதரப் பாடிய வென்றிய
ரலைவா யுடமருண் டரித்த வரியினை
யுலைவாய்ப் பொய்யா தொருபுறம் பெய்யுந்
தங்கையைக் கண்டு தகாதென யாமொடு
சங்கித முயற்சியைத் தகர்த்துவிட் டெறிந்தவ
ருயர் கபி கயினு ரோதிய வொசிய்யத்
தியறா வெவர்க்கு மியற்றமிழ் செய்தவர்
நுவலரு மின்னு றூறுத் தீனென்
றெவரு மேத்து மிருந்தவ மேலவர்
பயனுர் மரபிற் பலன்கொள வந்த
கயினுர் முஹம்மது சாஹிபி காத
ரருளிய சுல்த்தான் அஹ்மது சாகிபு
தரும்சேய் செய்கு மீரான் ஸாஹிபு
செய்யுந் தவமு நேர்மையுந் திரண்டு

வாயுறைவாழ்த்து

வையம் விளங்க வருமொரு மாதவ
ரில்லறந் துறவற மிருவகை யொழுங்கு
நல்லற மாக நடக்கும் நடக்கையர்
மலையும் மனமு மறைபடு தலமும்
நிலைய முணர்வா னிட்டை யோகம்
வணக்கங் காட்சி வகைபல கொண்டு
முணக்கு முடலோ டொரு முகந் தொடர்ந்து
மிருபத் தைந்தாண் டிதுசஞ் சாரஞ்
தருபத் தியினார் தந்நிலை விளங்குங்
காரண வொலியாய்க் கமலகொண் டானிற்
பூரண மடைந்த புண்ணிய மூர்த்தி
நன்றிசால் செய்கு நயினார் முஹம்மது
வென்றிசா லரும்பயன் விளங்க வந்த
நற்குணங் குடிகொ ணயினார் முஹம்மது
இக்குணங் குடியி லிருந்தவக் குன்றாய்
நலம்பெற வுதித்த நன்மக வானோர்
தவம்பெறு முறைமையைச் சாற்றக் கேண்மின்
சிறுபரு வத்தே தெளிதரு வேதத்
துறுபய னெல்லா மோதி யுணர்ந்து
மரபி னிலக்கணத் தாவன வெவையு
மறுவறத் தேறு மதியின ராகி
யொப்பில் குணத்தி னோங்கிய சுல்த்தான்
அப்துல் காதிரி லெப்பை யாலிம்
எனப்பெயர் விளக்க மெழுந்து வருகையில்
வனப்பறூஉம் வாலை வயதுபதி னேழிற்
றந்தைதா டொழுது தருங்கரம் பற்றி
மூந்த வுபதேச மொழிநலம் பெற்றுத்
தன்னிலை திரியாத் தவத்திய லெடுத்து

மன்னிலை கொள்ளு மனத்தி னானே
தவத்தின தியல்புந் தாபத ரியல்பு
நலத்துறை யுணர்த்து நன்னூர் பலவும்
கைதருங் கீழக் கரைதனில் வாழுஞ்
செய்கப்துல் காதிரி லெப்பை
யாலீ மிடத்தி லருளினோ டோதிச்
சாலவுந் தேறித் தாபத முறைகொண்
டருணபி கிசுறத் தாயிரத் திருநூற்
றிருபதோ டிருநாள் காண்டினி லுலக
முற்றுந் துறந்து முறைபல கடிந்து
பற்றற் றெவையும் பயன்பட வொழுகித்
தேங்கமழ் சோலைத் திரிசிர புரத்தி
லோங்கிய வறிவா லுயர்ந்த ஆலிம்
தன்னிலை யுணருந் தன்மையுங் குணமு
முன்னிலை யியல்பு முழுதும் பதிந்து
பூமியி லெவர்க்கும் பொருளா மௌலடி
சாம் சாகிபு தம்மைத் தொடர்ந்து
மாட்சிமை தருநெறி வகைநலந் துலங்கத்
தீட்சை பெற்றுச் சிறந்தன பெற்றுத்
தனிநிலை யொருமையைத் தாங்கி யிருவினைத்
துனியினை யொருவி மும்மலந் தொலைத்து
நாற்குணந் தெரிவுற் றைம்புல னடக்கி
யேற்கு முப்பகை யாறையு மெறிந்து
பாதக மேழையும் பசையறப் பறித்து
மேதகு தவத்துறுப் பெட்டையு மேவி
விரத மொன்பதி னெடுப்பன வெடுத்து
விரதம் பத்தென விளங்கிய துறவே
பொருளாக் கொண்டு பொருந்தி வருகையில்

இருளாப் பகலர விதுவே நோக்கமாய்ப்
பகலெல்லா நோன்பு மிரவெலாந் தொழுகையு
மகலா நன்முறை யாகவுஞ் சிலநா
ணீர்நசை யூணசை நீங்கியு மாக்கைக்
கோர்நசை யுங்கொடா தோர்ப்புந் தாங்கி
வாய்வா ளாமையா வருநாட் கிடையினிற்
போயொதுக் கொருங்கு புகுந்தொழிந் திருப்பச்
சிந்தையிற் றுணிந்து சிக்கந்த ரடங்கிய
மந்திர மருகின் மண்பல மொன்று
மறந்தாங்கி யூர்ப்புறத் தடுக்கல கத்துந்
திறந்தாங்கி யோரறு திங்களுந் தொண்டியின்
மாதுல ரடங்கிய வாழைத் தோப்பினு
மேதமொன் றணுகா நீரிரு திங்களும்
மறைக்கா ளுழியி னமிழ்ந்தா நோன்பா
யுரைக்காது கல்வத்தி யோகத் திருந்தன
ருள்ளிருந் தொருங்கு காணுங் காட்சியும்
வெள்ளிடை விரிந்து பரந்த காட்சியுந்
தள்ளா தேகமாந் தன்னை யமிழ்த்தலின்
விள்ளா துணர்வினு மெய்ம்மை விளைதமே
காணுங் கருத்தரா மௌனகண் டிதரா
காணும் பித்தர்போற் றன்னடை கொண்டு
கிளர்ந்தெழு சதுர கிரியினும் பருக்கி
வளர்ந்த மலையினு காக மலையினும்
யானை மலையினு மிருங்குகை செறிந்த
வேனை மலையினு மிருளடை வனத்தும்
பல்விலங் காடிய பனமரப் பொதும்பு
கல்விலங் காடிய பொழினதிக் கரையினு
மறிமட மசுனா பாகத் திருத்துஞ்

செறிமட யோகியர் சேகர நீத்துஞ்
சருகுங் கிழங்குந் தழையுங் குழையுங்
கருகுங் கனியுங் காயும் புசித்து
மாசன விகற்பத் தாகிய யோகமும்
போசன மறியாப் பொழுதொடு நேமமு
மேலாங் காலும் கீழாந் தலையும்
பாலா முடலுமாப் பலபட வணங்கியு
மொருபக லன்றிப் பல்பகல் விரதமும்
பலவிர வன்றி யோரிரா வொழிபு
முடையா னுடையதோர் சம்மதத் துணர்வி
னடையா னன்றித் தன்னடை யின்றியு
மறையாக் கருத்துங் குறையா வறிவி
னிறையான் மாய்ந்த காய நிலையைக்
குணங்குடி மஸ்தா னெனக்குறி யிட்டும்
பிணங்கா திணங்கா தொருபெயர் தரித்து
மிப்பெய ராற்பல புதுமை யியற்றியு
மப்பெய ரான்மனத் தெருணிலை யமைத்து
மளவிலாக் காரண மவரவர் காணக்
களவிலா மெய்நிலைப் பயனது கனித்து
மிவ்வண மேழாண் டாகவித் திசைதிரிந்
தவ்வண நிலையான் வடதிசைக் கடந்து
கண்டா ரெவருங் களிகூர்ந் துள்ளத்
தொண்டாய்த் தொழுதிடத் தோற்றுமா தவராய்ப்
பன்னு டவரும் பலன்பெறத் தரிசனத்
தன்னு லுயர்தவத் தாங்குரு வினயராய்
மன்னுணர் விலுஞ்சில வதியுணர் விலுஞ்சில
தன்னுணர் விலுஞ்சில கடைபயில் கையராய்
நேர்மையி னுள்ள நேர்த்தவ ரெவர்க்கு

மோர்மை புரியு முயர்தே சிகராய்ப்
பொன்னைமா நிதியைப் போற்றலிற் போற்றுஞ்
சென்னைமா நகரஞ் சிறப்பொடு புகுந்தார்
முன்னைய நினைவினும் புறவுணர் முளைத்துக்
தன்னய முறைபோற் றடைபடா துலவியுஞ்
சிலபகல் வெளிப்படத் திருந்து மறைபடச்
சிலபகல டங்கியு மௌனமாய்த் திருந்துஞ்
சுட்டிக் காட்டியு மெண்ணிற் றொகுத்து
மெட்டிக் காட்டியு மெழுதிக் காட்டியு
மியல்பின் வேண்டுவ வெவையும் விளக்கியும்
பயிலுஞ் சிலநாள் பலன்பெற பாருமே
பாவா லெப்பை யெனும்பிர பலவான்
காவாத் தோட்டத்திற் கதிநலம் பெறுவான்
மக்க ளுவந்து மனப்பொருத் தங்கொண்
டெக்காலும் புகழ்பெற வினிதி னல்கிய
தலத்தினைத் தைக்கா வாகத் தகைத்து
நலத்தொடு கல்வத்து நாடிப் புகுந்தா
ரயன மொருமூன்று மதனுட் டனித்துப்
பயனுறு மியோகப் பண்பி னிருந்தா
ராவ முதலா வூர்வன வடைப்பட்
டுரைக ளுணரா துணர்வினி னின்ற
நிலையே புதுமை நிரம்ப விளக்கக்
கலையே கலையாக் கண்ணொடு வெளிவந்
தூங்குமு ரீதி லுயர்வழி யவரது
தாங்குங் காதி ரிய்யாத் தன்னை
யாக்கிய முஹியித்தீ னுண்டவர் பேர்க்கொரு
தேக்கரும் பாத்திகாச் சிறப்பிற் செய்தார்
நாடின பேர்க்கரு ணையன கோட்டம்

கூடின பேர்க்குனக் கருணை நல்கியு
நினைத்த காரியம் நிறைவேறப் படுத்தியுந்
தனைத்தொடர் பவர்க்கா வனமுறை தொகுத்துஞ்
சிலபக லியாருந் தெரிய விருந்துஞ்
சிலபக லெரிந்துந் தெரியா திருந்தும்
பின்னர் தம்மிடம் பிடித்தகோன் புடனே
நன்னர் பயப்ப நயந்தடைந் தனராற்
கண்டகண் டிதமாய் நாளினைக் கணித்துங்
கொண்டகண் டிதமெய் யோகங் கொண்டுந்
துண்டிடு கண்டுந் தூய்பாற் சிறிதுங்
கொண்ட பொழுதுங் கொள்ளாது மிகுதியு
மொருவர்க்குங் காணா வொதுக்கமும் பதுக்கமு
மிருவர்க்கே காணா மேகமு மாகத்
தூங்காது தூங்கிச் சுகத்தொடு தன்னிலை
நீங்கா திருந்த நிலைமையென் சொல்வேன்
பதையா திம்முறை பன்னிரண் டாண்டுஞ்
சிதையா திருந்த செய்கையென் சொல்வே
னரிதரி தம்ம வகமொரு நிலைபட
லரிதரி தம்ம வருமையென் சொல்வேன்
பேரின்ப வெள்ளப் பெருக்கி லழுந்தியு
மாரின்ப மீறிய தான்றென் றுதியிற்
றொடருயிர் காக்கத் தொடாய மென்னப்
படர்தரு மாசைப் பற்றங் கிழுப்பத்
தழல்படு கரிய தழலா மினும்பேர்
கழல்பட லிலையாற் கழன்று லன்றி
யொன்று காலென் றுரைக்கு முறைபோல
வென்றுள் கடத்தை விடுத்து நீங்கி
நிருவகை பிறப்பு பிறந்துப்பு மப்பு

மொருவகை சுடரு மொளியும் போலக்
காரண மெவையுங் கலவா தகன்ற
பூரணத் தொடுபரி பூரண மடைந்தா
ரேற்படு குறைமுடி வெய்த மாவயது
காற்பது மேழு நிறைய கடந்ததே
யித்தகை வத்தி னேறிய தாபதர்
பத்தியிற் பயின்று பல்பல முயற்சி
கொண்டு வருநாட் டன்னிற் குமிழி
மண்டுமா கந்த வெள்ள நல்கிப்
பொங்கி வழிந்து புறம்பொழி வதுபோ
லிங்கித நாவி னெழுந்ததில் கவிக
ணயன்பெறு மவற்றை நால்வரு முணர்ந்து
பயன்பெற வச்சிற் பதிப்பிக்க நாடிக்
கண்ணோட்ட மிட்டரு டருகெனக் கனிந்து
வெண்ணோட்ட நன்மையே யியைந்த கருத்தின
ரவர்களுக் குரிய வன்புறு பத்தரி
லெவர்களு மதிப்பா வினங்கு நேர்மைய
ரிருபோது மவர்பெய ரேத்தி யேத்தி
யொருபோது மறவா வுறுதிச் சிந்தையர்
மருவளர் பூவன மல்க மல்கிய
திருவளர் செழுந்தடச் சியமங்கலப்
பதிவளர் செல்வப் பதியரு ளாசல
முதலியா ரினிய முயன்று கேட்ப
வுலக முற்றுந் துறந்த வுள்ளமு
முலக மனுவுந் துறைவுவா வுள்ளமு
மொருவகை யானு மொன்றா ததுபோ
லிருவகைப் பட்ட விதய னயினும்
வாத்தின ரருணவம் வருவழி யென்றே

திரத்தினி னோர்ந்து ளுவந்து துணிந்தனன்
சொல்லு மதுவே பொருளு மதுவே
புல்லுக் தொகையும் புணர்ப்பு மதுவே
யன்றி யொன்று மமைத்தே னல்ல
னன்றி யொன்று கடைகொ டடியி
னின்ற திடரினைப் பெயர்த்தலு நிரைப்படச்
சென்ற வெழுத்தினைச் சேர்த்தாலும் வழூவா
வழிபோன் மாறி நிறுத்தலும் வழக்க
மொழிபோற் பதித்தலு முற்றப் படுத்தலுங்
குறிப்பிற் றுறையுங் கோத்த வதிகாரமும்
பெறப்படச் செய்தலும் பின்முன் கவிகளை
மாலை புணர்க்க மாட்டலுங் குறைந்த
காலை நிலைக்கக் கட்டலும் வெறுத
பாலும் பழமுந் தேனும் பருகுதல்
போலுஞ் சேரப் பொருந்தத் திருத்தலும்
பார்ப்போர் பார்க்கப் பயன்படு முறையுஞ்
சேர்ப்போ ருள்ளஞ் சிறக்கு முறையுங்
கொண்டொழு கினனுற் களிகூர்ந் துயர்ந்தோர்
கண்டொழு குவதே கடனு மன்னே
குணங்குடி யார்சொற் குணங்குடித் திடுமின்
மணங்குடி திருமனை வாழிவாழ்ந் திடுக
வறந்தாங்கி யார்சொ லறந்தாங் கிடுமுன்
சிறந்தாங் குயர்பதம் வழிசேர்ந் திடுக
வொருமை படுத்த லுண்டா முண்டா
மிருமைப் படுத்த லின்று மின்றும்
பொய்மைத் தொடர்வினை போகும்போகு
மெய்மைத் தொடர்வினை மேவும் மேவும்
புறத்தும் வையாளி போடும் போடு

மறத்திரை யுள்ளும் மாடும் மாடும்
விண்ணு மண்ணும் விரியும் விரியுஞ்
செண்ணக் திண்ணக் திரியுக் திரியுக்
துவித மலவத் துவித மென்றே
யெவிதத் தானு மிதயக் தெளிமே
தொட்டுக் தொடாதுஞ் சொற்றவை யுணர்க்தாற்
கிட்டு மொருமை கிருபைபி னறிக
வென்னிய வுணர்வா னிதய முளதே
லக்கில யுரைப்ப னருளீர் கேண்மி
னரும்பதி காய லறிவா ளரிணுயர்
பெரும்பதி மானுப் பிள்ளையி லப்பை
யாலி முதலிய வருண்மணி பலகலை
நூலி னணிமுறை கோற்றனு பவித்த
வேதாக் தக்கடன் மெஞ்ஞா னப்பொரு
ளுதாக் தச்சுடர் கலமிகப் பொதிந்த
சித்த ராகு மன்றியுஞ் சீவன்
முத்தர் கபீயு முகம்மதி லப்பை
செய்தவத் துதித்த செல்வன் குணங்குடி
மெய்தவத் தினர்க்கு வித்தையிற் ஞேமுன்
பயன்பெறு புராணமும் பலபிர பந்தமு
நயன்பெறப் புனையு நாவல னெவர்க்கு
முண்மைப் பொருள்வழி யோம்புக் தேசிகன்
வண்மைக் காத்துடை வள்ள விறகூல்
செப்பிய வழிபுணை செய்கு
அப்துல் காதிரி லப்பையா லீமே.

முற்றிற்று.

தொழுகைச் சொல் விளக்கம்.

ஒருமை-ஒன்றுபடுக் தன்மையாதல், அது இறை யுணர்வு. இருவினை-நல்வினை, தீவினை. மும்மலம்-ஆணவம், மாயை, காமியம். நாற்குணம்—அறிவு, நிறை, ஓர்ப்பு, கடைப்பிடி. ஐம்புலம்-சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம். உட்பகையாறு- காமம், குரோதம் உலோபம், மோகம், மதம், மாற்சரியம். பாதகமேழு- அகங்காரம், அலோபம், காமம், பகை, போசனப்பிரியம், காய்தல், சோம்பல். தவத்துறுப் பெட்டு-ஊணசையின்மை, நீர் நசையின்மை, வெப்பம் பொறுத்தல், தட்பம் பொறுத்தல் இடம் வரையறுத்தல், ஆசனம் வரையறுத்தல், இடையிட்டு மொழிதல், வாய்வாளாமை. இதர வொன்பது-சிங்காரம், வீரியம், பெருநகை, கருணை, இரௌத்திரம், குற்சை சாந்தம், அற்புதம், பயம், விரதம். பத்துறுப்பினது துறவு-யாக்கைக்கு மானிக்கும் வேண்டிய பொருள்களில் விதித்தன கொள்ளல், விலக்கியன நீக்கிவிடுதல், இறைவன்பாற்பற்று நிலைத்தல், மாய மருளின் மயக்கறுத்தல், அவனையே விசுவசித்தல், வேறுமியல்புகளை யொதுக்குவித்தல், தன்னியல்பை நினைத்தெப்போதுஞ் சஞ்சலப்பதித்தல், தன்பிழை பொறுக்குந் தகமைதேடல், அவனது வல்லபத்திற்குந் தன்னேலாமையை நோக்கிரங்கல்.

நேரிசை வெண்பா.

பெரியோர்க் கருத்தைப் பெயர்த்த றியலாக
வுரியோ ரெவைக்கு முரியோர்—பெரியோர்க்குச்
சொல்லும் பொருளுந் தொடர திரண்டாகும்
புல்லும் பொழுதிற் பொருள்.

பிஸ்மில்லாஹி வொபிகி கஸ்த்தகின்.

குணங்குடி மஸ்தான் ஸாஹிபு

அவர்கள் பாடல்

பிஸ்மில்லாஹி அலா நியத்து சுல்த்தான்

அப்துல் காதிர் முஹியித்தீன்

எழுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

குரு வணக்கம்.

இணங்குமெய்ஞ் ஞானப் பேரின்பக் கடலின்
இன்னமு தெடுத்தெமக் களிப்போன்
பிணங்கிய கோச பாசமா மாயைப்
பின்னலைப் பேர்த்தெறிந் திடுவோன்
வணங்கிய தவத்தி னோர்க்கருள் புரிய
வள்ளலாய் வந்தமா தவத்தோன்
குணங்குடி வாழு முஹியித்தீ னெமென்
குருபதஞ் சிரத்தின்மேற் கொள்வாம்.

வஸ்துதயத்திறுகந்தம்.

ஆசிரிய விருத்தம்.

மஹ்லியத் தானதாத் துல்கிபுரி யாவில்
மறைத்தகன் சுல்ம குபியாம்
மஸ்கூத்து அன்குல் கதீமுல் அமரவான
மவுஜூ தெனுஞ் சிருபுலே

52 மஸ்தான் ஸாஹிபு அவர்கள் பாடல்

அஹதியத் துஹதாகி வாஹிதிய் யத்தான
ஆலம்அறு வாகா னதில்
ஆலம்மி தாலாகி ஆலம்அஜ் சாமான
ஆலம்இன் சானு னபின்
பகுதியத் தில்லா ஜலாலோடு ஜமாலும்
பதீஉல்க மாலு மாகி
பகுதுகபு லற்றலா கூத்துஜப றூத்தில்
பகாவான குவியத் தினால்
கஷ்பியத் தற்றுமுன் ருளிணிழல் பெற்றடிமை
கானினைவு மற்றுய் வனே
கற்குணங் குடிகொண்ட பாத்துஷா வானகுரு
காதன் முஹியித் தீனே. (1)

வஸ்துதய நிலத்தினாநந்தம்.

பறுதானி யத்திலோ சுபு ஹானி யத்தெனப்
பகர்பரா பரம தனிலோ
பற்பல விதங்கொண்ட அகியானி யத்திலோ
பரிபூ ரணந்தன் னிலோ
அரிதான தாத்திலோ அஸிபெனுஞ் சுகவாரி
யாகும்நுக் தாப தனிலோ
அஃலல்உ லாவான ஆலமலக் கூத்திலோ
ஆலம்அஸ் பல்தன் னிலோ
குறிகுணா தீதவட் டாங்கயோ கத்திலோ
கோடானு கோடி மறையாற்
கூறரிய சிவராஜ யோகத்தி லோவருட்
குறையாப் பெருங் கடலிலோ
காஸிகி ரருளான னேகீ யிருப்பதிக்
காமினேற் கருள் செய்குவாய்

நற்குணங் குடிகொண்ட பாத்துஷா வானகுரு
நாதன் முஹியித் தீனே. (2)

விளையாட்டினுநந்தம்.

அண்டகோ டிகளுமோர் பந்தெனக் கைக்குள்
ளடக்கிவிளை யாட வல்லீர்
அகிலமோ ரேழினையு மாடுங் கறங்குபோ
லாட்டிவிளை யாட வல்லீர்
மண்டலத் தண்டரை யழைத்தரு கிருத்தியே
வைத்துவிளை யாட வல்லீர்
மண்ணகமும் விண்ணகமு மணுவைத் தொளைத்ததின்
மாட்டிவிளை யாட வல்லீர்
கண்டித்த கடுகிலெழு கடலைப் புகட்டிக்
கலக்கிவிளை யாட வல்லீர்
கருதரிய சித்தெலாம் வல்லநீ ரடிமையென்
கண்முன்வரு சித்தில் லையோ
நண்டளக் திடுகாழி யாவனோ தேவரீர்
நல்லடிக் காளா கியும்
நற்குணங் குடிகொண்ட பாத்துஷா வானகுரு
நாதன் முஹியித் தீனே. (3)

தன்னியலினுநந்தம்.

ஐயோ வெனைப்போலு மாப்பெரும் பாவியிவ்
வகிலத்தி லெங்கு மிலையே
அநியாய மநியாய மென்பெரும் பாதகம
தார்பா லெடுத்தோ துவேன்
மையான கண்ணியர் வலைக்குள் ளகப்பட்ட
மாபாவி நீபா வியான்

மஹ்பூபு ஸுபுஹானி யானவுமை நாடாத
மடமைகுடி கொண்ட பாவி
பொய்யான வாழ்வதனை மெய்யாக நம்பியுன்
பொன்னடி மறந்த பாவி
பொல்லார்க ணேசமே யல்லாது நல்லோர்
புறக்கணித் திட்ட பாவி
நையுமோர் பொய்யுலக னாகியே யுமதடிமை
நாயினுங் கடையா வனே
நற்குணங் குடிகொண்ட பாத்துஷா வானகுரு
நாதன் முஹியித் தீனே. (4)

மகிமையினாநந்தம்.

மாதவர்க் கரசான மன்னர்க்கு மன்னாக
வந்தமக ராஜ னீயே
மண்டிசையும் விண்டிசையும் மெண்டிசையு நின்றசையும்
வாசனும் போஜ னீயே
ஆதிநீ மஃஷூக்கு றஃமானு நீயெனக்
கான மஹ்பூபு னீயே
அக்கானி யத்திலே சொக்குமிறு சானுதக்
தருள்செய்ய வந்த நீயே
வேதநீ வேதவே தாந்தநீ யெனையாளும்
வித்தகன் றானு நீயே
மெய்ஞ்ஞான வீடுநீ வீட்டின் விளக்குநீ
விரிகதிர்ச் சுடரு நீயே
நாதனீ நவநாத சித்தனீ முத்தனீ
நாதாந்த மூர்த்தி நீயே
நற்குணங் குடிகொண்ட பாத்துஷா வானகுரு
நாதன் முஹியித் தீனே. (5)

வலிமையினாநந்தம்.

மன்னிய தவத்தினர்க் கருடந்த குருவுநீ
மாத பிதாவு நீயே
மட்டறு பவக்கட லொருலக்குமொரு கவிழா
மரக்கலமு நீயல் லவோ
அந்நியம தாளபிர பஞ்சமாம் பெருநெருப்
படக்கும் பெரும்பா லமா
யன்புட னெனைப்பெற்ற வப்பனே யருடந்த
வாண்டவனு நீயல் லவோ
என்னையுனை யன்றியினி யாள்வரெவ ரையனே
யெந்தையே யெம்பி ரானே
இகபர மிரண்டினுஞ் சுகதுக்க மற்றியா
னீடேற வருள்பு ரியவே
நன்னிலைய மாகவென் முன்னிலையில் வந்துமெந்
நாளும்ரட் சித்தருள் வையே
நற்குணங் குடிகொண்ட பாத்துஷா வானகுரு
நாதன் முஹியித் தீனே. (6)

இரக்கத்தினாநந்தம்.

கல்லுமொரு போதிற் கரைந்துருகு மென்மனக்
கற்கரைவ தில்லைய யனே
கவலைகளை யிவளவென் றென்னணை யென்னாற்
கணித்துமுடி கூடு திலேயே
அல்லுபக லாகவென் னவகீர்த்தி யவகீர்த்தி
யம்மம்ம வென்சொல் லுகேன்
ஆறுலு மார்க்காக வடிமைகொண் டாளித்த
வடியனே னுய்யும் வண்ணஞ்

சொல்லுமெய்ஞ் ஞானச் சுகக்கடலே யுண்டியான்
சும்மா விருக்க வருள்வாய்
சுத்தபரி பூரணச் சுகவாரி தன்னிலோர்
சொட்டாகி னுக்தொட்ட பேர்
கல்லவர்க ணல்லவர்க ணல்லவர்க ளென்றைக்கு
கானுகல் லவனு வனே
கற்குணங் குடிகொண்ட பாத்துஷா வானகுரு
காதன் முஹியித் தீனே. (7)

பெருமையினுநந்தம்.

சொல்லான் முழக்கமிட் டோலமிடு வேதமுஞ்
சொன்னதுட னின்ன மின்னஞ்
சுருதிமுத லாகம புராணகலை யோதிய
சுலோகங்க ளென்சொல் லுகேன்
பல்லாயி ரங்கோடி யண்டபகி ரண்டமுன்
பாதபங் கயமல் லவோ
பரிபூர ணானந்த மேயுனது முடியெனப்
பகர்வதும் பொய்யா குமோ
வல்லா னெனும்பெய ருனக்குள்ள தல்லாது
மற்றவர் தமக்கு முளதோ
வானவர் தினந்தினம் வந்துன் பதம்பணியு
மகிமைசொல வரயு முண்டோ
கல்லோர் தமக்கலா தெல்லார் தமக்குமுனை
கவி லுதற் கெளி தாகுமோ
கற்குணங் குடிகொண்ட பாத்துஷா வானகுரு
காதன் முஹியித் தீனே. (8)

தன்னிலையிஞநந்தம்.

நித்திரை தனிற்செத்த பொய்யான மெய்யுடலை
நிலையையென் றிடுவ தல்லால்
நிலையாத காயமென் றெண்ணவோர் கனவினு
நிசமாக யான றிகிலேன்
எத்தனை விதங்கடான் கற்கினுங் கேட்கினு
மென்மன திணங்கு திலையே
ஏதென் றெடுத்துரைப் பேமெனக் கிறைவனே
யெங்கோ னெனும் பிரானே
மற்றவர்க ளெத்தனை யிருக்கினு மென்கொடிய
வல்வினை யகற்ற வசமோ
மலையிலக் கெனநம்பி னேனம்பி னேனென்று
வந்தெனுட் குடி கொள் வையே
நற்றவமு முத்தியுஞ் சித்தம்வைத் தருள்செய்ய
நாட்செல்லு மோவறி கிலேன்
நற்குணங் குடிகொண்ட பாத்துஷா வானகுரு
நாதன் முஹியித் தீனே. (9)

காரணத்திஞநந்தம்.

கடலிற் கவிழ்ந்ததோர் கப்பலா லாத்துடன்
கடுகிவர வேய ழைத்தீர்
கம்பமுட னோடியே வந்ததோர் கப்பலைக்
கடிபூனை யாக்கி வைத்தீர்
குடிகொண்டு கர்ப்பவறை யுள்ளிருக் கையிலுமைக்
கொலைசெய்த வந்த முனியைக்
குதிகொண்டு வெளிசென்று இருதுண்டு கண்டுபின்
கூர்கர்ப்ப வறை புகுத்தீர்

பிடியிற் பிடித்துண்ட பிள்ளைசக் கியாசிகுடர்
பீறிவர வேய மைத்தீர்
பிரியம்வைத் தெனையாள வென்னிடத் திக்தவிரு
பேரையுக் தூது விட்மர்
கடனமிடு பாதார விந்தமென் சென்னியுற
காட்செல்லு மோசொல் லுமே
நற்குணங் குடிகொண்ட பாத்துஷா வானகுரு
காதன் முஹியித் தீனே. (10)

ஆனந்தமாகிய பேரின்ப வனுபோக நிலையாற் கூறிய கவி பத்தும் முற்றுப்பெற்றது.

முஹியித்தீன் சதகம்.

ஏகவறிவாகிய வள்ளலிறகுலைத் தொடர்ந்த வருட்பெறுவான் பொருட்டாக முன்னிலைக் குருவாகிய முஹியித்தீனுண்டகையை தோத்திரஞ்செய்து குறையிரந்து வந்து பாடிய சதகம்.

குரு வணக்கம்.

ஏழுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

உணர்ந்துதற் பரமா யுரைக்ககோ சரமா யுயிர்க்குயி ரானசா கரமாய், இணங்குசிற் பரமா யணுக்கடா பரமா யேகமா கியபரா பரமாய், வணங்கிக பரமாய்க் கிளைத்தநூ றுமுஹம் மது கிளை விளக்கொளி கொழிக்கும், குணங்குடி வாழு முஹியித்தீ னுமென் குருபதஞ் சிரத்தின்மேற் கொள்வாம். (1)

வணங்குவரர்க் கிணங்கு பெரியபே ரின்ப வாரியிற் படிந்து வாய் மடுத்தே, உணர்ந்துணும் பொருட்டாய் வலி யவக் தெனையாண் டுவந்துளங் களித்தக மகிழ்ந்தே, அணைந்தணைத் தெடுக்குங் கருணைகொப் பளிக்கு மன

விலா வருளடை கிடைக்குங், குணங்குடி வாழு முஹி யித்தீ ஞமென் குருபதஞ் சிரத்தின்மேற் கொள்வாம். (2)

அணைந்துயிர்க் குயிரா யலர்மடல விந்த வகண்டிதா காரமா மலரின், மணங்கமழ் கயினர் முஹம்மதரென்னு மௌனதே சிகருட னெனையுங், துணிந்துமா மாயைத் துணியெலாங் கிழித்துத் துறவறந் தாங்கியா ராக்குங், குணங்குடி வாழு முஹியித்தீ ஞமென் குருபதஞ் சிரத்தின் மேற் கொள்வாம்.

நான் முகம்.

மாயா விநோத மெல்லா மறைந்து
தூயாதி யுண்மைச் சுயம்பிர காசிக்கக்
காரணக் குருவின் கருணையந் தொடர்பால்
ஆரணக் குருவே யருள்கவென் றிரத்தல்.

ஆசிரிய விருத்தம்.

ஆதிமுன் னிற்கவே யகதுகது வாகிஇய
யத்தெனது முன்னிற் கவே
யத்துவித வஸ்துமுன் னிற்கவே யறிவகண்
டாகார முன்னிற் கவே
போதமுன் னிற்கவே போதமனு காதபரி
பூரணம் முன்னிற் கவே
பொங்குசிவ ஞானமுன் னிற்கவே வானாதி
பூதலய முன்னிற் கவே
நாதமுன் னிற்கவே நாதனொளி பெற்றநபி
நாயகம் முன்னிற் கவே
நானுமுன் னிற்கவடி யேனுமுமை நம்பினே
னன்மைதந் தாளு தற்கே

மாதர விலுங்கருணை யுள்ளநீர் பின்ருேடர
வள்ளலிற சூல்வரு கவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
மணியே முஹியித் தீனே. (1)
நீக்கமற வெங்கெங்கு நின்றுநிறை கின்றபொரு
ணேரிலென் முன்னிற் கவே
நிர்விஷய சுத்தமா சற்பர வெளியான
நிர்க்குணமென் முன்னிற் கவே
தாக்கிமா கோடிமறை வாக்கியம் பறையுமா
தத்துவமென் முன்னிற் கவே
தத்துவா திகளற்ற முத்திக்கு வித்தான
சற்குருவென் முன்னிற் கவே
போக்குவர வற்றபரி பூரண னந்தமெய்ப்
போதுமென் முன்னிற் கவே
புன்மைகுடி யானவடி யேனுமுமை நம்பினேன்
பொய்மைதீர்த் தாளு தற்கே
வாக்குமா ரூதகாக் குள்ளநீர் பின்ருேடா
வள்ளலி றசூல்வரு கவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
மணியே முஹியித் தீனே. (2)
இகபர மிரண்டொன்று வகையுண்டு வெளிகண்ட
வீசனென் முன்னிற் கவே
ஏகமா கியபரா பரமெனது முன்னிற்க
வெப்பொருளு முன்னிற் கவே
வகைதொகுத் தோலமிடு மறைகண்முர னறைகின்ற
வள்ளலென் முன்னிற் கவே
வானுதி பூதமுந் தானுகி நின்றபெரு
மானெனது முன்னிற் கவே

அகமகிழ வந்தகுடி கொண்டகுரு நாதனடி
யாருமென் முன்னிற் கவே
அன்றுமின் றென்றுமடி யேனுமுமை நம்பினே
னண்டிவந் தாளு தற்கே
மகிழ்துன்னு புன்னகைப் புள்ளநீர் பின்றொடர
வள்ளலிற சூல்வரு கவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
மணியே முஹியித் தீனே. (3)

நோக்குநோக் கொண்ணாத நோக்குநோக் காநின்ற
நோக்கெனது முன்னிற் கவே
நோக்கிப் புராதனப் பொருளான நுண்ணறிவி
நுட்பமென் முன்னிற் கவே
நீக்கமற வங்கிங் கெனாதுவெங் கெங்குமொரு
நிறைவெனது முன்னிற் கவே
நேசித்த நெஞ்சமே குடிகொண்ட வான்கருணை
நேயமென் முன்னிற் கவே
போக்கொடு வரத்தொடு விகாரமது வாய்நின்ற
புநிதமென் முன்னிற் கவே
புல்லறிஞ னாவடி யேனுமுமை நம்பினேன்
போதுகென வாளு தற்கே
வாக்குமன மொத்தமா புள்ளநீர்பின்றொடர
வள்ளலிற சூல்வரு கவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
மணியே முஹியித் தீனே. (4)

எற்றாத மாயைதனை யெற்றுபே றெற்றுபே
ரின்பமென் முன்னிற் கவே

ஏகமா யொருகால மழியாத வொளியான
வெம்பிரான் முன்னிற் கவே
புத்திக்கு மெட்டாத வட்டாங்க யோகமழை
பொழிவதென் முன்னிற் கவே
பூதமுத லாதமுட னேதுமது வானவான்
பொருளெனது முன்னிற் கவே
குற்றமின் னற்குணங் குடியா னெனுங்குணக்
குன்றெனது முன்னிற் கவே
கொடுமைகுடி கொண்டவடி யேனுமுமை நம்பினேன்
குறைவுதீர்த் தாளு தற்கே
வற்றா வருட்செல்வ முள்ளநீர் பின்றோடா
வள்ளலிற சூல்வரு கவே
வளருமரு ளிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
மணியே முஹியித் தீனே. (5)

ஊரற்று நாமரூ பத்துடன் பற்றற்
றியர்த்ததென் முன்னிற் கவே
ஒன்றற் றிரண்டற்று வாக்கற்று மனமற்
றுதித்ததென் முன்னிற் கவே
கூறுகுண மற்றுமொளி யுற்றும்வெளி தத்திக்
குதித்ததென் முன்னிற் கவே
குறியற்று மறிவற்று நிறைவுகுறை வற்றுங்
குலவியதென் முன்னிற் கவே
ஈறுமுத லற்றுமின் றற்றுகா லையுமற்
றிருப்பதென் முன்னிற் கவே
ஏதுமுன் னிற்கவடி யேனுமுமை நம்பினே
னின்பமுற் றாளு தற்கே

மாறிலா நற்கருணை யுள்ளநீர் பின்றொடர
வள்ளலிற சூல்வரு கவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
மணியே முஹியித் தீனே. (6)

தேடியே வந்தரு டந்தடிமை கொண்டவென்
றேசிகன் முன்னிற் கவே
சிற்பர வெளிக்கொளி கொழுக்குமா கர்ப்பூர
தீபமென் முன்னிற் கவே
நாடரிய செஞ்சுடர் பரப்புகுரு நாதனெங்
காருமென் முன்னிற் கவே
ஞானவி தங்கொண்ட வாசாம கோசர
நந்தமென் முன்னிற் கவே
ஈடுசேர டற்றசிற் சத்தியா மெம்பிரா
னென்னெதிரின் முன்னிற் கவே
ஏற்கைமுன் னிற்கவடி யேனுமுமை நம்பினே
னிங்குவந் தாளு தற்கே
வாடாத சமநிலைய முள்ளநீர் பின்றொடர
வள்ளலிற சூல்வரு கவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
மணியே முஹியித் தீனே. (7)

அருளகண் டாகார வானந்த பூர்த்திவெளு
மாதார முன்னிற் கவே
அதிசொற்பிர காசவரு டேசோம யந்தந்த
வாதிக்க முன்னிற் கவே
குருசோத ஞகமெய்ப் பிரணவ சொரூபக்
கொழுந்தெனது முன்னிற் கவே

கூறிய சாலம்ப ரகிதமா கியதிவ்ய
குணசார்ந்த முன்னிற் கவே
நிருவிகா ரத்துடன் றளதளென நின்றொளிர்
நிராமயம் முன்னிற் கவே
நிலையமுன் னிற்கவடி யேனுமுமை நம்பினே
னேயம்வைத் தாளு தற்கே
மருமலர் மணக்கோல முள்ளநீர் பின்றொடர
வள்ளலிற சூல்வரு கவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
மணியே முஹியித் தீனே. (8)

பலவுமா யொன்றுமா யென்றுமாய் நின்றதற்
பரமெனது முன்னிற் கவே
பரமான தெப்பொருளு மதுவாய் முளைத்துவிளை
பயிரெனது முன்னிற் கவே
நிலைசரமொ டிகபரமு முயிரினுக்குயிராகி
நின்றதென் முன்னிற் கவே
நேரிட்ட ஞானசூ ரியனு யுதித்தநன்
னெறியெனது முன்னிற் கவே
அலையுலகு கானலி னீரெனத் தோன்றுமெய்
யறிவெனது முன்னிற் கவே
அய்யனே யஞ்சியடி யேனுமுமை நம்பினே
னாதரித் தாளு தற்கே
மலையிலக் கானகுறி யுள்ளநீர் பின்றொடர
வள்ளலிற சூல்வரு கவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
மணியே முஹியித் தீனே. (9)

உடல்பொருளோ டாவியுங் கைப்பற்றி யெனையாளு
  முத்தமன் முன்னிற் கவே
ஊனாகி யுயிராகி யூனுயிர்க் குயிரான
  வுண்மையென் முன்னிற் கவே
திடமாயை தொடரா தடர்ந்தேறு மெய்ஞ்ஞான
  தீரமென் முன்னிற் கவே
திவ்யகரு ணாகர முஹம்மத ரெனும்மருட்
  செல்வமென் முன்னிற் கவே
கொடியொடு கொழுகொம்ப தாகநீர் வந்துகுதி
  கொண்டெனது முன்னிற் கவே
கொத்தடிமை யானவடி யேனுமுமை நம்பினேன்
  கொண்டனைந் தாளு தற்கே
வடிவிலகு நடனவடி யுள்ளநீர் பின்றொடர
  வள்ளலிற சூல்வரு கவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
  மணியே முஹியித் தீனே

சதகம்—முதலாவது பதிகம் முற்றிற்று.

ஆக பாடல் - 24,

அப்பொருடானே யெப்பொருட்குணமு
மொப்பியு மொப்பா தாகிய வுண்மையைப்
பிரியாது தெரிசிக்கப் பிரியமா யெனக்குங்
கருணைகூர்ந் தருள்கெனக் கனிந்துநின் றிரத்தல்.

நித்தமாய் நன்னிருவி கற்பநிஷ் டாபர்க
  ணைற்றினே ரிட்டபொருளை
நிச்சயவ கோசரத் தாதார பேதநிலை
  நின்றுநிறை கின்ற பொருளை
முத்திக்கு வித்தாய் முளைத்துவினை பொருளையன்
  மொய்த்தசுட ருற்ற பொருளை

66. மஸ்தான் ஸாஹிபு அவர்கள் பாடல்

மும்மண்ட லங்களுங் கொண்டமூ லாதார
மோனவடி வான பொருளை
புத்திக்கு மெட்டாது புத்திக்கு ணின்றிலகு
போக்குவர வற்ற பொருளை
போதவருள் புரியவடி யேனுமுமை நம்பினேன்
புனிதமுட னுனை தற்கே
மத்தமத யானைநிக ருள்ளநீர் பின்றொடர
வள்ளலிற ஸுல்வரு கவே
வளருமரு ணிறைகுணன் குடிவாழு மென்னிருகண்
மணியே முஹியித் தீனே. (1)

பெத்தமொடு முத்தியு மகிழ்ச்சியு மிகழ்ச்சியும்
பின்னுமுன் னுங்கெட் டதைப்
பெரிதுசிறி தருவுருவோ டதுவிதென் பதுவும்
பிறப்பிறப் புங்கெட் டதை
நிந்தித்த லோடுவந் தித்தலும் பொய்மையொடு
நிசமென்ப துங்கெட் டதை
நீநானெ னலுமொன் றிரண்டெனலு நீதமொட
நீதமென லுங்கெட் டதை
அந்திபகல் போக்குடன் வரவுமன வாக்கொடிங்
கங்கென்ப துங்கெட் டதை
அறியாம லறியவடி யேனுமுமை நம்பினே
னறிவுதர் தானு தற்கே
வந்தடிமை கொள்ளமன முள்ளநீர் பின்றொடர
வள்ளலிற சூல்வரு கவே
வளருமரு ணிறைகுணன் குடிவாழு மென்னிருகண்
மணியே முஹியித் தீனே. (2)

முத்தைநவ மணியையொளி பத்திப யும்மணியை
மோனமணி ஞான மணியை

மெய்த்தகதிர் மாசிலா மணியைவா னுதியா
மூவுலகு மான மணியைச்
சித்திமணி யைச்சித்தி தருமுத்தி மணியையென்
சிந்தைகுடி கொண்ட மணியை
திவ்யகுரு மணியா விழைத்தசிங் காசனச்
சிகரத்தி னுச்சி மணியை
பத்தர்கட் கெய்துசூ டாமணியை நிறைபார்த்த
பரமார்த்த மான மணியை
பணிபூண்டு பார்க்கவடி யேனுமுமை நம்பினேன்
பணிபூட்டி யாளு தற்கே
வைத்ததீ பத்தினிக ருள்ளநீர் பின்றொடர
வள்ளலிற சூல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
மணியே முஹியித் தீனே. (3)

காரா றெனப்பே ராருட்கடலி னீருண்டு
கவிகின்ற கருணை முகிலே
ககனவட் டப்பெரு வெளிக்குமப் பாளின்று
காலூன்று கின்ற முகிலே
தாராத வருடக்த குருமெளன முகிலேயென்
றூயிற் சிறந்த முகிலே
சண்டமா ருதமென்ன வருள்பொழியு முகிலேச்
சராசரங் கொண்ட முகிலே
பாராதி பஞ்சவன் னப்பகுதி யாகப்
பரந்துவரு டித்த முகிலே
பரவிவரு டிக்கவடி யேனுமுமை நம்பினேன்
பருவம்வந் தாளு தற்கே

வாரா நெறிக்கருணை யுள்ளநீர் பின்றொடர
வள்ளலிற சூல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
மணியே முஹியித் தீனே (4)

தத்தியே கங்கறப் பெருகிவரு மானந்த
சமரசப் பெருவா ரியை
சார்ந்தன்ப ரிதயங் களிக்கவே பொங்கிவரு
சத்ததச் சுகவா ரியை
சுற்றிக் கவிந்துகொண் டெங்குமொரு மிக்கவே
சூழ்கருணை நிறைவா ரியை
சொற்பிரகா சக்தரு சுயஞ்சோதி யாய்நின்ற
சோமசுக் தரவா ரியை
எத்தனை விதங்கொண்டு சொல்லினுஞ் சொல்லொணு
வினியபூ ரணவா ரியை
ஏப்பமிட வூட்டவடி யேனுமுமை நம்பினே
னெட்டிவந் தாளு தற்கே
மத்திபத் திபகடு வுள்ளநீர் பின்றொடர
வள்ளலிற சூல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
மணியே முஹியித் தீனே. (5)

அன்புப் பெருக்கைநல் லறிவுப்பெருக்கை மெய்ஞ்
ஞானுயிர் தப்பெ ருக்கை
அணையற்ற பேராசை வெள்ளப் பெருக்கையறி
வாகார வான்பெ ருக்கை
இன்பப் பெருக்கையருள் பொங்கும் பெருக்கைவெளி
யெங்கெங்கு மொளிபெ ருக்கை

ஏகப் பெருக்கையனு போகப் பெருக்கைகல்
 லினியசெந் தேன்பெ ருக்கை
தென்புப் பெருக்கைவெகு டம்பப் பெருக்கைமா
 திவ்யமது ரப்பெ ருக்கை
சேரப் புகட்டவடி யேனுமுமை நம்பினேன்
 சித்தம்வைத் தாளு தற்கே
வன்புப் பெருக்கைவடி வுள்ளநீர் பின்றொடா
 வள்ளலிற சூல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
 மணியே முஹியித் தீனே. (6)

கண்டபொரு ளத்தனையு மாகிநின் றவைகளுங்
 காணாத கார ணத்தை
கருதரிய சித்தாய் விசித்திரமாய் நின்றிலங்
 காநின்ற கார ணத்தை
அண்டகோ டிகளையுக் தன்னுள்வைத் தனுவினுக்
 கணுவான கார ணத்தை
அறியாம லென்றெய்வ முன்றெய்வ மென்பார்க்கு
 மவ்வகைக் கார ணத்தை
யெண்டிசை விளக்கின்ற வித்தா யிருந்துமோ
 ரிடமற்ற கார ணத்தை
எய்திக் களிக்கவடி யேனுமுமை நம்பினே
 னெதிர்காட்டி யாளு தற்கே
மண்டலமும் விண்டலமு முள்ளநீர் பின்றொடா
 வள்ளலிற சூல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
 மணியே முஹியித் தீனே. (7)

சிவரூபக் கோலத்தைத் தேர்ந்தவனைத் தொழுது
சிந்தித்தே சேர வந்தது
தெத்தியில் நூறினில் சிக்கெடு நூற்றுதல்
கொண்டதே சேர வந்தது
தெளிவாய் நின்றுநல் பதிந்த மனதைத்
தனித்தே சேர வந்தது
சொர்க்கம் வழிக்குள்ளே நுத்தினிலும் வள்ளடராய்த்
தூவண்டே சேர வந்தது
.வளியாத வலிரசல நிர்மல பரப்பரம்
சேர்த்ததே சேர வந்தது
எழுகோடி வழுதவடி செலுயாமல் வைத்தொன்
சதுநினை தாரு தந்தே
மனிதருமில்ல விக்கலுழு அமரவர் பின்கொடுட
வச்சவித சுத்த சுத்தே
வானும் வளமெழுவம் ஓதாரு சென்வினோன்
வலியே யூனித்த நீதே. (8)

எங்கிருந்து செயல்மிக வல்லவனோ கொண்டது
விருந்தது சேரு வந்தது
எப்பொருளு மெய்பொருளு கொண்டிடும் வல்வடி
விளக்குதுளு சேரு வந்தது
அல்லியும் பலதிலு மங்கமலம் விளங்கிவி
விடைக்குது சேரு வந்தது
அதிசயப் பதிக்குள் நாலுள்ளில் தூதவ
நிலைக்குது சேரு வந்தது
தொலைவாகு மகாநிலை கொண்டதுவாநி கொண்டலவோல்
தொடர்ந்தது சேரு வந்தது

பெருநெருப் பரிவுடை மெய்ஞ்ஞான மகிமேனி
  நெருங்கிமேவும் படரு நதியே
கரமுடன் சேரமகக் குவலயப் பிள்கொடுடர்
  வல்லரிற முன்ன நவியே
வானுலகு வள்ளலாகும் குருவாகு மெய்ச்சுடரே
  மணியே முஹம்மதுந் நபியே. (9)

நெறிமறைத் தலைவரையே குருவென்று துறந்திடு
  சேரமாகத் துறையே
சேர்த்தபுட சேர்ந்துமாயம் வந்துமவ சேர்ந்திடு
  நல்லத் தவமான குருவே
சீரியத் மனமகிழ் குருவடிவ குருவாக
  மெய்ந்நசித் துவா குருவே
சித்தியர் அத்தன முத்தமாகு குருநாத
  சிட்டமேல் சிட்ட குருவே
வடிவு நிறைந்தமுத் தீரத மெய்ஞானமேவுந்
  தீரமாக வந்த குருவே
நருமன்பீ மரகத மெய்ஞ்ஞான மகிமேனி
  நமயுதீ நரு நதியே
விரைந்தமேவு பரிவடைய குருவளி வேந்தேடர்
  வல்லரிற முன்ன நவியே
வானுலகு வள்ளலாகும் குருவாகு மெய்ச்சுடரே
  மணியே முஹம்மதுந் நபியே. (10)

ஆறு பாடல் 34.

பன்னமைவு கிளித்த வடிவேறு மெய்ஞ்ஞான
நிறைவாக கிருத்த நறுமேனி விளங்கும்

அருளொளி விளக்கினை யருள்கவென் றூசான்
தெருளொளி பதமலர் சிந்தைசெய் திரத்தல்.

ஆசிரிய விருத்தம்.

எங்குமருள் விரிவாகி யங்கிங் கெனாதாகி
  யென்றன்பி ரானு மாகி
எண்ணரிய வண்டபகி ரண்டங்க ளாகிநின்
  றிகபர மிரண்டு மாகி
பொங்கிவழி கொண்டுபல் கடலெலாம் பெருகுபரி
  பூரணா னந்த மாகி
புனிதமெய்ஞ் ஞானவா னந்தமழை மாரியைப்
  பொழிகருணை முகிலு மாகி
கங்குல்பக லில்லிரவி மதியாகி யெங்குமொரு
  கங்கற்ற கங்கை யாகி
கனியுமொளி புரியவடி யேனுமுமை நம்பினேன்
  கருணைவைத் தாளு தற்கே
மங்காத திங்களொளி யுள்ளநீர் பின்றொடர
  வள்ளலிற சூல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
  மணியே முஹியித் தீனே. (1)

ஊனாகி யூனிலுயி ராகியெவ் வுலகுமா
  யொன்று மிரண்டு மாகி
உள்ளாகி வெளியாகி யொளியாகி யிருளாகி
  யூருடன் பேரு மாகி
கானாகி மலையாகி வளைகட லு மாகிமலை
  கானக விலங்கு மாகி
கங்குல்பக லாகிமதி யாகிரவி யாகிவெளி
  கண்டபொரு ளனைவயு மாகி

காளுகி நீயாகி யவளுகி யவளாகி
காதமொடு பூத மாகி
காடுமொளி புரியவடி யேனுமுமை நம்பினே
னன்மைசெய் தாளு தற்கே
வானேரு மடிபணித லுள்ளநீர் பின்றேடா
வள்ளலிற சூல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
மணியே முஹியித் தீனே. (2)

அந்தமுதன் முன்பினெடு பக்கநடு வாகிநின்
றவைகளற் றதுவு மாகி
அருவாகி யுருவாகி யருவுருவ மற்றவறி
வாகார மோன மாகி
தந்தைதா யாகியரு டந்தகுரு வாகியென்
றன்னுயிர்க் குயிரு மாகி
தாயிற் சிறந்தவங் கேயச் சிறப்பாய்ச்
சதானந்த ஞான மாகி
சிந்தைசெய வந்ததிற மாகியெனே யாட்கொண்ட
தேசிகன் றானு மாகி
தெளியுமொளி புரியவடி யேனுமுமை நம்பினேன்
சித்திதந் தாளு தற்கே
வந்திருந் தருளுதயை யுள்ளநீர் பின்றேடா
வள்ளலிற சூல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
மணியே முஹியித் தீனே. (3)

பராகி யெப்பொருளு மாகியப் பார்தனிற்
பஞ்சவன் னங்க ளாகி

பற்பல விதங்கொண்ட வித்துகா தத்துட்
பதித்துமுளை பருவ மாகி
வேரோடி யோகபூ மிக்குள் வளர்க்தருள்
விளைக்தொழுகு தருவு மாகி
விண்ணுகி மண்ணுகி யெண்ணுகி வெகுவாகி
விரிவாகி மறைவு மாகி
தூராதி தூரத்தி லுக்தூர மாகியதி
சூழ்ச்சிச் சமீப மாகி
தோற்றுமொளி புரியவடி யேனுமுமை கம்பினேன்
றுரிதமுட னுளு தற்கே
வாராரு மருண்மாரி யுள்ளனீர் பின்றெருடர
வள்ளவிற சூல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
மணியே முஹியித் தீனே. (4)

பார்த்ததிக் கெங்குமொரு வொளியாகி யென்பரா
பரப்பிரம வெளியு மாகி
பற்றுமன வெளியாகி மணவெளி கடக்தமுப்
பாழான வெளியு மாகி
கூர்த்தவறி வத்தனையு மேற்றபடி கொள்ளையே
கொண்டகடு வெளியு மாகி
கோடானு கோடிபல வண்டபகி ரண்டமுங்
கொண்டபெரு வெளியு மாகி
சேர்த்தகிலே குலையுண்டு போகாது நிலையுண்ட
சிற்சத்தி வெளியு மாகி
செறியுமொளி புரியவடி யேனுமுமை கம்பினேன்
றெளிவுதக் தாளு தற்கே

வார்த்தைதப் பாதகா வுள்ளநீர் பின்றொடர
  வள்ளலிற சூல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
  மணியே முஹியித் தீனே. (5)

கடையுடன் கிடையாகி நண்ணுமிரு வினையாகி
  கடைபடிக டானு மாகி
நடுவே முளைத்தநீ நானெனலு மாகிவரு
  நாட்டங்க டானு மாகித்
தடையாகி வைத்ததடை யற்றவிடை யாகிநற்
  றூரணக டானு மாகி
தலைமையொடு நிலைமையும் வலுமைகளு மாகியெச்
  சங்கதைக டானு மாகி
இடையாகி நடுவாகி நன்மைதீ மையுமாகி
  யேகமுத லெவையு மாகி
இலகுமொளி புரியவடி யேனுமுமை நம்பினே
  னிதமிரைத் தாளு தற்கே
மடமடென வடிநடன முள்ளநீர் பின்றொடர
  வள்ளலிற சூல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
  மணியே முஹியித் தீனே. (6)

மாயைமுத லாகியுயி ராகியற் புதமான
  மன்னுயிர்க் குயிரு மாகி
வாருமிரு வினையாகி வினைதனக் கீடாகி
  வாழ்பா ழுடம்பு மாகி
தூயறிவு கலையாகி நிலையாகி நிலையாத
  தொக்தங்க டாமு மாகி

துறவாகி மூவாசை யுறவாகி மறைவாகி
சோதிப்பிர காச மாகி
ஆயுமறை முடிவாகி யடியாகி நடுவாகி
ஆச்சரிய கூத்து மாகி
ஆடுமொளி புரியவடி யேனுமுமை நம்பினே
னன்புகூர்க் தாரு தற்கே
வாயூறு தேனின்மொழி யுள்ளநீர் பின்றொடர
வள்ளலிற சூல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
மணியே முஹியித் தீனே. (7)

கண்ணான கண்ணேயெ னன்னமே யென்றமுவர்
கண்டகண் காட்சி யாகி
கவலைகுடி கொண்டுதட் டழியார்க ணன்மனக்
கண்ணூட்டி தாலு மாகி
மண்ணான வஞ்சநெஞ் சத்தினர்க் கேற்றாது
மறைவுதரு புதைய லாகி
மதபேத மோதிமதி கெட்டவர்க் கெட்டாத
வான்கருணை வெள்ள மாகி
என்னாத வெண்ணமென் னூறொடுத் துன்னுபே
ரின்பப் பெருக்கு மாகி
எய்துமொளி புரியவடி யேனுமுமை நம்பினே
னின்புதர் தாரு தற்கே
வண்ணத் திருக்கருணை யுள்ளநீர் பின்றொடர
வள்ளலிற சூல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
மணியே முஹியித் தீனே. (8)

வேதவே தாந்தமேல் வீடாகி கட்டகடு
வீட்டின் விளக்கு மாகி
வித்தக னிருக்குகவ மணிமாட மாகியொளி
விரிகதிர்ச் சுடரு மாகி
காதகி தம்பல முழக்கமிட் டோலமிடு
காதகா தாந்த மாகி
கற்குணங் குடியா னெனப்பே ரெனக்கருளு
ஞான திரு காம மாகி
ஆதிமுத லந்தமூர் தானாகி விரிவா
யகண்டிதா கார மாகி
அவிருமொளி புரியவடி யேனுமுமை நம்பினே
னறிவுதந் தானா தற்கே
மாதூய பாதமல ருள்ளநீர் பின்றொடர
வள்ளலிற சூல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
மணியே முஹியித் தீனே. (9)

கங்குல்பக லற்றவரு டங்குமெங் கெங்குநிறை
காரணக் கடவு ளாகி
கங்கறப் பொங்குகரு ணைக்கடலு மாகியெங்
கரதலா கமல மாகி
சிங்கத்தை யொத்துவினை தன்னைச் செயங்கொண்ட
தேசிகன் றானு மாகி
தேறுதீ ரக்குணங் குடிவாழ்க்கை யெற்குதவ
திவ்வியகுண மேரு வாகி
எங்கே யிருக்கினு மங்குவந் துதவிதரு
மெங்கண்மகு ஜூது மாகி
இலையுமொளி புரியவடி யேனுமுமை நம்பினே
னெளிதில்வந் தானா தற்கே

மங்கள சவுந்தரிய முள்ளநீர் பின்றொடா
வள்ளலிற சூல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
மணியே முஹியித் தீனே. (10)

ஆக பாடல்-44

அருள்கூர்ந்த காட்சி யாகிய வுண்மையும்
பொருள்கூர்ந்து காண்போன் வேறெனப் பொருந்தா
தொன்றாமுறைமை யோதுக விவ்விடை
யின்றாக வருள்கவென் றிரங்கி யிரத்தல்.

ஆசிரிய விருத்தம்.

பாரீரோ வென்னையென் னன்னையே யென்முகம்
பார்த்தருள் பழுத்தி டீரோ
பாவிகன் னெஞ்சவஞ் சஞ்சிந்த வக்துமது
பாதத் தழுத்தி டீரோ
வாரீரோ வென்னெதிரில் வந்தெனக் கொருமுத்தம்
வாய்கொண் டளித்தி டீரோ
மகிழீரோ புகழீரோ கருணைகூர்ந் தெனையாள
வாவென் றழைத்தி டீரோ
சேரீரோ வென்னையுஞ் சேர்ந்தோர்க்கு முமதருட்
டேடறத் தெளித்தி டீரோ
சின்னதமொன் றிடையுமடி யேனுமுனை நம்பினேன்
சிந்தாகுலத் தாறு தற்கே
வாவோர மொனமொன்ன துள்ளநீர் பின்றொடா
வள்ளலிற சூல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
மணியே முஹியித் தீனே. (1)

எக்கட் குடிக்காச ரேயுமது பாதமெற்
கெய்தாத தென்ன குறையோ
என்றெய்வ முன்றெய்வ மென்றகுறை யோவல்ல
திடிசாப மான குறையோ
பங்குகூ றிட்டகுறை யோபாவி வாழ்மனது
பக்தியில் லாத குறையோ
பகலையிரு ளென்றகுறை யோவீண் படர்க்தறப்
படுபீல மான குறையோ
அங்குமிங் குங்கெட் டலைக்தகுறை யோதேடி
யலையா திருந்த குறையோ
அறியாம லிடையுமடி யேனுமுமை நம்பினே
னலைவுதந் தாளு தற்கே
வங்கமா யன்பாழி வுள்ளநீர் பின்றொடர
வள்ளலிற சூல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
மணியே முஹியித் தீனே. (2)

கல்லிலோ மண்ணிலோ விண்ணிலோ வடிமையிரு
கண்ணிலோ கண்ணீ ரிலோ
கரையிலோ கடலிலோ வுடலிலோ வுயிரிலோ
கதியான பூரி தனிலோ
அல்லிலோ பகலிலோ கல்லபத வில்லிலோ
அறிவிலோ யருமீ திலோ
அறிவிலோ வறியொணு மறையிலோ மறைகொண்முத
லாகம புராணத் திலோ
செல்வமிகு துரைராச ரேதேவ ரீர்க்குநிலை
திவ்விய குணங்கு டியிலோ

மங்கள சவுந்தரிய முள்ளநீர் பின்றொடர
வள்ளலிற சூல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
மணியே முஹியித் தீனே. (10)

ஆக பாடல்-44

அருள்கூர்ந்த காட்சி யாகிய வுண்மையும்
பொருள்கூர்ந்து காண்போன் வேறெனப் பொருந்தா
தொன்றுமுறைமை யோதுக விவ்விடை
யின்றுக வருள்கவென் றிரங்கி யிரத்தல்.

ஆசிரிய விருத்தம்.

பாரீரோ வென்னையென் னன்னையே யென்முகம்
பார்த்தருள் பழுத்தி டீரோ
பாவிகன் னெஞ்சவஞ் சஞ்சிந்த வந்துமது
பாதத் தழுத்தி டீரோ
வாரீரோ வென்னெதிரில் வந்தெனக் கொருமுத்தம்
வாய்கொண் டளித்தி டீரோ
மகிழீரோ புகழீரோ கருணைகூர்ந் தெனையாள
வாவென் றழைத்தி டீரோ
சேரீரோ வென்னையுஞ் சேர்ந்தோர்க்கு முமதருட்
டேறற் றெளித்தி டீரோ
சிந்தைகொந் திடையுமடி யேனுமுமை நம்பினேன்
சித்தம்வைத் தாளு தற்கே
வாரோ மெனச்சொன்ன துள்ளநீர் பின்றொடர
வள்ளலிற சூல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
மணியே முஹியித் தீனே. (1)

எங்கட் குடிக்கரச ரேயுமது பாதமெற்
கெய்தாத தென்ன குறையோ
என்றெய்வ முன்றெய்வ மென்றகுறை யோவல்ல
திடிசாப மான குறையோ
பங்குகூ றிட்டகுறை யோபாவி வாழ்மனது
பக்தியில் லாத குறையோ
பகலேயிரு ளென்றகுறை யோவீண் படர்ந்தறப்
படுநீல மான குறையோ
அங்குமிங் குங்கெட் டலேந்தகுறை யோதேடி
யலேயா திருந்த குறையோ
அறியாம லிடையுமடி யேனுமுமை கம்பினே
னனேவுதந் தாளு தற்கே
வங்கமா யன்பாழி வுள்ளநீர் பின்றொடர
வள்ளலிற சூல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
மணியே முஹியித் தீனே. (2)

கல்லிலோ மண்ணிலோ விண்ணிலோ வடிமையிரு
கண்ணிலோ கண்ணீ ரிலோ
கரையிலோ கடலிலோ வுடலிலோ வுயிரிலோ
கதியான பூமி தனிலோ
அல்லிலோ பகலிலோ கல்லபத வில்லிலோ
அறிவிலோ வுருமீ திலோ
அறிவிலோ வறியொணு மறையிலோ மறைகெண்முத
லாகம புராணத் திலோ
செல்வமிகு துரைராச ரேதேவ ரீர்க்குநிலே
திவ்விய குணங்கு டியிலோ

தெரியாம லிடையுமடி யேனுமுமை நம்பினேன்
சேர்ந்தணைத் தாளு தற்கே
மல்லிகை மலர்க்கந்த முள்ளநீர் பின்றொடா
வள்ளலிற சூல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
மணியே முஹியித் தீனே. (3)

ஓயாதோ வென்கவலை யுள்ளுருகி யானந்த
முள்ளுளே பாய்ந்தி டாதோ
ஒழியாதோ விழிமாயை யழியாதோ பாழாசை
யூழ்வினைக ளோய்ந்தி டாதோ
தீயாதோ வன்கருவி காயாதோ கரணங்க
ளவினைக ளர்ந்தி டாதோ
தேறாதோ பாழ்மனஞ் சாராதோ பேரறிவு
திவ்யகுணம் வாழ்ந்தி டாதோ
பேயாதோ வருண்மாரி வாயாதோ வான்கருணை
பேரின்ப சேர்ந்தி டாதோ
பெருகநின் றிடையுமடி யேனுமுமை நம்பினேன்
பிரியமுட னுளு தற்கே
வாயிற் சிறந்தமொழி யுள்ளநீர் பின்றொடா
வள்ளலிற சூல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
மணியே முஹியித் தீனே. (4)

காடுமோ முத்திவழி கூடுமோ நெற்றிவிழி
நல்லறிவு பந்தா டுமோ
நற்குணங் குடிமீது வீடுதா வென்றணையு
காதனரு ளுக்கே டுமோ

ஆடுமோ வட்டமா சித்தியும்புத்தியு
மந்தவழி யைச்சா டுமோ
ஆரபா ரத்தையும் போடுமோ சித்தமா
நந்தகட னம்மா டுமோ
மாடகூ டங்களெ னு மனையாட்டி தருமாசை
மாட்டனென விட்டோ டுமோ
மனமறிந் திடையுமடி யேனுமுமை நம்பினேன்
வந்தணைந் தாளு தற்கே
வாடா மலர்க்குநிக ருள்ளநீர் பின்றொடர
வள்ளலிற சூல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
மணியே முஹியித் தீனே. (5)

ஆசாப சாசவலை யுள்ளகப் படுவனோ
வல்லது வெளிப்ப டுவனோ
அகிலவாழ் வென்றிடு மாற்றில்வீழ்ந் திடுவனோ
வப்புற கடந்தி டுவனோ
காசாசை கொண்டுகதி கெட்டுநின் றிடுவனோ
கதியாசை கொண்டி டுவனோ
கரையற்ற கப்பலென் னக்களங் கிடுவனோ
கரையேறி நின்றி டுவனோ
ஈசனடி செல்லா திருந்துசென் றிடுவனோ
வீசனடி சென்றி டுவனோ
ஏங்கிமிக விடையுமடி யேனுமுமை நம்பினே
னேக்கமற வாழு தற்கே
மாசிலா மணிமாலை யுள்ளநீர் பின்றொடர
வள்ளலிற சூல்வ ருகவே

வளருமரு ணிறைகுணக் குடிவாழு மென்னிருகண்
மணியே முஹியித் தீனே. (6)

புதல்வரொனு முதலைகள் பிடித்துக் கடித்துப்
புசிக்கக் கொடுத்து முல்வனே
பொல்லாத காமக் கடற்புலா லென்னுமோர்
பூவகைப் பட்டு முல்வனே
கதகதென் றெறியும் பணத்தீ மிதித்தெனது
கால்கொப்ப ளித்து முல்வனே
கட்டுபட் டாடைக ளெனுமமன் கைவலைக்
கட்டுண்டு நின்று முல்வனே
சதசதென் றழுகுதுர்க் கந்தசாக் கடையான
சமுசார மதிலு முல்வனே
தத்தளித் திடையுமடி யேனுமுமை நம்பினேன்
சற்றுவந் தாளு தற்கே
மதலைபோற் கொஞ்சுகுண முள்ளநீர் பின்றொடர
வள்ளலிற சூல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
மணியே முஹியித் தீனே. (7)

வண்டாய்ப் பறக்தெழுக் திடுவனே செற்றின்ப
வாரியில் விழுந்தி டுவனே
மண்ணுன காமக் குரோதமுண் டிடுவனே
மாயைதனை வென்றி டுவனே
பெண்டாசை யென்றபேய் கொண்டுசெத் திடுவனே
பேரின்ப முற்றி டுவனே
பிறற் றுருத்தியிற் பிரியமுற் றிடுவனே
பிரியங்க ளற்றி டுவனே

கண்டளக் திடுகாழி யாவனே குறைவினிறை
 காணுழி தானு வனே
காளெலா மிடையுமடி யேனுமுமை கம்பினே
 னன்மைகூர்க் தாளு தற்கே
மண்டுபே ரின்பவொளி யுள்ளநீர் பின்றொடர
 வள்ளலிற சூல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
 மணியே முஹியித் தீனே. (8)

என்னக மிருக்ககா னென்வசப் படுவனே
 வென்னமோ சப்படு வனே
இரவுபக லற்றவனு பூதிதனி லுறைவனே
 விதமகித மதிலு றைவனே
தன்னைமதி யாதுமதி கேடுகெட் டிடுவனே
 தன்னையு மதித்தி டுவனே
தாராள மாகவரு ணேயமுண் டிடுவனே
 தட்டுமருள் கொண்டி டுவனே
என்னதான் செய்வதினி யென்றுமேங் கிடுவனே
 வேகாந்த மோங்கி டுவனே
இப்படிக் கிடையுமடி யேனுமுமை கம்பினே
 னிஷ்டம்வைத் தாளு தற்கே
மன்னுதவ முத்திநிலை யுள்ளநீர் பின்றொடர
 வள்ளலிற சூல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
 மணியே முஹியித் தீனே. (9)

கோளுமன் னரசர்கைக் கோலாவ னேபாவி
 குருடர்கைக் கோலா வனே

ஹூலாயி லாஹுயில் லல்லாஹு வென்பனே
குடிகெட்ட நிலையுண் பனே
வேலையது வாய்முஹம் மதுர்றசூ லென்பனே
வேலையிது தானென் பனே
வேதவே தாந்தமெய்ஞ் ஞானவீ டடைவனே
வெறுவெளியி னின்றி டுவனே
ஆலா விருக்ஷமென மேலாவ னேவுதி
ரதன்சருகு போலா வனே
ஆனாலு மிடையுமடி யேனுமுமை நம்பினே
னாதரித் தாளு தற்கே
மாலர்க்கு வாலாய முள்ளநீர் பின்றொடரா
வள்ளலிற சூல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
மணியே முஹியித் தீனே. (10)

ஆக பாடல் 54.

ஒன்றுஞ் சமாதி யோகமிம் முறையா
மென்றருள் பிரானே யிவற்றியல் பெல்லா
மெவற்றானு மசையா திசையப் படுத்தித்
தவத்தகை யருள்கெனச் சரண்புகுந் திரத்தல்.

ஆசிரிய விருத்தம்.

பாயுமீ ராறுகலை பாயாது பக்குவம்
பண்ணிவைப் பதுச மாதி
பழவினை யிறக்கவுஞ் சுழிமுனை திறக்கவும்
பழகிவரு வதுச மாதி
ஓயாத கருவிகர ணாதியோய்ந் தொழியவிழி
யொளிகொழிப் பதுச மாதி

ஒன்றிரண் டென்றுமன முற்றுமுளறு தலைவிட்
டொன்றுபடு வதுசமாதி
ஈயெறும் பாதிக டமக்குடல் குழைக்துமு
னின்புருகு வதுச மாதி
என்றருள் பிரானே யடியேனு முமைநம்பினே
னிதுவேலை யானு தற்கே
வாயுவினு மதிவேக முள்ளநீர் பின்றொடர
வள்ளலிற சூல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
மணியே முஹியித் தினே. (1)

காவினுனி தலைமடித் தக்கான மோட்டிசிலை
காட்டிவைப் பதுச மாதி
காலிரண் டெட்டுமெட் டெட்டாகி யழியுமுன்
னூலாக்கு வதுச மாதி
ஓவியம் போலிருக் துள்ளுருகு கல்லமிர்த
மொழுகவுண் பதுச மாதி
உச்சிவெளி சென்றுமொளி கண்டுமிரு விழியையு
முட்குவிப் பதுச மாதி
ஏவலொடு விலகலெனு மிருவினைப் பற்றசை
விலாதிருப் பதுச மாதி
என்றருள் பிரானே யடியேனு முமைநம்பினே
னிதுவேலை யானு தற்கே
மாவேக மனவேக முள்ளநீர் பின்றொடர
வள்ளலிற சூல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
மணியே முஹியித் தினே. (2)

இதயங் களித்துவரு வதையுங் கொளுத்திவெளி
யேறிவிடு வது சமாதி
எட்டியெட் டாப்பொருளை யெட்டிப் பிடிக்கவடி
யெட்டிவைப் பதுச மாதி
பதியுனதி பதியைவைத் ததிகதுதி யோதிப்
பதம்பணிகு வதுச மாதி
பரிபூ ரணந்தனில் வருகார ணந்தனைப்
பார்த்துமகிழ் வதுச மாதி
எதுவந்து சேரினும் மாறினு மிரண்டுமொன்
றென்றிருப் பதுச மாதி
என்றருள் பிரானே யடியேனு முமைநம்பினே
னிதுவேளை யாளு தற்கே
மதயானை போற்றீர முள்ளநீர் பின்றொடர
வள்ளலிற சூல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
மணியே முஹியித் தீனே. (3)

வேரற்ற சுத்தபரி பூரணப் பேரின்ப
வீடுபுகு வதுச மாதி
விரிகருணை தந்தகுரு காதனடி யார்களென
வேடமணி வதுச மாதி
போராடு மையற் குதக்கைக் கடந்தப்
புறத்தினிற் பதுச மாதி
புகன்மறைப் பொருளைமற வரக்கடனமக் கென்று
புத்திமகிழ் வதுச மாதி
ஈராறு கால்களையு மெட்டுக் கயிற்று
லிறுக்கியறி வதுச மாதி

என்றருள் பிரானே யடியேனு முமைகம்பினே
னிதுவேளை யாளு தற்கே
மார்பணியு முத்தார முள்ளநீர் பின்றொடர
வள்ளலிற சூல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
மணியே முஹியித் தீனே. (4)

சாதிபே தத்தையும் மாதர்போ கத்தையுந்
தள்ளிநிற் பதுசு மாதி
சத்ததமு மொளிருமருண் ஞானவரு டேசிகன்
தன்னையறி வதுசு மாதி
தீதிலருள் கொண்டதே சோமயத் துன்மனஞ்
சேர்ந்திருப் பதுசு மாதி
செத்தசவ மதுபோ லிருந்துசெப தபமுஞ்
செயத்தனிப் பதுசு மாதி
ஏதுமது வானகுரு காதனிரு பாதமதி
லிச்சைவைப் பதுசு மாதி
என்றருள் பிரானே யடியேனு முமைகம்பினே
னிதுவேளை யாளு தற்கே
மாதவர் களுக்குதவி யுள்ளநீர் பின்றொடர
வள்ளலிற சூல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
மணியே முஹியித் தீனே. (5)

கிரியாசை யற்றுதற வதியாசை யுற்றுகன்
னிட்டைபுரி வதுசு மாதி
கிலையாது காயமென் றெண்ணமொன் றென்றென்று
கிச்சயிப் பதுசு மாதி

வதியுஞ்சவ் வாதுசக் தனமுமொன் றென்றுமனம்
வைத்துநிகழ் வதுச மாதி
வாராது வாராது வருவனவும் வருமென்று
வாட்டமொழி வதுச மாதி
இதமகித மற்றமதி பெற்றிதய முத்திநிலை
யேற்றுநிற் பதுச மாதி
என்றருள்பிரானே யடியேனு முமைநம்பினே
னிதுவேளை யாளு தற்கே
மதுரவின் பப்பெருக் குள்ளநீர் பின்றொடர
வள்ளலிற சூல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
மணியே முஹியித் தீனே. (6)

எல்லையு மறந்துபல தொல்லையு மிறந்ததோ
ரிடத்திருப் பதுச மாதி
எனதியா னென்பதை யுடம்பொருளோ டேவன்முத
லீடழிப் பதுச மாதி
அல்லுபக லாகவெல் லும்மளவு நல்லறிஞ
ரடிபணிகு வதுச மாதி
ஆகமத் தின்படிச் சாதிக்க முதலெவையு
மற்றிருப் பதுச மாதி
இல்லாளு மைந்தருஞ் சுற்றமுஞ் சுற்றமா
யில்லையென் பதுச மாதி
என்றருள் பிரானே யடியேனு முமைநம்பினே
னிதுவேளை யாளு தற்கே
மல்லாடி னும்பொறுமை யுள்ளநீர் பின்றொடர
வள்ளலிற சூல்வ ருகவே

வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
மணியே முஹியித் தீனே. (7)

சலனசஞ் சலமது தொலைத்தருண் மலைப்புடையில்
சார்ந்திருப் பதுச மாதி
சர்வபரி பூரண வகண்டிதா காரமே
சாட்சிவென் பதுச மாதி
நிலையம்விட் டலையாது நீவாத தீபமென
நிலையினிற் பதுச மாதி
நெற்றிவிழி ரண்டையு மொத்துகடு கொண்டொளிவி
னேரில்வைப் பதுச மாதி
இலகுஞ் சதாகால நிட்டைபல் குக்துறவி
லெய்திநிற் பதுச மாதி
என்றருள் பிரானே யடியேனு முமைநம்பினே
னிதுவேளை யாளு தற்கே
மலைபோற் பெரும்பெருமை யுள்ளஙீர் பின்றொடர
வள்ளலிற சூல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
மணியே முஹியித் தீனே. (8)

ஆரிருந் தென்னவரர் போயென்ன வென்றுமன
மற்றிருப் பதுச மாதி
ஆராலு மறியாத சூதான வெளிசென்
றடைந்துபோ வதுச மாதி
வீரசூ ரங்கள்முத லதிகப்பிர சங்கமு
மெலியமெலி வதுச மாதி
வேதவே தாந்தமும் விட்டுநா தாந்தகடு
வீடுசெல் வதுச மாதி

ஏறுரு மயிர்ப்பால மேறுமன மேயேறு
மேறுமென் பதுச மாதி
என்றருள் பிரானே யடியேனு முமைகம்பினே
னிதுவேளை யானு தற்கே
வாரிபோல் வான்கருணை யுள்ளநீர் பின்றொடர
வள்ளலிற சூல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
மணியே முஹியித் தீனே. (9)

ஆழியென வருள்பொங்கு மாசையுந் தழுதழு
தகங்களிப் பதுச மாதி
அதிசுகம் பெருவரி யமிர்தமுண் டுண்டுதகை
யாறிநிற் பதுச மாதி
பாழிநிலை யற்றுமுப் பாழினிலை பெற்றுப்
பதைப்பொழிப் பதுச மாதி
பல்கோடி யண்டபகி ரண்டமுந் தன்னுளே
பார்த்திருப் பதுச மாதி
ஏழுபுவ னத்தையுஞ் சுற்றியுஞ் சுற்று
திருப்பிருப் பதுச மாதி
என்றருள் பிரானே யடியேனு முமைகம்பினே
னிதுவேளை யானு தற்கே
வாழுமஹ் மூதினரு ளுள்ளநீர் பின்றொடர
வள்ளலிற சூல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
மணியே முஹியித் தீனே. (10)

ஆக பாடல் 64.

காந்தமு மயமுங் கலக்தெனக் கலந்து
மாய்ந்த வுளத்தை மாயா தாகப்
போந்திடை முளைக்கும் புதுமைக ளெல்லாந்
தேய்ந்தற வருள்கெனச் சிந்தித் திரத்தல்.

ஆசிரிய விருத்தம்.

குவலயக் கவலைதரு மிடுமடையர் கைகளைக்
கோத்துத் திரிந்த வம்பன்
கோட்டியுங் கேட்டையுஞ் சேட்டையுங் கூட்டியொரு
கோட்டையாய்க் கட்டு வம்பன்
தவிராத காயகற் பங்கொள்கி றேனினிச்
சாவேனோ வென்ற வம்பன்
சந்யாச மென்றபொய் வேடந் தரித்தவர்க
டம்மைசித்தர் சொன்ன வம்பன்
செபமாலை கைக்கொண்டு வாய்முணு முணுத்துவுப
தேசிகா னென்ற வம்பன்
தீதெலாந் தீரவடி யேனுமுமை நம்பினேன்
றீரவந் தாளு தற்கே
மௌனமெனு மோனவடி வுள்ளநீர் பின்றொடா
வள்ளவிற சூல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
மணியே முஹியித் தீனே. (1)

நெறியற்ற வம்பனல் லறிவற்ற வம்பனெதிர்
நிகரற்ற கொடிய வம்பன்
நிறையற்ற வம்பன்வரன் முறையற்ற வம்பனவ
னெஞ்சனஞ் சாத வம்பன்
குறியற்ற வம்பனொரு சரியற்ற வம்பன்
குணக்கேட னான வம்பன்

கொடியரிற் சகசண்டி யானவம்பன் கெட்ட
கொலைபாவி யான வம்பன்
உறவற்ற வம்பன்மிகு வெறிபெற்ற வம்பனே
ரூர்க்குமா காத வம்பன்
உமதுபத மறியவடி யேனுமுமை நம்பினே
னுளமகிழ்ந் தாளு தற்கே
மறுகவலை யுறினுமுற வுள்ளநீர் பின்றொடர
வள்ளலிற சூல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
மணியே முஹியித் தீனே. (2)

கல்லாத வம்பனறி வில்லாத வம்பனொரு
காசும் பெறாத வம்பன்
கடுவாயி னுங்கொடிய வம்பன் வெருட்டி
கடிக்குநா யான வம்பன்
பொல்லாத வம்பனுற வில்லாத வம்பன்
பொறாமையே கொண்ட வம்பன்
புன்மைகுடி கொண்டகெச போக்கிலிகள் சறுதாறு
போலுமுன் னேறு வம்பன்
மல்லாடு வம்பனதை பல்லாடு வம்பனிடு
மடையர்கடை யுடைய வம்பன்
வம்பெலா மகலவடி யேனுமுமை நம்பினேன்
மரபுதந் தாளு தற்கே
வல்லாண்மை யில்லாமை யுள்ளநீர் பின்றொடர
வள்ளலிற சூல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
மணியே முஹியித் தீனே. (3)

அதிகப்பிர சங்கமே குடிகொண்ட வம்பனன்
  பணுவுமில் லாத வம்பன்
அச்சமில் லாதவம் பன்றிட்டு கிட்டூர
  வனியாயக் கார வம்பன்
கெதிகெட் டுருட்டுவம் பன்றிருட் டெருமைக்
  கிடாவினு முறட்டு வம்பன்
கெண்டர்க்கு வண்டர்க்கு மிண்டவம் பன்சண்டை
  கெக்கரிக் கொட்டு வம்பன்
விதிகெட்ட வம்பனிலை பதிவிட் டலைந்ததலை
  விரிகோல மான வம்பன்
விடமெலா மொழியவடி யேனுமுமை நம்பினேன்
  விரைவில்வந் தாளு தற்கே
வதலாள் விடாமலெனை யுள்ளநீர் பின்றொடர
  வள்ளலிற சூல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
  மணியே முஹியித் தீனே. (4)

சதியா யிரஞ்செய்த வம்பகல் விதமகித
  சகசமறி யாத வம்பன்
தந்தைதாய் தன்மனதை கோவித்த வம்பன்
  றராதரங் கெட்ட வம்பன்
பதினுயி ரத்தாஞ் சொல்லினுஞ் செவியுட்
  படாதபிடி வாத வம்பன்
பாரவான் முதலான பேருமென் பேரையும்
  பகரப் பயந்த வம்பன்
நிதிதேடு சீவச் சவங்கள்பட் சங்களே
  நேசித்த தோஷி வம்பன்

கொடெலாம் வெருளவடி யேனுமுமை நம்பினேன்
னேயம்வைத் தாளு தற்கே
மதிதனிலு மதிகவொளி யுள்ளநீர் பின்றொடர
வள்ளலிற சூல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
மணியே முஹியித் தீனே. (5)

எஞ்சா ணுடம்புமொரு போதுமழி யாதென்ற
வெண்ணமொழி யாத வம்பன்
எதுவந் தாலுமோ ரணுவிற்கு நிகரென்
றிடும்பைகள் பேசு வம்பன்
கண்சாடை கண்டுவில காதவம் பன்காசு
காசுகா சென்ற வம்பன்
கல்லுமொரு போதேனு முருகுமுரு காக்கருங்
கன்னெஞ்ச முன வம்பன்
பெண்சாதி பெண்சாதி பெண்சாதி யென்றே
பிதற்றுபேய் கொண்ட வம்பன்
பேயாட் டொழிக்கவடி யேனுமுமை நம்பினேன்
பிரியமுட னுளு தற்கே
வண்சீரு மெண்சீரு முள்ளநீர் பின்றொடர
வள்ளலிற சூல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
மணியே முஹியித் தீனே. (6)

அஞ்சாத வத்தொழி றனைப்புரியும் வம்பன்மா
வதிகாரி யான வம்பன்
ஆதரிக் காதின்ற பேர்களைத் தானே
யடுத்துக் கெடுத்த வம்பன்

பஞ்சமா பாதகம் முதலான தீதகம்
பயமறச் செய்த வம்பன்
பட்சம்வைத் தோர்தமக் கிச்சைமிக வோதிப்
பணம்பறிக் கின்ற வம்பன்
கஞ்செலா மொன்றாய்த் திரண்டுரு வெடுத்தகெடு
காசச் சரீர வம்பன்
காயினும் கொடியவடி யேனுமுமை நம்பினே
னுட்டம்வைத் தாளு தற்கே
வஞ்சனம ணுக்குகஞ் சுள்ளநீர் பின்றொடர
வள்ளவிற ஸஃல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
மணியே முஹியித் தீனே. (7)

தையலர்க ளாசையெனு மையலில் விடாய்கொண்டு
தாகித் தலைந்த வம்பன்
சாகா வரம்பெற்ற தேகத்த னெனன்று
தலைகெட்டு நின்ற வம்பன்
மெய்யாக வையகத் தாரெனக் கீடென்று
வீண்மதம் பேசும் வம்பன்
வெறிகொண்ட காய்பேரலும் வள்ளுவள்:ளென்றியரர்
மேலும்விழு கின்ற வம்பன்
செய்யாத செய்கையே செய்தவம் பன்பொய்த்த
சிற்றின்ப முற்ற வம்பன்
தீயும் பயந்தவடி யேனுமுமை நம்பினேன்
சித்தம்வைத் தாளு தற்கே
வையமுழு துக்குமணி வுள்ளநீர் பின்றொடர
வள்ளவிற ஸஃல்வ ருகவே

வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
மணியே முஹியித் தீனே. (8)

கேடெலாங் கூடித் திரண்டுருக் கொண்டுகுடி
கேடுட லெடுத்த வம்பன்
கேட்டபேர் கண்டபேர் காதுகண் ணேவெடுக்
கின்றவடி யுண்ட வம்பன்
காடெலா மிவனையு காடலா மோவென்று
நகையாட லுண்ட வம்பன்
காடோறு மாடுபோ லோடியோ டித்தின்று
காவுருசி கண்ட வம்பன்
மேடுமுட் டத்துருத் திக்குட் பருக்கைமிக
வெட்டியே வீசு வம்பன்
மெத்தவும் புற்றவடி யேனுமுமை நம்பினேன்
மேன்மைதக் தாளு தற்கே
மாடம்ப ஜம்பகடை யுள்ளநீர் பின்றொடர
வள்ளலிற ஸூல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
மணியே முஹியித் தீனே. (9)

தாயாதி முதலன்னை சுற்றங்க டம்மையுஞ்
சாரா தடித்த வம்பன்
தானதரு மங்களுக் கீனதரு மங்களோ
சாட்டிக் கொடுத்த வம்பன்
பேயாய் பிடித்துவெறி காயாய் கடித்துப்
பிடாரிபோ லலையும் வம்பன்
பீருகா னென்னுமுப தேசங்கள் கூறிவிலை
பேசித் திரிந்த வம்பன்

தூயமஹூ மூதுகபி பாதமல ரைச்சென்னி
சூட்டறிவின் மோட்டு வம்பன்
துறவெய்த ரெய்தவடி யேனுமுமை நம்பினேன்
சொன்னபடி யாளு தற்கே
மாயோக சித்திநெறி யுள்ளகீர் பின்றேடா
வள்ளலிற ஸல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
மணியே முஹியித் தீனே. (10)

ஆக பாடல் 74.

பொருளிற்கு வேறுப் போக்தகா னென்னு
மருளே யுளத்தை மறைக்கும் பவத்தி
னியங்கா துலவா தெகுகில் லாது
வயங்கா தகற்றுக வள்ளலென் றிரத்தல்.

ஆசிரிய விருத்தம்.

வேதாந்த சாரமே சாரமென் றறியாது
வீணை டொலைத்த பாவி
மேன்மேலு மெய்ஞ்ஞான வின்பமனு காதபாழ்
மெய்யைமெய் யென்ற பாவி
சோதிபிர காசச் சுயஞ்சோதி யணுகத்
தொழுந்துறைக ளற்ற பாவி
சுகநிட்டை பாராத விழியெனு முகத்திலிரு
தொள்ளையொ டிருந்த பாவி
கோதிலும தடிபணிகி லாதகிர சென்றகற்
குன்றைச் சுமந்த பாவி
கொடியமா பாவியடி யேனுமுமை நம்பினேன்
குடியிருந் தாளு தற்கே
7

மாதவ வபேதகிலே யுள்ளநீர் பின்றொடர
வள்ளலிற ஸூல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
மணியே முஹியித் தீனே. (1)

மட்டிகளி னுங்கெட்ட சுட்டிவால் வெட்டிபேய்
மட்டைராட் டித்த பாவி
வஞ்சகமெ னுக்குவா ரிக்கொடுத் திடவுடலை
வளமாய் வளர்த்த பாவி
சட்டிவைத் துச்சட்டி வாங்கும் பெருந்தொப்பை
சற்றும்வடி யாத பாவி
சண்டாள ருக்குமா சண்டாள ருக்குமா
சண்டாள னான பாவி
பொட்டையிபு லீசுகைக் குட்பட்ட பாவியொரு
போக்குநீக் கற்ற பாவி
போதாத பாவியடி யேனுமுமை நம்பினேன்
பொய்மைதீர்த் தாளு தற்கே
வட்டமதி வெட்குமுக முள்ளநீர் பின்றொடர
வள்ளலிற ஸூல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
மணியே முஹியித் தீனே. (2)

நாசச் சரீரத்தை நானெ னெனக்குளறு
நாசம் பிடித்த பாவி
நானெ விதங்கட்கு மேலான பாவியா
னற்றவமு மற்ற பாவி
கூசாத பாவிவாய் பேசாத பாவிமர
கோபம் படைத்த பாவி

கொலைபாவி கொலைபாவி கொலைபாவி கோட்டானு
கோடிகொலை செய்த பாவி
வேசியர்க ளாசைவினை யகலாத பாவிதீ
வினையுமக லாத பாவி
வீணான பாவியடி யேனுமுமை நம்பினேன்
மெய்ம்மைதக் தாளு தற்கே
வாசாம கோசரத் துள்ளநீர் பின்றொடர
வள்ளலிற சூல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
மணியே முஹியித் தீனே. (3)

பிரியாத பேரின்ப வனுபூதி யாசைப்
பிறப்புமறி யாத பாவி
பிரபஞ்ச வுறவைகெஞ் சம்மஞ்சி ஞோர்கடம்
பின்சென்றி டாத பாவி
அருமையா யறிகுறிக ளத்தனையு மெத்திகல்
லறிகுறிக ளற்ற பாவி
அந்தகா ரத்தையே யுந்தியுட் கொண்டுவெறு
மெஞ்ஞானி யான பாவி
நரசென்ம மாகியு நற்குணங் கனவிலு
நாடியறி யாத பாவி
நலமற்ற பாவியடி யேனுமுமை நம்பினே
னன்புதக் தாளு தற்கே
வருகவலை யேகவழி யுள்ளநீர் பின்றொடர
வள்ளலிற சூல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
மணியே முஹியித் தீனே. (4)

தேகாதி யகிலப்பிர பஞ்சமது பொய்யென்று
தேர்ந்தறிவி லாத பாவி
தீபாவி தீபாவி தீபாவி தீபாவி
திவ்வியகுண மற்ற பாவி
மாகவலை குடிகொண்ட பாவிவம் பாகவே
வாதாடு கின்ற பாவி
மாயப் பசாசுகொண் டலைபாவி வீணாக
வாழ்கா ளழித்த பாவி
ஆகாத பாவியா னாகாத பாவியா
னார்க்குமா காத பாவி
அளவற்ற பாவியடி யேனுமுமை நம்பினே
னண்டலைனத் தாளு தற்கே
வாகுவழி யேகவொளி யுள்ளகீர் பின்றொடர
வள்ளலிற சூல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
மணியே முஹியித் தீனே. (5)

மெய்யான பொய்யுடலை மெய்யென்று மெய்யான
மெய்யறிவு கெட்ட பாவி
மெய்யான மெய்யேது மறியாத பொய்யான
மெய்யைப் படைத்த பாவி
பொய்யான தையலரை யையோ வணக்கசுக
போகமோ கித்த பாவி
பொய்யான புலையான கொலையான மலையான
பொய்த்தமொழி கற்ற பாவி
வையாத வையாசை யானதீ யானமா
மாலைகுடி கொண்ட பாவி

மரகொடும் பாவியடி யேனுமுமை நம்பினேன்
வந்திருந் தாளு தற்கே
வையவிழி மையவொளி யுள்ளநீர் பின்றேடா
வள்ளலிற சூல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
மணியே முஹியித் தீனே. (6)

பசுபாச வாசவினை யென்றவெறி கொண்டலை
பசாசாடு கின்ற பாவி
பால்பழங் கற்கண்டு சர்க்கரைகண் மொக்கியும்
பட்டமர மான பாவி
விசனமொடு துக்கமே குடிகொண்ட பாவிபொய்
வேடந் தரித்த பாவி
வித்தகன் றிருவடி தனைத்தொழுது தொழுதழுது
மெய்யரு ளுருத பாவி
நிசமாக வசைபேசு வார்கள்வாய் தன்னிலே
நீதமா யிருந்த பாவி
நிலையற்ற பாவியடி யேனுமுமை நம்பினே
னேயம்வைத் தாளு தற்கே
வசியமன வாசிவச முள்ளநீர் பின்றேடா
வள்ளலிற சூல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
மணியே முஹியித் தீனே. (7)

இதமகித மென்றவினை யுங்கொண்ட லைந்துசிற்
றின்பவேம் புண்ட பாவி
எண்சா ணுடம்பும்வெறு நஞ்சான பாவியோ
ரின்பமனை யாத பாவி

102 மஸ்தான் ஸாஹிபு அவர்கள் பாடல்

பதமற்ற பாவிபக் கிறுதறு தலைமொட்டைப்
பரதேசி யான பாவி
பாவிப் பிணங்களைப் பாடித் துதித்துப்
பணம்பறிக் கின்ற பாவி
சதிகெடும் பாழாக்கு மதிகொடும் பாவிப்பொய்ச்
சத்தியஞ் செய்த பாவி
சர்ப்பகிகர் பாவியடி யேனுமுமை நம்பினேன்
சாரிவக் தாளு தற்கே
மதினமுத லும்வாச முள்ளகீர் பின்றொடா
வள்ளவிற சூல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
மணியே முஹியித் தீனே. (8)

கைக்குள்வெண் ணெயைவைத்து நெய்க்கழுத பாவிகளை
கற்றுமறி வற்ற பாவி
கற்பக விருக்ஷத்தி னடியிலே காஞ்சிரங்
காய்தேடி கின்ற பாவி
கொக்குப் பிடிக்ககாய்க் குத்தெரியு மோவென்ற
கொள்கைகுடி கொண்ட பாவி
குருடர்களி யானையைக் கண்டகதை போலசற்
குருவையறி யாத பாவி
சர்க்கரை கரும்புகற் கண்டமு திருக்கக்
கசங்குடிக் கின்ற பாவி
தலைகெட்ட பாவியடி யேனுமுமை நம்பினேன்
றயையைவைத் தாளு தற்கே
மக்கதக ருக்குமண முள்ளகீர் பின்றொடா
வள்ளவிற சூல்வ ருகவே

வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
மணியே முஹியித் தீனே. (9)

குரைஷிக் குலக்கொழுந் தானமஹா மூதுசுபி
கொள்கையறி யாத பாவி
கொறடாத் தனைக்கொண்டு மாட்டினு மறிஞர்பின்
கூடிநட வாத பாவி
அரிசிவிலை யுலையறியு மோவென்ற கதைபோல
வகலிற் படைத்த பாவி
ஆருக்கு வைத்தகூ ழாகினுஞ் சரிகாணி
லள்ளியடை கின்ற பாவி
விரிதருந் தொப்பையை விருப்பொடு வளர்க்கமேன்
மேலுமலை கின்ற பாவி
விதியற்ற பாவியடி யேனுமுமை நம்பினேன்
வேளையீ தானு தற்கே
வரிசைநபி வரிசைமிக வுள்ளநீர் பின்றொடர
வள்ளலிற ஸூல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
மணியே முஹியித் தீனே. (10)

ஆக பாடல் 84.

இதற்கு முன்சொன்ன விடையூ றிரண்டினுற்
பதைப்பற் றிராத பாவியுள் ளத்தினுக்
கென்செய்வ னினென் றிடைந்திடைக் தழுவதை
யின்செய்கை யாலொழித் திடுகவென் றிரத்தல்

ஆசிரிய விருத்தம்.

கனமாயை வினையென்ற சனியன் பிடித்துக்
கலங்கித் தவித்த ழுவனே

காஞன்றி மழைபொழிய வுங்கருணை முகிலினங்
கவியவிலை யென்ற மூவனே
அனியாய மனியாய மனியாய மென்கொடுமை
யனியாய மென்ற மூவனே
ஆனுலு மென்போலு மொருபாவி யகிலமதி
லாருளா ரென்ற மூவனே
இனியாள்வ ரெவரைய னேயைய னேயென்ன
வேங்கித் துடித்த மூவனே
இங்கென்ன செய்வனடி யேனுமுமை நம்பினே
னிஷ்டம்வைத் தாளு தற்கே
மனமாயை யற்றமன முள்ளதீர் பின்றுெடர
வள்ளலிற ஸூல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
மணியே முஹியித் தீனே. (1)

தந்தைதாய் முதலான பந்தங்க ளென்றனைச்
சதிசெய்த தற்க மூவனே
சாதிவரை தள்ளியே சஞ்சரிக் காமெய்த்
தவக்குறை தனக்க மூவனே
புத்திமகி ழுண்டுண் டுடுத்துசிற் றின்பவனு
போகக் தனக்க மூவனே
புனிதஞா னதையப் பெருவெள்ள மென்றுதான்
பொங்குமோ வென்ற மூவனே
எத்தவித மாயினு மிணங்கவிலை யென்மன
மிணங்கவிலை யென்ற மூவனே
என்செய்வ னேழையடி யேனுமுமை நம்பினே
னிதுவேளை யாளு தற்கே

வந்துகுதி கொள்ளுகடை யுள்ளதீர் பின்றொடர
வள்ளலிற ஸூல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
மணியே முஹியித் தீனே. (2)

மாயாத வோயாவி காரத்தி னுலெனது
மனதுநொந் தேய லுவனே
வஞ்சபா பஞ்சத்தை நெஞ்சத் திருத்தியே
மதிகெட்டு நின்ற லுவனே
தீயனிவ னென்றேசு கின்றவர் நகைக்கின்ற
தீவினை தனக்க லுவனே
சீராயே யோடென் றடித்துத் துரத்துஞ்
சிரிப்பினைப் பட்ட லுவனே
காயினுங் கடைகெட்ட காயினுங் கடைகெட்ட
காய்போ லலைந்த லுவனே
காளென்ன செய்வனடி யேனுமுமை நம்பினே
னன்மைகூர்ந் தாளு தற்கே
வாயாத மாயைசா வுள்ளதீர் பின்றொடர
வள்ளலிற ஸூல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
மணியே முஹியித் தீனே. (3)

பாசக் கயிற்றுவலை வீசிப் பிடிக்கின்ற
பாவையர்க் கேய லுவனே
பத்தியொடு தந்தைதாய் தந்துமோ சஞ்செய்த
பல்வினை தனக்க லுவனே
ஆசைப் பெருக்கைப் பெருக்கப் பெருக்கமும்
பாளருக் கேய லுவனே

அம்மம்ம வென்சொல்லுறு கேளையில வாழ்வென்று
மக்கினிகள் சுட்ட பூவனே
பிசேறு பிறந் துருத்திசத மென்றதைப்
பேணுதற் கேய பூவனே
பேயனென் செய்வனடி யேனுமுமை நம்பினேன்
பிழைபொறுத் தாளு தற்கே
மாசிறுப தேசகிலை யுள்ளகிர் பின்றேடா
வன்னவிற லவிஸ்வ ருளவே
வானருமரு ளிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
மணியே முஹியித் தீனே. (4)

எமனைப் பழித்தமட வாரல்கு லென்றபா
ழிடிணை யுறவிழ்க்த பூவனே
இருகொங்கை யென்றதேன் கோட்டிமன் னடைக்கேறி
யெரியுதே யென்ற பூவனே
விலையமா விழிக்கணை தொடுத்துத் துளைக்கவென்
னெஞ்சத் தடித்த பூவனே
செகிழும் குழன்மயிர்க் கன்னியிற் சிக்கியதை
நீக்கமுடி யாத பூவனே
தவியனு னென்செய்வ னென்செய்வ னென்றுயிர
வபித்து நின்ற பூவனே
தக்கையே சோர்ந்தவடி யேனுமுமை நம்பினேன்
சமயமீ தாளு தற்கே
மறைதனில் வாக்குரு முள்ளகிர் பின்றேடா
வன்னவிற லவிஸ்வ ருளவே
வானருமரு ளிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
மணியே முஹியித் தீனே. (5)

ஆனந்த மானபர மானந்த மாகா
 தவத்தையே நினைந்த மூவனே
அகிலமுத லானபா மூசைமா னாதவகி
 யாயக் தனக்க மூவனே
ஈனப் பெருங்காய மென்னதென் பதிலரு
 வேக்கக் தனக்க மூவனே
எனதாவி யுட்பொருளை வந்துலகைக் கொள்வதினி
 யென்றெண்ணி நின்ற மூவனே
கானலே நிகர்த்த பெய்யென்ற பொய்தனைக்
 கருதுவெறி கொண்ட மூவனே
நன்பியென் செய்வனடி யேனுமுமை நம்பினேன்
 கரையேற்றி யாரு தற்கே
வாருதி பூதமதி அவ்வளவீர் பின்றொடா
 வள்ளலிற லைஎல்வ ருகவே
வளருமரு ளிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
 மணியே முஹியித் தினே. (6)

கட்டிப் பிடிக்கினும் கைக்கடங் காமனங்
 கவிவதிலே யென்ற மூவனே
கருவிகா ணம்பாய்கு வதுகண்டு கண்கலக்
 கங்கொண்டு நின்ற மூவனே
வெட்டவெளி தன்னிலே விட்டகங் காரமெனை
 மேவிட்ட தற்க மூவனே
மெய்யாக நானெனது நாரு னெனக்குனதும்
 வெட்கத் தனக்க மூவனே
எட்டிரண் டறியாத மூடரு மிருவினைக்
 கிடாகி நின்ற மூவனே

என்னதான் செய்வனடி யேனுமுமை நம்பினே
னிஷ்டம்வைத் தாளு தற்கே
மட்டுறு நிஷ்டைநடு வுள்ளநீர் பின்றொடா
வள்ளலிற ஸூல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
மணியே முஹியித் தீனே. (7)

நீராழ மாகவென் னெஞ்சுருகி நன்னிலேயி
னிற்கவிலே யென்ற பூவனே
நிஷ்டைக்கு மெட்டாத பேரொளி தியானெத்தி
னேர்படவி லென்ற பூவனே
காரான நந்தங்கள் போலருள்க விந்திடக்
காண்கிலே னென்ற பூவனே
கடவுளைத் தேடியிரு கண்ணீர் ததும்பிக்
கரஞ்சென்னி வைத்த பூவனே
மாரிபோற் பேரின்ப மழைபொழிய விலேயென்று
வாய்விட் டிரைத்த பூவனே
மனைக் திடைத்தவடி யேனுமுமை நம்பினேன்
வாழ்வுதக் தாளு தற்கே
வாராதி ராதவா முள்ளநீர் பின்றொடா
வள்ளலிற ஸூல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
மணியே முஹியித் தீனே. (8)

கட்டழகி தன்னையென் கண்ணிலுங் காண்கிலேன்
காண்கிலே னென்ற பூவனே
கண்மாரி விண்மாரி போற்பொழிய வழுவனே
கைதலேயில் வைத்த பூவனே

கொட்டாவி விட்டுவிட் டேங்கியேங் கிக்கொண்டு
குந்தியுட் கார்ந்த மூவனே
குட்டிச் சுவர்களிற் போயிருந் தையையோ
கோவென் றிறைந்த மூவனே
எட்டாத கொம்பினி லிருக்கின்ற தேனே
யிறங்கிடா தென்ற மூவனே
ஏதென்று சொல்வனடி யேனுமுமை நம்பினே
னிச்சையுட னாரு தற்கே
வட்டமிடு முகில்கவிகை யுள்ளநீர் பின்றொடா
வள்ளலிற ஸூல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
மணியே முஹியித் தீனே. (9)

என்னசெய் யப்போகி றேனென்று பாவிதா
னிரவுபக லாய மூவனே
ஏமசா மம்மென்றி லாதுதேம் பித்தேம்பி
யெறிமூச் செறிந்த மூவனே
கன்னலமு தேசீனி கற்கண்டு சர்க்கரை
கட்டியே யென்ற மூவனே
கண்ணுட்டி யானவென் கண்மணியே யென்றுதான்
காண்பனோ வென்ற மூவனே
நன்னேய ராயமஹா மூதுபத நம்பியு
நாளுமிக கொந்த மூவனே
கைத்தமுது கொந்தவடி யேனுமுமை நம்பினே
னன்புகொண் டாளு தற்கே
மன்னுமதி தனிலுமொளி வுள்ளநீர் பின்றொடா
வள்ளலிற ஸூல்வ ருகவே

வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
மணியே முஹியித் தீனே. (10)

ஆக பாடல் 94.

இறக்தொழி தற்கே யியங்கிய துண்மையின்
மறைக்தொழி யாது மாறு யிருப்ப
தொன்றுவ தென்றோ வொன்றறோன் றும
னின்றிடேற் கருள்கென கின்றழு திரத்தல்

ஆசிரிய விருத்தம்.

ஞானகுரு காதனற் பதகிதக் தொழுதழுது
காடுவது மெக்கா லமோ
கான்மறை தனக்குமெட் டாதகா லாம்படியி
ஞனேற யெக்கா லமோ
ஊனே லிறந்தவுற வற்றுமுற வுற்றுவீ
டுட்புகுவ தெக்கா லமோ
ஒப்புவமை செப்பரிய கர்ப்பூர தீபமென
வொன்ருவ தெக்கா லமோ
தானே யெனைப்பெற்ற மானே வருக்தியரு
டருவதினி யெக்கா லமோ
சாவப் பிறந்தவடி யேனுமுமை கம்பினேன்
சமயமீ தாளு தற்கே
வானமெல் லாமகிமை யுள்ளகீர் பின்றேடா
வள்ளலிற ஸூல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
மணியே முஹியித் தீனே. (1)

வேடிக்கை யும்பகட் டும்பிலுக் குஞ்சொகுசும்
விட்டொழிவ தெக்கா லமோ

வீணிரக் கங்களு மூனுறக் கங்களும்
வேறுவ தெக்கா லமோ
தாடிமீ சைகணரைத் துக்தவ மிலாருறவு
சையென்ப தெக்கா லமோ
சண்டைடகின் றிடுவதும் மண்டைபிண் டுடைவதுஞ்
சள்ளென்ப தெக்கா லமோ
சாடாது சமநிலையி னின்றுசம ரசமீது
சாமர்வ தெக்கா லமோ
சாவப் பிறந்தவடி யேனுமுமை நம்பினேன்
சமயமீ தாளு தற்கே
வாடிக்கை யாய்க்கருணை யுள்ளநீர் பின்றொடர
வள்ளலிற சூல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
மணியே முஹியித் தீனே. (2)

சொல்லரிய சுகவாரி யமிழ்துண் டொடுங்கித்
துடிப்பொழிவ தெக்கா லமோ
சுந்தரச் சோதிமணி மாலையணி மார்பனைத்
தொழுவதினி யெக்கா லமோ
நல்லகட னம்புரிக் தாடுகரு ணாகர
னடம்புரிவ தெக்கா லமோ
நாடிவனு வாகப் பிடித்திழுத் தென்றனையு
நடியென்ப தெக்கா லமோ
சல்லிக் குணங்கெட்ட புல்லர்களை விட்டுத்
தனிப்பதினி யெக்கா லமோ
சாவப் பிறந்தவடி யேனுமுமை நம்பினேன்
சமயமீ தாளு தற்கே

வல்விருளை வெல்லுமொளி யுள்ளகீர் பின்றொடர
வள்ளலிற சூல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
மணியே முஹியித் தீனே. (3)

கயமே யுறைக்தறிவின் மயமே கிறைந்தபொரு
ளுனவணைவ தெக்கா லமோ
கல்லறிஞர் பின்சாடி யில்லுறவு பிஞ்சோட
காள்வருவ தெக்கா லமோ
பயமே குறைக்தவிரு தயமே செறிந்தவினை
பாழாவ தெக்கா லாமோ
பாடைதனி லேறுமு னொளித்தோடி வோடியுட்
பதிபுகுவ தெக்கா லமோ
தயவுதக் தெனையாண்ட தேவரீர் பாதமலர்
தனையணைவ தெக்கா லமோ
சாவப்பிறந்தவடி யேனுமுமை கம்பினேன்
சமயமீ தாளு தற்கே
மயிலாடல் போனடன முள்ளகீர் பின்றொடர
வள்ளலிற சூல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
மணியே முஹியித் தீனே. (4)

ஈனக் தரும்புகழ்க் கூடான தேகவுறை
வேருவது மெக்கா லமோ
இன்றுளோர் காளைக் கிருப்பதும் பொய்யென்ப
தெய்துவது மெக்கா லமோ
வானையொட் டகமேறு முடலும்லொட லொட்டையென்
றறிவதினி யெக்கா லமோ

ஆகந்த மானபொரு ளானந்த மாயடிமை
யாவதினி யெக்கா லமோ
தானேனே தானேனே தானேனே யென்று நான்
றானவ தெக்கா லமோ
சாவப் பிறந்தவடி யேனுமுமை நம்பினேன்
சமயமீ தாளு தற்கே
வானினுங் கருணைவா னுள்ளநீர் பின்றொடர
வள்ளலிற சூல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
மணியே முஹியித் தீனே. (5)

கடன்மடை திறந்தென் வருண்மடை திறந்தடிமை
கண்குளிர்வ தெக்கா லமோ
கங்கற்ற பேரின்ப வெள்ளத்தின் மூழ்கியென்
கலிதீர்வ தெக்கா லமோ
உடல்குழைய நெக்குருகி விழிநீரு மாறாக
ஆறுவது மெக்கா லமோ
உள்ளுளே பற்றியெரி யுந்தீயமர்ந் துளமு
முட்குளிர்வ தெக்கா லமோ
சடைவனே மிடைகொண்டு மிடைவனே தேவரீர்
தாம்வருவ தெக்கா லமோ
சாவப் பிறந்தவடி யேனுமுமை நம்பினேன்
சமயமீ தாளு தற்கே
வடுவேது மற்றபடி வுள்ளநீர் பின்றொடர
வள்ளலிற சூல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
மணியே முஹியித் தீனே. (6)

8

[illegible]

[illegible]

(8)

[illegible]

(9)

[illegible]

எக்கால மெக்கையே தேவரீர் கூடவந்
தெனையாள்வ தெக்கா லமோ
தக்கநிலை மீதிலே சொக்கிமணி நிற்குமிறு
சாந்தருள்வ தெக்கா லமோ
சாவப் பிறந்தவடி யேனுமுமை நம்பினேன்
சமயமீ தாளு தற்கே
வக்கீல்கள் பலகோடி யுள்ளநீர் பின்றொடர
வள்ளலிற ஸூல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
மணியே முஹியித் தீனே. (10)

ஆக பாடல் 104.

அளவிடற்கரிய வரியன காட்சி
வுளபல சமுகத்தி னோதுநின் மகிமையைப்
பலகோடி சீடர் பலரி லொருகோடி
நிலனுறு மடியனு நேர்பெற வருள்கென
முன்னிலைக் குருவா முஹி யித்தீன்
றன்னிலை நோக்கித் தாழ்ந்துவந் திரத்தல்.

ஆசிரிய விருத்தம்.

ஏகறப் பில்ஆல மீனருட் காளான
வேளைபங் காளர் கோடி
எங்கள்மஹ் பூபீன்க ளொருகோடி ஆரிபீ
னென்பரெண் ணரிய கோடி
சேகுவொலி மார்கண்முறை முறையாக விறுசாது
தேடிவரு வார்கள் கோடி
திவ்யகுண நிலயவுல மாக்களெதிர் கொண்டுதீன்
தீனென்று வருவார் கோடி

தேகமழி யாதகற் பாகம் படைத்தமா
 சித்தர்க ளனந்த கோடி
தேவரீர் சீடாடி யேனுமுமை நம்பினேன்
 தீட்சைதந் தாளு தற்கே
மாகோடி சீடர்கண முள்ளநீர் பின்றொடர
 வள்ளலிற ஸுல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
 மணியே முஹியித் தீனே. (1)

அருள்பொழியு ஞானவா னந்தகட னம்புரிந்
 தாடிவரு வார்கள் கோடி
அஷ்டாங்க யோகநிஷ் டானுபோ தியர்கனே
 யளவற்ற கோடி கோடி
நார்தொழுந் தவராஜ சிங்கங்கள் கோடியெக்
 காளுமுள் ளோர்கள் கோடி
நாசச் சரீரத்தை நேசித்த பாசத்தை
 நாசமாக் கினவர் கோடி
சிரம்கிரித் தவர்கோடி கரம்கிரித் தவர்கோடி
 சினமறுத் தவர்கள் கோடி
தேவரீர் சீடாடி யேனுமுமை நம்பினேன்
 தீட்சைதந் தாளு தற்கே
மருவுற்ற மணிமகுட முள்ளநீர் பின்றொடர
 வள்ளலிற ஸுல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
 மணியே முஹியித் தீனே. (2)

கதியாசை கொண்டதிக துதிபேசி நின்றெதிர்
 கைகூப்பி நிற்பர் கோடி

கனிவாய் திறந்தருள் பொருந்திட ரோவென்று
    கண்மாரி பொழிவர் கோடி
பதியாசை முத்தியிப் பாழாசை யற்றுமுப்
    பாழேத்தி னோர்கள் கோடி
பத்திவை ராக்யமொடு முத்திவழி சென்றநிச
    பத்தர்கோ டானு கோடி
சிதைவற்ற சிந்தையர்க ளோவனந் தங்கோடி
    சின்மையா நந்தர் கோடி
தேவரீர் சீடரடி யேனுமுமை நம்பினேன்
    தீட்சைதந் தாளு தற்கே
மதிகோடி பொற்பிரபை யுள்ளநீர் பின்றொடர
    வள்ளலிற ஸூல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
    மணியே முஹியித் தீனே. (3)

கடனமிடு வாசிதனி லேறிவரு வார்கோடி
    நாடாளு மன்னர் கோடி
நாதாந்த மூர்த்தியர்கள் கோடிநன் மவுனகுரு
    நாதாக்கள் கோடி கோடி
திடஞான வைராக்கிய வான்கள் பலகோடிநற்
    றிவ்வியகுண வான்கள் கோடி
சிந்தையற நீக்குகிற மிக்கவொரு மிக்குநிலை
    சென்றநிலை யோர்கள் கோடி
செடிகாடு தனிலுறைந் திலைசருகு பக்ஷணஞ்
    செய்தலைத் தோர்கள் கோடி
தேவரீர் சீடரடி யேனுமுமை நம்பினேன்
    தீட்சைதந் தாளு தற்கே

மடலவிழ் மலர்ப்பாத முள்ளநீர் பின்றொடர
வள்ளலிற ஸூல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
மணியே முஹியித் தீனே. (4)

காசமா மோசதுன் பங்கடரு சம்பத்தை
கழுவவிட் டவர்கள் கோடி
காரியென் னுக்தாண்டி யின்மச்ச மாகாத
கடனவுல் லாசர் கோடி
ஆசைக் கடன்மீதி லோடியக் கரைகாணு
மக்கரைக் காரர் கோடி
அவ்வருகு மிவ்வருகு மெவ்வருகு முத்திவக்
தாடிவரு வார்கள் கோடி
தேசோ மயாகக்த ஜெயவீர வாண்பிள்ளை
சிங்கங்கள் கோடி கோடி
தேவரீர் சீடரடி யேனுமுமை நம்பினேன்
நீட்சைதக் தாளு தற்கே
வாசமெவை யினும்வாச முள்ளநீர் பின்றொடர
வள்ளலிற ஸூல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
மணியே முஹியித் தீனே. (5)

பொன்னுசை பெண்ணுசை மண்ணுசை மண்ணுன
பூரணு கந்தர் கோடி
புவிராஜர் கோடிமெய்த் தவராஜர் கோடிகற்
புனிதகவி ராஜர் கோடி
மென்னிமுட் டக்கண்ட மட்டுமருள் வாரியில்
வீழ்க்துமூழ் குவர்கள் கோடி

வேதவே தாக்திகளு மொருகோடி மெய்ஞ்ஞான
வீடடைந் தோர்கள் கோடி
சின்னவெனே யொத்தவே ழைகளகந் தங்கோடி
சின்னவெனி லேழை கோடி
தேவரீர் சீடரடி யேனுமுமை நம்பினேன்
நீட்சைதந் தாளு தற்கே
வன்னமணி மலர்மாலே யுள்ளநீர் பின்றொடர
வள்ளலிற ஸல்லிவ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
மணியே முஹியித் தீனே. (6)

அண்டகோ டிகளுமோ ரணுவைத் துளைத்ததி
லடக்கவல் லவர்கள் கோடி
அறமியற் றினர்கோடி சரமுயற் றுகற்கோடி
யாளான பேர்கள் கோடி
தொண்டர்சில கோடிபுய ரண்டர்பல கோடிகற்
றுறவோ ரகந்த கோடி
சோதிகண் டுச்சிவெளி சென்றபா னப்பெரிய
தொண்டிகண் டோர்கள் கோடி
செண்டென்ன வகிலமே ழையுமெடுத் தாட்டிச்
சிரித்துவரு வார்கள் கோடி
தேவரீர் சீடரடி யேனுமுமை நம்பினேன்
நீட்சைதந் தாளு தற்கே
வண்டுலவு மலர்மாலே யுள்ளநீர் பின்றொடர
வள்ளலிற ஸல்லிவ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடி வாழுமென்னிருகண்
மணியே முஹியித் தீனே. (7)

சாசுவத வாகந்த ஞானபத யோகநிலை
　சார்ந்தநிரை யோர்கள் கோடி
சர்வபரி பூரணப் பெரியபொரு ளைத்தொழுஞ்
　சகசநிஷ் டையர்கள் கோடி
நாசிநுனி மீதுகட னம்புரிதல் கண்டுபுன்
　னகைகொண்டு வருவர் கோடி
நாதமுங் கீதமும் வேதமும் மோதிநன்
　னடனமிடு வார்கள் கோடி
தேசுறும் பரவெளியை னெவெளியி னுட்கொண்ட
　தேசிகர நந்த கோடி
தேவரீர் சீடரடி யேனுமுமை நம்பினேன்
　றீட்சைதந் தாளு தற்கே
வாசகநி றைந்தநிறை யுள்ளமீர் பின்றொடர
　வள்ளலிற ஸூல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
　மணியே முஹியித் தீனே. (8)

அவனன்றி யோரணுவு மசையாத தென்றறிந்
　தசைவற் றிருப்பர் கோடி
அகிலாண்ட கோடிக ளனைத்துங் கணத்தில்விளை
　யாடிவரு வார்கள் கோடி
நவகாத சித்தியும் முத்தியும் மெத்திசையு
　நற்றவம் செய்வர் கோடி
காதனே யுமதுபா தாரவிந் தங்களே
　காடினே னென்பர் கோடி
சிவஞான வருணேசர் கோடரன கோடியுப
　தேசிக ளநந்த கோடி

தேவரீர் சீடரடி யேனுமுமை நம்பினேன்
 தீட்சைதந் தாளு தற்கே
மவுனகம னக்குளிகை யுள்ளநீர் பின்றொடர
 வள்ளலிற ஸூல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
 மணியே முஹியித் தீனே. (9)

முஷில்கவியு நயினர் முஹம்மதி றஸூலென்ற
 முத்தொளியி தென்பர் கோடி
மோனகுரு வானசுல்த் தானப்துல் காதிரி
 முஹியித்தீ னென்பர் கோடி
மஹ்பூபு சுபுஹானி யென்றபேர் வாழிமேல்
 வாழியென் பார்கள் கோடி
வாக்காலும் வாசகத் தாலுமுமை வாழ்த்துவார்
 வாழியென் பார்கள் கோடி
ஜெகஜோதி யானசிற் பரன்வாழி ஜெயஜெயா
 ஜெயஜெயா வென்பர் கோடி
தேவரீர் சீடரடி யேனுமுமை நம்பினேன்
 தீட்சைதக் தாளு தற்கே
பகுதாதை யாளும்வாழ் வுள்ளநீர் பின்றொடர
 வள்ளலிற ஸூல்வ ருகவே
வளருமரு ணிறைகுணங் குடிவாழு மென்னிருகண்
 மணியே முஹியித் தீனே. (10)

முஹியித்தீனாண்டவர் சதகம் முற்றுப்பெற்றது.

ஆக பாடல் 114.

முஹியத்தீனாண்டவர் மீது

பாடிய கொச்சகக்கலிப்பா.

அழுக்கைத் துடைத்தெனைத் தணைத்துமடி மீதுவைத்தும்
புழுக்கைக் குணமெனக்குப் போவதில்லை யாகையினால்
தழைக்குங் குணங்குடிக்கென் றந்தையே வந்திடுவேன்
பழிக்காம லேழைமுகம் பாருமுஹியித்தீனே. (1)

பட்டதுவும் கெட்டதுவும் பாய்முடைந்து வித்ததுவும்
வெட்டவெளியாய் விடிந்துமுன்னம் பாருமையா
கொட்டமெல்லாம் விட்டுக் குணங்குடிகொள் ளாவீணர்
இட்டமென்னை விட்டொழிவ தில்லைமுஹியித்தீனே. (2)

காட்டுறவஞ் சாதிருந்து கம்பிகொலை செய்துவென்னை
ஓட்டாண்டி யாக்கியும்விட் டொழிவதில்லைபாருமையா
கூட்டவென்கூடக் குணங்குடிக்குவாரவரை
ஓட்டாமல்வீணரைவிட் டோட்டுமுஹியித்தீனே. (3)

மேலாங்குணங்குடியின் மெய்ஞ்ஞானவீடுசென்று
காலாம்படியேறி காணொளித்தி ருப்பனையா
வாலாய மாகவங்கே மவுன மலரணைமேல்
மாலாயெனையணைய வாருமுஹியித்தீனே. (4)

ஆக பாடல் 118.

அகத்தீசர் சதகம்.

குரு வணக்கம்.

அவற்றுண் முறைவழி யருந்தவம் யோகம்
எவற்றினு முந்திய தியல்புடை யாசான்
கன்னயக் கருணை கனிகூரன்பால்
இன்னயமந்திர மிவைதலா தலினல்
திருவருள் பெறுவான் சிந்தித்துமெய்ம்மைக்
குருவருள் வேண்டிக் குறையிரந் துயர்த்தது.

எழுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

குணங்குடி யார்கற் குணங்குடி யோங்கக்
கொடுகொடென் றடிக்கடி குணங்குணங்
குணங்குடி யார்துற் குணங்குடி போகக்
குணமெலாந் திரண்டருள் பரப்பிக்
குணங்குடி யேறிக் குறைவற நிறைந்து
குணக்கட லானமெய்ஞ் ஞானக்
குணங்குடி வாழு மகத்தீச ரெமென்
குருபதஞ் சிரத்தின்மேற் கொள்வாம்.

முதலாவது.

குருவருணிலை.

மனதைத் தழுவித் தற்காத்துச் சீராடச்
செல்வப்பால்கொடுத்துப் படுக்க வைக்க வரவேண்டும்.

தாயனைய வின்பந் தனைத்தந்து தந்துகை
தழுவியின் றருள்பு ரியவுந்
தந்தைதா யுந்தானு மாகவு மிருந்தெனைத்
தற்காத்து னருள்பு ரியவுஞ்

சேயென் றிரங்கியனே காலியின் கன்றெனச்
சீராட வருள்பு ரியவுஞ்
செங்கீரை யாடுசிறு மதலைபோற் கொஞ்சிகொன்
செல்வமிட வருள்பு ரியவும்
பாயுமடை காலகண்டு கரைபுரள வருமதிப்
பால்கொடுத் தருள்பு ரியவும்
பக்குவத் தோடுமவு னத்தொட்டி லுக்குட்
படுக்கவைத் தருள்பு ரியவும்
வாயுவைக் கட்டவுந் தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுனதே சிககா தனே. (1)

கனமிடையாமலென்னுமற் பதைத்திடாதுபார்த்து
மனமுவந்து வருஷிக்க வரவேண்டும்.
எந்தலைவி லிட்டவிதி யென்னமோ வென்னகா
னிடையாம லருள்பு ரியவும்
என்செய்தே னென்றடிமை யெண்ணுத வெண்ணங்க
ளெண்ணும லருள்பு ரியவும்
பந்தமதி லிட்டமெழு கென்னநெஞ் சுருகிப்
பதைத்திடா தருள்பு ரியவும்
பாவியா காதெனைக் கருணைய னங்கொண்டு
பார்த்துநல் லருள்பு ரியவும்
மந்திரங் கொண்டுமாங் காய்விழா தாதலான்
மனமுவந் தருள்பு ரியவும்
மாரியினு நின்கருணை மாரியனு மாறாது
வருஷிக்க வருள்பு ரியவும்

வந்துபணி வார்க்குதவு தவராஜ சிங்கமே
   வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
   மவுனதே சிகசா தனே. (2)

மனத்தாஞகச் சாகாவென்ற நாடோறு நகைத்திடாது
   தொழும்புகொண்டதுரையே வரவேண்டும்.

தாயாயு மென்றந்தை தானுயு நின்றுநீ
   தானுக வருள்பு ரியவும்
தாபத்த மெல்லா மறிந்தநீ நிஷ்டைச்
   சகாவென்ற வருள்பு ரியவும்
நாயடிய னுய்யும் பொருட்டாக ரட்சித்து
   நாடோறு மருள்பு ரியவும்
நச்சுநச் சென்றனைய ரற்றுரு னென்றெனை
   நகைத்திடா தருள்பு ரியவும்
தூயனே மாயனே நேயனே தாயனே
   தொழும்புகொண் டருள்பு ரியவுந்
தோலா வழக்கனிவ னென்றுசொல் லாமலென்
   றுரையேயு னருள்பு ரியவும்
வாய்மொழி மறக்குமுன் றவராஜ சிங்கமே
   வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
   மவுனதே சிகசா தனே. (3)

மனமிடையா தின்பமுறைந்திட ஓய்ந்திடாது
   குன்றுகுகை யருளவரவேண்டும்.

என்றடிமையாளாவ தென்றெணி யெணிக்கருத்
   திடையாம லருள்பு ரியவும்

இரவுபக லாயிடை யறுதருகி காடிகல்
வின்பமுற வருள்பு ரியவும்
உன்றிருப் பொன்னடியு மென்றன் றிறத்தே
யுறைத்திடற் கருள்பு ரியவும்
ஓடாம லோடியா னுலகைவலம் வந்துகா
லோய்ந்திடா தருள்பு ரியவும்
குன்றங்க டோறுமலை யாதுகுகை யுள்ளகற்
குன்றொன்றை யருள்பு ரியவுங்
குருமூர்த்த மாயிருந் துபதேச மோதியக்
குகையுள்வைத் தருள்பு ரியவும்
மன்றுணின் றூடுமெய்த் தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுனதே சிகசா தனே. (4)

மனத்தில்மார்க்கவகை வாழ்த்துச் சுடர்சூக்ஷமமளித்து
அகமுவந் தாதரித்தருள வரவேண்டும்.
வகையொன்று மறிகிலே னிறைவனே சன்மார்க்க
வகையொன்றை வருள்பு ரியவும்
வாழிமேல் வாழியென் வாக்குக் கொடுத்தெனையும்
வாழ்வித்து னருள்பு ரியவும்
சுகசுகா தீதச் சுயஞ்சோதி யாயெழுஞ்
சுடரிடற் கருள்பு ரியவுஞ்
சும்மா விருக்கவுஞ் சொல்லாத சூக்ஷாதி
சூக்ஷமெற் கருள்பு ரியவும்
அகமகிழ்ந் திடவும்வஞ் சகமகன் றிடவுநின்
னகமுவந் தருள்பு ரியவும்

அஞ்சாத டாவென்று கெஞ்சோ டணைத்தணைத்
தாதரித் தருள்பு ரியவும்

மகிழா மகிழ்ச்சியொடு தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே

மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுனதே சிகசா தனே. (5)

மனத்தினியற்கை யெந்நாளும் வாய்த்திடமாருமற்
போதுமெனப் பொங்க வரவேண்டும்.

ஈசனே யன்பர்க்கு நேசனே நின்கருணை
யியற்கையோ டருள்பு ரியவும்

எம்பிரா னேயெமக் கிறைவனே நின்கருணை
யெக்காலு மருள்பு ரியவும்

வாசனே ஞானோப தேசனே நின்கருணை
வாய்த்திடற் கருள்பு ரியவும்

வாகனே யோகனே யேகனே நின்கருணை
மாறும லருள்பு ரியவும்

போஜனே போஜமக ராஜனே நின்கருணை
போதுமென வருள்பு ரியவும்

பூரணா னந்தமே சொந்தமாய் நின்கருணை
பொங்கநின் றருள்பு ரியவும்

மாசங்க டோறுமெய்த் தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே

மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுனதே சிகசா தனே. (6)

**மனம் முன்னின்று முத்தமிடத் தேசோன்மய சின்மயம்
அடிமைகொண்டாடி நின்றருள வரவேண்டும்.**

*முத்துசுவ ரத்தினமே முழுவயிர மலையேயென்
மின்னின்று னருள்பு ரியவும்
முச்சுடர் பரப்புசெம் பொற்கமல வடியைநான்
முத்தமிட வருள்பு ரியவுஞ்
சித்தனே சித்தர்தொழு முத்தனே காதிலுப
தேசமெற் கருள்பு ரியவுந்
தெக்ஷண மூர்த்தமே பக்ஷம்வைத் திக்கணஞ்
சின்மயம் மருள்பு ரியவும்
அத்தனே யப்பனே யையனே யுய்யவெனை
யடிமைகொண் டருள்பு ரியவும்
ஆனந்த மானபர மானந்த திருநடன
மாடிநின் றருள்பு ரியவும்
வைத்தகரு ணைக்குரிய தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுனதே சிகநா தனே.* (7)

**மனத்தை யிரட்சித்து தினந்தினங் கடாக்ஷித்துக்
கதிதந்து தூக்கித்தொழுநிட வரவேண்டும்.**

*திக்கற்ற பாவியைப் பக்கத்தில் வைத்துரட்
சித்துநல் லருள்பு ரியவுந்
திருவுள மிரங்கிநின் றிருவடி யளித்துத்
தினந்தினம் மருள்பு ரியவுங்
கைக்குள் வளர்செல்விக் கனிக்குநிக ராகக்
கடாக்ஷித்து னருள்பு ரியவுங்*

கன்மக் தொலைக்தே கடத்தேற்றி வைத்துகற்
கதிதந்து னருள்பு ரியவுக்
துக்கக் கடல்கடக் தக்கரைப் படவெனைத்
தூக்கிவிட் டருள்பு ரியவுக்
துன்பங்க ளெல்லாக் தொலைத்தடிமை யுன்பதக்
தொழுதிடற் கருள்பு ரியவும்
வைக்குமனம் வைத்துமெய்த் தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுனதே சிகநா தனே. (8)

மனங்கை காட்டித் தருந்த சதானந்த வறிவொன்று அறிந்திட வரவேண்டும்.

காகமாய் நின்றுகத றிக்கதறி யழுமெனைக்
கையனைத் தருள்பு ரியவுங்
கன்மிபடு கண்கலக் கந்நீர வுங்கருணை
காட்டிநின் றருள்பு ரியவுக்
தாய்கைக் குழக்தையென நீகைக்குள் வைத்துத்
தகுந்தகல் லருள்பு ரியவுஞ்
சத்தமுகி லெனவின்ப மரமழை சொரிந்திடு
சதானந்த மருள்பு ரியவும்
ஆகம புராணங்க ளாலுமறி தற்கரிய
வறிவொன்றி னருள்பு ரியவும்
அளகேச னேதுளவ மணிமார்ப னேயுனை
யறிந்திடற் கருள்பு ரியவும்
வாகனே யேகனே தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே

மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுனதே சிகசா தனே. (9)

மனக்கலிதீர்த்துக் கவிகையிட வாட்கொண்டறிந்து முறையாக மூர்த்திகரமருள வரவேண்டும்.

கன்னலின் னமுதெனவு மின்பங் கொடுத்தெனது
கலிதீர்த் தரு ளருள்பு ரியவும்
காலூன்றி மழைபொழியு முகிலின மெனக்கருணை
கவிகையிட வருள்பு ரியவும்
அன்னையே யுன்னையே நம்பினே னாதரித்
தாட்கொண்டு னருள்பு ரியவும்
ஆருமெனை யாதரிப் பாரிலைப் பாரினி
லதுவறிந் தருள்பு ரியவும்
முன்னாக சொன்னதனை மன்னவர்கண் மன்னனே
முறையாக வருள்பு ரியவும்
முப்பத்து முக்கோடி தேவர்க்கு முதல்வனே
மூர்த்திகர மருள்பு ரியவும்
வன்னிநிற மென்னமெய்த் தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுனதே சிகசா தனே. (10)

ஆக பாடல் 128.

இரண்டாவது
தவநிலை.

இதனை லெழுத்த வெவ்வகை வணக்கமும்
அதனை லாகிய வங்கமெத் திரமுமே

132 மஸ்தான் ஸாஹிபு அவர்கள் பாடல்

அமைதரு தவநிலை யணிபெற வருள்கெனச்
சமைதர விரந்து தாழ்ந்துநின் றுயர்த்தது

**மனம்போதித்துப் போதுமெனக்கறந்து கைக்கொடுத்துப்
பந்தாடப் பரப்பி வரவேண்டும்.**

பொல்லாத காயமல் லாடாது நல்லறிவு
போதித்து னருள்பு ரியவும்
பொங்குமருண் மெய்ஞ்ஞான வனுபோக நிலையெலாம்
போதுமென வருள்பு ரியவும்
கல்லாவி னின்பால் பசிக்குப் புசிக்கக்
கறந்துதந் தருள்பு ரியவும்
கற்பவரை தேடியலை யாதபடி கற்பமுறை
கைகொடுத் தருள்பு ரியவும்
பல்லா யிரங்கோடி யண்டமுங் கைக்குளே
பந்தாட வருள்பு ரியவும்
பட்டப் பகற்போல வெட்டவெளி யாயொளி
பரப்பிநின் றருள்பு ரியவும்
வல்லபஞ் சொல்லரிய தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுனதே சிகநா தனே. (1)

**மனமுப்பாழின் முச்சுடர் சேவிக்கத் திறப்படத்
தத்துவஞ் சலியாமலருள வரவேண்டும்.**

முத்தர்பணி செய்யவுஞ் சற்றேனு முய்யவு
முப்பாழி னருள்பு ரியவும்
மூச்சைப் பிடிக்கவுங் காய்ச்சசற்ற பொன்னுை
முச்சுடரி னருள்பு ரியவுஞ்

சித்துச் சடங்களைத் தெரிசித்து நிற்கவுஞ்
சேவிக்க வருள்பு ரியவுக்
திருவரு ளிரங்கவுங் குருவடி வணங்கித்
திறப்படற் கருள்பு ரியவுக்
தத்துவக் கலைகளைப் பற்றறக் களையுமோர்
தத்துவம் மருள்பு ரியவுஞ்
சலியாம லுன்னடிமை கேட்டதெல் லாமனஞ்
சலியாம லருள்பு ரியவும்
மத்தமத முற்றமெய்த் தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுனதே சிககா தனே. (2)

**மனச்சித்திதந்து சித்தம்வைத்துப் பறந்தோடப்பண்ணி
நடனமிட நழுவிடாதருள வரவேண்டும்.**

தேவரீர் திருவடிக் காளாக வட்டமா
சித்திதக் தருள்பு ரியவுஞ்
சித்தர்கண மெல்லா மெனக்கரு ளிரங்கவுஞ்
சித்தம்வைத் தருள்பு ரியவும்
பாவியடி யேன்செய்த பாவங்க ளெல்லாம்
பறந்தோட வருள்பு ரியவும்
பக்குவ மறிக்தெனைப் பக்குவ விசேடனாய்ப்
பண்ணிவைத் தருள்பு ரியவும்
காவிட் டுரைக்கொணுச் சோதிகய னத்தாடு
நடனமிட வருள்பு ரியவும்
கம்பினே னையனே கட்டாற்றி லென்னைக்கை
நழுவிடா தருள்பு ரியவும்

மாவேக மாகமெய்த் தவராஜ சிங்கமே
  வரவேண்டு மென்ற னருகே
மாகுணன் குடிவாழு மென்னகத் தீசனே
  மவனதே சிகநா தனே. (3)

**இயல்பிருந்து செழிந்து மெய்ஞ்ஞானஞ் சிறக்கத் சாகாது
  சேர்ந்திட வரவேண்டும்.**

இயல்புகெட் டோருகி போரு னலைக்கிடா
  தியல்பொன்ற வருள்பு ரியவும்
இலைசருகு பக்ஷணம் பண்ணியே சாக்கமோ
  டிருக்கிடற் கருள்பு ரியவும்
வெயிலு நுறைக்கெனது தேகமென் பென்பாய்
  மெலிக்கிடற் கருள்பு ரியவும்
மெய்த்தவசு மூட்டவும் பொய்த்தவசை யோட்டவு
  மெய்ஞ்ஞான வருள்பு ரியவும்
செயவினை மறுக்கவு முயவினை யறுக்கவுஞ்
  சிற்சுகம் மருள்பு ரியவும்
செத்தசவ மென்னக் கிடக்கவுஞ் சாகாது
  செத்திடற் கருள்பு ரியவும்
மயில்வெட்கு டனமொடு தவராஜ சிங்கமே
  வரவேண்டு மென்ற னருகே
மாகுணன் குடிவாழு மென்னகத் தீசனே
  மவனதே சிகநா தனே. (4)

**ஊத்தைக் குழித்துக் கோழிமை தந்தருகளைந்து அவனை
  ஊகாமத் பார்த்துப் பாதமருள வரவேண்டும்.**

கொலைசெயெம துக்குட் படாதெனைக் கைக்குட்
  குழித்துவைத் தருள்பு ரியவும்

...தைய சிடுக்கும் கொடுங்கைதரு முன்னின்
...காடுங்கைதக் கருள்பு ரியவும்
வாய்த் தரும்பென வலைத்தலகை யாகாம
நகனைத் தருள்பு ரியவும்
...ய லுனைத்தேடி யாலைகொண் டதமவல
காம லருள்பு ரியவும்
...விரத்தவென் பானுமன் பானமுகம்
...த்துகல் லருள்பு ரியவும்
...ர்க டுவியர்ச் சனைசெய்து தொழவுனின்
...நமல ரருள்பு ரியவும்
மலைபோ லெழுந்தமெய்த் தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுனதே சிககா தனே. (5)

மனத்தொழும்பு துலங்கிக் கசப்பாகக் கழன்றிடவெல்லா வென்னுமல் வரவேண்டும்.

துர்ச்சனே ஞமிலும் பட்சம்வைத் தென்றனைத்
தொழுதுகொண் டருள்பு ரியவும்
துரியமா கின்றதுரி யாதீத செஞ்சுடர்
துலங்கிடற் கருள்பு ரியவும்
கைச்சரச மானசிற் றின்பவனு போகங்
கசப்பாக வருள்பு ரியவும்
களகவென் றுனைத்த பாஷ்பமிகு கண்ணிற்
கழன்றிடக் கருள்பு ரியவும்,
எச்சித் தனம்பண்ண வேண்டாமெ னையனே
யெல்லாகீ ரருள்பு ரியவும்

மாவேக மாகமெய்த் தவராஜ சிங்கமே
  வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
  மவுனதே சிகநா தனே. (3)

இயல்பிருந்து மெலிந்து மெய்ஞ்ஞானஞ் சிற்சுகஞ் சாகாது
  செற்றிட வரவேவ்டும்.
இயல்புகெட் டோனுகி போனு னலைக்கிடா
  தியல்பொன்ற வருள்பு ரியவும்
இலைசருகு பக்ஷணம் பண்ணியே காந்தமோ
  டிருந்திடற் கருள்பு ரியவும்
வெயிலூ டுறைந்தெனது தேகமென் பென்பாய்
  மெலிந்திடற் கருள்பு ரியவும்
மெய்த்தவசு மூட்டவும் பொய்த்தவசை யோட்டவு
  மெய்ஞ்ஞான வருள்பு ரியவும்
செயலினை மறுக்கவு முயலினை யறுக்கவுஞ்
  சிற்சுகம் மருள்பு ரியவும்
செத்தசவ மென்னக் கிடக்கவுஞ் சாகாது
  செத்திடற் கருள்பு ரியவும்
மயில்வெட்கு கடனமொடு தவராஜ சிங்கமே
  வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
  மவுனதே சிகநா தனே. (4)

மனத்தைக் குவித்துக் கொடுங்கை தந்தருகணைத்து அவல
  மாகாமற் பார்த்துப் பாதமருள வரவேண்டும்.
கொலைசெயெம னுக்குட் படாதெனைக் கைக்குட்
  குவித்துவைத் தருள்பு ரியவுங்

கோதைய ரிடுக்குங் கொடுங்கைதரு முன்னின்
கொடுங்கைதக் தருள்பு ரியவும்
அலைவாய்த் துரும்பென வலைந்தலைகை யாகாம
லருகணைத் தருள்பு ரியவும்
அடியே னுனைத்தேடி யாசைகொண் டதுமவல
மாகாம லருள்பு ரியவும்
பலகா லிரந்தவென் பாலுமன் பானமுகம்
பார்த்துநல் லருள்பு ரியவும்
பன்மலர்க டூவியர்ச் சனைசெய்து தொழவுனின்
பாதமல ரருள்பு ரியவும்
மலைபோ லெழுந்தமெய்த் தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுனதே சிகநா தனே. (5)

மனத்தொழும்பு துலங்கிக் கசப்பாகக் கழன்றிடவெல்லா
வென்னுமல் வரவேண்டும்.

துர்ச்சனே ஞயினும் பட்சம்வைத் தென்றனைத்
தொழுதுகொண் டருள்பு ரியவும்
துரியமா நின்றதுரி யாதீத செஞ்சுடர்
துலங்கிடற் கருள்பு ரியவும்
கைச்சரச மானசிற் றின்பவனு போகங்
கசப்பாக வருள்பு ரியவும்
களகளென் றானந்த பாஷ்பமிரு கண்ணிற்
கழன்றிடற் கருள்பு ரியவும்
எச்சித் தனம்பண்ண வேண்டாமெ னையனே
யெல்லாநீ ரருள்பு ரியவும்

என்னகுறை வந்துபோ மென்றெண்ணு நீரொன்று
  மெண்ணும லருள்பு ரியவும்

மைச்சினிச் சரசமொடு தவராஜ சிங்கமே
  வரவேண்டு மென்ற னருகே

மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
  மவுனதே சிகா/தனே. (6)

மனம்புகழ்ந்திடப் பொருடந்து நிராகரித்து நெஞ்சுற
  வேதார்த்த மிருந்திட வரவேண்டும்.

புகழுவார் புகழும் புகழ்க்குரிய நின்னைப்
  புகழ்ந்திடற் கருள்பு ரியவும்

புத்திக்கு மெட்டாது புத்திக்கு ளுற்றவான்
  பொருடந்து னருள்பு ரியவும்

நிகழ்பந்து தன்னையும் நிர்த்தூளி யாகிட
  நிராகரித் தருள்பு ரியவும்

நிருமல சிதாகாச நிஷ்பிரபஞ்சப் பொருளென்
  னெஞ்சுறவி னருள்பு ரியவும்

இகபர மிரண்டென்று வகையுண்ட நிதெனு
  மெதார்த்தமதை யருள்பு ரியவும்

என்னுள் ளிருக்குமெங் கோமானென் னுள்ளே
  யிருந்திடற் கருள்பு ரியவும்

மகிழ்வோ டெழுந்துமெய்த் தவராஜ சிங்கமே
  வரவேண்டு மென்ற னருகே

மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
  மவுனதே சிகா தனே. (7)

**மனதைக் கரையேற்றிக் கைக்கொண்டு சமுகத்தன்மயம்
போனின்ற பூரணவருள் வரவேண்டும்.**

கங்கற்ற வாழாழி வங்கத்தை யொத்தெனைக்
கரையேற்றி யருள்பு ரியவுங்
கையைக் கொடுக்கவுங் கையைப் பிடிக்கவும்
கைகொண்டு னருள்பு ரியவும்
சங்கைதரு சங்கத்தை நீக்கவுஞ் சங்கைதரு
சமுகம்வைத் தருள்பு ரியவும்
தட்டாத நிஷ்டைமீ திஷ்டமோ டிருத்தவுந்
தன்மயம் மருள்பு ரியவும்
பொங்குஞ் செழுஞ்சுடர் பொருந்துகர்ப் பூரமது
போனின்ற தருள்பு ரியவும்
பொன்னடியும் வாழியுன் புண்ணியமும் வாழிபரி
பூரண வருள்பு ரியவும்
மங்களந் தங்குமெய்த் தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுனதே சிககா தனே. (8)

**மனந்தனைக்கொண்டு தாற்பரியம்பாய்ந்து பருவத்
தொலைந்து தொடக்கற வரவேண்டும்.**

தஞ்சமே தஞ்சமென் றடையுமென் னஞ்சலி
தனைக்கொண்டு னருள்பு ரியவும்
தற்பரஞ் சிற்பரத் துட்பரவி நிற்பதோர்
தாற்பரிய மருள்பு ரியவும்
பஞ்சவர் ணப்பரஞ் சோதிகிள ரிம்பத்தி
பாய்ந்திடக் கருள்பு ரியவும்

பன்மயத் துட்பரவு தன்மயத் துட்பரவு
பருவமென் றருள்பு ரியவும்
துஞ்சுமொளி கொஞ்சவும் கெஞ்சமும் வஞ்சக்
தொலேக்கிடர்க் கருள்பு ரியவும்
துக்கவலே வீசுமுலே மின்னார்க ளாசைத்
தொடர்க்கறற் கருள்பு ரியவும்
வஞ்சியரு மொஞ்சவுக் தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுனதே சிகரா தனே. (9)

மனதுக்குச் செல்வந்திறந்து முகூர்த்த முடிசூட்டி
ஜெயந்தந்து ஜெயமாக வரவேண்டும்.

தேனேப் பழித்தபே ரின்பங் தரும்பெருஞ்
செல்வமொன் றருள்பு ரியவும்
சின்மயச் சித்தா மணிபொக்கி ஷத்தைத்
திறந்தளித் தருள்பு ரியவும்
மோனசிங் காசன திபனுக வைத்திட
முகூர்த்தமிட் டருள்பு ரியவும்
முச்சுடர் பரப்பியொளி பத்திபா யும்மகுட
முடிசூட்டி யருள்பு ரியவும்
சேனு சமுத்திரத் தொடுகின்று வாழ்த்திச்
செயந்தந்து னருள்பு ரியவும்
ஜெயஜெயா ஜெயஜெயா ஜெயஜெயா வென்றடிமை
ஜெயமாக வருள்பு ரியவும்
வானணேய கருணேகொடு தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே

மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுனதே சிககா தனே. (10)

ஆக பாடல் 138.

மூன்ருவது

துறவினிலே.

நினைப்பும் விளிப்பு நீத்தலுந் தனிப்பும்
அணைத்தினு மமைத்திட் டாய்ந்தாய்ந்து நோக்கி
விரத மவுனம் விருப்பொடு வெறுப்பெனும்
இரத மமையா தெழுந்த வெட்கமும்
பற்றிய தவநிலே பதிந்த பெருநிலே
சுற்றிய மேன்மைத் துறவா கையினல்
அத்துற வியல்பினே யாண்டகை யருள்கென
வெத்திறத் தினுங்குறை யிரந்திரந் துயர்த்தது.

மனங்களைத்தீர கண்டாண்டகல ஒதுக்கியுறைத்திட
வரவேண்டும்.

காமக் குரோதமோ கக்கிளை களைந்துகான்
களைதீர வருள்பு ரியவும்
கரையாத நெஞ்சக் களிம்பெலாந் துரிசறக்
கண்டுகல் லருள்பு ரியவும்
ஆமைமீன் பறவைபோ லடியேனே யாதரித்
தாண்டணைத் தருள்பு ரியவும்
ஆசைப் பசாசமெனே யணுகா தடித்தடித்
தகலவிட் டருள்பு ரியவும்

ஓமங்கண் முதலான நியமங்க ளெல்லா
மொதுக்குவித் தருள்பு ரியவும்
ஊருக்கு ளூர்திரிக் தலையாம லுமதரு
ளுறைந்திடற் கருள்பு ரியவும்
மாமேரு வொத்தமெய்த் தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுனதே சிககா தனே. (1)

மனந்தீந்து சேர்ந்து பக்குவம் பத்தியக்காடுறை
கனன்மூட்ட வரவேண்டும்.

தேய்ந்திடவு மீராறு கலைகளும் மனமாயை
தீந்திடவு மருள்பு ரியவும்
தீராத வல்வினைக ளர்ந்துதிரு வடியினர்
சேர்ந்திடற் கருள்பு ரியவும்
பாய்ந்தேற வும்வாசி கான்றேற வும்பெரும்
பக்குவ மருள்பு ரியவும்
பத்தியுஞ் சித்தியும் முத்தியின் முற்றுமோர்
பத்தியும் மருள்பு ரியவும்
காய்ந்தசரு கிலைபுனற் காய்கனிக ளுண்டுண்டு
காடுறைய வருள்பு ரியவும்
கட்டையைச் சுட்டுக் கருக்குமெய்ஞ் ஞானமாங்
கனன்மூட்டி யருள்பு ரியவும்
மாய்ந்துமா யாதமெய்த் தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுனதே சிககா தனே. (2)

மனத்தின் பேர்பிடுங்கி தலம்பெற நாளுமஞ்ஞானத்தீநிறச்
சிந்தித்திட வரவேண்டும்.

பேயைப் பழித்தபெண் பேய்கொண் டிடார்கொண்ட
பேரொன்று மருள்பு ரியவும்
பிள்ளைக ளொனுங்கூளி பலகூளி யென்னைப்
பிடுங்கிடா தருள்பு ரியவும்
நாயைப் பழித்தபேய் நாயினுங் கடையே
னலம்பெறற் கருள்பு ரியவும்
நல்லரு ளிரங்குமுன் பாதார விந்தமெந்
நாளுமெற் கருள்பு ரியவும்
தீயைப் பழித்தசெந் தீயவஞ் ஞானமாந்
தீநீற வருள்பு ரியவும்
சித்தம்வைத் தத்தனே சித்திதரு முத்திசித்
தித்திடற் கருள்பு ரியவும்
மாயைப் பழிப்பற்ற தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணாங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுனதே சிகநா தனே. (3)

மனம்நிலையா நிறுத்திப் பாழாகப்பருவம்
அறைந்தாநந்த மருள வரவேண்டும்.
நிசமான தெய்வமுனை யன்றியுன் டென்றடிமை
நிலையாம லருள்பு ரியவும்
நீர்க்குமிழி யொத்தகா யத்தைநிலை யத்தினு
நிறுத்திவைத் தருள்பு ரியவும்
பசுபாச பாசமும் பாவையர்க ளேசமும்
பாழாக வருள்பு ரியவும்

142 மஸ்தான் ஸாஹிபு அவர்கள் பாடல்

பத்திமார்க் கந்தரும் முத்திமோக் கந்தரும்
பருவமோன் றருள்பு ரியவும்
அசரசர பேதமா யாடுவது மீதென்
றறைந்தறைக் தருள்பு ரியவும்
அஞ்ஞானமூடக் துறக்கவும் மெய்ஞ்ஞான
வாகந்த மருள்பு ரியவும்
வசமான தேகனே தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுனதே சிகா தனே. (4)

மனமெய்தி யெண்ணம் மண்ணாகமடியாமல்
தள்ளென்று தள்ளாது வரவேண்டும்.

எங்களா லொன்றுமிலை யெதுவுமுன் றருமமென்
றெய்திடற் கருள்பு ரியவும்
என்சர ணுடம்பினுஞ் சிரமே பிரதானமென்
றெண்ணமோன் றருள்பு ரியவும்
மங்கையர்கள் கொங்கையெனு மண்கட்டி மீதிஷ்ட
மண்ணாக வருள்பு ரியவும்
மாருத புண்ணான வல்குலாம் படுகுழியில்
மடியாம லருள்பு ரியவும்
தங்கத்தை யுஞ்செங்க லென்றெண்ணி யேதள்ளு
தள்ளெனற் கருள்பு ரியவும்
தந்தையே யுன்றனுக் கென்றனை யளிக்கிறேன்
றள்ளாம லருள்பு ரியவும்
வங்கமென வோடிமெய்த் தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே

மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுனதே சிகசா தனே. (5)

மனத்தின் வல்லபம்வஞ்சமர வுட்குளிர வூடாடிப்
போகாமற்போக வரவேண்டும்.
வலைவீசு முலையாரைக் கொலைஞரென் றெண்ணுமோர்
வல்லப மருள்பு ரியவும்
வஞ்சியெனு மெண்சா ணுடம்புவெறு கஞ்சென்று
வஞ்சமற வருள்பு ரியவும்
உலையிட்ட மெழுகெனப் பின்னமா யுருகுமன
முட்குளிர வருள்பு ரியவும்
ஓடாம லுங்தேடி வாடாம லும்மெனது
ளூடாடி யருள்பு ரியவும்
பலருமில வைக்காத்த கிளியெனவு முன்னடிமை
போகாம லருள்பு ரியவும்
பூரண னந்தமய மானபே ரின்பவனு
போகமுன் னருள்பு புரியவும்
மலசலா திகளற்ற தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுனதே சிகசா தனே. (6)

மனஞ்சலியாது தள்ளாதுட்குளிர்ந் தொட்டாது
நேயம்வைத்து நில்லாது வரவேண்டும்.
சக்களத் திப்போர் கொடுக்கிறு னென்றுநீர்
சலியாம லருள்பு ரியவும்
சண்டிபோற் றிண்டுமிண் டாடுறு னென்றெனைத்
தள்ளாம லருள்பு ரியவும்

ஒக்கநின் றென்னையும் யக்கொண்டு மையமற
  வுட்குளிர்க் தருள்பு ரியவும்
ஒட்டாத மாயையை யொட்டினுட் சிட்டெனவு
  மொட்டாது னருள்பு ரியவும்
நிற்குநிலை காணுது நிற்குநிலை நிற்கநின்
  னேயம்வைத் தருள்பு ரியவும்
நீசனிவ னென்றுபோ திப்பார்கள் போதனையி
  னில்லாது னருள்பு ரியவும்
மக்கப் புதைக்குமுன் றவராஜ சிங்கமே
  வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
  மவுனதே சிககா தனே. (7)

மனம்போகாதுபோக வென்றென்னை வெளிநிற் கைபிடித்துக்
  காப்பாற்றி யருள வரவேண்டும்.
பொங்துதே டித்தேடி மேவாத பேரெனப்
  போகாது னருள்பு ரியவும்
பொருட்டேடி யோடியோ டிப்போகு வோரெனப்
  போகவிட் டருள்பு ரியவும்
எந்தைமுதல் யாவரும் வத்துகலை யுஞ்சந்தை
  யென்றெண்ண வருள்பு ரியவும்
எவராலு மெய்தரிய துறவோடு மற்றுளவு
  மெளிதிலெற் கருள்பு ரியவும்
கந்தையைச் சுற்றவுங் கானகஞ் சுற்றவுங்
  கைப்பிடித் தருள்பு ரியவும்
கந்தமூ லந்தனைத் தந்துகந் தென்றனைக்
  காப்பாற்றி யருள்பு ரியவும்

மந்தைவழி யாகினுந் தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுனதே சிகநா தனே. (8)

மனப்போதும்புபூசி வியாபியாதுவீழ்ந்து
பூவெடுந்தீடேற வரவேண்டும்.
பொன்னைப் பழித்தபொறி கைச்சார்பு மீதிற்
பொதும்பொன்ற வருள்பு ரியவும்
பூவைப் பழித்தநின் பொன்னடியு முன்னடிமை
பூசிக்க வருள்பு ரியவும்
மின்னைப் பழித்தமன முஞ்சஞ் சலத்தோடு
வியாபியா தருள்பு ரியவும்
வேலைப் பழித்தவிழி யார்முயக் களறுதனில்
வீழ்ந்திடா தருள்பு ரியவும்
என்னைப் பழித்தா னென்பதனை யென்னைவிட்
டெடுத்தெறிய வருள்பு ரியவும்
எவையும் பழித்ததுற வெய்திவெளி யேறிநா
னீடேற வருள்பு ரியவும்
மன்னைப் பழித்தமெய்த் தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுனதே சிகநா தனே. (9)

மனத்தைப்பார்த்துப் பதமளித்துக் கலிதீர்த்துக் கடா
க்ஷித்துப் பொருடந்து பொன்னடியருள வரவேண்டும்.
பையலோ நெஞ்சம் பதைத்துருகி நிற்பதும்
பார்த்தேனு மருள்பு ரியவும்
பாவியடி யேன்படுந் துயரைத் தொலைத்துநற்
பதமளித் தருள்பு ரியவும்

கையில்வெண் ணெயைவைத்து நெய்க்கழா வண்ணமென்
கலிதீர்த்து னருள்பு ரியவும்
கன்மங்க டரவுஞ் சென்மசா பல்லியங்
கடாக்ஷித்து னருள்பு ரியவும்
பொய்யுலக வாழ்வுபிற ருக்கிடவு மெற்குமெய்ப்
பொருடந்து னருள்பு ரியவும்
பொன்னுலகு மண்ணுலகு நின்றிலகு முன்றிருப்
பொன்னடியை யருள்பு ரியவும்
மையலோ டெழுந்துமெய்த் தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுனதே சிககா தனே. (10)

ஆக பாடல் 148.

நான்காவது.

நியம நிலை.

பொய் கொலை களவு காமம் பொருணசை
யிவ்வகை யெவையு மடக்க லியமமும்
பெற்றதற் குவத்தல் பெருக்தவங் தூய்மை
மற்றறி வுணர்தல் வழிபட னியமமும்
நிற்ற லிருத்தல் கிடத்த னடத்தலென்
றுற்றவிக் கான்கா முயரா தனமும்
அவ்விரு வகைக்கு மாதியு மந்தமும்
செவ்விய லாவிவை சிறந்திருந் தமையால்
பிரியாது நியம நிலைபெறற் கருள்கென
வரவேண்டு மென்ற னருகே
விரியா திறந்து வேண்டி யுயர்த்தது

**மனத்தைப்பார்த்து பலனிலையாம லில்லாமல்
அணைத்தன்பு கூர்ந்தருள வரவேண்டும்.**

*பஞ்சரித் துப்பஞ் சரித்தியான் கொஞ்சியது
பார்த்தேனு மருள்பு ரியவும்
பஞ்சைபோ னின்றழும் பாவிக் கிரங்கிப்
பலன்றரவு னருள்பு ரியவும்
கின்சார்பை யன்றிவே றுண்டென்று மென்றென்று
நிலையாம லருள்பு ரியவும்
கெஞ்சம் பதைத்துப் பதைத்தடிமை திக்கற்று
நில்லாம லருள்பு ரியவும்
அஞ்சாம லென்றெனக் காதாவு சொல்லவு
மணைத்தாண்டு னருள்பு ரியவும்
அருகினி லிருத்தவுந் திருவருள் பொருத்தவு
மன்புகூர்ந் தருள்பு ரியவும்
வஞ்சகரு மஞ்சவுந் தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுனதே சிககா தனே.* (1)

**மனத்தைக்கடாக்ஷித்துக் கரங்கொடுத்தணைத் தடுக்க
வைத்துக் குறைதீர்த்துக் குணமேற்ற வரவேண்டும்.**

*கானுக் கெறித்தநில வாகாத வண்ணங்
கடாக்ஷித்து னருள்பு ரியவும்
கல்லுக் கிரங்குமழை யாகாத வண்ணங்
கரங்கொடுத் தருள்பு ரியவும்
யானைவாய்க் குட்கரும் பாகாத வண்ணமு
மணைத்தாண்டு னருள்பு ரியவும்*

 மஸ்தான் ஸாஹிபு அவர்கள் பாடல்

ஆழித் துரும்பெனவு மகாத வண்ணமு
மடுக்கவைத் தருள்பு ரியவுங்
கோணைப் பழித்தகுடி யாகாத வண்ணமென்
குறைதீர்த்து னருள்பு ரியவும்
குருவற்ற சீடனென வாகாத வண்ணகற்
குணமேற்றி யருள்பு ரியவும்
மானம்வைத் துதவுமெய்த் தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுனதே சிகநா தனே. (2)

மனங்கதறுதற்குங் கலுழுதற்கு மாருது மாதவமே
நெஞ்சிடை யாமலேற்க வரவேண்டும்.

கண்ணே கருத்தேயெ னன்னமே யென்றடிமை
கதறுதற் கருள்பு ரியவும்
கண்ணீரு மாறாத புண்ணீரு மாகவுங்
கலுழுதற் கருள்பு ரியவும்
மண்ணுன மூவாசை மண்ணுகை வுங்கருணை
மாறாது னருள்பு ரியவும்
மலைநுழைவு பக்கமும் மனவாசி சொக்கவும்
மாதவம் மருள்பு ரியவும்
எண்ணாத வெண்ணமெல் லாமெண்ணி யெண்ணிநெஞ்
சிடையாம லருள்பு ரியவும்
என்னுணை யென்னுவு மொன்றுமிலை யாவுநீ
ரேயேற்க வருள்பு ரியவும்
மண்ணுள்ள சித்தரொடு தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே

மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
　மவுன்தே சிககா தனே. (3)

மனமுய்ய நிஷ்டை மோக்க முதிர்ந்து கத்துங்
　கருணைகூர வரவேண்டும்
நித்தனே நித்தபரி சுத்தனே சிற்றடிய
　னேனுய்ய வருள்பு ரியவும்
நிருவிகற் பங்கொண்ட நின்மலா நந்தசுக
　நிஷ்டைவைத் தருள்பு ரியவும்
முத்தனே நற்றவஞ் சித்திக்க வும்முத்தி
　மோக்கமென் றருள்பு ரியவும்
மூலப் பிராணனென வாலைப் பிராயம்
　முதிர்க்கிடுமு னருள்பு ரியவும்
கத்தனே கத்தனே யென்றிடைய ருமலே
　கத்துமெற் கருள்பு ரியவும்
கத்தாத டாவென்று பொற்று ளளித்துநற்
　கருணைகூர்ந் தருள்பு ரியவும்
வைத்தமோ கத்துடன் றவராஜ சிங்கமே
　வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
　மவுனதே சிககா தனே. (4)

மனங்கொள்ளாமற் கொள்ளி வைத்திதயமலர்ந்து சதாநந்தக்
　காக்ஷிக்கண்ணேயருள வரவேண்டும்.
கொண்டார்க ளைக்கொளும் பெண்டாசை யென்றடிமை
　கொள்ளாம லருள்பு ரியவுங்
கொள்ளிவைத் துடலைக் கொளுத்துமுன் மூச்சுடர்க்
　கொள்ளிவைத் தருள்பு ரியவும்

தண்டா மரைக்கமல மென்மட லவிழ்க்தெனவி
தயமலர்க் தருள்பு ரியவும்
தளதளென் றளவில்பே ரொளிகொப் புளித்திடு
சதாநந்த மருள்பு ரியவும்
கண்டாலு மென்கலிக ளெல்லா மகன்றுபோங்
காட்சிதந் தருள்பு ரியவும்
கண்கொண்டு காணவுங் கண்கண்ட தெய்வமே
கண்ணேயு னருள்பு ரியவும்
வண்டாய்ப் பறந்துமெய்த் தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுனதே சிகநா தனே. (5)

மனத்தின் சமர்த்துச்சார்ந்திட வழிவிட்டுமண்ணு
குருவே குறைதீர வரவேண்டும்.

சகச்சூதை மாற்றிச் சுகச்சோதி யேற்றுஞ்
சமர்த்தொன்றை யருள்பு ரியவும்
சாட்சாதி யீசுர சொரூபமே யானுனைச்
சார்ந்திடற் கருள்பு ரியவும்
வகையற்ற சமையக் குதர்க்கங்க டத்திகல்
வழிவிட்டு னருள்பு ரியவும்
மண்ணாசை யேகவும் பெண்ணாசை வேகவும்
மண்ணுமு னருள்பு ரியவும்
குகைசேர வும்மாயை ககைதீர வும்மெங்கள்
குருவேயு னருள்பு ரியவும்
கொண்டாட்ட மாகவுங் கொத்தடிமை யாக்கியென்
குறைதீர்த்து னருள்பு ரியவும்

மகத்துவாய் நின்றமெய்த் தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுனதே சிகசா தனே. (6)

மனங்கருதாது கைச்சரச நையாது நம்பிக்கிருபை
கேட்குமுன் வரவேண்டும்.

கஞ்சாவின் வர்க்கமுங் கஞ்சனிம யக்கமுங்
கருதாது னருள்பு ரியவுங்
கைச்சரச மெல்லாங் கசந்தரச மாகவும்
கைச்சரச மருள்பு ரியவும்
நஞ்சான மூவாசை நஞ்சாக வுந்தேக
நையாது னருள்பு ரியவும்
நாடவும் பாடவுந் தேடவு மடிமையுனே
நம்பவு மருள்பு ரியவும்
கெஞ்சாது கெஞ்சுமெற் குன்சார்வு தந்துநற்
கிருபைகூர்ந் தருள்பு ரியவும்
கேட்டது கொடுக்ககான் கேட்டது கொடுக்ககான்
கேட்குமுன் னருள்பு ரியவும்
வஞ்சமில் பரமார்த்த தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுனதே சிகசா தனே. (7)

மனநின்று நீந்தாது நாட்டநாடாமற் கட்டவிழக்
காடுறைய வரவேண்டும்.

கிட்டூர மின்னார்கள் வெட்டையி லழுந்தாது
நின்றிடற் கருள்பு ரியவும்

1.52 மஸ்தான் ஸாஹிபு அவர்கள் பாடல்

நீச்சுகிலே யற்றயோ விக்கேணி யாழ்ந்தடிமை
நீந்தாது னருள்பு ரியவும்
கட்டுங் கருக்தேளை யொத்தமுலை யென்றன்மேல்
காட்டாம லருள்பு ரியவும்
காறுகா ரியர்கள்புண் ணுற்றமோர் களவிலு
காடாம லருள்பு ரியவும்
கட்டையிற் போமுனே கட்டுபா சக்கயிறு
கட்டவிழ வருள்பு ரியவும்
காலமுஞ் சென்றுசுடு காடுறைய முன்மனங்
காடுறைய வருள்பு ரியவும்
மட்டமே விட்டமெய்த் தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுனதே சிகநா தனே. (8)

**மனத்திற் குலாவாக்கொள்ளா வக்கரை ஆளாகச்
சிறப்புச்சீராட வரவேண்டும்**

கூசிக் குலாவுமட வார்களைக் கொஞ்சிக்
குலாவாது னருள்பு ரியவும்
குஞ்சுங் குழந்தையுங் கஞ்சிக்கெ னைக்கோட்டி
கொள்ளாது னருள்பு ரியவும்
ஆசைப் பெருக்கங்கை நீந்தியக் கரைகாணு
மக்கரைக் கருள்பு ரியவும்
ஆளாக வொட்டாத பாழாசை பாழாகி
யாளாக வருள்பு ரியவும்
தேசிகா நின்திருச் சமுகதரி சனமாய்ச்
சிறப்புட னருள்பு ரியவும்

செல்வம் பொழிந்தடிமை யுல்லாச மாய்கின்று
சீராட வருள்பு ரியவும்
வாசங் கொழிக்கமெய்த் தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுனதே சிகநா தனே. (9)

மனமேகி யெட்டுதற்கு மனமுவந்து மருவி
ஓராதுரைசெய வரவேண்டும்
இனவாச மெல்லா மறந்துவன வாசத்தி
லேகிவிட வருள்பு ரியவும்
எட்டாத பேரின்ப வனுபூதி வலியவர்
தெட்டுதற் கருள்பு ரியவும்
மனமாயை சோரவும் மனவாசி யேறவும்
மனமுவந் தருள்பு ரியவும்
மாங்காயில் வண்டுபோ லீங்காத வண்ணமுன்
மருவிநின் றருள்பு ரியவும்
உனையன்றி யெனையடிமை கொள்வருண் டொன்றடிமை
யோராம லருள்பு ரியவும்
ஓயா தரற்றியுங் கேட்கவிலை யோவதுவு
முறைசெய்து னருள்பு ரியவும்
வனிதையர் முயக்கற்ற தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுனதே சிகநா தனே. (10)

ஆக பாடல் 158.

ஐந்தாவது.

வளி நிலை.

இம்முறை யகலா தியைந்து தொடர்ந்து
செம்முறை புனையும் யோகஞ் சிறப்ப
உந்தியொடு புணர்ந்த விருவகை வளியுந்
தந்த மியக்கந் தடுப்படு வளிநிலை
என்னும் பான்மையி னிரேசக பூரகத்
தன்ன வாயுவைக் கும்பித் தடக்கும்
படித்திற னருள்கெனப் பணிந்து பணிந்து
முடித்தலை பராவி முன்னிரந் துயர்த்தது

மனம் விவரித்து வெட்டிவிட்டென்காலினுல் இருடீரப்
பண்புதந்து பறந்தாட வரவேண்டும்
வெட்டவெளி யாய்ந்ததும் விட்டுவெளி பாய்ந்ததும்
விவரித்து னருள்பு ரியவும்
விட்டகுறை தொட்டகுறை யெட்டியென் கிட்டவர
வெட்டிவிட் டருள்பு ரியவும்
எட்டொன்று மெட்டவு மீராறு கட்டவு
மெண்காலி னருள்பு ரியவும்
இரவிமதி யேகவும் மிரவுபக லாகவும்
மிருடீர வருள்பு ரியவும்
பட்டமது காற்றூற் பறந்தாடு சூத்திரப்
பண்புதந் தருள்பு ரியவும்
பாராதி யண்டப் பரப்பெலாம் யானும்
பறந்தாட வருள்பு ரியவும்
வட்டத் துதிக்குமெய்த் தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே

மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுனதே சிகா தனே. (1)

மனப்பசுவைப் படுக்கவைத்துப் பண்பாகக்கட்டுதற்குக்
கருணைவைத்து மென்மேலும் வெருளாமல் வரவேண்டும்.

பாற்பசு தனைப்பக்கு வத்துடன் பதியிற்
படுக்கவைத் தருள்பு ரியவும்
பால்காங் துண்டுபசி தாகமற யோகநெறி
பண்பாக வருள்பு ரியவும்
காற்பசு தனைக்கா லிரண்டும் முடங்கவெளி
கட்டுதற் கருள்பு ரியவும்
கன்றினுக் குத்தாய் கனிந்திரங் குதலெனக்
கருணைவைத் தருள்பு ரியவும்
மேற்படியி லேத்தியெனை மேலாம் பதந்தந்து
மேன்மேலு மருள்பு ரியவும்
வேதவே தாந்தவெரு வெளிகாட்டி விட்டடிமை
வெருளாம லருள்பு ரியவும்
மாற்படிக் குதவுமெய்த் தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுனதே சிகா தனே. (2)

மனமெட்டொன்றை யேருமல் வட்டமுற
வைத்தாட்டி யடக்கி வரவேண்டும்.

எட்டெட்டு மெட்டினுட் கட்டவு மெட்டாத
வெட்டொன்றை யருள்பு ரியவும்
சாாறு கலையுமிரு நான்குவலை மாட்டிவெளி
யேறும லருள்பு ரியவும்

என்னையறி யாமலு மொளித்தெனு ளிருந்தாடு
மென்னையெற் கருள்பு ரியவும்
அடைக்காயோ டிலைசருகு பக்ஷணம் பண்ணியா
ளாக வருள்பு ரியவும்
அஷ்டாங்க யோகநித் திரைகொண்டு சும்மா
வயர்ந்திடர்க் கருள்பு ரியவும்
கடனமிடு பரியுமண் ணுளவெளி சென்றுதிரு
கடனமிட வருள்பு ரியவும்
சயனகடு வணையினடு வணையுஞ் சுயஞ்சோதி
சயனமிட வருள்பு ரியவும்
வடுவற்ற சடையுற்ற தவராஜ சிங்கமே
வாவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுனதே சிகநா தனே. (6)

மனத்திற்குக் கொடுத்துக் கொளுத்தாமலூட்டி உட்பு
கத் தயைபுரிந்து சார்பொன்ற வரவேண்டும்.

கொள்ளாது வெள்ளம்வரு முன்னணைக் கோலிக்
கொடுத்துகல் லருள்பு ரியவும்
கும்பித்தி ரேசித்த லொடுகொல்ல னுலையிற்
கொளுத்தாம லருள்பு ரியவும்
உள்ளே முளைத்தெழுந் துயர்பனையி லூறுகள்
ளூட்டிவைத் தருள்பு ரியவும்
ஓடுமோர் கடகமு மோங்கார சாரமு
முட்புகற் கருள்பு ரியவும்
தள்ளாத படியடிமை கொள்ளவுந் தாயெனத்
தயைபுரிந் தருள்பு ரியவுந்

தானென்று நின்றுதற் காத்திரட் சித்துனது
  சார்பென்ற வருள்பு ரியவும்
வள்ளலாய் நின்றுமெய்த் தவராஜ சிங்கமே
  வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
  மவுனதே சிகநா தனே. (7)

மனமுளவு காட்டிக் கட்டியோட்டி லொத்தூதத்
  தேயாமற்றிறப்பட வரவேண்டும்.
காயா புரிக்கோட்டை கைக்கொள்ளு தற்குளவு
  காட்டிவிட் டருள்பு ரியவும்
காலோய்க் தயர்க்துவிடு மூன்கா லிரண்டினைக்
  கட்டிவைத் தருள்பு ரியவும்
ஓயாது கும்பித் திரேசித்த லுட்டங்கு
  மொட்டொன்றை யருள்பு ரியவும்
ஒத்தாதி லூதா திரண்டுமொன் றாடொன்று
  மொத்தூத வருள்பு ரியவும்
தேயாத விரவிமதி யுக்தேய வுஞ்சுழுமுனை
  தேயாம லருள்பு ரியவும்
தேவரீர் திருவடிக் காளாகி யடியேன்
  பிரப்படற் கருள்பு ரியவும்
மாயா மயக்கற்ற தவராஜ சிங்கமே
  வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
  மவுனதே சிகநா தனே. (8)

மனத்தைக்கட்டிக் காப்பாற்றிப் பிருமற் பெலப்பாடு நெருங்க நேரிட வரவேண்டும்.

காற்றைப் பிடிக்கவுங் கரகத் தடைக்கவுங்
கட்டிவைத் தருள்பு ரியவும்
கரகந் தனைக்காற் றுருத்தியுடை யாமனுங்
காப்பாற்றி யருள்பு ரியவும்
பீற்றலோ ரொன்பதும் மூடவுங் காற்றதிற்
பீரும லருள்பு ரியவும்
பின்னுமுன் னும்பிறழ வொட்டாது கட்டும்
பெலப்பாடு னருள்பு ரியவும்
கேத்திர மிரண்டுமுன் றேற்றரவு கொண்டிட
நெருக்குண்டு னருள்பு ரியவும்
கெற்றிகே ரிட்டவெளி பற்றிபா யவுநிஷ்டை
கேரிடற் கருள்பு ரியவும்
வாத்தியா ராகமெய்த் தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுனதே சிககா தனே (9)

மனத்துள்ளச் சுற்றிக் கட்டிக் காத்துக்கூட்டிக் கொடிப்போட வரவேண்டும்.

துள்ளுமன வாசிமேற் கொள்ளவும் வையாளி
துள்ளவுன் னருள்பு ரியவுந்
தூரகட வாதுமேன் முச்சந்தி வீதியைச்
சுற்றவிட் டருள்பு ரியவுங்
கள்ளாறி யாதுமுள் ளரையிலென் குதிரையைக்
கட்டிவைத் தருள்பு ரியவும்

கட்டாம லுங்கதவு சாற்றவும் வாயிலிற்
காத்திருந் தருள்பு ரியவுங்
கொள்ளையிட வோலைவந் தாலும் வெருட்டியே
கூட்டிவிட் டருள்பு ரியவும்
கோட்டையுங் கைவசங் கொண்டுகொண் டுன்றன்
கொடிப்போட வருள்பு ரியவும்
வள்ளலென வோடிமெய்த் தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுனதே சிககா தனே. (10)

ஆக பாடல் 168.

ஆறுவது

தொகைநிலை.

அடங்கா தடங்கி யவைதற் காகினு
மடங்கா தியங்கு மறிபொறி யதனாற்
பொறியுணர் வெல்லாம் புலத்தின் வழாமை
ஒருவழிப் படுதற் றொகைநிலைப் புறனென
ஓதிய முறைபோ லொன்றினோ டொன்று
வாதியன் றடாது மடங்கி யொருங்குற
நன்னிலைப் புணர்ந்து நாயக வென்றமு
திங்கிலை யருள்கவென் றிரக்திரக் துயர்த்தது.

மனமிணக்கியேற்றி யடங்கிலடைத்து
சார்ந்தொன்றுக வரவேண்டும்.

எக்காரு மந்திரமு முன்னைத தந்திர
மிணக்கிவைத் தருள்பு ரியவும்

எட்டங் குலத்துக்கு மெட்டாத கந்தரத்
தேற்றிவிட் டருள்பு ரியவும்
அங்கார மீதுகண் ணுக்குமூக் குச்செவி
யடங்கிடற் கருள்பு ரியவும்
ஆகந்த வொளிகண்டு நான்வந்த வெளிசென்
றடைந்திடற் கருள்பு ரியவும்
தன்னிலே தாளு யயர்ந்தடிமை தன்மயஞ்
சார்ந்திடற் கருள்பு ரியவும்
சர்வபரி பூரண சதானந்த மோனப்பிர
சாதமோன் றருள்பு ரியவும்
மன்னுமுனி வர்க்குதவு தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுனதே சிககா தனே. (1)

**மனமுழுங்க மூட்டிமேலேற்றி மேலுமேற்குச்
சந்தானஞ் சார்ந்திட வரவேண்டும்.**

மூலப் பிராணனைச் சண்டமா ருதமென
முழங்கவிட் டருள்பு ரியவும்
மும்மண்ட லங்களும் முட்டும் படிக்கங்கி
மூட்டிவைத் தருள்பு ரியவும்
மேலாம் பதங்காட்டு மெய்ஞ்ஞான நாலேணி
மேலேற்றி யருள்பு ரியவும்
மேலுமே லானகா லாம்படி கடத்திமேன்
மேலுமெற் கருள்பு ரியவுஞ்
சாலோக சாமீப சாரூப சாயுச்சிய
சந்தான மருள்பு ரியவுஞ்

சாசுவத சாம்ப்ரதா யத்தோடு சதாகிட்டை
சார்ந்திடற் கருள்பு ரியவும்
மாலையணி மார்பனே தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுனதே சிகநா தனே. (2)

மனத்தைத் திறந்து திறவாமல் கட்டிக்கலீ ரென்ன ஆட்டியாளாக்கியருள வரவேண்டும்.

திண்டுமுண் டானவா ரூதார வீடுக்
திறந்துதக் தருள்பு ரியவும்
திருகுமுரு காகின்ற வாயிலோ ரொன்பதுக்
திறவாம லருள்பு ரியவும்
கண்டசர மாலையங் கென்றுகண் டக்தவிற்
கட்டிவைத் தருள்பு ரியவும்
காலினின் ஞதமணி யோசைக் கலீர்க்கலீ
ரென்னவே யருள்பு ரியவும்
அண்டர்களு நின்றுதுதி கொண்டிடவு மெனைகடன
மாட்டிவைத் தருள்பு ரியவும்
அஷ்டாங்க யோககன் னிஷ்டையி னும் வைத்துமக்
காளாக்கி யருள்பு ரியவும்
மண்டல மெலாக்தொழுக் தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுனதே சிகநா தனே. (3)

மனத் தம்பிக்கத் தம்மனம் பஞ்சாகப்பாழ் தந்து
கருணைக்கதியளிக்க வரவேண்டும்.

தசகாத மாமுன்ன பானவா யுவினைவிட்
டம்பிக்க வருள்பு ரியவும்
தாரணியி லங்கென்று முச்சரித் திடுஜலத்
தம்பனம் மருள்பு ரியவும்
பசபாச நேசப் பெரும்பாவ மனவிட்ட
பஞ்சாக வருள்பு ரியவும்
பாழான மூன்றாசை பாழாக வும்மூன்று
பாழ்தந்து னருள்பு ரியவும்
கசமான சிற்றின்ப விடமுண்டு சாகாது
கருணைகூர்ந் தருள்பு ரியவும்
கருணாநிதி யேசரண மடையுமடி யேற்குநற்
கதியளித் தருள்பு ரியவும்
வசியவச னித்தலொடு தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுனதே சிகநா தனே. (4)

மனத்தகமாறுகச் சுத்திசெயச்சொக்கிவிட
மாறிடவற்றருத் தரூன வரவேண்டும்.

அத்தியி லுதித்தெழு மகத்தீ யெரித்தே
யகந்திய வருள்பு ரியவும்
அத்தீயை சுத்தியு மிருந்தே யறந்தங்கி
யானுக வருள்பு ரியவும்
சுத்தபரி சுத்தமது வாகதச காதமுஞ்
சுத்திசெய் தருள்பு ரியவுஞ்

சோடசந் தன்னையுஞ் சோமவட் டத்தனிற்
சொக்கிவிட வருள்பு ரியவும்
மத்திய விருந்தமதி யமுதூற்றி கரைதிரையு
மாறிடற் கருள்பு ரியவும்
வாரியை நிகர்த்தவருள் வாரிகரைத் தத்தவும்
வற்றுரு தருள்பு ரியவும்
வத்துமய மாய்நின்ற தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுனதே சிகநா தனே. (5)

மனம் வரம் வசிய மடர்ந்தடங்கிச் சேர்ந்து
சுருண்டிட வரவேண்டும்.

வாதனை யிறக்கவுஞ் சாதனை சிறக்கவும்
வரமளித் தருள்பு ரியவும்
வாசிதனி லேற்றவும் பாசவினை மாற்றவும்
வசியமெற் கருள்பு ரியவும்
ஆதார மாறினுஞ் சேதாரம் வாரா
தடர்ந்தேற வருள்பு ரியவும்
அங்கென்று கும்பித்து வங்கென்றி ரேசித்
தடங்கென்று னருள்பு ரியவும்
சூதான மானவெறு வெட்டவெளி சென்றங்கு
சேர்த்திடற் கருள்பு ரியவுஞ்
சோதிமணி மண்டபக் கமலா சனத்திற்
சுருண்டிடற் கருள்பு ரியவும்
மாதவர்க் காசனே தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே

மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுனதே சிககா தனே. (6)

மனங் குதித்துக் கூத்தாடக் கிட்டுதற்குக் கிருபை
புகுந்தெப்போதுமருள வரவேண்டும்.

குதிகொள்ளு மச்சுமட் டத்தைப் பிடித்துக்
குதித்தேர வருள்பு ரியவும்
கோபுரத் தடியினிற் கொஞ்சிநட னங்கொண்டு
கூத்தாட வருள்பு ரியவும்
கெதிகொண்டு பாய்ந்துமடி யாறுங் கடந்துளுங்
கிட்டுதற் கருள்பு ரியவும்
கெற்பகிர கத்தினிற் குதிரையைக் கட்டவுங்
கிருபைதத் தருள்பு ரியவும்
பொதிகைமா மலையது பொதும்பிலடி யேனும்
புகுந்திடற் கருள்பு ரியவும்
போதுமென வாழ்வதுஞ் சித்தமென் பாக்கியமெப்
போதுமென வருள்பு ரியவும்
மதியென வெழுந்துமெய்த் தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்றன் னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுனதே சிககா தனே. (7)

மனத்தின்றுரணை தம்பிக்கக் கசிந்து கருக்கிப்
பதவிபால் தர வரவேண்டும்.

தசநாடி யும்மூல நாடியு ளொடுங்குதற்
றுரணைக எருள்பு ரியவும்
தாதுமுக் கான்குமிரு கான்காக வொருகான்கு
தம்பிக்க வருள்பு ரியவுங்

கசியாது சோமவட் டத்துறையு மமிர்தங்
கசிந்திடற் கருள்பு ரியவும்
கனலினுற் றத்துவக் குப்பையைச் சுட்டுக்
கருக்கிடற் கருள்பு ரியவும்
பசிதாக மற்றவமு தாற்றவுஞ் சாயுச்சிய
பதவியொன் றருள்பு ரியவும்
பசுவினை பதியினிற் கட்டவுங் கற்பசு
பால்தரற் கருள்பு ரியவும்
வசவிர்த்தி யாகமெய்த் தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுனதே சிகநா தனே. (8)

மனம் வெல்லுதல் விலாசஞ்சு மாறுபடச் சூக்ஷங்
கொள்ளாது குலைந்திட வரவேண்டும்.

வெல்லரிய மாயைதனை வெல்லென்று சொல்லவும்
வெல்லுதற் கருள்பு ரியவும்
விரிமறைகண் முரசறையு மறிவுக் ககண்டித
விலாசமொன் றருள்பு ரியவும்
சொல்லரிய வாசாம கோசர சுபாவஞ்
சுமாறுபட வருள்பு ரியவும்
சும்மாவி ராமலும் சும்மாவி ராகின்று
சூட்சமெற் கருள்பு ரியவும்
கொல்லரிய பேய்குரங் கரமனம் பாய்ந்துகுதி
கொள்ளாது னருள்பு ரியவும்
கொலைகேட ரானவைம் புலவேடர் கூட்டங்
குலைத்திடவு னருள்பு ரியவும்

வல்விரு டுலேக்கவுந் தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுனதே சிகநா தனே. (9)

மனமதுகொள்ள வானந்தங் கடைத்தேறக்கட்டி
நான்புகநயந்து வரவேண்டும்.

அஷ்டாங்க யோகமே கிட்டநீ ரிஷ்டம்வைத்
ததுகொள்ள வருள்பு ரியவும்
ஆதிகடு முடிவில் லகண்டிதா காரவறி
வானந்த மருள்பு ரியவும்
கட்டையிற் போமுனே கிட்டைசா தித்துக்
கடைத்தேற வருள்பு ரியவும்
காலை பிடித்துழு லப்பிரா ணன்றனைக்
கட்டிவைத் தருள்பு ரியவும்
கட்டகடு வீதிமீ தோடியக் காளற்று
நான்புகற் கருள்பு ரியவும்
நாதநா தாந்தவே தாந்தசா ரத்தையு
நயந்துதந் தருள்பு ரியவும்
மட்டறிவ தற்கரிய தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுனதே சிகநா தனே. (10)

ஆக பாடல் 178.

ஏழாவது.

பொறை நிலை

தொகுத்துப் பலபுறந் துருவிச் செல்லா
தகத்தே நாட்டி யவ்வரு நிலையொடு
மனத்தினை யொருவழி நிறுப்பது பொறையால்
நினைத்த நினைவை நினைவாக் கொண்டு
பொருக்கு நிலையினை பொருந்த வருள்கவென்
றிருக்குங் கருத்தோ டிரந்திரந் துயர்த்தது.

மனங் கனலை மூட்டி வைத்து முன்னேற்றிச் சீர்பாதத்தைக்
வைத்துச் சரணமிட வரவேண்டும்.

முன்னையே மூட்டுமூட் டென்றுமூ லக்கனலை
மூட்டிவைத் தருள்பு ரியவும்
முன்வைத்த காலையும் பின்வாங்கி டாமலெனை
முன்னேற்றி யருள்பு ரியவுஞ்
சென்னிமீ தேந்தியான் றெண்டனிட் டுய்யவுஞ்
சீர்பாத மருள்பு ரியவும்
தெட்சணா மூர்த்தமாய் நின்றிதரி சனைதந்து
தீக்ஷைவைத் தருள்பு ரியவும்
சச்சிதா னத்திற் சரண்சரண மென்றுநான்
சரணமிட வருள்பு ரியவும்
சட்டமுனி முதலான நாதாக்க ளடியினுஞ்
சரணமிட வருள்பு ரியவும்
வன்னிகடு வணையான தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுனதே சிகநா தனே. (1)

மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுனதே சிகசா தனே. (4)

**மனஞ்சுத்தி செயத்துலங்க நின்றிலங்கவிறைஞ்ச வீட்டில்
விட்டு விளக்குவைக்க வரவேண்டும்.**

சோற்று லெடுத்தசுவ ரானகா யத்தையுஞ்
சுத்திசெய வருள்பு ரியவும்
சூக்குமங் காரண மகாகார ணத்தொடு
துலங்கிடற் கருள்பு ரியவும்
ஏற்றபடி யான்மவடி வென்முகத் தெதிர்கின்
றிலங்கிடற் கருள்பு ரியவும்
இறைவனே யடிமையுனை யேத்தியேத் தித்தொழு
திறைஞ்சிடற் கருள்பு ரியவும்
வேற்றொருவர் காணாத வேதாந்த வீட்டிலெனை
விட்டடுத் தருள்பு ரியவும்
விழிமாயை யிருடீர வொளிருமுச் சுடர்மணி
விளக்கொன்றை யருள்பு ரியவும்
மாற்றுது போற்றுமென் றவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுனதே சிகசா தனே. (5)

**மனத்தைப் பிடித்துப் பிரானே தியங்காமற் சித்திக்க
விழுத்திடையறுது வரவேண்டும்.**

பீற்றற் றுருத்தியிற் காற்றெலாஞ் சேர்த்துப்
பிடித்தடைத் தருள்பு ரியவும்
பீற்றலாற் காற்றும் புறத்துப் படரதெம்
பிரானேயு னருள்பு ரியவும்

சேற்றினிடை நாட்டுமோர் கம்பமென வென்னிலை
  தியங்காம லருள்பு ரியவும்
செத்தாற் பிழைப்பனே தருணமிது சீக்கிரஞ்
  சித்திக்க வருள்பு ரியவும்
ஏற்றபடி தன்னரசு நாடாக வொட்டா
  திழுத்துவைத் தருள்பு ரியவும்
என்றுமா தவமெய்து மென்றிடையு மேழையெற்
  கிடையறு தருள்பு ரியவும்
மாற்றுமொழி சாற்றுது தவராஜ சிங்கமே
  வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
  மவுனதே சிகநா தனே. (6)

மனத்தைக் கனவெனவிணங்கிப் பிரித்துப் பேரின்பஞ்:சிந்
  தாது தேவனே யருள்புரிய வரவேண்டும்.

இந்த்ரசா லப்புலைச் சேரியா தனைகன
  வெனமுடித் தருள்பு ரியவும்
இல்லக் துறக்கவுஞ் சொல்லறிய கல்லறி
  விணைக்கிவைத் தருள்பு ரியவும்
பெந்தமது புந்தமது கண்டவிரு ளென்னப்
  பிரித்திடற் கருள்பு ரியவும்
பேராசை கொள்ளவும் பாராசை விள்ளுமோர்
  பேரின்ப மருள்பு ரியவும்
சிந்தாத பேரருட் செல்வமே யென்சிந்தை
  சிந்தாது னருள்பு ரியவும்
தேவனே தேவாதி தேவனே பரவாசு
  தேவனே யருள்பு ரியவும்

மந்தார வேளையிற் றவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுனதே சிககா தனே. (7)

மனங் கடாக்ஷித்துக் கரைந்திடப் பதித்துப் பக்குவ
மேகாந்த மேறிட வரவேண்டும்.

கதைபேசி யதிலென்ன காரியம் மேதுங்
கடாக்ஷித்து னருள்பு ரியவும்
கல்விகல் லாக்கருங் கல்லாமென் னெஞ்சங்
கரைந்திடற் கருள்பு ரியவும்
பதியா மனத்தைப் பதைப்பறப் பதியிற்
பதித்துவைத் தருள்பு ரியவும்
பற்றறத் துணிவுதரு முத்தரைப் பணியுகற்
பக்குவம் மருள்பு ரியவும்
இதயக் திறக்கவும் மெதையுந் துறக்குமோ
ரேகாந்த மருள்பு ரியவும்
இல்லாசை யில்லாது வல்லாண்மை கொண்டுவெளி
யேறிடற் கருள்பு ரியவும்
மதிளும் கடந்துமெய்த் தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுனதே சிககா தனே. (8)

மன மண்ணலே வாநந்தஞ் சோதிசுடரிருந்திட
எந்நாளு மருள வரவேண்டும்.

அகமுதற் சகமயக் ககலவும் மகமேவு
மண்ணலே யருள்பு ரியவும்

அல்லவிழ வெல்லவுந் தொல்லையற வெல்லையி
லாகந்த மருள்பு ரியவும்
சுகமீற வும்மனத் தகைமாற வுஞ்சுயஞ்
சோதியெற் கருள்பு ரியவுஞ்
சுருதிமுடி யாய்நின்ற கருதுமடி யாருளஞ்
சுடரொன்றை யருள்பு ரியவும்
இகமொடு பரத்தினு மகமொடு புறத்தினு
மிருந்திடற் கருள்பு ரியவும்
ஏகமற வும்முமது பாதார விந்தமெற்
கென்னுளு மருள்பு ரியவும்
மகிமைசொல் லற்கரிய தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுனதே சிககா தனே.

மனத்திற் கடாக்ஷங் கதிநிறைந்திட நிறுத்தி முதிர்ந்து
முறையாக வரவேண்டும்.

கத்தனே யத்துவித வஸ்துவெற் கெத்துங்
கடாக்ஷம்வைத் தருள்பு ரியவும்
கருதரிய சிற்பரத் துட்பரவு மெய்ப்பொருட்
கதியளித் தருள்புரியவும்
நித்தியா னந்தமோ னந்தமென் சித்தையு
ணிறைந்திடற் கருள்பு ரியவும்
நேத்திரத் தாடுமே ஞற்றுமலர் பத்தையு
நிறுத்திவைத் தருள்பு ரியவும்
முத்திக்கு வித்தாய் முளைத்தெழுஞ் சோதியு
முதிர்ந்திடர்க் கருள்பு ரியவும்

முப்பாழ் கடத்திவைத் தப்பா வடத்துமுறை
முறையாக வருள்பு ரியவும்
மத்தியி லுதித்தமெய்த் தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுனதே சிககா தனே. (10)

ஆக பாடல் 188.

எட்டாவது
காட்சி நிலை.

வளிவசப் பட்டும் பொறிவசப் பட்டுத்
தெளிவசத் திருந்த சிந்தையை யணைத்தும்
ஒருவழி யோங்கு முயர்மன வழியே
திருவொளி கனிந்து திவலையிற் றிகழ்ந்து
வெளியி லிரவும் விளங்கிய பகலும்
ஒளியா யிருந்த வுவமை யென்னத்
தோற்றுந் தோற்றத் தோற்ற வருள்தெளிப்
போற்றிப் போற்றிப் புகழ்ந்திரத் துயர்த்தது.

மனமணைந் தர்ச்சிக்கப் பணிந்து வசம் பண்ணிச் சென்றுடச்
சீரியவேற்கருள வரவேண்டும்.
ஆத்தாளை யெனையீன்ற வாலையா கந்தியை
யணைத்திடற் கருள்புரியவும்
அம்பிகை மனோன்மணிக் குண்டலித் தாய்பதமு
மர்ச்சிக்க வருள்பு ரியவும்
பார்த்தாளை யாவையுங் காத்தாளை யென்றும்
பணித்திடற் கருள்பு ரியவும்

பரையாளை மாகல்ல கிறையாளை யென்வசம்
பண்ணிவைத் தருள்பு ரியவும்
சேர்த்தாளை வான்கருணை பூத்தாளை யொத்தபடி
சென்றாட வருள்பு ரியவுஞ்
சிறியாளை மெத்தவும் பெரியாளை யறியவுஞ்
சிறியவெற் கருள்பு ரியவும்
மாற்றான அப்பாது தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாருணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுனதே சிகநா தனே. (1)

மனம்பதம் பணிந்து சேவிக்கச் சிறப்பிடு சரண்புகத்
தடையற வரவேண்டும்.

பத்துவா துடையசிறு பெண்ணென வென்றாய்
பதந்தொழற் கருள்பு ரியவும
பாலான வாமம்வைத் துப்பூசை பண்ணிப்
பணிந்திடற் கருள்பு ரியவுஞ்
சித்தந் தெளிந்து பரதெய்வசந் நிதிசென்று
சேவிக்க வருள்பு ரியவுஞ்
சின்மய சிதாகாச தேவதைக் கென்றுஞ்
சிறப்பிடற் கருள்பு ரியவுஞ்
சத்தியத் தொடுபரா சத்திய சமுகத்திற்
சரண்புகற் கருள்பு ரியவுஞ்
சங்கநிதி பத்மநிதி போலுதவி யாய்நின்று
தடையறக் கருள்பு ரியவும்
மற்றெவ ரிருந்துமென் றவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே

மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுனதே சிகசா தனே. (2)

மனம்முயற்சி மோகங் கடத்திக்காட்டிச் சூக்ஷம்வகை தொகையாக வரவேண்டும்.

மூலமுத லாறுவரை தாண்டிமேற் றூண்டவு
முயற்சிதந் தருள்பு ரியவும்
மூலவர்க் கங்கனென வாலையைப் பூசிக்க
மோகமெற் கருள்பு ரியவுங்
காலைப் பிடித்திழுத் துக்கந் தரத்தைக்
கடத்திவைத் தருள்பு ரியவுங்
காலனுக் குங்கால னாகவுங் கற்பமுறை
காட்டிநல் லருள்பு ரியவுந்
தூலத்தை விட்டுவிட வொட்டாது சூக்ஷாதி
சூக்ஷமொன் றருள்பு ரியவுஞ்
சுழியின்ன தென்றுசோ டசமின்ன தென்றுவகை
தொகையாக வருள்பு ரியவும்
வாலாய மாகமெய்த் தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுனதே சிகசா தனே. (3)

மனத்தைக் காட்டிக் கண்ணே தயைபுரிந்து பிரசாத மென்று பார்த்துப் பரிகரித்தருள வரவேண்டும்.

கலையாம லீராறு கலையினிலே குலையுமுன்
கட்டிடற் கருள்பு ரியவுங்
காலைப் பிடிக்கிறே னம்மைகுண் டலியையென்
கண்ணையெற் கருள்பு ரியவும்

சலனமற வுங்கருணை நிதியே தயாளமே
தயைபுரிந் தருள்பு ரியவும்
சரணார விந்தமுன் பாதார விந்தப்ர
சாதமொன் றருள்பு ரியவும்
பலகா லிரந்ததும் பலனுக வென்முகம்
பார்த்துகல் லருள்பு ரியவும்
பாவியடி யேன்படுங் கண்கலக் கங்களைப்
பரிகரித் தருள்பு ரியவும்
மலமத்த வீனயுமற்ற தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுனதே சிககா தனே (4)

மனமுத்த முத்திரை தன்னிரைத் தன்னாமற்
றெளித்து சேவிக்க வரவேண்டும்.

மோகத் தவிர்க்கமுலை யாரையணை யாமலுமை
முத்தமிட வருள்பு ரியவும்
மொழியைத் தவிர்க்கவாய் மூடலுட னேமோன
முத்திரையை யருள்பு ரியவுந்
தாகித்த வென்றனுக் கெண்ணெயூட் டாதுகற்
றண்ணீரை யருள்பு ரியவுந்
தாராத வருளெலாந் தந்தடிமை கொள்ளவுந்
தன்னாம லருள்பு ரியவுந்
தேகத்தை விட்டுவிடு முன்மனந் தேறித்
தெளிந்திடற் கருள்பு ரியவுஞ்
செம்பொனிற மானசிறு வாலைதிரு காலையுஞ்
சேவிக்க வருள்பு ரியவும்

மாகத்த ஞானமெய்த் தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுனதே சிககா தனே (5)

மனத்தின் பேரின்பம் பெண்ணாசையை ஆதரிப்பு
நாசமாய் நானுக வரவேண்டும்.
பேசாது மவுனத் திருக்கவும் பேசாத
பேரின்ப மருள்பு ரியவும்
பெண்ணாசை மண்ணாசை வும்வாலை யம்பிகைப்
பெண்ணாசை யருள்பு ரியவும்
ஆசாப சாசைத் துரத்தவுங் திருவடியி
ஞைசதங் தருள்பு ரியவும்
ஆதாரவு மற்ற தரிப்பாரு மற்றவெனை
யாதரித் தருள்பு ரியவும்
நாசச் சரீரமு நாசமா மூன்புவன
நாசமேற் கருள்பு ரியவும்
காேனென்ப தற்றுகா ஞேனென்ப துற்றுகா
ஞைக வருள்பு ரியவும்
வாசாம கோசரத் தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுனதே சிககா தனே (6)

மனத்தை யாசை யபயந்தடரித்துத் தாடத்து
பாகம் வைத்துப் பழக்க வரவேண்டும்.
ஆசரித் தம்பிகை தனைப்பூசை செய்துய்யு
மாஜைசயொன் றருள்பு ரியவும்

அறமியற் றவுமனத் திறமியற் றவுமெனக்
கபயநின் றருள்பு ரியவும்

தாய்செத்த பிள்ளையென வேசற் றிராமற்
றடாரித்து னருள்பு ரியவும்

தடையில்நிற் றடைபடா நின்றொளிரு மெய்த்திருத்
தாடந்து னருள்பு ரியவும்

பாசத்தை வீசுமெம னுக்குட் படாதுநின்
பாகம்வைத் தருள்பு ரியவும்

பஞ்சாட் சரத்தையுந் துஞ்சாச் சரத்தோடு
பழகிவைத் தருள்பு ரியவும்

வாயற் கடந்துமெய்த் தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே

மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுனதே சிகசா தனே. (7)

மனங் களித்துக் களுவென்று நாறனை நற்றவந்
தூனுகத் துரையருள வரவேண்டும்.

காணாத காட்சியைக் கண்டடிமை யுள்ளங்
களித்திடற் கருள்பு ரியவுங்

கண்கொண்டு காணப் படாநின்ற வெவையுங்
களுவென்று னருள்பு ரியவும்

காணுமட மாதரைக் கண்ணினிற் காணுமுன்
காணுன வருள்பு ரியவும்

காவுருசி தேடுதற் காவிகெட் டலையாது
நற்றவம தருள்பு ரியவுக்

தூணைத் துரும்பாக்க வுந்துரும் பைபெருக்
  தூணுக்க வருள்பு ரியவுந்
தூரியமய மாய்நின்ற பெரியபொரு ளைத்தொழுக்
  துரையொன்றை யருள்பு ரியவும்
வாளுள் விடாதமெய்த் தவராஜ சிங்கமே
  வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
  மவுனதே சிகசா தனே. (8)

மனத்தை யடிமைகொண் டனுபூதிமுழுத்திட முடித்
  தாண்டித் தந்தருள வரவேண்டும்.
ஆண்டினே டாண்டனக் தங்கோடி வைத்தெனை
  மடிமைகொண் டருள்பு ரியவும்
அதிசோதி பரவிக் கிடக்தொளி பரப்புமுன்
  னனுபூதி யருள்பு ரியவும்
மூண்டெரியு மங்கியிற் கருவிகர ணங்களை
  முழுத்திடற் கருள்பு ரியவும்
மூக்குமுனை வாயிலண் ணுக்கினுனி யாலடைய
  மூடிவைத் தருள்பு ரியவும்
தாண்டுமீ ராறுகலை தாண்டாம லஞ்சுழினை
  தாண்டிடற் கருள்பு ரியவும்
தாண்டாம னின்றமதி மண்டலங் கொண்டவமு
  தந்தந்து னருள்பு ரியவும்
மாண்டெவையு மாண்டுமெய்த் தவராஜ சிங்கமே
  வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
  மவுனதே சிகசா தனே. (9)

மனத்திற்குச் சுகந்துன்னை தழுவித் தரித்திட ஆட்கொண்டு
ஆனாக்கி யருள வரவேண்டும்.

சுந்தரச் சோதிமணி மார்போ டணைத்துச்
சுகந்தந்து னருள்பு ரியவுஞ்
சொந்தவடி யேன்சிந்தை கொந்திடா வண்ணமே
துணையுநின் றருள்பு ரியவுஞ்
சந்திரோ தயமெனச் சிந்துமொளி தந்துகை
தழுவிநின் றருள்பு ரியவும்
தளதளென் றவிர்தரு ஜகச்சோதி பரவித்
தரித்திடற் கருள்பு ரியவும்
அந்தரத் துலவுகம னக்குளிகை யொன்றளித்
தாட்கொண்டு னருள்பு ரியவும்
அம்பிகை பதம்பணியு மாளாக வும்மெனையு
மானாக்கி யருள்பு ரியவும்
வந்தனங் கைக்கொளுந் தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுனதே சிககா தனே. (10)

ஆக பாடல் 198.

ஒன்பதாவது.

தியான நிலை

தோற்றிய காட்சியிற் சுயத்தினைப் பற்றி
ஏற்றி யேற்றி யிடம்வலம் முன்பின்
இயங்கா தோங்கி யெழுமனக் தன்னினை
வுயங்கா தோன்றி யுண்மையிற் றிகழ

தூணைத் துரும்பாக்க வுந்துரும் பைபெருக்
தூணாக்க வருள்பு ரியவுந்
தூரியமய மாய்நின்ற பெரியபொரு ளைத்தொழுந்
துரையொன்றை யருள்பு ரியவும்
வானாள் விடாதமெய்த் தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுனதே சிகரா தனே. (8)

மனத்தை யடிமைகொண் டனுபூதிமுழுத்திட முடித்
தாண்டித் தந்தருள வரவேண்டும்.

ஆண்டினே டாண்டனந் தங்கோடி வைத்தெனை ;
மடிமைகொண் டருள்பு ரியவும்
அதிசோதி பரவிக் கிடக்தொளி பரப்புமுன்
னனுபூதி யருள்பு ரியவும்
மூண்டெரியு மங்கியிற் கருவிகர ணங்களை
முழுத்திடற் கருள்பு ரியவும்
மூக்குமுனை வாயிலண் ணாக்கினுனி யாலடைய
மூடிவைத் தருள்பு ரியவும்
தாண்டுமீ ராறுகலை தாண்டாம லஞ்சுழினை
தாண்டிடற் கருள்பு ரியவும்
தாண்டாம னின்றமதி மண்டலங் கொண்டவமு
தக்தக்து னருள்பு ரியவும்
மாண்டெவையு மாண்டுமெய்த் தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுனதே சிகரா தனே. (9)

மனத்திற்குச் சுகந்தநீனை தழுவித் தரித்திட ஆட்கொண்டு
ஆளாக்கி யருள வரவேண்டும்.

சுந்தரச் சோதிமணி மார்போ டணைத்துச்
சுகந்தந்து னருள்பு ரியவுஞ்
சொந்தவடி யேன்சிந்தை கொந்திடா வண்ணமே
துணையுநின் றருள்பு ரியவுஞ்
சந்திரோ தயமெனச் சிந்துமொளி தந்துகை
தழுவிநின் றருள்பு ரியவும்
தளதளென் றவிர்தரு ஜகச்சோதி பரவித்
தரித்திடற் கருள்பு ரியவும்
அந்தரத் துலவுகம னக்குளிகை யொன்றளித்
தாட்கொண்டு னருள்பு ரியவும்
அம்பிகை பதம்பணியு மாளாக வும்மெனையு
மாளாக்கி யருள்பு ரியவும்
வந்தனங் கைக்கொளுந் தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுனதே சிகசா தனே. (10)

ஆக பாடல் 198.

ஒன்பதாவது.

தியான நிலை

தோற்றிய காட்சியிற் சுயத்தினைப் பற்றி
ஏற்றி யேற்றி யிடம்வலம் முன்பின்
இயங்கா தோங்கி யெழுமனக் தன்னினை
வுயங்கா தோன்றி யுண்மையிற் றிகழ

நிறுத்தி வம்மன நிலைதிரி யாமற்
குறித்த பொருளொடு கொளுத்த நியானம்
என்னும் பாங்கி னிம்முறை யருள்கவென்
றுன்னி யுன்னி யுவந்திரந் துயர்த்தது.

மனமோகமதை நாளும் நாட்டிவைத் தவிழாமலவிழ்ந்து
தேனெழுகச் சிறப்பிட வரவேண்டும்.

நவகண்ட யோகமே நான்கொண்ட மோகமதை
நாளுமெற் கருள்பு ரியவும்
நாவதனை யோட்டிவிட் டந்நாள மாட்டிநிலை
நாட்டிவைத் தருள்பு ரியவும்
அவிழுமொன் பதுவாயி லுங்கட்ட வுங்கட்டு
மவிழாம லருள்பு ரியவும்
அவயவா திகளுநவ கண்டமா யவிழத்
தவிழ்ந்திடற் கருள்பு ரியவுந்
திலநிலையோன் றூமிலும் புன்னுவரியின் மணியெனத்
தேனெழுக வருள்பு ரியவுஞ்
சிற்றூறலூட்டவுஞ் சித்தாந்த முத்திச்
சிறப்பிட்டு னருள்பு ரியவும்
மவுனமணி யானமெய்த் தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுனதே சிகநா தனே. (1)

மனம் பெருப்பாதையொன்றில் நீத்தூலிபவனிக் கடந்து
கைக்கொண்டுன்றி யொன்றுக்குளொன்றாக வரவேண்டும்.

பாலமுந் தாண்டியப் பானடக் கப்பெரும்
பாதையொன் றருள்பு ரியவும்

பாருக்க ளோவனந் தங்களதை நிர்த்தூளி
பண்ணிவிட் டருள்பு ரியவும்
காலா லடர்ந்துசமர் செய்துதல மாறுங்
கடந்திடற் கருள்பு ரியவும்
கண்டத்தை வென்றுகா யாபுரிக் கோட்டையென்
கைப்படற் கருள்பு ரியவும்
ஓலமிட் டோங்கார வுன்னதக் கம்பமங்
கூன்றிடற் கருள்பு ரியவும்
ஓசைமணி மண்டபஞ் சென்றுநின் றொன்றுக்கு
ளொன்றாக வருள்பு ரியவும்
வாலிபம் முதிருமுன் றவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுனதே சிகநா தனே. (2)

மனமுட்புக வொடுங்கிடத் தூங்கிடச் சோபிக்கத்
தகைதீர்ந்திட யேற்றிட வரவேண்டும்.

ஓங்கார மதுகொண் டெழும்பிரண வப்பதியி
னுட்புகற் கருள்பு ரியவும்
உள்ளறையி னுள்ளேயோர் மூலையிற் சென்றங்
கொடுங்கிடற் கருள்பு ரியவுந்
தூங்காது தூங்கிசிவ யோகநித் திரைவந்து
தூங்கிடற் கருள்பு ரியவுஞ்
சுடருண்ட கர்ப்பூர வுண்டைபோ னின்றுடல்
சோபிக்க வருள்பு ரியவுந்
தேங்காத் திருக்கருணை வெள்ளம் படிந்துதகை
தீர்த்திடற் கருள்பு ரியவுந்

தேறுத சிந்தையுந் தேறவு மெனைக்கடைத்
தேர்த்திவிட் டருள்பு ரியவும்
வாங்காவி ஞேசையொடு தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுனதே சிகநா தனே (3)

மனமங்கங்கென்றுள்ளடங்கிப் பக்குவம்பண்ணி அமிர்த
பானந் திருத்தித்தருபூஜ வரவேண்டும்.
ஆயபல் வினைகளையு மாயாது தங்கவும்
மங்கங்கென் றருள்பு ரியவும்
அங்குசிங் கென்றுமைம் பத்தோ ரெழுத்துள்
ளடங்கென்று னருள்பு ரியவும்
பாயவும் வாசிக்கலை தேயவும் பக்குவம்
பண்ணிவிட் டருள்பு ரியவும்
பாஅற வுஞ்சுழினை மேலேற வும்மமர்த
பானமெற் கருள்பு ரியவுக்
தீயைப் பொருத்தியென் னேயத் திருத்தித்
திருத்திவைத் தருள்பு ரியவுக்
தேறத் தெளிக்கவுஞ் சோரப் பழிக்கவுக்
தீரமொன் றருள்பு ரியவும்
மாயையைக் காயவுக் தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுனதே சிகநா தனே. (4)

மனம் வழிமருவச் சமர்செய்யத் தம்பனம் அடைத்துச் சரணடைய வரவேண்டும்.

வங்குவங் கென்றுரீங் காரமுட னேகமேல்
வழிவிட்டு னருள்பு ரியவும்
வாசிதனி லேற்றியெனே மாசற்ற பரவெளியின்
மருவவைத் தருள்பு ரியவுஞ்
சங்குசிங் கென்றங்கு சண்டமா ருதமெனச்
சமர்செய்ய வருள்பு ரியவுந்
தம்பனங் கும்பித் திரேசிக்க வாயுவிட்
டம்பனம் மருள்பு ரியவும்
அங்கடங் குண்டவமிர் தங்கடைந் தென்கட
மடைத்துவைத் தருள்பு ரியவும்
அம்மைகுண் டலிபாத மாசரித் துச்சர
ணடைந்திடற் கருள்பு ரியவும்
மங்காத தங்கமே தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுனதே சிககா தனே (5)

மனத்திரஞ் சின்மயமெய்தாம மெனனுன் சுடர்சோதித் தொடருள வரவேண்டும்

செத்தாலும் வைத்தடிபின் வாங்காது முன்னேறி
தீரமோன் றருள்பு ரியவுஞ்
சிற்பர வெளிக்கூடு செல்லவுஞ் செல்லரிய
சின்மயம் மருள்பு ரியவும்
எத்தாத முத்திநெறி யேற்றவு மற்றெவையு
மெய்தாம லருள்பு ரியவும்

ஏகவுரு வாகிநின் றெங்குநிறை கின்றபொரு
ளென்னுளுற வருள்பு ரியவுஞ்
சுத்தமய படிகச் சுயஞ்சோதி பரவிமுச்
சுடர்கொழித் தருள்பு ரியவுஞ்
சொக்குமதி மோகமுக வாரியமு தாட்டவுஞ்
சொந்தத்தொ டருள்பு ரியவும்
வற்றாத செல்வமே தவராஜ சிங்கமே,
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுனதே சிகநா தனே. (6)

**மனத்தினிஷ்டம் வைத்தென்னை யெற்காராய்த்து அறிவதற்குச்
சித்தம் வைத்துச் செய்யு நல்லருள்புரிய வரவேண்டும்.**

இதமாக வேயடிமை பதமாம் பொருட்டாக
விஷ்டம்வைத் தருள்பு ரியவும்
எல்லாம தாயேது மில்லாது மாய்கின்ற
வென்னையெற் கருள்பு ரியவும்
அதுவேய தானவோ ரருமறைப் பொருளையா
ராய்ந்திடற் கருள்பு ரியவும்
அறிவதற் கரியவரி வாகார மானவனை
யறிவதற் கருள்பு ரியவுஞ்
சிதையுமித யத்தையுஞ் சிதையா திருத்தவுஞ்
சித்தம்வைத் தருள்பு ரியவுஞ்
சேவடி கொடுத்திந்த காயடிய னுக்குதவி
செய்யுநல் லருள்பு ரியவும்
மதமற்ற மதமுற்ற தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே

மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுனதே சிக்கா தனே. (7)

மனத்தைத் தூக்கித் துணிந் தெடுத்திருந்து
நிலையம்நெக்குருக வரவேண்டும்.

தொலையாப் பவக்கட ரொலைத்துமக் கரையிலெனைத்
தூக்கிவிட் டருள்பு ரியவுந்
தொல்லைதரு தொல்லுலகை வெல்லவுந் துறவிற்
றுணிந்திடற் கருள்பு ரியவும்
இலையும் புலர்ந்தசரு குங்கும்பி யெரிவற்
றிருந்திடற் கருள்பு ரியவும்
இருகலையி னூடுருவி முக்கலைக் கப்பா
லிருக்குமுன் னருள்பு ரியவும்
நிலைபற்ற விதயத்தை நிலையத் திருந்துகன்
னிலைமௌன் றருள்பு ரியவும்
நிற்குநிலை சொக்கியா னிற்காது நிற்கவும்
நெக்குருக வருள்பு ரியவும்
மலைவெலாந் தீர்க்கவுந் தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுனதே சிகசா தனே. (8)

மனக்கருத்துக் கற்பித் தொழிந் தொதுங்கி
நடத்து நானென வரவேண்டும்.

கானக விலங்கினின மாகும்வை ராக்கியக்
கருத்தொன் று னருள்பு ரியவுங்
காடுவீ டாகவும் வீடுகா டாகவுங்
கற்பித்து னருள்பு ரியவும்

ஊணிறைக் தோருரு வெடுத்தகா யத்துற
வொழிக்திடவு னருள்பு ரியவும்
உண்டுடுத் துப்பூணு முலககடை யெனைவிட்
டொதுங்கிடற் கருள்பு ரியவும்
ஞானேத யங்கண்டு மானபி மானம்
கடக்திடவு னருள்பு ரியவும்
கானென்ற கற்றுகா ஞுறகும் வண்ணநீ
கானென்ற தருள்பு ரியவும்
வானுச்சி யுதவுமெய்த் தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் திசனே
மவுனதே சிகசா தனே. (9)

மனத்தினடனஞ் சந்ததியிற் சென்று திறந்து
வசம் வளர்ந்தேற வரவேண்டும்.

காசிகடு வணைகட்ட கடுவினின் றுல்லாச
கடனமிட வருள்பு ரியவும்
காதகா தாக்தம் முழங்குமோர் தெய்வசக்
கதியில்விட் டருள்பு ரியவுக்
தேசுதரு மோசைமணி மாமண்ட பத்தினுட்
சென்றிடற் கருள்பு ரியவுக்
திரையைக் கடக்தங் கடங்கவுன் ளறையைத்
திறக்துதக் தருள்பு ரியவும்
வாசங் கொடுத்தகம லாசனத் தையுமென்
வசங்கொடுத் தருள்பு ரியவும்
வற்ருத செல்வங்க ளைத்தேச காலமும்
வளர்க்தேற வருள்பு ரியவும்

மாசேது மற்றமெய்த் தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுனதே சிககா தனே. (10)

ஆக பாடல் 208.

பத்தாவது
சமாதி நிலே.

ஒன்றிய ததனே யொன்றாற் றுறுகுணம்
இன்றித் தானுந் தன்பெயரின்றிச்
சேர்ந்துஞ் சோர நிருந்தவுண் மையோ
லார்ந்து பதுவு மாகா தாக
அங்ஙனங் குறித்த வம்முதற் பொருளொடு
தான்பிற ஞகத் தகையது சமாதி
ஆகு மென்ற வக்கிலே யருள்கவென்
றேக மாகி யிரந்திரந் துயர்த்தது.

மனங் கூடுகோள்ளாம லடங்கியஞ்சி ஒடுங்கி
யொழிதற்கு வரவேண்டும்.

கூடுவிட்டுக்கூடு பாயுங் கருக்குருவி
கூடுறைய வருள்பு ரியவுங்
கொல்லனுலே மேனின்று கூத்தாடு குறளிகுதி
கொள்ளாம லருள்பு ரியவும்
ஆடுகற்குண்டலிப் பாம்புமெய்ப் புற்றினு
ளடங்கிடற் கருள்பு ரியவும்
அஞ்சாத லஞ்சுபுல வேடர்களு மடியனேற்
கஞ்சிடற் கருள்பு ரியவும்

ஓடியுழல் சிந்தையுங் கணமேனு மூசென்
றொடுங்கிடற் கருள்பு ரியவும்
ஓவியம் போலவே சும்மா திருக்கமற்
றொழிதற்கு னருள்பு ரியவும்
வாடுத லறிந்துமெய்த் தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுனதே சிகசா தனே. (1)

மனத் திகழ்ந்து தீயிற்சரிப்படச் சமஸ்தமும்
ஆட்கொண்டக்க வரவேண்டும்.

தீபம் பொருந்துகர்ப் பூரமென வுடலந்
திகழ்ந்திடற் கருள்பு ரியவுந்
தீயிலிட் டென்னை கருக்குமுன் பென்னகத்
தீயிலிட் டருள்பு ரியவுஞ்
சாபங்க டரச் சமாதி நிறை வேறிச்
சரிபடற் கருள்பு ரியவுந்
தடையுரு துதவுகற் பகமா யிருந்தே
சமஸ் தமும் மருள்பு ரியவும்
ஆபத்தை யும்மடிமை பாபத்தை யுந்தொலைந்
தாட்கொண்டு னருள்பு ரியவும்
ஆங்கார மெல்லா மடக்கியுன் கைக்குள்
ளடக்கிவைத் தருள்பு ரியவும்
மாபதவி சேர்த்துமெய்த் தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுனதே சிகசா தனே. (2)

மனத்தின் றத்துவந் தான்சாக நான்சாக
நான் வருமுன் சித்தி சீக்கிரமாக வரவேண்டும்.

தான்செத் திருந்துலக முழுதுமர சாளுமோர்
தத்துவம் மருள்பு ரியவுந்
தான்சாக வும்மருந் துண்பாரி யாரியான்
றுன்சாக வருள்பு ரியவும்
நான்சாமு னான்சாக நாடினே னான்சாமு
னான்சாக வருள்பு ரியவும்
நாள்வருமு நான்சாக நாள்வந்து நான்சாக
நாள்வருமு னருள்பு ரியவும்
தீஞ்சுதிரு பிடிசாம்ப லாகவுந் தானான
சித்தியெற் கருள்பு ரியவுந்
தேகநிலை யல்லவே திருவரு ளிரங்கிமாச்
சீக்கிரம் மருள்பு ரியவும்
வாஞ்சாலை யானமெய்த் தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுனதே சிகநா தனே. (3)

மனங்கரையத் தக்கவிழ்ந்து விளையாடவிடுபுக
எண்ண மின்புற வரவேண்டும்.

கண்ணுறு விண்ணு றெனப்பொங்க வுங்கங்கு
கரைதத்த வருள்பு ரியவுங்
கருணை சமுத்திரம் பரவிவத் தென்னைக்
கவிக்திடற் கருள்பு ரியவும்
விண்ணுடர் போற்றிசெய் யண்ணலு மென்கூட
விளையாட வருள்பு ரியவும்

13

வேதவே தாந்தமெல் லாம்விட்டு கட்டகடு
வீடுபுக வருள்பு ரியவும்
எண்ணரிய ஞானவா கந்தமோ னந்தந்
தெண்ணந்தரற் கருள்பு ரியவும்
ஏகதத் துவசுரூ பத்தைமோ கித்தடிமை
யின்புறற் கருள்பு ரியவும்
மண்ணொளிர விண்ணுலவு தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுனதே சிககா தனே. (4)

மனவெண்ண மிரங்கித் தீக்ஷைசெய்வித் தொடுங்கி
யுறைந்திட வரவேண்டும்.
இன்றுளோர் காளையு மிருப்பரென் றெண்ணுத
வெண்ணமொன் றருள்பு ரியவும்
இந்தவடி யானுனது சொந்தவடி யானென
விரங்கிநல் லருள்பு ரியவுந்
தென்றிசைக் கைலாச மாம்பொதிகை வாசனே
தீக்ஷைதந் தருள்பு ரியவுந்
தேசிக சிகாமணிய னேயடிமை பண்படச்
செய்வித்து னருள்பு ரியவும்
ஒன்றுக்கு ளொன்றுன வொன்றுக்கு ளொன்று
யொடுங்கிடற்க ருள்பு ரியவும்
உள்ளுக்கு ளுள்ளுருகி யுள்ளுக்கு ளுள்ளே
யுறைந்திடற் கருள்பு ரியவும்
மன்றிலெவ ருந்தொழுந் தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே,

மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுனதே சிககா தனே. (5)

மனமுனையே தொழ வுண்ணின்று மறந்திடாது வாய்த்திட
நானுக நானறிய வரவேண்டும்.

ஊனுன காயமுயிர் போமுனடி யேனுமுனை
யேதொழற் கருள்பு ரியவும்.
உயிரினுக் குயிராக யுறைந்தநீ யென்றுமேம்
குண்ணின்று னருள்பு ரியவும்
வானுதி பூதலய மானபெரு மானெனை
மறந்திடா தருள்பு ரியவும்
வாக்குமன மணுகாத பூரணந் தானுக
வாய்த்திடற் கருள்பு ரியவும்
கானுக நின்றகா னுைக நின்றுகா
னுைக வருள்பு ரியவும்
கான்மறையு மறியாத கான்மறையி னுட்பொருளை
கான றிய வருள் புரியவும்
மானென விரைந்துமெய்த் தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுனதே சிககா தனே. (6)

மனமடர்ந்து பகர்ந் தீதென்றிருந்திட
மதமண்ணுக வரவேண்டும்.

அதிமோக மாகிமெய்ஞ் ஞானவா னத்தத்
தடர்க்தேற வருள்பு ரியவும்
அங்கிங்கெ னுமலெங்கெங்குமது வானதெது
வதுபகர்க் தருள்பு ரியவும்

196 மஸ்தான் ஸாஹிபு அவர்கள் பாடல்

இதயங்க ணின்றுமித யங்களற் தற்கரிய
தீதென்று னருள்பு ரியவும்
ஏகமா கியபரா பரமுமென் பரமா
யிருந்திடற் கருள்பு ரியவும்
மதமத்த னையுமற்ற மதமுற்றி யானும்
மதமாக வருள்பு ரியவும்
மனமயக் கந்தரும் மென்மயக் கம்வெறு
மண்ணாக வருள்பு ரியவும்
மதிமுகத் தழகனே தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாருணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுனதே சிகநா தனே. (7)

மனமயமனைக்கால் பரயக்காத்துப் பரிசப்
பம்பரமாட வரவேண்டும்.

அடியனே னுய்யவு மாதரவு செய்யவு
மையமற் றருள்பு ரியவும்
அன்புமழை சொரியவா ருய்ப்பெருகி வந்துமற்
றணைதந்த வருள்பு ரியவும்
கடலின்மடை போலுமென் கண்மடை திறக்கவுங்
கால்பாய வருள்பு ரியவுங்
கதியான பூமியயி ரேற்றியதை ரிம்பாது
காத்துநின் றருள்பு ரியவும்
படுபாடு பங்குபற் றுமதலும் முழுதுமென்
பாரிசத் தருள்பு ரியவும்
பாசமற் றிடவுநன் னேசமுற் றடிமைபம்
பரமாட வருள்பு ரியவும்

மடமடென நடனமொடு தவராஜ சிங்கமே
  வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
  மவுனதே சிகநா தனே. (8)

மன மன்பறிவு வீறு வீடுபதம்
  பரமடைய வரவேண்டும்.

அகடமுறு சாமர்த்திய மெல்லா மறந்தடிமை
  யன்படைய வருள்பு ரியவும்
அதிகப்ர சங்கங்க ளெல்லா மறந்தடிமை
  யறிவடைய வருள்பு ரியவும்
வெகுளிவிளை யாட்டுமுத லெல்லா மறந்தடிமை
  வீறடைத் தருள்பு ரியவும்
வேடிக்கை யோடுபகட் டெல்லா மறந்தடிமை
  வீடடைய வருள்பு ரியவும்
பகடிபரி காசங்க ளெல்லா மறந்தடிமை
  பதமடைய வருள்பு ரியவும்
பாடிப் படித்தகதை யெல்லா மறந்தடிமை
  பரமடைய வருள்பு ரியவும்
மகுடந் தரித்தமெய்த் தவராஜ சிங்கமே
  வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
  மவுனதே சிகநா தனே (9)

மனம்போகமற் புணருதற்குச் செழுஞ்சாரல் நினைந்தது
  நான்சார நாளுக வரவேண்டும்.

பூஞ்சோலை வாழுமோ காவெனவும் வீணிலன்
  போகாம லருள்பு ரியவும்

பொற்று மரைக்குளத் தவளையா காதுனைப்
புணருதற் கருள்பு ரியவுங்
தேஞ்சாறு பாஞ்சாறு பாயுகின் பொதிகைச்
செழுஞ்சார லருள்பு ரியவுங்
திவ்யமா மதுரக் திரண்டமதி யமிர்தங்
தினக்தக்து னருள்பு ரியவும்
கான்சாமு ழுன்செத்து காடோறு முன்சமுக
கான்சார வருள்பு ரியவும்
காதமும் வேதமும் காதகா தாக்தமு
காணுக வருள்பு ரியவும்
வாஞ்சித்த லோடுமெய்த் தவராஜ சிங்கமே
வரவேண்டு மென்ற னருகே
மாகுணங் குடிவாழு மென்னகத் தீசனே
மவுனதே சிககா தனே. (10)

பத்தாவது சமாதிநிலை பத்தும் முற்றிற்று.

நேரிசை யாசிரியப்பா.

இவ்வகை யெல்லா மியைக்தும் பயன்கொளும்
அவ்வகை யெவர்க்கே யாயினும் விதியருள்
அருளுவ தாயி னவரே யுலகெலாக்
தெருளு மூர்த்தி திருப்பொரு ளென்ப
கல்வழி தேடு காரகாள்
சொல்வழி யிஃதே துணிக்து கொளீரே.

இச்சதகப்பெயரின் கருத்துப்பொருளும், கொள்ளுக் தன்மையும், இச்சதகஞ் சொல்லிய காரணமும், காரியப் படுதலும், இச்சதகத்திற் போந்த அதிகாரமும், இவ்வதி காரத் துட்பொருளும், இவற்றினியல்பும் ஒழுங்கும், இவற்

நிற்குப் பழஞ் சூத்திரக் கோட்பாடும், விளக்கிக்காட்டி, அதிகாரந்தோறும் பன்மையா யொழுகி, ஈற்றிநெருமை யாய் முற்றுப்பெற்ற இவ்வகத்தீசர் சதகத்தின் அதிகாரத் துறையினை யமைத்த,

நேரிசை யாசிரியப்பா.

அருந்தவ முனிவ ரனைவரி னுயர்ந்த
பெருந்தவ முனிவர் பெயரே யாயினும்
அமைவன வமைக்க லாகுமே லாமே
கமைவரு தாபதர் கருத்தக் தன்றால்
அகமும் புறமு மாயெப் பொருட்கும்
வகைபெற விளங்கு மதியா வுண்மையைக்
காரணத் தானுங் காரியத் தானும்
ஆரணத் தானு மருக்தெளி வானுக்
தொருக்கவு மிவற்றுற் றெருகுத்ததை மதுத்து
வகுக்கவு மாகா வண்மைபூண் டமையால்
அகத்தீ சனுக்கினம் புறத்தீச னென்று
தகத்தீச னென்றே யாளவேண் டியதால்
அவ்வகத் தீசனை யானந்தம் பூத்த
இவ்வகத் தீச னின்பமோ டிறைஞ்சித்
தன்பெயர் மாறிக் காரணந் தந்து
பின்பெயர் மாறி யறிவெனப் பிறழ்ந்து
மாயை யுடையான் மனமெனத் தோன்றுஞ்
சாயை யுடைய தாடாண்மை வீரனை
அடக்கி யொடுக்கி யணிகா ரணப்பெயர்
மடக்கி மடக்கி வவாா தாக்கித்
தானே தானுந் தன்மையின் விளங்கற்
கானு முறைசெய்வா னகத்தி னமைத்துத்

தவமும் யோகமுந் தகையென வியல்பின்
அவயவ மெல்லா மருளினோ டளித்து
விளக்கியாட் கொள்கென வேண்டி வேண்டித்
துளக்கி யிரந்துயர் தீரக் கேட்டது.

அகத்தீசர் சதக முற்றுப்பெற்றது.

ஆக பாடல் 218.

மஹுமூது நபியாண்டவரைச்

சுகர்னு பவமுறத் துதித்தல்.

ஆசிரிய விருத்தம்.

வெட்டவெட் டத்தளிர்கள் விட்டுப் படர்ந்தடரும்
வீசுபா சாட வியெனும்
வினையென்ற பெருமர வனக்கான கக்காடு
வெட்டிகிர்த் தாளி பண்ணி
வெகுளிக ளெனும்பல பறட்டுமுட் காடெலாம்
வேரோ டறப்பி டுங்கி
விரிகருணை வீரகண் டாமணி யணிந்துதுணி
வீரவா யுதம ணிந்து
வெற்றிகொண் டெழுமகங் காரவேங் கைப்புலியை
வேட்டையா டித்து ணித்து
வெட்கமொடு துக்கமும் வெருட்சியு மருட்சியும்
வெருண்டோட் வருவி காரம்
வெஞ்சின மெனுங்கொடிய துஷ்டமிரு கங்களும்
வெடிடிவா ளெடுத்தெ டுத்து
வீறுவிட் டலறியோர் ரோடொன்றுஞ் சேராமல்
வெருவியே கிட்ட டித்து

வெல்லரிய மாமாயை யெனுமலைப் பாம்பினை
விவேகமெனு மண்டா விஞல்

வெட்டிப் பிளந்தபின் மின்னுகர ணத்தொடு
விரிந்தோடு கருவி வேரை

மீறிய விசாரமெனு மண்வெட்டி கொடுவெட்டி
மேட்டிமைக ளென்னு மரமும்

வெட்டுண்ட மாறோடு முட்களுஞ் சேர்த்ததின்
மெய்த்தவக் கனலை மூட்டி

விண்டலமு மண்டலமு மொன்ருகி நின்றபெரு
வெளிவாயு வதனை யூதி

மெய்யான வடவன லெனச்சுடர் பரந்தபின்
விழிமாயை யெனுமி ருளெலாம்

விரிகதிர் வரக்கண்ட பனியின்முக மென்னவழி
விட்டுவெளி வாங்கி யேங்க

வெட்டியைக் கட்டிவழி வெட்டிப் பறிக்கின்ற
வினையறக் காடு வெட்டிச்

சுட்டபி னகக்கத்தகுண மென்றகற் பாறையைச்
சுழியெனும் விழியி ஞலே

சொச்சமற வெட்டிப் பிடுங்கியிட் டிங்கலைச்
சூட்சியென் னுஞ்ச கட்டிற்

றூக்கிவைத் தேற்றியே தொந்தங்க ளென்னுமொரு
தோல்வடக் கயிறு கட்டித்

துட்டத் துடுங்கெனுங் காமாட்டி யாட்களுந்
தோல்வடத் தொட்டி மூக்கத்

தூயமெய்ஞ் ஞானவை ராக்கியக் கைசமின்றற்
றெண்டுசெய் யென்ற டித்துத்

தூராத மிடியெனுந் தொல்லைப் பெருங்கேணி
தூர்க்கவத னனி ரப்பிச்
சொற்பிரண வச்சொருவ நிச்சயக் கருமுகில்
சூழ்ந்துதங் காலூன் றியே
சுற்றிக் கவிந்துகொண் டானந்த மழைமாரி
சோராம லேபொ ழிந்து
சொல்லரிய நெஞ்சக மெனும்பூமி சுத்தவெளி
யாகவச் சுத்தி ருந்தித்
துய்யசதுர் வேதத்தை நால்வரப் பாக்கியே
துறவெனுங் கிடைம றித்துச்
சுருதிமுடி வெண்ணுமறி வுமவுழுவ தற்கான
சூத்திரமெ னுங்க லப்பை
துன்பவின் பங்களென் பதிரண்டு மாடாய்ச்
சுருக்கிவார் பூட்டி யிதமாய்த்
துள்ளிக் குதித்தெடுத் தேறியே போகின்ற
துடியடக் கின்ற திடமாய்த்
தாலமொடு சூக்குமத் தாசையுகி ராசையாய்த்
தொக்ககிர்த் தொந்த மாகிச்
சோதிமய மாகின்ற வித்தகப் பண்ணையசு
டொட்டிதய மேழி யதனைச்
சொன்னபடி வத்திடக் கௌரிகுண் டலியெனுஞ்
சுழிமுனைத் தாறெடுத்துப்
பட்டும் படாதும்வைத் திடைதரிசி லாதுழுது
பல்வருண பேத மென்னும்
பாவிகச் சாதிவரை கின்றகளி யனறது
பழிக்கவழு கக்க லக்கிப்

பழக்கமெனு மடைதலுங் கட்டியு மிதித்தபின்
  பழகரிய சமர சமெனும்
படிகொண்ட மூலமுத லாதார மாறும்
  பரப்பிப் பரம்ப டித்துப்
பகருமிரு கலைகோக்கு வருசுழியி லமைகின்ற
  பலனெனுங் கைகு லுக்கிப்
பாரமலை யோடணு வகண்டமொடு கண்டம்
  பரிக்ஷிக்கொ ணாத விதையைப்
பட்டுமுந் தாதுபிந் தாமலே பரவியே
  பருவமது செய்த பின்பு
பாசட ரெடுப்பென் றெடுப்புகீ ரதனையும்
  பார்த்துக் கழித்து விட்டுப்
பத்திவை ராக்கியக் கடன்மடை திறந்துகால்
  பாய்ச்சியது பயிரா கவே
பரிபாக பக்குவக் காலமது பிசகாது
  பார்த்துப் பதக்தன் னிலே
பற்றிப் படர்ந்ததொண் ணூற்றாறு தத்துவப்
  பலதனை யறப்பி டுங்கி
பரிபூர்ண மாகவே காணுக்கு காட்கதிர்ப்
  பலகோ ளறப்ப ரித்து
பாளையென் னும்பருவ முற்றியே முத்திப்
  பலன்பெற்ற சமுசா ரிகீ
படைகொண்ட மும்மண்ட லத்துமுன் மகிமையைப்
  பற்றிப் படர்ந்த குருவே
பாதபங் கயமதுக் காளடிமை யாகாது
  பாவத் தழுந்து வேனோ
பாசவலை வீசியே மோசமது செய்கின்ற
  பாவையர்க் காளா வனோ

கொட்டிய கருந்தே ணிகர்த்தவிழி மின்னார்
குவிந்தவிரு பொற்கொங் கையுங்
கோசமொடு மும்மத மிறைக்கின்ற கர்விதக்
குஞ்சரக் கொம்பு தானோ
கொஞ்சுகிளி மொழியார்க ளுவுகல் லரவினின்
கொடியகஞ் சுப்பை யதோ
கூரிருட் கூந்தலென் சொல்லுகேன் கோடையிடி
குடிகொண்ட கருமே கமோ
கோதையிள மின்னார்கள் யோனிப் பெருங்கேணி
குறையாத யானை மடுவோ
கூருமுகி லேழும் படத்துவரு டிக்கினும்
குறையுறுக் கெடு பள்ளமோ
கொத்துக் கடங்காத மதகரி தனக்குமது
கொப்பமோ படுபள் ளமோ
குருவைத் தொழமனுக் குப்பைக ளொதுங்குமோர்
குப்பைக் கிடங்கு தானோ
கொலைசெயம னிருக் கின்றபடு களமோ
கொடுஞ்சிங்க மிடிபொ தும்போ
குமுகுமென வதிரசத் தேனொழுகு கனியெனக்
கொண்டுகெஞ் சினைவாட் டுதே
கோளடப் பெண்ணிலத் தாசைதரு கின்றதே
கோதையர்கள் காத லாலே
கூளமத ரிப்பதே யல்லா திருத்துகான்
குளிர்காய கேர மிலையே
கூர்குணம சத்துநிற் கின்றபர வெளியெலாங்
குடிகொண் டிருந்த குருவே
கொடியகெடு மாயையைக் கூடா திருக்கின்ற
குறியருள்வ தென்று புகலாய்

கோடானு கோடிமறை யாலுமறி யாக்குணங்
குடிகொண்ட கருணை வடிவே
ஹூலாஇ லாஹஇல் லல்லாஹு வென்பதற்
குரியமஹு மூது கபியே.

அறுபத்து நாலடி யாசிரிய விருத்தம் முற்றிற்று.

ஆக பாடல் 219.

தவமே பெறவேண்டு மெனல்

கட்டளைக் கலித்துறை.

ஓடி யலைந்துமிவ் வையக முற்று முழன்றுழன்றுந்
தேடி யெடுத்த திரவியம் யாவையுஞ் செத்தபின்பு
நாடி யெடுப்பது முண்டோ மறந்து கடக்குநெஞ்சே
வாடி யிறந்தறஞ் செய்வாய் குணங்குடி வாய்த்திடுமே. (1)

பெண்ணைசை யென்கிற பேய்பிடித் தாடிய பேதைநெஞ்சே
கண்ணு லதில்வருங் கன்மங்கள் யாவையுங் கண்டிலையோ
எண்ணுத பாவங்க ளெண்ணுமற் செய்யுமிப் பேருடம்பு
மண்ணுக கற்றவஞ் செய்வாய் குணங்குடி வாய்த்திடுமே.

ஆடும் படுபொரு ளாட்சியென் றங்கிங்கு மாயலைந்து
பாடும் படுவதுன் பாரம தோசொல்லு பாழ்மனமே
கூடும் படுபயன் றேடுமப் பாலுள்ள கூட்டம்விட்டு
வாடும் படும்பெறு முண்மை குணங்குடி வாய்த்திடுமே. (3)

ஆதி முஹம்ம தருளா முஹம்ம தருள்விரிந்த
சோதி முஹம்மது தோற்றமு ஹம்மது தூயவுளத்
தோதி முஹம்மதென் றுண்வ:மகண் டாலிவ் வுலகினுக்கு
வாதி முஹம்மதி னேடுங் குணங்குடி வாய்த்திடுமே. (4)

எல்லாப் படைப்பும் படைத்து மிரணங்க ளீபவனே
அல்லா வொருவ னவனன்றி வேறிலே யாகையினாற்
சொல்லா மற்சொல்லுஞ் சுருதிமுடி வினிற் சொல்லிறந்த
வல்லான் குணங்குடி வாழ்க்திருப் போமினி வாருமினே.

அய்யோ வுலகி லழியா வரம்பெற்றி யாரிருந்தார்
அய்யோ வுனக்கந்த வாதா வென்னதி லாசையென்னே
பொய்யான வாழ்வும் புலையாட்டி நம்பும் புதாலர்க்கும்
ஓய்யார முள்ள குணங்குடி யாற்கு முறவில்லையே. (6)

உற்று ரிருந்தென்னைப் பெற்று ரிருந்தென் னுனக்குதவி
சற்று மினுமிலேசொன்னேன்சொன் னேனிது சத்தியமாய்ச்
செற்றுலும் வைத்தடி வாங்காம னிற்கிற் செயம்பெறலாங்
கற்றுர் குணங்குடி கொண்டிடு வாய்மனக் கண்மணியே.

எண்சா ணுயரத் திருக்கும் பனையி னிறக்கியுண் ணும்
பஞ்சா க்ஷாமெனும் பாரிய வாளினைப் பாய்ந்தெடுத்துத்
தஞ்சாலு ராஜ மக ராஜன் பாதந் தனைப்பணிந்தால்
கெஞ்சாக் குணங்குடி கொள்வா யிதுபுத்தி கேணெஞ்சமே.

படிக்கும் படிக்கு நடக்கின்ற யோவிப் பழஞ்செருப்பா
லடிக்கட்டுமோவுனக் கொத்தாசை யாரறை பாவிநெஞ்சே
முடக்கிப் படுத்துக்கொண் முச்சந்திக் குப்பையின் மோடு
லடக்கிக் குணங்குடி கொள்வா யதுபர மானந்தமே. [களி

ஆருக்கு வந்த விருந்தென் றிராம லருமையுள்ள
பேருக்கு வந்த தெனவே நினைந்து பிரியமுற்று
ருருக்கமைந்ததோ ரன்னங்க ளுண்டுண்டொன் றும்முறையாய்ப்
பாருக்கு னல்ல குணங்குடி போய்ப்பள்ளி கொண்டிடுமே.

மூலமு ஹம்மது முப்பாழ் முஹம்மது மோனமுள்ள
பாலமு ஹம்மது பத்தியுள் ளோர்களும் பாய்ந்தெடுக்கும்
வேலுமு ஹம்மது வேதாந்த மூல விளக்குடைய
கோலுமு ஹம்மது குன்றாக் குணங்குடி கொண்டவர்க்கே.

காலைக் கிருந்திட லாமென வெண்ணி நடுநெஞ்சமே
காலைக் கிருப்பதை நம்புவ தோவில்லை நானிலத்தில்
காலைக்கும் பின்னைக்கு நாமிருப்போ மென்று நாட்டமதே
வேலைக்கு நல்ல குணங்குடி வாழ்ந்திரு வேலையிதே. (12)

நாட்டமென் றேயிரு வுன்னிரு பாதத்தி னன்னிலையின்
ஓட்டமென் றேயிரு வொன்றான வக்ஷர மோதியதின்
ஆட்டமென் றேயிரு தோற்ற மெவையு மலிபுடைய
நீட்டமென் றேயிரு நெஞ்சே குணங்குடி நிச்சயமே. (13)

நாடு நகருண்டு நல்லோர் களுமுண்டு நாதனுமுண்
டோடு மெனக்குண் டென்றெண்ணி யுன்கையி லுடல்பசித்தாற்
போடென்று கொண்ட கவளத்தை வாங்கிப் புசித்துக்கொண்டு
பாடுங் குணங்குடி வாழ்ந்திடவேபர மானந்தமே. (14)

தவமே பெறவேண்டுமெனல் முற்றுப்பெற்றது.

ஆக பாடல் 233.

குறையிரங்கி யுரைத்தல்.

நேரிசை வெண்பா.

கள்ளினங்க ளுண்ணுங் கழுதைகா ளென்சொலினும்
எள்ளளவு நும்மிதயத் தெய்திலையே—உள்ளம்
இணங்கா மடமாந்த ரெக்கேடு தான்கெடினுங்
குணங்குடியார்க் குண்டோ குறை. (1)

உற்ரு ரமூாம வுறமுறையார் திட்டாமற்
பெற்ருர் பிறந்தார் பிதற்ருமல்—எத்தாலும்
அங்கிங் கெனுதபடி யாரும் பெருவெளியிற்
றங்கல் குணங்குடியே தான். (2)

காசி றுனியி னயனத் திடைவெளியிற்
றேசிகனு ராடுந் திருநடனம்—வாசிகொடுத்
தோரா யெழுவா யுணர்வா யருணெஞ்சே
பாராய் குணங்குடியின் பரல். (3)

பாவிடுக்குந் தோற்பையைப் பற்றியுளம் பாவையரின்
காவிடுக்குக் காகக் கரைவனே—மேலெடுக்கும்
உன்னருளை யுங்காட்டி யோங்குங் குணங்குடியின்
றன்னருளை யுங்காட்டித் தா. (4)

கஞ்சுண் ணு மாப்போலு காத வருள்பெறவென்
னெஞ்சேநீ புண்ணுய் நினைப்பதேன்—அஞ்சாதே
என்றுமுத்த னம்முள்ளே யேகா திருப்பதால்
ஒன்றுங் குணங்குடியி னுள். (5)

நீண்டான் பனைபோலு கெற்பதனைப் போலுமே
ஏன்ரு னெனைப்படைத்தா யென்கோவே—தீண்டாத
கல்லா மிடாவதைநின் கைத்தடியான் மோதினல்
அல்லாற் குணங்குடியா கா. (6)

மெத்தத் துணிபோர்க்க மெத்தமெத் தக்குளிருஞ்
சற்று துணி போற்றுவரச் சற்றுகுளிர்—இற்றதுணி
இல்லைக் குளிருமில்லை யில்லையிது தாலுளமே
செல்லக் குணங்குடியார் சீர். (7)

குறையிரங்கி யுரைத்தல் முற்றுப்பெற்றது.

ஆக பாடல் 240.

தவராஜ மகிமை சாற்றல்.

நாகூர் மீருன் ஸாஹிபவர்கள் பேரில் பாடிய

இரட்டை யாசிரிய விருத்தம்.

திக்குத் திகந்தமுங் கொண்டாடி யேவந்து
தீன்கூறி நிற்பர் கோடி
சிங்காச னாதிபர் ளதையேந்தி யேவந்து
ஜெயஜெயா வென்பர் கோடி

ஹக்கனருள் பெற்றபெரி யோர்களொலி மார்களணி
யணியாக நிற்பர் கோடி
அஞ்ஞான வேரறுத் திட்டமெய்ஞ் ஞானிக
ளணைந்தருகு நிற்பா கோடி

மக்ககக ராளும் முஹம்மதிற சூல்தந்த
மன்னரே யென்பர் கோடி
வசனித்து நிற்கவே கொலுவீற் றிருக்குமுன்
மகிமைசொல வாயு முண்டோ

தக்கபெரி யோனருட் டங்கியே நிற்கின்ற
தவராஜ செம்மே ருவே
தலையைவைத் தென்னையாள் சற்குணங் குடிகொண்ட
ஷாஹூல் ஹமீ தாசரே:

தவராஜ மகிமைசாற்றல் முற்றுப்பெற்றது.

14

வரனருள் பெற்றோர் மனநிலை யுரைத்தல்.

கலி விருத்தம்.

வஞ்ச வேல்கொடு மார்பி லெறியினும்
விஞ்ச வேதழல் மீட்கு யெரிக்கினும்
கஞ்சி னூரமு ளுக கலியினும்
அஞ்சி டாதவ ரானந்த மாவரே. (1)

வரனருள்பெற்றோர் மனநிலை யுரைத்தல்

முற்றுப் பெற்றது.

ஆக பாடல் 242.

ஆனந்தக் களிப்பு.

இரக்கத் துணிந்துகொண் டேனே—எனக்
கிருக்குங் குறைமுழுதும் நிகழ்த்திக் கொண்டேனே—

கொடிகட்டிக் கொண்டேழு கோடி—தனங் (இரக்க)
குவித்தந்த மகிழ்ச்சியாற் கூத்துக ளாடிக்
கெடுபுத்தி யுடையோரைக் கூடி—யானுங்
கெட்டலை யாமலே கேதிபெற நாடி—இரக்கத் (1)

சொற்கடங் காச்சுக ஞானம்—தன்னிற்
சும்மா விருக்குஞ் சுகமதே மோனம்
எட்கிடை யாயினும் பானர்—தன்னை
எடுத்துண் டிருப்பதற் கிச்சித்தே யானும்—இரக்கத் (2)

வஞ்சிய ராசையைத் தாட்டி—விட்டு
வழிபெற்றுக் களிப்புற்று வாசியைப் பூட்டித்
துஞ்சாத வறிவினைச் சூட்டி—அற்புதத்
தொல்லுல காசை துணித்து விட்டோட்டி—இரக்கத் (3)

அஞ்சுதா ணுட்டிய மாடி—அது
அஞ்சோடு காலோட்டை யடையாம லோடிப்
பிஞ்சருக் கிடுமென்று காடி—யானும்
பேரின்ப வீட்டினைப் பிரியமாய்த் தேடி—இரக்கத் (4)

கற்பூச்சக் தகவத்தர் பூசி—மிக
கன்றாக வைத்தாலும் காற்றமே வீசி
எப்போதுங் கொடுமைசெய் தோசி—என்றே
இவ்வுடல் வாழ்வுக ளியாவையும் வீசி—இரக்கத் (5)

மானிகை மேல்வீடு கட்டி—மனை
வாழ்வை நிலையென்று வாழ்கின்ற மட்டி
காலை யெமன்வக் ததட்டிக்—கொண்டு
நடப்பானென் றறியானை யடுப்பதை வெருட்டி—இரக்கத்

பட்டும் பணிகளும் பூண்டு—கொண்டு
பாழான வாழ்வினைப் பலனென மாண்டு
கெட்டவர் களைக்கண்டு மீண்டு—கதி
கிடைக்கும் படிக்கு நடப்பதற் கிண்டு—இரக்கத் (7)

காமக்கு ரோதங்க ளற்று—சூழுங்
கருவி கரணஞ் சகலமு மற்று
கேமகிஷ் டைகளையு மற்று—நின்ற
நிலையு மறந்து குருவடி பெற்று—இரக்கத் (8)

எத்தனை யெத்தனை காலம்—இந்த
என்பு தசையா லெடுக்கின்ற தூலம்
மெத்தனை வாழுமிஞ் ஞாலம்—அதை
மேவாது மேவா தெடுத்திந்தக் கோலம்—இரக்கத் (9)

என்னிலே தன்னை யறிந்தே—என்னுள்
இருந்தாடுஞ் சூத்திரம் பொருந்தாட மறிந்தே

அன்னிய நிலைகளைத் துறந்தே—குரு
அருளினா லருதின மருளெலா மறந்தே—இரக்கத் (10)

ஆழித் துரும்பென வங்கும்—இங்கும்
அலைந்து திரிவதி லஞ்ஞானந் தங்கும்
பாழிற் கெடாதருள் பொங்கும்—படி
பார்த்துத் துணிந்து பாதேச மெங்கும்—இரக்கத் (11)

காடுங் கரையுஞ் சுழன்று—ஒரு
காட்சியுங் காணே மெனவே யுழன்று
தேடும் பருவத்திற் சென்று—திக்குத்
திசையொன்றுந் தெரியாமற் றெளிதற்கு நின்று—இரக் ( )

ஆடிய கூத்தினைப் போற்றி—அருள்
ஆனந்தஞ் சேர்க்கு மருளினிற் றேற்றி
ஓடிய காற்றினை யேற்றி—அதில்
உருகி யொழுகு மமிர்தத்தைத் தேற்றி—இரக்கத் (13)

காலிரண் டரைமுழ மான—பிணை
காற்றச் சடிலத்து ளொன்று ஞானக்
கோலம் விளக்கிய மோன—அருள்
குருவடி திருவடி வுருவத்தை மான—இரக்கத் (14)

எறியு மகத்தைத் தடுத்தே—அதில்
இச்சித்துப் பக்ஷி மிகவைத் தடுத்தே
அறிவைக் கொண் டறிவைத் தொடுத்தே—அருள்
ஆனந்தஞ் சேர்க்கின்ற வருளினை யெடுத்தே—இரக்கத்.

பாரினிற் பலவிதங் காட்டி—நல்ல
படிகத்தின் குணமெனப் பரவெளி சூட்டி
ஆரிய னருளினைக் கூட்டி—குரு
அருள்செய்த வுடனேயென் வினைகளை யோட்டி—இரக்கத்

மண்டப வுள்ளறை விண்டு—வரும்
மாமணை மூறிய தேமது வுண்டு
உண்டு களிப்போரைக் கண்டு—யானும்
உள்ளத்தி ருக்கினைத் தள்ளிக்கை கொண்டு—இரக்கத் ()

மாதவக் தன்னைப் புரிந்து—ரச
வாதங்கள் செய்கிறோ மென்று திரிந்து
சூதோடு வாதை புரிந்து—கெட்ட
சூதரைச் சத்திய மாகப் பிரிந்து—இரக்கத் (18)

பொறிபுல னடங்கிய காலே—பரி
பூரணப் பொருள்வந்து வாய்க்குமப் பாலே
அறிஞரு மறியாது போலே—காணும்
ஆனந்த வெள்ளத்தி லூடின தாலே—இரக்கத் (19)

நினைவுங் கனவு மறந்து—நின்ற
நிலையு மறந்தெழு கலையு மறந்து
இனமும் மனமும் மறந்து—பின்னர்
இதனிடை தோற்றிய விதங்களு மறந்து—இரக்கத் (20)

கற்பட்டுப் பாய்கின்ற தோயம்—போலக்
காட்டி மறைக்கும் பிரபஞ்ச மாயம்
அற்பற்குத் தெரியாது பாயம்—என்று
ஆலோச னைசெய் தழியுமுன் காயம்—இரக்கத் (21)

எனையானென் றறியாத பாடு—என்னை
இக்கோல மாக்கிய தேயதன் கேடு
தனையாணு மெதிர்க்கையி னோடு—கொண்டு
சாபத் துடனடர்க் தேகோபத் தோடு—இரக்கத் (22)

விண்ணுக்குள் வெளியிருண் மாற்றி—அதில்
வேதாந்த மூல விளக்கினை யேற்றிக்

கண்ணுக்குண் மணியாகத் தோற்றி—வருங்
காரண மான கடவுளைப் போற்றி—இரக்கத் (23)

எல்லாரு மானிடர் தாமோ—இந்த
இழிவான பிரமைக ளெல்லார்க்கும் போமோ
கல்லெல்லா மாணிக்க மாமோ—என்று
கற்பித்த காரண குருவடி போற்றி—இரக்கத் (24)

காதமுங் கீதமுங் கேட்கும்—அந்த
நாயகன் சந்நிதி தன்னிலடை சேர்க்கும்
மாதவ னன்னிலை யார்க்கும்—நல்ல
மாசறு தேசிகன் பொற்பாதம் போற்றி—இரக்கத் (25)

கட்டுப் படுங்கன்மக் குட்டை—வருங்
காலத்தச் சன்னையால் வெட்டிடுங் கட்டை
துட்டத் தொழிலுள்ள மட்டை—இந்தத்
தூலமென் றெண்ணிக் குருவருள் போற்றி—இரக்கத் ( )

போக்கு வரவற்ற போதம்—பஞ்ச
பூதாதி யாலடங் காதெழு காதம்
வாக்கி லமையாத வேதம்—தன்னை
வடித்துப் புகட்டு மகத்துவைப் போற்றி—இரக்கத் (27)

நரம்பு தசைதோ லெலும்பு—கொண்டு
காட்டும் வினைகளுக் காட்டுக் துரும்பு
விரம்புக் துயர்கொ ளுடம்பு—என்றும்
கில்லாதென் றெண்ணியில் லல்லாவைப் போற்றி—இரக்கத்

ஆழித் திரளெனப் பொங்கும்—அருள்
ஆனந்தஞ் சேர்க்கு மறிவிற் கடங்கும்
நாளுக்கு நாளங்கு மிங்குஞ்—சுற்றும்
நாதாந்த வேதாந்த நாதனைப் போற்றி—இரக்கத் (29)

இன்றைக் கிருப்பதும் பொய்யே—இனி
இன்றைக் கிருப்பதும் மெய்யென்ப தையே
என்று மிருப்பது மெய்யே—என
எண்ணி யெண்ணியரு ளுண்மையைப் போற்றி—இரக்கத்

பார்க்கப் பலவித மாயும்—ஆகப்
பல்லாயி ரங்கோடி யண்டம தாயும்
காக்கு நிலைக்குயி ராயும்—நின்ற
காரண பூரண காதலைப் போற்றி—இரக்கத் (31)

கரும்புசர்க்கரைகற்கண் டாலே—பாகங்
காய்ச்சி யெடுத்துத் திரட்டிய பாலே
அரும்பாவிக் கருத்துங்கை யாலே—அணைத்
தாட்கொளு நாயகன் றன்கழலைப் போற்றி—இரக்கத் (32)

கற்பங்க ளுண்கிறே னென்றேன்—வெறி
கஞ்சாவுங் கள்ளு மபினியுந் தின்றே
துப்புக்கெட் டலையாம லின்றே—அருள்
தூயமெய்ஞ் ஞானச் சுடரினைப் போற்றி—இரக்கத் (33)

கருவி வழிதனி லோடி—யாறுங்
கால்களு மோய்ந்தும் விடாமலே தேடி
அருவிக் கயர்ந்துளம் வாடி—அலை
யாம லெனக்கருள் வாமனைப் போற்றி—இரக்கத் (34)

காசி நுனியிடை நின்று—கல்ல
கடனம் புரிவதைக் கனீர்கனீ ரென்று
வாசியி லேறிக்கொண் டின்று—காண
வைத்த குருபா னற்றுணைப் போற்றி—இரக்கத் (35)

தேடிய பொருள்புதைப் போரும்—தேசா
தேசங்கள் ராஜாங்க மாண்டிருப் போரும்

ஈடெனக் கில்லையென் போரும்—செத்திங்
கிறப்போரென் றேமனக் கிறப்படப் போற்றி—இரக்கத் (

ஆனை குதிரைக ளொட்டை—ரதம்
ஆசையோ டேறு முடலொட லொட்டை
ஞான மிலாதகண் பொட்டை—என்ற
காதன் குருவறி வித்ததைப் போற்றி—இரக்கத் (3

அரச னரண்மனை கோட்டை—ஆழ
அன்பர் கடனம் புரிகின்ற பாட்டை
இரவும் பகன்மனக் கோட்டை—வைத்த
இன்பக் குணங்குடி யானருள் போற்றி—இரக்கத் (38

ஆனந்தக்களிப்பு முற்றுப்பெற்றது.

ஆக பாடல் 280.

நிராமயக் கண்ணி

ஆதி முதலே யகண்டபரி பூரணமென்
றோதுங் குணங்குடிகொண் டோனே நிராமயமே. (1

தேசிகனு னென்றே நிருகடன மாடுகின்ற
வாசாம கோசரமே வாழி நிராமயமே. (2

சுத்தத் திருவடியிற் சொக்கி யருள்பெறுமுன்
செத்திறந்து போனுலென் செய்வே னிராமயமே. (3

கண்ணே மணியேயென் கண்ணிறைந்த காரணமே
விண்ணே மெஞ்ஞான வெளியே நிராமயமே. (4

எந்த விதமென் னிதயந் தெளிவதற்கே
வந்த வினையகலப் பாராய் நிராமயமே. (5

இறந்தான் முதலகத்தி னென்னதியா னென்பதெல்லாந்
துறந்தானே யங்கிலையே சொல்வாய் நிராமயமே. (6)

வற்றுச் சமுத்திரமே வள்ளலே வான்பொருளே
சித்த ருளத்திற் றெளிவே நிராமயமே. (7)

உம்பர்க்கு மெட்டாதென் றுரன்றிமறை யோலமிட்ட
செம்பொற் கிளியே ஜெயமே நிராமயமே. (8)

பேச்சுக் கடங்காத பேரின்பத் தேனமிர்தங்
காய்ச்சி வடித்த கடலே நிராமயமே. (9)

அந்தரத்தி னுள்ளேநின் றாடுந்திருக் கூத்ததனைச்
சிந்தை யறிகிலனென் செய்வே னிராமயமே. (10)

மோன மவுனமணி மூடிவைத்த பெட்டகமே
தேனமுத வின்பத் தெளிவே நிராமயமே. (11)

மண்பட்ட நெஞ்ச மயக்கமெல்லாந் தீரவருள்
பண்பட்டார்க் கல்லோ பயன்கா ணிராமயமே. (12)

மனவாக் கணுகா மறைந்தவான் செஞ்சுடரே
இனமாதி யற்ற விறையே நிராமயமே. (13)

பார்க்குமிட மெல்லாம் பரிபூ ரணமாக
ஏற்கையுட னின்ற வியல்பே நிராமயமே. (14)

விண்ணுமுதன் மண்ணும் விளக்கிநின்ற மெய்ச்சுடரே
கண்ணேயென் னின்பக் கடலே நிராமயமே. (15)

துன்புறுமென் னெஞ்சத் துயரமெல்லாந் தீர்க்கவெனக்
கன்புருவாய் நின்ற வருளே நிராமயமே. (16)

அங்கிங் கெனவொண்ணு வகண்டபரி பூரணமாய்
எங்கும் நிறைந்த விறையே நிராமயமே. (17)

காட்டு மிருவினையு காட்டா ருனதருளின்
றேட்டாள றென்ற திறமே நிராமயமே. (18)

படர்ந்த மனக்குடியாம் பக்குவர்பா சாடவியைத்
தொடர்ந்து தொடர்க்துவெட்டத் துணிவார் நிராமயமே.( )

உத்தமர்கட் காகா வுஹுத்தப் புலையரொனும்
பித்தர் செறியுளரோ பேசாய் நிராமயமே. (20)

பாவபுண்ணி யத்தை பறக்கவிட்ட பத்தர்தமக்
கேவல் விலகவிலை யென்றுய் நிராமயமே. (21)

முத்திதரும் வேத மொழிந்த வழிநடக்கப்
பெற்ற குருவென் பிணைகா ணிராமயமே. (22)

ஊத்தைப் பிணமா முடலை யிடிசுவரை
ஏற்றபடி விடுக லினா நிராமயமே. (23)

வஞ்ச மழித்து வருபாசம் விட்டொழிந்து
செஞ்சக் தெளியநெறி கிற்பார் நிராமயமே (24)

தொக்தல் கடிக்தே சுபமனைமி னல்லாலென்
புத்தி மயக்கம் விட்டுப் போமோ நிராமயமே. (25)

வாராக் கருணைமழை வந்துபொழிந் தாலொழியத்
தீரா மனமயக்கந் தீரோ நிராமயமே. (26)

மாயும் பசுபாச மடிய மடியவரு
டாயனைய வின்பந் தருவாய் நிராமயமே. (27)

அய்யனே யென்னை யணைத்தாட்கொண் டானவந்த
மெய்யனே காத வெளியே நிராமயமே. (28)

கூரு மவத்தைக் குணக்குடிபோ மன்பருக்கி
யாலை நிகரிடுவ லையா நிராமயமே. (29)

பித்தம் பிடித்தலையும் பேய்க்குரங்கு போற்கரணம்
புத்தி தனையுலைக்கப் போமோ நிராமயமே. (30)

தஞ்சமெனு ஞானத் தடாகமதின் மூழ்குதற்கு
விஞ்சிய காத விளக்கே நிராமயமே. (31)

ஆரிருந்தென் னார்போயென் னவிக் குறுந்துணையாம்
பேறுபெறச் செய்தாற் பிழைப்பே னிராமயமே. (32)

போகாக் கவலை புழுக்கமெல்லாக் தீருதற்கு
வாகா யருள்புரிய வாராய் நிராமயமே. (33)

காமக் கடல்கடக்கக் கர்த்தவியக் கப்பல்வைத்தால்
நேமகிஷ்டைக் கம்பம் நிலைகா ணிராமயமே. (34)

நின்னைச் சரண்புகுந்தா னிர்மூட மாகவென்னை
யென்னத்துக் காட்கொண்ட தியம்பாய் நிராமயமே. (35)

சித்து மறிவைச் சிதையவிட் டுனருள்பெறவே
வந்தெற்குன் றிருக்கருணை வைப்பாய் நிராமயமே. (36)

தேனமுதே பாகு திரண்ட பெருங்கடலே
வானவர்க்கு மெட்டா மணியே நிராமயமே- (37)

இந்த விதய மிணங்கி வணங்கவரு
டந்தடிக்காட் கொண்ட தானா நிராமயமே. (38)

இடம்பொரு ளேவ லெவையு மறந்தகுணங்
குடியார்க் குவமை குறியே னிராமயமே (39)

ஆழாழி தானு மனைகடவா தாணைதனிற்
றாழா திலையோவென் றூயே நிராமயமே. (40)

தீது நலமறியேன் றிசைசாக மற்றெவையும்
ஈதென் றறியே னெளியே னிராமயமே. (41)

மீளா வெளியில் விழுத்கிரைத்த நீரெனவும்
பாழா யலேவதுமென் பாவம் நிராமயமே. (42)

ஈன்றெடுத்த மாதா வெனேயாட்கொண் டாள்வதென
ஆண்டணேப்ப தென்ருே வருளாய் நிராமயமே. (43)

சாத்திரங்க ளோதுஞ் சழக்கர் தமக்குமருள்
மாத்திரைப்போ தேனும் வருமோ நிராமயமே. (44)

அய்யனே மெய்யருளி லாசையற்ற நீசனுக்கும்
உய்யுக் திருக்கருணே யுண்டோ நிராமயமே. (45)

காதறரும் கண்ணீராற் கரைபுரள நின்றவர்க்குச்
சூதுதரும் கண்ணீர் தொலேயும் நிராமயமே. (46)

வஞ்சங் குடியிருந்து வாழு மனத்தினருக்
கெஞ்சாதிருக்கு மிருப்பே நிராமயமே. (47)

பற்றற்று நின்ற பரம பதத்தினருக்
கெத்தொழிலுஞ் செய்ய வியல்போ நிராமயமே. (48)

வாதே யகண்டகுணங் குடிவாழ வைத்தாயே
ஈதே பெருமையெனக் கென்ருய் நிராமயமே. (49)

என்று மிருப்போமென் றெண்ணியெண்ணி யென்னிதயஞ்
சண்டை பிடிக்கச் சரியோ நிராமயமே. (50)

மட்டுக்கடங்கா மயக்கமெலாத் தீர்த்துவெளிப்
பட்டோர்கட் கல்லோ பயன்கா ணிராமயமே. (51)

மன்னு முயிர்க்கு மறலி வரும்பொழுதில்
உன்னேயன்றி யார்தா முளரோ நிராமயமே. (52)

என்னுத வெண்ணமெல்லா மெண்ணி யிடைக்துமனம்
புண்ணுவ தற்கோ புகுத்தே னிராமயமே. (53)

உள்ள துரியதெல்லா மொழியா துரைத்தவெனைத்
தள்ளி விடத்தான் றகுமோ நிராமயமே. (54)

வன்னத் திருக்கருணை வாழுக் திருவடிக்கே
என்னத்தைச் செய்வே னெளியே னிராமயமே. (55)

கற்ற படிநடக்கக் கல்லாத பாவியெனைச்
சித்தந் தெளியவருள் செய்வாய் நிராமயமே. (56)

பேச்சற்றுச் சிந்தை பிரக்கினையு மற்றபதம்
வாய்ச்சார்க்கல் லோமவுனம் வாய்க்கு நிராமயமே. (57)

நிஷ்டை நிருவிகற்ப நித்திரைக்கொண் டேயிருக்க
அஷ்டாங்க யோகமெனக் கருளாய் நிராமயமே. (58)

தொல்லுலகி லல்லற் றுயரமெல்லாந் தீர்க்கவொரு
சொல்லருள வந்த துரையே நிராமயமே. (59)

உயிர்த்துணைவ ரேனு முளந்தெளியா வுலுத்தரையோர்
மயிர்க்கு நிகர்குறிக்க மாட்டே னிராமயமே. (60)

கொல்லா விரதந்தனைக் கொள்ளாக் கொலைஞ ருள்ளங்
கல்லாகத் தானே கணித்தாய் நிராமயமே. (61)

எத்தனையோ வுத்தி யெடுத்தெடுத்துச் செய்யுமுடல்
உற்று நிருக்க வுடையு நிராமயமே. (62)

வாயே புலம்பி வருபாசப் பேய்பிடித்த
தீயனெனச் சொன்னாலென் செய்வே னிராமயமே. (63)

தாயிருக்கப் பிள்ளை தளரா தொருபோது
நீயிருக்க நான்றளர நேரோ நிராமயமே. (64)

சொல்லுக் கடங்காச் சுகங்காண் டுறவிகட்கு
நல்லறிவு சற்றே நருங்கா னிராமயமே. (65)

மத்திபத்தி னூடே மறைந்த மணிவிளக்கை
நித்தம் விளங்கவரு ளோராய் நிராமயமே. (66)

மெத்தப் படித்த வெறும்பாசப் பித்தருக்கே
சித்தக் தெளியாதென் செய்கே நிராமயமே. (67)

கள்ள விருளேக் கடிக்துகரை யேறுதற்குத்
தெள்ளியவான் சோதித் திரளோ நிராமயமே. (68)

ஒட்டாதே யுன்னைவிட்டு மோட்டி கயமிடறில்
மாட்டாதே யான்பொறுக்க மாட்டே னிராமயமே. (69)

தன்னை யறிந்தாற் றலைவன் றனையறிந்த
தென்னு மொழியே யிதங்கா ணிராமயமே. (70)

அபயமெனைக் காப்ப தண்ணலே யுன்னுபய
முபய முபய முனதுபய நிராமயமே. (71)

பிரியா வுனதடியைப் பின்றொடர்ந்தார் பின்றொடர
அறியாச் சிறியே னென்னையா நிராமயமே. (72)

துர்க்குணமே கொண்ட தொழும்பனியான் றொல்லுலகிற்
கற்குணத்தா ரென்போலுங் காணே னிராமயமே. (73)

பொய்யுங் கவடுமுள்ளே பூட்டிவைத்த பெட்டகமாய்
சையு முடலெடுத்தே னென்கா ணிராமயமே. (74)

கங்குல்பக லொழிந்த காரணர்க்கோ நின்னருளைப்
பங்கு கொடுத்தாய் பகராய் நிராமயமே. (75)

தேரூப்ர பஞ்சத் திடுக்கமெல்லாக் தீர்ந்தவர்க்கு
மாறு வருணிலைதான் வாய்க்கு நிராமயமே. (76)

சர்வ தயாநிதியாய்ச் சஞ்சரித்த கெஞ்சினர்க்குப்
பிசியா வருணிலைதான் பேறும் நிராமயமே. (77)

பாத முடிநடுவும் பக்கமுன்னும் பின்னுமற்ற
நாத வடிவே நவமே நிராமயமே. (78)

பேசா திடமறிந்தும் பேய்க்குரங்கு போற்கருவி
ஊசா டுவதே னுரையாய் நிராமயமே (79)

எனையாட்கொண் டாளவரு மென்குருநா தன்வடிவுந்
தனையார்க்குஞ் சொல்லத் தகுமோ நிராமயமே. (80)

கொப்புவிக்கி னுள்ளே குடியிருந்த கொள்கையென
எப்பொருட்குஞ் சித்தா யிருந்தாய் நிராமயமே. (81)

கூறுங் கருவி குடிபோன வன்பருக்கே
யாரும் நிகரோவென் னையா நிராமயமே. (82)

சின்னத சிதையாச் சிவராஜ யோகநிலை
வந்தோர்க் கருள்புரிய வந்தாய் நிராமயமே. (83)

கோடானு கோடிமறை கூறவறி யாதவனைத்
தேடுகின்ற தென்னேவென் றிறமே நிராமயமே. (84)

பிறியா வருணிலையைப் பெற்றார்பெற் றாரெனவு
மறியா வெறியனையா வையா நிராமயமே. (85)

எமனார் விடுதூ தெனும்பாசக் கட்டறுத்தோர்
நமனார் தமக்கு நமனே நிராமயமே. (86)

துலங்கு மருண்மயத்தைத் தோன்று திருண்மயமாம்
புலனைத்தொலைப் பாயுனக்குப் புண்யம் நிராமயமே. (87)

மன்னிக்க வொண்ணு மனக்குறையுந் தாய்பொறுப்பாள்
நின்ன தருளுமந்த கோராம் நிராமயமே. (88)

எந்த வறிவை யெடுத்தெடுத்தே யோதினுமென்
புத்தி மயக்கனுவும் போகா நிராமயமே. (89)

செகத்துன் மயக்கச் சிதறிப் பறக்கவுமென்
றகைப்பறவோர் முத்தர் தருவாய் நிராமயமே. (90)

உய்த்த துணர்வதெல்லா முயிர்க்குயிர்நீ தானெனவுஞ்
சித்தந் தெளிந்தோர் திறங்கா ணிராமயமே. (91)

அணைத்துயிரு நீயென் றறிந்தார் மறப்புமுதல்
நினைக்குமா றெங்கே நிகழ்த்தாய் நிராமயமே. (92)

நின்செயல்க ளென்று நினைப்பு மறப்புமுத
லென்செயல்க ளுண்டோ வியம்பாய் நிராமயமே. (93)

எறும்பூரவூர விரும்புமுதற் றேய்வதுபோல்
இறும்பூரு மன்பருள மித்தகையே நிராமயமே. (94)

கும்பிக் கிரைதேடிக் கொடுப்பார் முகம் பார்த்திதயஞ்
சம்பித் திரியத் தகுமோ நிராமயமே. (95)

கடலின்மடை கண்டதெனக் கண்ணீர் கரைபுரளும்
அடியன்முகம் பார்த்திரங்கி யருளாய் நிராமயமே. (96)

பருவமது செய்யப் படர்பயிராம் பக்குவர்க்குக்
கருவா மருணிலையே கனிகா ணிராமயமே. (97)

நினைப்பு முதிப்புமெலா நின்செயலென் றன்பருளத்
தினைப்போதும் விட்டுத் திரும்பார் நிராமயமே. (98)

சிவராஜ யோகந் தெளிந்த திறத்தினருக்
கெவரைச் சரியிடுவ தெந்தாய் நிராமயமே. (99)

அந்திபக லற்ற வகண்டபரி பூரணர்க்கே
சிந்தை நிறைந்த தெளிவே நிராமயமே. (100)

வேதங்க ளாலும் வெளிப்படாச் சுந்தரமாஞ்
சோதியெனக் கென்றே துலங்கு நிராமயமே. (101)

எப்பொருளுக் தானா மியங்குமுனைப் பூசைசெய்யப்
புட்ப மெடுக்கவுந்தான் போமோ நிராமயமே. (102)

கைப்பொருளைத் தேடிக் கடலோடிப் போவரென
மெய்ப்பொருளைத் தேடி மெலிந்தே னிராமயமே. (103)

உயிர்க்குயி ராயென் னுள்ளுள்ளு லாவியநீ
தயிர்குளுறு வெண்ணெயெனத் தானே நிராமயமே. (104)

மூடுமுளிக் கிடையா ஞூக்குறுனிக் கட்கிடைக்கி
ஞாடுந்திருநடனத் தாட்டம் நிராமயமே. (105)

நீளுங் கரணமுத லெக்குருகி மக்குகர்க்குத்
தாழா வருணிலையைத் தந்தாய் நிராமயமே. (106)

கொல்வ தற்குவந்த கொலைஞரெனப் பாவிமன
மல்லுப் பொருதுதற்கேன் வைத்தாய் நிராமயமே. (107)

பல்லுயிரும் போற்றும் பரம பதத்தினர்க்குச்
சொல்லுஞ் செயலுந் தொலையும் நிராமயமே. (108)

தன்னை யறிந்தாற் றனக்கொருகே டில்லையெனச்
சொன்ன மொழியே சுகம்கா ணிராமயமே. (109)

புண்ணாய்க் கசிந்துமனம் பூணுகின்ற வன்பருக்குக்
கண்ணீர் கரைபுரளக் கண்டாய் நிராமயமே. (110)

முன்னாற் சுருதி முறையா லெனையறித
உன்னை யறிதற் குளவாம் நிராமயமே. (111)

அண்டபகி ரண்ட மகண்டபரி பூரணமாய்க்
கொண்டநின்னை யாரறிந்து கொண்டார் நிராமயமே. (112)

உன்னையன்றி வேறொன் றுளதோவுண் டாயினதை
இன்னதுவா மென்றே யியம்பாய் நிராமயமே. (113)

சகத்துன் மயக்கச் சிதறிப் பறக்கவுமென்
கைப்பறவோர் முத்தந் தருவாய் நிராமயமே. (90)

ய்த்த துணர்வதெல்லா முயிர்க்குயிர்நீ தானெனவுஞ்
த்தந் தெளிந்தோர் திறங்கா ணிராமயமே. (91)

ணைத்துயிரு நீயென் றறிந்தார் மறப்பு புதல்
னைக்குமா றெங்கே நிகழ்த்தாய் நிராமயமே. (92)

ன்செயல்க ளென்று னினைப்பு மறப்புமுத
லன்செயல்க ளுண்டோ வியம்பாய் நிராமயமே. (93)

றும்பூரனூர விறும்புமுதற் றேய்வதுபோல்
றும்பூரு மன்பருள மித்தகையே நிராமயமே. (94)

நம்பிக் கிரைதேடிக் கொடுப்பார் முகம் பார்த்திதயஞ்
ம்பித் திரியத் தகுமோ நிராமயமே. (95)

டவின்மடை கண்டதெனக் கண்ணீர் கரைபுரளும்
அடியன்முகம் பார்த்திரங்கி யருளாய் நிராமயமே. (96)

ருவமது செய்யப் படர்பயிராம் பக்குவர்க்குக்
ருவா மருணிலையே கனிகா ணிராமயமே. (97)

னைப்பு முதிப்புமெலா நின்செயலென் றன்பருளக்
னைப்போதும் விட்டுத் திரும்பார் நிராமயமே. (98)

வராஜ யோகந் தெளிந்த திறத்தினருக்
கவரைச் சரிபிடுவ தெந்தாய் நிராமயமே. (99)

த்திபக லற்ற வகண்டபரி பூரணர்க்கே
ந்த நிறைந்த தெளிவே நிராமயமே. (100)

வகங்க வரவும் வெளி...

எப்பொருளுந் தானு மியக்குமுனைப் பூசைசெய்யப்
புட்ப மெடுக்கவுந்தான் போமோ நிராமயமே. (102)

கைப்பொருளைத் தேடிக் கடலோடிப் போவரென
மெய்ப்பொருளைத் தேடி மெலிந்தே னிராமயமே. (103)

உயிர்க்குயி ராயென் னுள்ளுள்ளு லாவியநீ
தயிர்குளுறு வெண்ணையெனத் தானே நிராமயமே. (104)

மூடுமுளிக் கிடையா மூக்குமுனிக் கட்கிடைக்கி
மூடுந்திருநடனத் தாட்டம் நிராமயமே. (105)

நீளுங் கரணமுத னெக்குருகி மக்குகர்க்குத்
தாழா வருணிலையைத் தந்தாய் நிராமயமே. (106)

கொல்வ தற்குவந்த கொலைஞரெனப் பாவிமன
மல்லுப் பொருதுதற்கேன் வைத்தாய் நிராமயமே. (107)

பல்லுயிரும் போற்றும் பரம பதத்தினர்க்குச்
சொல்லுஞ் செயலுந் தொலையும் நிராமயமே. (108)

தன்னை யறிந்தாற் றனக்கொருகே டில்லையெனச்
சொன்ன மொழிபே சுகம்கா ணிராமயமே. (109)

புண்ணியக் கசிந்துமனம் பூணுகின்ற வன்பருக்குக்
கண்ணீர் கரைபுரளக் கண்டாய் நிராமயமே. (110)

முன்னூற் சுருதி முறையா லெனையறித
லுன்னை யறிதற் குளவாம் நிராமயமே. (111)

அண்டபகி ரண்ட மகண்டபரி பூரணமாய்க்
கொண்டகின்னை யாரறிந்து கொண்டார் நிராமயமே. (112)

உன்னையன்றி வேறொன் றுளதோவுண் டாயினதை
இன்னதுவா மென்றே யியம்பாய் நிராமயமே. (113)

நெஞ்சகத்தில் வஞ்ச நெகிழாக்கட் டுண்டவருக்
கஞ்சலென்ன நீயென் றறியாய் நிராமயமே. (114)

துர்க்கவலை யற்ற துரியாதீ தத்தினர்க்கு
நற்கவலை தானே நடிக்கு நிராமயமே. (115)

விண்ணோடு மண்ணுமுதல் வேணதெல்லா முன்கருணைக்
கண்ணூறா டிடைக்கிடக்கக் கண்டே னிராமயமே. (116)

நாய்க்கு விருந்தோ நரிக்கோ புழுக்கூடு
தீக்கு விறகோ தெரியே னிராமயமே. (117)

ஈக்க ளெறும்புமுத லென்னதுவா மென்னுமுடல்
பேய்க்க டமக்குப் பெறுபேறோ நிராமயமே. (118)

விண்ணாதி யாவும் விளங்குவது நீயெனவென்
கண்ணார வுங்கனவு கண்டே னிராமயமே. (119)

இல்லாமை யில்லதென் றிதயந் தெளிவதற்கென்
வல்லாண்மை கொண்டு வருமோ நிராமயமே. (120)

உன்னையன்றி யாவு முளவோவென் றோதியபின்
என்னையென்னத் தில்லைத் திசைப்பாய் நிராமயமே. ( )

கானற் சலமாங் கவிபாசக் கட்டுண்டார்
தானுனே னெனத் தகுமோ நிராமயமே. (122)

காட்டுக் கொலைவேடன் கைக்குள்சிக்கு மானெனவு
மாட்டித் துயருறவு மாட்டே னிராமயமே. (123)

கல்லு முருகுமொரு காலத்தி லென்னிதய
அல்ல விழுவதில்லை யையா நிராமயமே. (124)

ரயக் கருவி கரணமூதற் காயவைத்த
கய ருளத்தி னிறைவே நிராமயமே. (125)

பல்லாயிரங்கோடி பகிரண்ட மும்மெவையும்
எல்லா முனதடிக்கா ளென்றாய் நிராமயமே. (126)

எனக்கோர் நிகருமில்லை யில்லாரில் வல்லாரில்
உனக்கோர் நிகரொருவ ருண்டோ நிராமயமே. (127)

செப்புஞ் செயுஞ் செயலுட் சிந்தித்தல் வந்தித்தல்
எப்போ தெனைவிட் டியங்கு நிராமயமே. (128)

நீராற் றிரள்குமிழி கேயவடை யும்முடலம்
யாரார்க்குக் கைகொடுத்த தையா நிராமயமே. (129)

ஒன்றாய்ப் பலவா யுருவருவா யும்முயிராய்
நின்றவுனை யாரறிய நின்றாய் நிராமயமே. (130)

பெற்றெடுத்த மாதா பிதாக்களிருந் தாலுமெனைச்
செத்தவுடன் மண்ணிற் றிணிப்பார் நிராமயமே. (131)

எந்த முயிர்க்கே யெமனாய் வரும்பாச
பந்த மகலமுகம் பாராய் நிராமயமே. (132)

அபய மெனைக்காப்ப தண்ணலே யுன்கடமை
உபய மினியொருவர்க் குண்டோ நிராமயமே. 133

என்னை யுனதடிக்கீ ழிசைத்தாட்கொண் டாளாத
வின்னமே யெண்ணி மெலிந்தே னிராமயமே. 134

காமத்தை யற்ற நவநாத சித்தர்தமைக்
கரமக் கரைபுரளக் காணே னிராமயமே. 135

தேங்காய்க் கிளநீர் செழிப்பிற் றிரட்சிதரப்
பாங்கா யருளுவதுன் பார நிராமயமே. 136

கன்னலென வின்பங் கனிந்தொழுகு முன்னடிக்கென்
றன்றாலு மென்னபலன் றாயே நிராமயமே. 137

அமையா மனமமைந்தே யருட்கடிமைப் பட்டவரை
எமனணுகு மென்செயலா மெந்தாய் நிராமயமே. 138

ஒன்றுக்கு மெட்டா துறைந்தசுயஞ் சோதியுய
ரண்டர்க்கு மெட்டாதென் றறிந்தே னிராமயமே. 139

வஞ்சமின்றி யென்னை வழிப்படுத்தி வைக்கவுனை
யஞ்சலற கானடைந்தே னையா நிராமயமே. 140

தாயனைய வின்பக் தருபேரின் பக்கடலில்
வாய்மடுக்கிற் றாகம் வருமோ நிராமயமே. 141

முன்னா ளெமக்கிருந்த மூதறிவி னோர்வசனஞ்
சொன்னா லதுவே சுகங்கா ணிராமயமே. 142

அட்டதிக்கு மண்விண் ணடங்கு பெருவெளியில்
கட்ட நடுவிருந்த காதா நிராமயமே. 143

தீது நலமுதலாஞ் செய்கை யகலவைத்தால்
ஈதோன்றும் போதுமெனக் கெந்தாய் நிராமயமே. 144

கெர்ப்பகத்தி லென்னைக் கிடத்தியமு தூட்டுமுனக்
கொப்புவமை யாதென் றுரைப்பே னிராமயமே. 145

எவ்வுலகு மேவற் கிணங்காதோ நின்னருடான்
செய்விக்கப் பட்டோர்க்குச் செப்பாய் நிராமயமே. 146

தன்றேசம் விட்டுத் தனித்த தபோதனர்க்குச்
சென்றுழி யெல்லாஞ் சிறப்பா நிராமயமே. 147

சிந்தைக் கலக்கஞ் சிதறிடச் செய்வதுவே
எந்தத் தவத்தினுநன் றெந்தாய் நிராமயமே. 148

தேடுவது நாடுவதுஞ் சிந்தைத் திருநடன
மாடுவது முன்னடியார்க் காசை நிராமயமே. 149

கண்ட பகலிரவுங் காணார்க்குஞ் சூரியனா
ரென்றெழுகா மென்ன வியம்பாய் நிராமயமே. 150

செத்த சவமென்றுஞ் சின்னஞ் சிறியரென்று
மூத்தர்க் கிருக்கு முறைகா ணிராமயமே. 151

சட்ட ரசங்கள்முதற் சருவவில் லங்கசுத்தி
இட்டார்க் குனதருள்வக் தெய்து நிராமயமே. 152

ஆகமத்துக் கெட்டா வகண்டபரி பூரணமாம்
ஏகவெளி யன்றோ வியம்பாய் நிராமயமே. 153

தேக முடையுமெனத் தேர்ந்த மனத்தினர்போற்
பாகபக்கு வத்தைப் படையே னிராமயமே. 154

காழியுப்பு காழிபப்பும் காழியாக் தன்மையுமுப்
பாழெய்தி னார்க்கோ பகராய் நிராமயமே 155

கொத்தோ டடிமை குடியாக வென்றனையுன்
பத்தருக் கென்றோ படைத்தாய் நிராமயமே. 156

எந்தவுயிரு மெமதுயிரென் றெண்ணியெண்ணிச்
சிந்தை தெளியவருள் செய்வாய் நிராமயமே. 157

அந்திபக லற்ற வகண்டிதா காரமுமென்
புந்தி வெளிக்குப் புகுமோ நிராமயமே. 158

உள்ளுள் ளுயிரா யுரைந்த வுனைத்தொழவே
பள்ளி யறையேன் பகராய் நிராமயமே. 159

மேலிட்ட வாணவத்தை மெலியவிட்ட மேலவர்க்கு
மூலத் தெழுந்த முனையே நிராமயமே. 160

மூலமுத லாறுதல முட்டிகின்ற குண்டலியின்
பாலிற் கலித்தேகப் படுமோ நிராமயமே. 161

பஞ்சசுத்திசெய்த பழவடியா ரென்னவுன்னை
யஞ்சவி செய்தே யடைக்தே நிராமயமே. 162

தொண்டர் பணிக் காளாய்ச் சுதைப்படுத்தி விட்டுவிடற்
கென்றிரங்கு வாய்கருணை யெந்தாய் நிராமயமே. 163

ஓவியத்தைப் போலே யுரைத்த மனத்தினரென்
னுவிக் குறுதுணையா மையா நிராமயமே. 164

விரித்த சரியைமுதன் மேவிநின்ற மெய்ஞ்ஞானக்
கரும்புமுதற் கண்டேனவுங் கண்டே னிராமயமே. 165

அஞ்ஞானம் விட்டே யறந்தாங்கி வந்தவர்க்கு
மெய்ஞ்ஞானக் தானே விளங்கும் நிராமயமே. 166

தின்றுடுத்திப் பூண்டு திரியவெனப் பாவிமனச்
சண்டி புரளச் சரியோ நிராமயமே. 167

எம்மா லிசைந்த விருவினையும் போகவிட்டுச்
சும்மா விருக்கச் சுகந்தா னிராமயமே. 168

பாசவினையெல்லாம் பறக்திடமெய்ஞ் ஞானவைவாள்
வீசவரு டானே விளக்காய் நிராமயமே 169

தன்னி லிருந்த தலைவன் றனையறியா
தென்னையறிந் தென்னபல னெந்தாய் நிராமயமே. 170

உன்னை மறப்பிக்க வுருவெடுத்த வாணவப்பேய்
தன்னை மறப்பிக்கத் தகாதோ நிராமயமே. 171

இல்லாத மாயை யெனைத்தொடரா வண்ணமொரு
சொல்லருளச் செய்யென் றுரையே நிராமயமே. 172

துர்க்குணமே கொண்ட தொழும்பனியான் றொல்லுலகிற்
கற்குணத்த ரென்பேரலுங் காணே னிராமயமே. 173

பொல்லா வென்னெஞ்சம் புழுங்கவரு கவலை
சொல்லுக் கடங்காச் சுகங்கா ணிராமயமே. 174

அலையு மனத்தை யகத்தடக்கு மன்பருளம்
உலையினிடு மெழுகுக் கொப்பாம் நிராமயமே. 175

எழுகடலு மோர்கடுகி னிடையிருத்தக் கற்றாலும்
வழுவு மனத்தினர்க்கு வாயே னிராமயமே. 176

போருக்கே வந்தெதிர்த்த போக்கிரிபோ லென்னிதயம்
தீரம்பே சுவதென்ன செய்வே னிராமயமே. 177

சோம்பே றிகள்போற் சுருண்ட மனத்தினர்க்குக்
காம விகாரங் கசப்பாம் நிராமயமே 178

ஒழியாப் பிரபஞ்சத் துறவை மறவார்க்குக்
கெழிறறிற்படுகாலைக் கெதிகா ணிராமயமே. 179

புத்தி யிதமகிதப் பூட்டுவிட்ட போகர்தமக்
கத்திபக லறுமென் னையா நிராமயமே. 180

கானே நெருப்பாறு கடக்குமயிர்ப் பாலமும்யான்
ரூனே யெனுமறிவைத் தாராய் நிராமயமே. 181

மின்னனைய பொய்யுடலை மெய்யென்ற பொய்யரினி
என்னகதிபெறுவா ரெந்தாய் நிராமயமே. 182

கருவி பெருவெளியிற் கருத்தைச் செலுத்தாருக்
கருவி சொரியவரு ளாங்கா ணிராமயமே. 183

தேயாப் பஞ்சாக்ஷரவா டட்டுக் திறத்தினர்க்குக்
காயா புரிக்கோட்டை கனங்கா ணிராமயமே. 184

பூமிப் பரப்பைவலம் போய்வரினும் பாவிகளைக்
காம வினையகலக் காணே ணிராமயமே. 185

கோணற் கருப்பிரசங் கோணுது கொள்கையென்றன்
ஆணவத்தி லுக்த னறிவா நிராமயமே. 186

கானலைநேர் பொய்யுடலைக் கல்லாகக் கண்டவர்க்கு
காணுமை நின்றே நடிக்கும் நிராமயமே. 187

ஜெலக்குமிழி போன்றவென்றன் சிற்றுடற்கு மித்தனையோ
கலக்கமதை வைத்தாயென் கண்ணே நிராமயமே. 188

பொய்வாழ்வை நம்பும் புலையர் தமக்குனது
மெய்வாழ்வு வந்து விடுமோ நிராமயமே. 189

கனக்கு மிருவினையாங் காவடியைத் தூக்குவதற்
கெனக்குமுடி யாதினிமே லெந்தாய் நிராமயமே. 190

துறவின்றிச் செய்வினையின் றொகைப்பலனே தென்பவர்க்கு
நாகசொர்க்க மென்றே நவின்றாய் நிராமயமே. 191

காதொடுகண் வாய்மூக்குங் கண்டமெய்யோ டையறிவும்
வாதாடு தற்கோ வளர்த்தே னிராமயமே. 192

மாதா பிதாவும் வருத்தி வருத்திவைத்த
போதனையைப் பார்க்கிற் பிழைகா ணிராமயமே. 193

செல்லு மளவுஞ் செலுத்துகின்ற சிந்தையினோர்க்
கல்லும் பகலுமறு மையா நிராமயமே. 194

வேதச் சுமையதனை வீம்புக் கெடுத்தவுடன்
மாதவத்திற் கெங்கே வளையும் நிராமயமே. 195

நரம்பென்பு தோலா னடிக்கின்ற பாவைதனிற்
குரும்புமுத லெல்லாங் குடிகா ணிராமயமே. 196

தூலத்து விச்சை தொலைத்தோரிஞ் ஞாலமுதல்
ஆலத்துக் கொப்பென் றறைந்தாய் நிராமயமே. 197

வானேற நூலேணி வைத்தாற்போ லுன்னடிபால்
நானேறு வேனென்ற நாட்டம் நிராமயமே. 198

மைந்தர்களைப் பெற்று மறலிக்களித் தாரெனவுஞ்
சிந்தைநெருப் பாயெரியச் செய்தாய் நிராமயமே. 199

நாலுதிக்கி லும்விஜய நாட்டுமன்னர் கோட்டையெல்லாம்
பாலர்மணற் சோற்றின் படியாம் நிராமயமே. 200

பாட்டைப் படித்ததனாற் பகர்ஞான வானென்ப
தேட்டுச் சுரைக்காய்க் கியல்பாம் நிராமயமே. 201

நின்ன தருளன்றி நிறைவுகுறை வென்பாருக்
கென்ன கதிமுடிவி லெந்தாய் நிராமயமே. 202

தேகாபி மானத் திரைகடந்த தேசிகர்க்கு
மோகங்க ளெங்கே முயலும் நிராமயமே. 203

சித்தந் தெளிந்த சிவஞா னியருலகப்
பித்த ருறவைப் பிடியார் நிராமயமே. 204

புத்தி தெளியாப் புலத்தோர் தமைத்தவத்துன்
மத்த மனுஷரென மாட்டே னிராமயமே. 205

தொல்லைப் பெருமல்லற் றொலைத்தாருக் கேதொன்றுஞ்
சொல்லத்தா னுண்டோதான் சொல்லாய் நிராமயமே. 206

போக்கும் வரத்துமெல்லாம் பொய்யென்ற புண்ணியர்க்கு
நீக்கு மருளுண்டோ நிகழ்த்தாய் நிராமயமே. 207

எத்தனையோ கற்று மிதயந்தெளி யாதிருந்த
பித்தருட னேசம் பிழைகா னிராமயமே. 208

வஞ்சப்பிர பஞ்ச மயக்கொழிந்த லல்லாதுன்
அஞ்சலெனும் பேரருளி லாகே னிராமயமே. 209

அண்டு மிருவினைப்பே யண்டா தடிப்பவர்க்குத்
தொண்டு செய்வார்க் கன்றோ சுகங்கா ணிராமயமே. 210

என்னெஞ்சந் தானே யனைக்கெடுக்கு மின்னுமெனைச்
சின்னப் படுத்திலென்ன செய்வே னிராமயமே. 211

மூடு மெனதறிவே மூடி யிருந்தாலுன்
ஆடுமறி வெங்கேநின் றூடு நிராமயமே. 212

ஓடியே யுள்ளமட்டு மோடி யிதமயங்கி
வாடியே நின்சமுகம் வந்தே னிராமயமே. 213

முட்டா ளெனப்பட்ட முழுதுமெனக் கேயுனக்
கிட்ட மிருந்தா லியம்பாய் நிராமயமே. 214

ஆலமுறுந் தால மகித்யமென் பேசர்க்காசை
மாலெங்கே நின்று வருங்கா ணிராமயமே. 215

ஆர்ப்புக் குயிரான வண்டபகி ரண்டமுமாக்
தாற்பரியஞ் சொல்லத் தகுமோ நிராமயமே. 216

எண்டிசையுந் தானு மியங்கு முனைத்தொழுதற்
கண்ட சராசரநின் றூடும் நிராமயமே. 217

காற்றாடிபோலக் கருத்துவந்து தேடியுனை
ஆற்ற தயர்த்தேனென் னையா நிராமயமே. 218

எல்லாம் படித்துகடப் பெய்தினரின் புற்றனர்மற்
றல்லாரை யாரென் றறிவே னிராமயமே. 219

அன்னைசுற்ற மெல்லா மகலவிட்ட வன்பர்தமக்
கின்ன லகலும தெவர்க்காம் நிராமயமே. 220

சாருதனி யன்றில்லைச் சத்தியா மென்மனத்தை
ஆராய வேண்டாமென் னரசே நிராமயமே. 221

தத்து மனத்தினர்க்கு தாரபலன் போகிறதை
எத்தனையென் றேயுரைப்ப தெந்தாய் நிராமயமே. 222

கொல்லுங் கொலைக்கஞ்சாக் கொலைஞனெனும் பாவிமனத்
தொல்லையைத் தீர்க்கச் சுகங்கா ணிராமயமே. 223

உன்னையின்றி யென்னை யொதுக்கிவைப்ப தெந்தநெறி
அன்னையின்றிச் சேய்தானுண் டாமோ நிராமயமே. 224

பொங்கு கருணைப் புறச்சுழித்தார் கள்ளமன
வஞ்சமங்கே யோடி வருங்கா ணிராமயமே. 225

கல்லாத கல்வியெல்லாங் கற்குமுயர் ஞானகலை
இல்லார்க்கு மின்பநிலை யேதோ நிராமயமே. 226

விளக்குஞ் சுடரினையும் வேறுவே றெண்ணாருக்
குழக்குளப்பு முப்பெனவு மொன்றா நிராமயமே. 227

சார்ந்தோரைத் தூடணிக்குந் தப்பிலிக ளைப்புவியில்
என்றுன் படைத்ததுதா னெந்தாய் நிராமயமே. 228

புத்தி யகங்காரம் பூணு மனமிறக்கிற்
சித்த மகத்துவத்தைச் சேரும் நிராமயமே. 229

நானே திருவடியை நாடுவதுந் தேடுவதும்
ஆனா லதுபெரிதா மையா நிராமயமே. 230

காற்றுத் துருத்தியைந்து கள்வர் புலைக்குடிலே
சோற்றா லெடுத்த சுவர்கா ணிராமயமே. 231

மன்னுங் கலைஞான மார்க்கமறிந் தோர்க்குமுறும்
அந்நியங்க ளேது மறியார் நிராமயமே. 232

ஜென்னிக் கிசையா சிவராஜ யோகநிலை
வன்ன மலர்ப்பதத்தை வைத்தே நிராமயமே. 233

ஜென்ம மெடுத்தாற் ஜெகமாயை விட்டொழிந்து
நன்மை பெறுத னயங்கா ணிராமயமே 234

பாச மறவார் பரமபதத் தினர்போற்
பேசுசிலர் கூடவும்நான் பேசே னிராமயமே. 235

நேராம் வழிகாட்டி நிச்சயத்தைச் சொல்லவெனக்
காருன்னை யன்றி யரசே னிராமயமே. 236

வாசகத்தின் ஞானமெல்லாம் வந்ததுபோற் பேசியையோ
மோசப் படவு முறையோ நிராமயமே. 237

பெட்டி நிறைய பெருக்கிவைத்த பெட்டகத்தாற்
குட்டிச் சுவரென்றோ குறித்தாய் நிராமயமே. 238

மனம்பாச மற்றுநிற்க வாயா துனைப்புகழும்
இனங்கள் முழுதுமெனக் கெதிர்கா ணிராமயமே. 239

வாசனையைப் போக்கும் வரமுண் டெனவொருசொல்
நீசருக்கு முண்டோ நிகழ்த்தாய் நிராமயமே. 240

அன்னை பிதாவு மணைந்தகுற்ற வாக்கினைக்கோ
என்னைப் பிறக்கவைத்தா யெந்தாய் நிராமயமே. 241

மாதா பிதாவு மயநீர்ந்த வாற்றினுக்கு
வாதோ யெனைப்பிறக்க வைத்தாய் நிராமயமே. 242

பின்னை யொருவர்செய்யும் பிழைக்குப் பரிகாரம்
என்னைத் தெருவில்விட்ட தேன்கா ணிராமயமே. 243

தொண்டாசை கொண்டோர் துயிலார் முகந்தணைக்கக்
கண்டுயிலா ரென்பரெனக் கண்டாய் நிராமபமே. 244

ஈனத்துக் கேற்றவுட லென்னதென் றென்பதுவும்
ஞானத்துக் கேற்றவர்க்கு நன்றோ நிராமயமே 245

ஆசைக் கடலி னலைவாய்ப்பட் டேயலைந்து
மோசப் படுதன் முறையோ நிராமயமே. 246

எட்டிரண்டு மின்னதென்று மேமையறி யாதபடி
வெட்டவெளிப் பேதையென விட்டாய் நிராமயமே. 247

பித்தம் பிடித்தபிர பஞ்சத்தார் போலன்றோ
முத்தர்க் கிருக்கு முறைகா ணிராமயமே 248

காமக்கு ரோதமத மாச்சரியக் காரருக்கே
ஆமோ திருக்கருணை வையா நிராமயமே. 249

ஜெகத்து மயமாயுக் தேஜோ மயமாயும்
அகத்தா டணுவான தன்றோ நிராமயமே. 250

கேசாதி பாதமுதல் கெர்ப்பக் குவட்டில்வைத்த
ஈசா வுனக்கே யியல்பாம் நிராமயமே 251

எக்கலைக்குஞ் சொக்கா தியங்கு முனைத்தொழுதல்
நிற்கவலைக் கெல்லா நிலைகா ணிராமயமே. 252

அகத்து விழியுமறி தற்கரி தாயவுன்பால்
முகத்து விழியோ முயலும் நிராமயமே. 253

திக்கு விஜயஞ் சிவாராஜ யோகியர்க்காக்
துக்க வலையோர்க்குத் துரையோ நிராமயமே. 254

வாழுகிறோ மென்றே வலக்கார பேசிலையோ
ஏழாம் நரகுக் கிரைவா ணிராமயமே. 255

ஈடேனக் காரென்றே யெதிர்பேசு மட்டியுடல்
வீடேழி கால நிலையோ நிராமயமே. 256

பாகாய்க் கசிந்துருகும் பரம பதத்தினர்க்குத்
தேகாபி மானமெல்லாக் தீயு நிராமயமே. 257

ஆவியுடல் பொருளுமடங் கக்கொள்ளை கொண்டுனைப்
பாவியென்று தள்ளப் படுமோ நிராமயமே. 258

அளந்தாலு மிந்தவுல கவ்வளவு மெவ்வளவும்
உளந்தெளியா ருக்கருடா னுண்டோ நிராமயமே. 259

சொன்னப் படிக்கிணங்காத் துட்டன்யா னாகிலுமுன்
வன்ன மலர்பதத்தை வைப்பாய் நிராமயமே. 260

பாத முடியின் பாமார்த்த மானவுனக்
கேது வடிவென்றே யிசைப்பே நிராமயமே. 261

முன்னாளிருந்த முறைபோலு மூர்த்திகராய்
எந்நாள் வருவதெனக் கெந்தாய் நிராமயமே. 262

மடக்கெடுத்து வீசி மணல்குடித்த நீரதனால்
கடற்குறை யுண்டோவென கண்ணே நிராமயமே. 263

தானேதா னெவ்வுயிர்க்குந் தற்பரமாய் நிற்பதுடல்
ஊனாகிக் கொண்ட வுளவே ணிராமயமே. 264

பாச மொழித்துநெறி பற்றிநின்ற வித்தகர்க்கு
வீசுந் திருக்கருணை வீசும் நிராமயமே. 265

கற்றகல்வி யற்றுக் கன்மமுதல் பாசமற்ற
உத்தமர்க்குச் சித்த மொடுங்கு நிராமயமே. 266

சித்த நிரஞ்சனத்திற் சென்றிருக்க வல்லார்க்குப்
புத்தி நிருவிகற்பம் பூணும் நிராமயமே. 267

நீட்டிக் குறுக்க கெடுபகையென் பாரதுபோற்
காட்டி மறைக்கக் கணக்கோ நிராமயமே. 268

கற்பூர வுண்டை கரைவதுபோ லக்கரையுந்
தற்போதக் கருணைத் தந்தாள் நிராமயமே. 269

தேனோடு பாகாய்த் திரண்டமுத மென்னவுமென்
ஊனோ டுடலோ டுறைந்தாய் நிராமயமே. 270

கண்டித்த வெள்ளுங் கரும்புப்போ லும்மெனது
சண்டித்தன மெய்தற்குச் சார்நீ நிராமயமே. 271

ஐந்துபுல வேடருக்கே யாளாக்கி னாலுனக்கு
வந்தபல னென்னோ வழுத்தாய் நிராமயமே. 272

ஓயாக் கவலைக் குரித்தாம் புழுக்குரம்பை
ஆயே னெனவருத்த தையா நிராமயமே. 273

ஐவர்க்கு மென்னை யடங்கச்சிறை யாக்குவது
முய்யுங் கருணைக் குளதோ நிராமயமே. 274

ஊசிதனைக் காந்த முகத்தனைக்கு மாறெனவே
பாசத்தைப் போக்கியருள் பாராய் நிராமயமே. 275

உள்ளங் தெளிந்தே யொளியாய்ப் பிறங்கினர்க்குக்
கள்ளங்தெளி யக்கனவு கண்டே நிராமயமே. 276

அற்புதமே நிற்குணமே வன்பர்க் கருள்புரியுஞ்
சற்குருவே யெங்கள் சலுவே நிராமயமே. 277

அழியா வருள்வாழி யள்ளியடி யேன்றனக்கா
மழையாய் பொழிந்தாய்நீ வாழி நிராமயமே. 278

முத்தர்க்கும் வாழியெங்கள் முன்னோர்க்கும் வாழியருள்
வித்தர்க்கும் வாழியெங்கும் விளக்காய் நிராமயமே. 279

ஒழியா வருள்வாழி யுத்தமர்க ளும்வாழி
அழியாப் பதிவாழி யையா நிராமயமே. 230

குன்றுக் குணக்குடிகொண் டோராயெம் வித்தகரும்
எக்காலும் வாழியரு ளெந்தாய் நிராமயமே. 281

நிராமயக்கண்ணி முற்றுப்பெற்றது

ஆக பாடல் 563.

பராபரக் கண்ணி.

அண்ட புவனமென்று மாடுதிருக் கூத்தினையான்
கண்டு மகிழ்ந்திடவே காட்டாய் பராபரமே. 1

ஆதியா யாண்டவனா யகதுகது வாகிதுவாய்
சோதியாய் நின்மலமாய்ச் சூழ்ந்தாய் பராபரமே.

வேத மறைப்பொருளை வேதாந்தத் துட்கருவை
ஓதி யுனையறிந்தா ருண்டோ பராபரமே. 3

அண்டம் புவனமுட னாகாச மென்றுசும்பிக்
கொண்டாடு மெஞ்ஞானக் கூத்தே பராபரமே. 4

நாவார் புகழுவெட்டா நாயகனே நாதாந்தப்
பூவாய் மலர்ந்திருக்கப் பூத்தாய் பராபரமே. 5

பேராற் பெரிய பெரும்பொருளே பேதைதனக்
காரா ரிருந்தும்பல னாமோ பராபரமே. 6

மாராய நற்கருணை மாரிவரு சித்திடவே
பாராயோவையா பகராய் பராபரமே. 7

ஆனாலு முன்பாதம் ஆசித் திருப்பதற்குத்
தானா மிரங்கியரு டாராய் பராபரமே. 8

காதாரத்தமூல நடுவீட்டுக் குள்ளிருக்கு
மாதவத்தோர்க்கான மருவே பராபரமே. 9

உடலுக் குயிரேயென் னுள்ளமே யுன்பதத்தைக்
கடலுமலை யுந்திரிந்துங் காணேன் பராபரமே. 10

மாந்திரத்துக் கெட்டா மறைப்பொருளே மன்னுயிரே
சேர்ந்தவெழு தோற்றத்தின் சித்தே பராபரமே. 11

தனியேனுக்காதரவு தாரணியி லில்லாமல்
அனியாய மாவதுனக் கழகோ பராபரமே. 12

ஓடித் திரிந்தலைந்து முன்பாதங் காணமல்
வாடிக் கலங்குகிறேன் வாராய் பராபரமே. 13

தூராதி தூரந் தொலைத்துமதி னுன்பாதம்
பாராத பாவத்தாற் பயந்தேன் பராபரமே. 14

தேடக் கிடையாத திரவியமே தேன்கடலே
ஈடுனக்கு முண்டோ விறையே பராபரமே. 15

அரிய பெரும்பொருளே யன்பா யொரு வார்த்தை
பரிபூ ரணமாய்ப் பகராய் பராபரமே. 16

ஐயோ வெனக்குதவு மாதரவை விட்டுவிட்டுத்
தையலரைத் தேடித் தவித்தேன் பராபரமே. 17

எத்திசையு நோக்கி னிசையாத் திருக்கூத்தாய்
வித்தை விளையாட்டு விளைப்பாய் பராபரமே. 18

எப்பொழுது முன்பதத்தி லென்கருத்தே யெய்துதலுக்
கிப்பொழுதே கைப்பிடித்தா னிரையே பரர்பரமே. 19

வாதுக்கடாவரும் வம்பரைப்போற் ரோஷிமனம்
ஏதுக் கடர்வதியா னெளியேன் பராபரமே. 20

கண்ணே மனோன்மணியே கண்பார்வைக் கெட்டாத
விண்ணடங் காவெட்ட வெளியே பராபரமே. 21

அடக்கவரி தாமாயி லைம்பொ றியைக் கட்டிப்
படிக்கப் படிப்பெனக்குப் பகராய் பராபரமே. 22

எத்தவங்கள் செய்தாலு மின்பமுட னுன்பதத்தை
முத்த ரொருபோது முற்றார் பராபரமே. 23

சொல்லுக் கிணங்காத சூத்திரத்தைப் பார்த்திருக்க
அல்லும் பகலுமெனக் காசை பராபரமே. 24

நாற்றச் சடலமதை நம்பார் முகத்திருக்கப்
பூத்து மலர்ந்திருக்கும் பூவே பராபரமே, 25

சோற்றுப் பொதியைச் சுமந்தே திரிந்தலைந்தே
ஆற்றாம னின்றுகளைத் தழுதேன் பராபரமே. 26

காற்றுத் துருத்திதனைக் கல்லா யனைத்திருக்கச்
சூத்திரமாய் நின்றாய் சுழியே பராபரமே. 27

கோலத் திருவடிவு கோதையர்க ளாசையினால்
ஆலைக் கரும்புபோ லானேன் பராபரமே. 28

கேளாயோவென்கவலை கேட்டிரங்கி யடிமைதனை
ஆளாயோ வையாபா லானேன் பராபரமே. 29

எத்தனைத் தான் குற்ற மெதிர்த்தடிமை செய்தாலும்
அத்தனையு நீபொறுப்ப தழகே பராபரமே. 30

அல்லல் வினையா லறிவுகெட்ட வான்மாவாய்
நெல்லும் பதருமென நின்றேன் பராபரமே. 31

சொல்லறிய ஞானச் சுடரே யொருவார்த்தை
செல்வம் பொழுக்கிடநீ செப்பாய் பராபரமே. 32

நித்த முனைத்தொழா நிர்மூட னுயிருக்கும்
பித்தனு யேன்காண் பிறந்தேன் பராபரமே. 33

உற்றார்க ளாலு முறவின் முறை யோராலும்
பெற்றார்க ளாலுமுனைப் பிரிந்தேன் பராபரமே. 34

ஏழை முகம்பார்த் தெளியேனை யெப்பொழுதும்
ஆழாம லாண்டருளென் னழகே பராபரமே. 35

பாவ வுடலெடுத்துப் பாதகனு யான்பிறந்துள்
ஆவி கெடுவதுனக் கழகே பராபரமே. 36

வாராயோ வென்னிடத்தில் வந்தொருக்கா லென்றன்முகம்
பாராயோ சற்றே பகராய் பராபரமே. 37

பார்க்கப் பலவிதமாய் பல்லுயிருக் குள்ளிருந்தும்
ஆர்க்குந் தெரியாம லானய் பராபரமே. 38

ஆனுலும் பொல்லா தரும்பாவி யாகவுடல்
ஏனே வெடுத்தே னெந்தாய் பராபரமே. 39

கர்ப்பூர தீபக்கன லொளிபோர் காட்சிதர
முப்பாழும் பாழாய் முடித்தாள் பாரபரமே. 40

கரும்பே நவரசமே கடலமுதே கண்மணிக்குள்
அருபொரு ளாய்நின்ற வழகே பராபரமே. 41

ஏழை யடியேனை யெப்படியுங் கைப்பிடித்தே
ஆளா திருப்பதுனக் கழகோ பராபரமே. 42

ஆளாயோ வையா வடியேன் பிதற்றுதலைக்
கேளாயோ வென்றன் கெதியே பராபரமே. 43

ஊனுகி யுள்ளுயிரி லொட்டாத வக்கருவாய்த்
தானுகி நின்ற தனுவே பராபரமே. 44

பொன்னுன் மயக்கெடுத்துப் புத்திகெட்டு கானெனவே
பன்னுரு நின்ருற் பலனே பராபரமே. 45

இல்லல்லா ஹூவென் றெனைமறந்து கொண்டுனையே
சொல்லவருஞ் மெய்ஞ்ஞானச் சுடரே பராபரமே. 46

ஐயோ வடிமைதனக் காரிருக்கு மென்னபலன்
கையாற் கவிக்தணைக்கக் காணேன் பராபரமே. 47

ஆனுலு மேழை யடியேனுக் காதரவாய்த்
தாளு மிரங்கியரு ளாராய் பராபரமே. 48

தூங்கி யிருந்து தொழுவோர் முகம்பார்க்கும்
வேங்கைப் புலியாக்கு விப்பாய் பராபரமே. 49

கண்ணே கருத்தேயென் கண்மணியே கண்ணிறைந்த
விண்ணடங்கா வெட்ட வெளியே பராபரமே. 50

காசாசை கொண்டு கலங்கியே கெட்டலைந்த
தோஷியாய் நின்றேன் றுணையே பராபரமே. 51

ஐயோ வெனதுதுய ராரிடத்திற் சொல்லிநின்று
கையெடுக்கப் போறேனென் கண்ணே பராபரமே. 52

என்னதான் செய்திடுவே னென்விதியைச் சொல்லியழ
வுன்னையன்றி வேறெனக்கு முண்டோ பராபரமே. 53

முக்கண் விழியொளியே முத்திதரு முத்தமனே
அகக்கண் டிறந்தோர்க் கறிவே பராபரமே. 54

முப்பாழும் பாழாகி முத்திபெற் றிருக்கவெனைக்
கைப்பிடிப்ப தெப்போதான் கண்ணே பராபரமே. 55

உல்லாச மாக வொளிவு பரந்திடவுன்
செல்வம் பொழிந்திடவுன் செப்பாய் பராபரமே. 56

மாச்சரியஞ் செய்யு மதமொடுங்கி முத்திபெறக்
காட்சி தருவதெப்போ கண்ணே பராபரமே. 57

சண்டாள னென்றென்னைச் சகலருரை யிட்டாலுங்
கொண்டணைப்ப துன்பாரங் குருவே பராபரமே. 58

முத்திதரு மெய்ஞ்ஞான முச்சுடரைக் காணமற்
செத்திறந்து போனலென் செய்வேன் பராபரமே. 59

தன்னை யறிந்துணரத் தயையா யொருவார்த்தை
இன்னபடி யென்றே யியம்பாய் பராபரமே. 60

கனியேகண் டுன்னுடைய கைபிடிப்போ மென்றுசற்றே
எளியேன் முகம்பார்த் திரங்காய் பராபரமே. 61

பாசவினை போக்கிப் பலவினையைப் பாழாக்கி
ஆசைவைப்போர் தங்க ளருளே பராபரமே. 62

ஆளவரு வோமென் றன்பா யொருவார்த்தை
ஏழை முகம்பார்த் தியம்பாய் பராபரமே. 63

நிலைகாட்டுங் காய நிசமென்று நிச்சயித்த
புலையாட்ட னென்றுதள்ளப் போமோ பராபரமே. 64

பார்க்கப் பலவிதமாய்ப் பலசமய மாகவொரு
வாக்கை வெளிப்படுத்தி வைப்பாய் பராபரமே. 65

ஆனு லெளியேனுக் காதரவே யில்லாமற்
போனு லுனக்கழகோ புகலாய் பராபரமே. 66

நீச்சாய்ப் பெருகிவர நிரம்புமா னந்தவெள்ளம்
பாய்ச்சாயோ வையா பகராய் பராபரமே. 67

எத்தனையோ கெஞ்சு மெளியேன் றனக்குதவி
உற்ற துணைத்தவிர வுண்டோ பராபரமே. 68

கன்ன மிடுங்கருவி காணமதைச் சுட்டோர்கள்
தனக்குட் டாளாகும் தருவே பராபரமே. 69

காயமாம் காய்த்துக் கனிந்து சொரிவதற்கு
மாயமாய்ப் பூத்த மலரே பராபரமே. 70

உயிருக் குயிரான வுட்கருவுக் குள்ளமைவே
தயையா யெனக்குதவி தந்தாய் பராபரமே. 71

அறிவை யறிவோருக் கானந்த வெள்ளமதாய்க்
கரையறவே பொங்கும் கடலே பராபரமே. 72

மறைப்பொருளைக் காணு மடையவிய வென்றியம்பிச்
சிரிப்பார் சிரிக்கவென்ன செய்வேன் பராபரமே. 73

குறிவிளக்கும் குருவடியைக் கொள்கையுடன் போற்றுமவ்
அறிவு மயக்குமின்றே தீனையா பராபரமே. 74

வல்லவரைக் கெஞ்சி வலியவரைக் கால்பிடித்திட்
டில்லவரை நம்பி யிருக்கேன் பராபரமே. 75

சொல்லும் பதுருத்திச் சூத்திரத்தைப் பாராமற்
கல்லுமேல் அம்போலக் கண்டேன் பராபரமே 76

செகமுழுதுஞ் சுற்றியுமுன் சிரபாதங் காணாமற்
திகைத்தழுதே யிடியச் செறிவாய் பராபரமே. 77

கள்ளக் கருத்தனைவிட்டே டறுத்தவருக்
குள்ளிருக்கு மெய்ஞ்ஞான வொளியே பராபரமே. 78

கும்பிக் கிரைதிருப்பிக் கொடுப்பார் தமைத்தேடிச்
சம்பித் திரிக்கோ சலித்தேன் பராபரமே. 79

காண்பதா யாவை கடந்ததென் கண்ணுகளும்
வீண்காரே யடையா விழியே பராபரமே. 80

தூங்காமற் றூங்கித் தொழுதிருக்க வென்னுடைய
ஆங்கார மெல்லா மகற்றாய் பராபரமே. 81

தேனாமிர்த மூறத் திவ்யமது ரஞ்சொரியத்
தானா யொருவார்த்தை தாராய் பராபரமே. 82

சாத்திரங்க ளோதுஞ் சதுர்மறையோர்க் கெட்டாத
சூத்திரமாய் நின்ற சுழியே பராபரமே. 83

வேற்றொருவர் காணாத வேதாந்தத் துட்பொருளைப்
பார்த்தோர் கட்கெய்தும் பலனே பராபரமே. 84

சாதி சனத்துடனே சார்ந்திருந்து பட்டதுயர்
போதும்போ தும்போதும் போதும் பராபரமே. 85

உற்றாரை நம்பியிருந் தொருபலனுங் காணாமற்
செத்தா லெனக்கதுதான் சின்னம் பராபரமே. 86

செல்லு முறையறிந்து சித்திவழி காணாமற்
கல்லுமரம் போலானேன் கண்ணே பராபரமே. 87

ஓகோ வுனையறிந்து மொருபலனுங் காணாமற்
போகாமற் காத்தருளென் புணையே பராபரமே. 88

உன்னை யறிவதற்கோ வுடலெடுத்தே னென்றெனைச்
சின்னஞ்சொல்லு வார்கட்கென செய்வேன் பராபரமே. 89

தெரியாத வின்பத் தெளிவா யருண்மயமாய்ப்
பரிபூரண முடனே பாராய் பராபரமே. 90

ஆச்சி தனைத்தேடி யாசைவைத் தலையாமற்
பூச்சியா யேனோ பிறந்தேன் பராபரமே. 91

காசை விரும்பிக் கலங்கித் திரிந் துன்பாத
ஆசை விரும்பா தலைந்தேன் பராபரமே. 92

சாகாமற் செத்துதயச் சச்சிதா னந்தமயப்
பாகமா யாகமுகம் பகராய் பராபரமே. 93

வாராயோ வையா வந்திரங்கிக் கொண்டெனைக்கப்
பாராயோ சற்றே பகராய் பராபரமே. 94

ஆசைவலைப் பாசநெறி யத்தனையுங் கட்டறுத்து
வாசிதனி லேற்றியெனை வைத்தாள் பராபரமே. 95

வேஷந் தனைப்போட்டு வேதாந்த சாத்திரத்தைக்
காசு பணம்பறிக்கக் கற்றேன் பராபரமே. 96

செய்ததெல் லாங்குற்றஞ் சிறியேன் றனக்கிரங்கிக்
கைதூக்கிக் கொண்டருளென் கண்ணே பராபரமே. 97

மாளா மயக்கறுத்து மனக்கறையைத் தான்கழுவி
ஆளாக்கிக் கொள்வாயென் னையா பராபரமே. 98

காட்டமன்கு மிங்கிருக்க காதாந்த முத்திநிலை
காட்டா யெனைத்தருளென் கண்ணே பராபரமே. 99

சிந்தை தனைத்தெளிந்து சித்திமுத்தி பெற்றுயர்ந்த
உன்றன் குணங்குடியார் குயிரே பராபரமே. 100

பராபரக்கண்ணி முற்றுப்பெற்றது.

ஆக பாடல் 663.

றஹ்மான் கண்ணி.

பார்க்கப் பலவிதமாய்ப் பல்லகண்டந் தன்னையடை
காக்குந் திருக்கருணைக் கண்ணே றஹ்மானே. 1

ஈறு முதலுமற்றே யியங்குகின்ற முச்சுடராய்க்
காரணிக்கும் பூரணமே கண்ணே றஹ்மானே. 2

பரணிக்க வொண்ணுப் பதம்பெறுதற் கென்சிரசைக்
காணிக்கை வைத்தேனென் கண்ணே றஹ்மானே. 3

பொய்யடிமை யாயினுமுன் பொன்னடிக்கா ளாக்கியென்னைக்
கையைக் கொடுத்தணைத்தாள் கண்ணே றஹ்மானே. 4

பெண்டுபிள்ளை யென்றே பிதற்றுதல்பொய் யல்லாமற்
கண்டபல வொன்றுமில்லைக் கண்ணே றஹ்மானே. 5

பேதலித்தே னுன்னடிமை பேதகமில் லாமலுனைக்
காதலித்தே னண்டருள்செய் கண்ணே றஹ்மானே. 6

ஏகப் பெருவெளியி லிருட்கடலிற் கம்பமற்ற
காகமது வானேனென் கண்ணே றஹ்மானே. 7

ஐயோ வுனதருளி லாசையற்ற பாவியென்னைக்
கையைநெகிழ்த் தாதருளென் கண்ணே றஹ்மானே. 8

போதமய மாகவெங்கும் பூரணித்த காரணத்தைக்
காதலித்து நின்றேனென் கண்ணே றஹ்மானே. 9

எல்லார்க் கமுதளிக்கு மியல்புபோற் றேரைகட்கும்
கல்லுள் ளமுதளிக்குங் கண்ணே றஹ்மானே. 10

சொல்லும் பதர்நீக்கிச் சும்மா விருந்தருளைக்
கல்லாருங் கல்லேயென் கண்ணே றஹ்மானே. 11

வெட்டவெறும் பாவியென்ன வீணிலெனைத் தள்ளாமற்
கட்டியணைத் தாண்டருள்செய் கண்ணே றஹ்மானே. 12

யானைரத மேறு மரசர்பெரு வாழ்வுமுதற்
கானற்சலம் போலலவோ கண்ணே றஹ்மானே. 13

எவருடைமை யும்மெடுத்திட் டென்னுடைமை யென்பவர்க்குக்
கபுறில் வருந்துணையோ கண்ணே றஹ்மானே. 14

ஊனெடுத்த காண்முதலா வுபயோக மற்றயான்
காணினில வானேனென் கண்ணே றஹ்மானே. 15

வாசிதனி லேறி மனமகிழ்ந்து வாழாமற்
காசாசை கொண்டேனென் கண்ணே றஹ்மானே. 16

வீடோவென் றேகம் விழுமிடந்தான் வீதிகளோ
காடோ செடியோவென் கண்ணே றஹ்மானே. 17

பாகமுடன் வளர்த்த பாழுடலு ஞாய்க்கிரையோ
காகங் கழுக்கிரையோ கண்ணே றஹ்மானே. 18

எங்காம லங்குமிங்கு மேகாந்த மாகவுனைக்
காண்கவந்து பாங்கருள்செய் கண்ணே றஹ்மானே. 19

தொண்டுசெய்ய நின்ற துறவியர்க ளேயருளைக்
கண்டுகொள்ளக் கண்டாயென் கண்ணே றஹ்மானே. 20

அல்லும் பகலு மடிமைமனந் தேம்புதற்குக்
கல்லுங் கரைந்திடுமென் கண்ணே றஹ்மானே. 21

வேட்டை பெரிதென்றே வெறிகாயை கைபிடித்துக்
காட்டிற்புக லாமோவென் கண்ணே றஹ்மானே. 22

அடைத்த மனக்காட்டை யாளுமைந்து கள்வரையுங்
கடத்த முடிவதில்லைக் கண்ணே றஹ்மானே. 23

மடம்புகு காய்போல மயங்குமென்னை யுன்னைவிடக்
கடத்துவாரைக் காணேனென் கண்ணே றஹ்மானே. 24

வையம்பொய் யென்றே மறையோல மிட்டதெல்லாங்
கையுமெய்யு மாச்சுதென்றன் கண்ணே றஹ்மானே. 25

சொல்லருமெய்ஞ் ஞானச் சுடரொளிகண் டாலென்மனக்
கல்லுங் கரைந்திடுமென் கண்ணே றஹ்மானே. 26

மாதாபிதாவு மென்னை மயக்கி மயக்கியுன்னைக்
காதலிக்க வொட்டாரென் கண்ணே றஹ்மானே. 27

வெற்றிதரு மெய்ப்பொருளை வேதாக்தத் துட்கருவைக்
கற்றோர்க் கருள்புரியுங் கண்ணே றஹ்மானே. 28

உடையா பரணமென வுன்னியுன்னிப் பாவிமனங்
கடைபட லாமோவென் கண்ணே றஹ்மானே. 29

ஓயாக் கவலையினு ளுள்ளுடைந்து வாடுதற்கோ
காய மெடுத்தேனென் கண்ணே றஹ்மானே. 30

நேசம்வைத்த துன்னடிமை நின்பதத்திற் கல்லாது
காசு தனக்கோவென் கண்ணே றஹ்மானே. 31

எண்ணாத வெண்ணமெல்லா மெண்ணியெண்ணி யுன்னடிமை
கண்ணிக்குட் கிட்டரனேன் கண்ணே றஹ்மானே. 32

பொய்யெடுத்தா னென்று புறக்கணித்தா யாகிலெனைக்
கையணைப்பா ருண்டோவென் கண்ணே றஹ்மானே. 33

விண்ணுடர் காணு விரிகருணைச் செஞ்சுடரைக்
கண்குளிரத் தந்தருள்செய் கண்ணே றஹ்மானே. 34

தங்குபே ரின்பமதைச் சார்ந்தகுரு காதலுக்கே
கங்குல்பகற் றூனறுமென் கண்ணே றஹ்மானே. 35

தூங்காமற் றூங்கித் தொழுதுதொழு துன்னருளைக்
காண்க வெனக்கருள்செய் கண்ணே றஹ்மானே. 36

இன்றுள்ளோர் நாளைக் கிருப்பதுபொய் யென்பதையான்
கண்டுகொண்டே னையாவென் கண்ணே றஹ்மானே. 37

பீற்றற் றுருத்திதனைப் பீக்குழியைச் சாக்கடையைக்
காத்தேன் வளர்த்தேனென் கண்ணே றஹ்மானே. 38

போதத் தனம்புதைத்த புல்லர்க் கிருப்பூசி
காதற் றதும்வருமோ கண்ணே றஹ்மானே. 39

பாடிப் படித்தறிந்தும் பற்றார் பாசமலைக்
காடுகொண்டு போவாரென் கண்ணே றஹ்மானே. 40

நிறைந்தபரி பூரணமே நிர்க்குணமே நிர்மலமே
கருணைக் கடலேயென் கண்ணே றஹ்மானே. 41

பார்ப்பாயோ வென்றன்முகம் பாவியா காமலென்னைக்
கார்ப்பாயோ வையாவென் கண்ணே றஹ்மானே. 42

மெய்யெடுத்த நாண்முதலா மெய்யறியாப் பாவியெனைக்
கைவிடவே வேண்டாமென் கண்ணே றஹ்மானே. 43

சோற்றுப் பொதியைச் சுமந்தே யலைந்துசுழற்
காற்றுத்துரும் பானேனென் கண்ணே றஹ்மானே. 44

சேர்ந்த சுற்றந்தனைச் சிதறவிட்ட சிந்தையர்க்குக்
காந்த மலையேயென் கண்ணே றஹ்மானே. 45

உலையி லிடுமெழுகு ணெப்பாக வென்றனுள்ளம்
கலைதலது காரியமோ கண்ணே றஹ்மானே. 46

ஆவி தனைக்குரங்கா யாட்டுகின்ற வையறிவைக்
காவ லிடவருள்செய் கண்ணே றஹ்மானே. 47

வேஷந் தனைப்போட்டு மெய்மயக்கும் பொய்க்குருவாய்க்
காசுபணம் பறித்தேனென் கண்ணே றஹ்மானே. 48

எட்டிப் பிடிக்கும் விதமறிந்தா லுன்பதத்தைக்
கட்டிப் பிடித்திடுவேன் கண்ணே றஹ்மானே. 49

அவியா மனமவிய வாயுங்கலை யோர்கடமைக்
கவியுந் திருக்கருணைக் கண்ணே றஹ்மானே. 50

சித்திதரும் வேதாந்தச் செழுஞ்சுடரைச் சின்மயத்தைக்
கற்றவர்க்கு முத்திதருங் கண்ணே றஹ்மானே. 51

அருவி சொரியும்படிக் கம்பரத்தி லன்புவைத்தாற்
கருவி பிரியாதென் கண்ணே றஹ்மானே. 52

மாராய வெள்ள மருங்கமிழ்ந்த நின்கருணைக்
காரார் மழைபொழியுங் கண்ணே றஹ்மானே. 53

எண்படாதெண்ணமெல்லாமெண்ணியெண்ணிநெஞ்சமொரு
கண்படா தலங்குவதோ கண்ணே றஹ்மானே. 54

கோலங் குழியில்லாக் குருவடிதொ ழார்கண்மனங்
கால னிருப்பிடமோ கண்ணே றஹ்மானே. 55

உள்ளுயிரி னுள்ளே யுறைந்தபரஞ் சோதிவரிற்
கள்ளமனத் துள்ளாதென் கண்ணே றஹ்மானே. 56

சேர்க்குந் திரவியமுஞ் சித்திரமணி மண்டபமுங்
காக்குந் துணையோவென் கண்ணே றஹ்மானே. 57

பட்டுடையு மொப்பனையும் பாதகமு மென்னைவிட்டுக்
கட்டோ டொழிவதிலைக் கண்ணே றஹ்மானே. 58

எண்ணாத வெண்ணமெல்லாம் மெண்ணா திருக்குமனங்
கண்ணாடிக் குண்முகமாங் கண்ணே றஹ்மானே. 59

மண்டபமுந் தண்டிகையு மாளிகையுஞ் சாளரமுங்
கண்டு கழிக்கவருள் கண்ணே றஹ்மானே. 60

மன்னுங் கருவிவுமனமணிப் பெட்டகத்தைக்
கன்னமிட போமோவென் கண்ணே றஹ்மானே. 61

என்றுமன்னை சுற்றமுத லெனக்குப்பழி காரரெனக்
கண்டறிந்து கொண்டேனென் கண்ணே றஹ்மானே. 62

கொடிய மனத்துயரைக் கூடா திருப்பவர்க்குக்
கடுக முடுகிவருங் கண்ணே றஹ்மானே. 63

எச்சு மதிமயக்கு மில்லார்க ளாலுடைதேங்
காய்ச்சிரட்டை யானேனென் கண்ணே றஹ்மானே. 64

விள்ளரிய வேதம் வினாவுதலை யுங்கடித்து
கள்ளமனத் துள்ளுவதென் கண்ணே றஹ்மானே. 65

வேதக் கருவை விளைகருணைக் குஞ்சரத்தைக்
காதலித்தே னாதரித்தாள் கண்ணே றஹ்மானே. 66

அரும்பே மலரேயென் னாசைதரும் வாசனையே
கரும்பே ரசமேயென் கண்ணே றஹ்மானே. 67

பூரணமே யற்புதமே பொங்குகரு ணைக்கடலே
காரணமே யென்றனருட் கண்ணே றஹ்மானே. 68

ஓயாதோ வென்கவலை யுன்னருளா லென்கருவி
காயாதோ வையாவென் கண்ணே றஹ்மானே 69

ராஜாங்கம் வேண்டி ரதகஜங்க ளேறுதற்குக்
காசெங்குங் கேளேனென் கண்ணே றஹ்மானே. 70

தந்தைதா யென்றே தயங்குகின்ற பாவிமனக்
கண்டிறக்க வந்தருள்செய் கண்ணே றஹ்மானே. 71

அச்சமெமக் கில்லையென வைம்புலனென் பாழ்மனத்தைக்
கைச்சூறை யாடிவிடென் கண்ணே றஹ்மானே. 72

இனியவமிர் தம்பொங்கி யெங்குங்கரை தத்திவரக்
கனிவாய் திறந்தருள்செய் கண்ணே றஹ்மானே. 73

ஆணையிட்டே னாணையிட்டே னையனே யுன்னருளைக்
காண வெனக்கருள்செய் கண்ணே றஹ்மானே. 74

அல்லும் பகலு மறுவிலய மாவோர்க்குக்
கல்லும் பிளந்திடுமென் கண்ணே றஹ்மானே. 75

புவியு மெழுவானும் பொன்னுலகும் பல்லுயிருங்
கவியுந் திருக்கருணைக் கண்ணே றஹ்மானே. 76

எண்ணரிய தாக விருந்தாடுஞ் சூத்திரமோ
கண்ணிலொளி பாய்ந்ததுவோ கண்ணே றஹ்மானே. 77

உமையோ வழுக்கோவென் னுள்ளங்கழு வக்கழுவக்
கழுவாத் தொடக்கோவென் கண்ணே றஹ்மானே. 78

உற்ற கிளைத்திமுரையு முறைவின் முறைத்திறையுங்
கத்தரித்து விட்டருள்செய் கண்ணே றஹ்மானே. 79

நற்பவளக் கொம்பே நவமணிக்கு மற்புதமே
கைப்பொருட்கு மெய்ப்பொருளே கண்ணே றஹ்மானே.80

ஒப்புற வுதப்பி யுணர்வற்றுனைக் கைவிட்டுக்
கப்பரைகைக் கொண்டேனென் கண்ணே றஹ்மானே. 81

பசப்பிப் பணம்பறிக்கும் பாவிக் குருமுகத்தைக்
கசப்பாக கண்டேனென் கண்ணே றஹ்மானே. 82

வேதியர்க்கு மாதவர்க்கு மெய்யடியார் கட்குமுனைக்
காதலிப்போ ருக்குமருள் கண்ணே றஹமானே. 83

வேரைவே ரோடறுத்து மெய்யடிமை யாக்குதற்கென்
காரியத்திற் றாமதமென் கண்ணே றஹ்மானே. 84

பழகப் பழகிவரும் பாக்கியத்தைப் பைமுதலைக்
களவு கொடுக்கேனென் கண்ணே றஹ்மானே. 85

காமாண்மை கண்முழுது காசமாக் கார்தமக்குங்
காமவினை பேரமோவென் கண்ணே றஹ்மானே. 86

அடிமை யுனதபைய மாகா திருக்கினுமென்
கடைவழிக்குக் கட்டமுதே கண்ணே றஹ்மானே. 87

வேதாந்த வேதமெல்லாம் விட்டேறி யேகடந்து
காதலித்து நின்றேனென் கண்ணே றஹ்மானே. 88

இனமுஞ் சனமுமென வெண்ணியெண்ணி யுன்னடிமை
கனசழக்குப் பட்டேனென் கண்ணே றஹ்மானே. 89

நவசூத்தி ரத்தைவிட்டு நன்னிலைவெண் ணாதுமனங்
கவலைப் படுவதென்ன கண்ணே றஹ்மானே. 90

மடிப்புங் கொலைகளவும் வஞ்சமுமென் னெஞ்சைவிட்டுக்
கடக்க நடப்பதில்லைக் கண்ணே றஹ்மானே. 91

பலவிடத்தைச் சுற்றிப் பரதவித்துப் பாவிமனங்
கலங்கி மலங்குவதென் கண்ணே றஹ்மானே. 92

உள்ளக் கருத்தா லுவந்துறவு கொள்ளாமற்
கள்ளமனந் துள்ளுவதென் கண்ணே றஹ்மானே. 93

மண்ணு முதன்மற்ற மயக்கமறக் கல்லாரை
கண்ணெடுத்துப் பாரேனென் கண்ணே றஹ்மானே. 94

தேசிகனா னென்னுந் திருட்டுக்குருக் கள்சொல்லோர்
காசாய் மதியேனென் கண்ணே றஹ்மானே. 95

தன்னை யறிந்து தவம்புரியாத் தன்மையினாற்
கன்னெஞ்ச னானேனென் கண்ணே றஹ்மானே. 96

மாடகூ டங்கண்மணி மண்டபமு மன்று களுங்
காடுகொள்ளக் கண்டேனென் கண்ணே றஹ்மானே. 97

ஞானெறிய வேகதறிக் கூப்பிடினுங் காணாதக்
குருவே குருவேயென் கண்ணே றஹ்மானே. 98

மருளாத் தவத்தான் மறப்புகினைப் பற்றவர்க்குக்
கருணைக் குணங்குடியாங் கண்ணே றஹுமானே. 99

உதிக்கு முணர்வன்றி யுணர்வோ டுணர்வொன்றிற்
கதிக்குங் குணங்குடியென் கண்ணே றஹுமானே. 100

றஹுமான்கண்ணி முற்றுப்பெற்றது.

ஆக பாடல் 763.

புலம்பற் கண்ணியென்னும்

எக்காலக்கண்ணி.

முத்திதரும் வித்தை முனையில்வைத்துச் சீராட்டி
நித்த மறவாம னினைப்பதினி யெக்காலம். 1

ஆதியின் மேலாசை யடர்க்தெரித்த வக்கினியின்
சோதி யினுல்வெந்து சுகம்பெறுவ தெக்கலாம். 2

காமக் கடல்கடக்கக் கர்த்தவியக் கப்பல்வைத்து
ரேமநிஷ் டைத்தம்ப நிறுத்துவது மெக்காலம். 3

பங்கப்பழிப் பேசிறைந்த பையன்யான் றையலர்கள்
கொங்கையை கான்பாரா்க் குருடாவ தெக்காலம். 4

கொங்கை தனைப்பாராக் குருடா யிருப்பதுடன்
அங்க மிழிழ்மோக மழிவதினி யெக்காலம். 5

அங்க முமிழ்மோக மழிக்தே யறமெலிந்து
வன்கிழடு போல வறண்டுணர்வ தெக்காலம். 6

வாசியினு னேறி வலமிடக்தான் றிருப்பாமற்
றேசிகடை போலத் திடப்படுவ தெக்கலாம். 7

17

தேசிகடை போலத் தியங்காச் சுழிமுனையை
காசி நுனியிலதை னன்மறிப்ப தெக்காலம். 8

வாசி நுனிகடந்து காசமாய்ப் போகாமல்
வாசியுமென் கையில் வசப்படுவ தெக்காலம். 9

மையலெனு மாலை மார்புகிறை யப்பூண்ட
தையலர்க ளெல்லாமென் றாயாவ தெக்காலம். 10

கஞ்சா வபினாக்குங் கற்பமென வுண்ணமல்
எண்சாண் பனங்கள் ளிறக்கியுண்ப தெக்காலம். 11

பொய்யே மிகுத்த புதர்ப்பாவி பையல்யான்
அய்யோவென் றேயழுதுன் னடிபணிவ தெக்காலம். 12

அய்யோகூ வென்றே யலறவடி யுண்டெனது
பொய்யான மெய்யின் பிழையறுவ தெக்காலம். 13

மருவு தகைமறந்து மனமு மதமிறந்து
இருகையு மேந்தி யிரந்துண்ப தெக்காலம். 14

இருகையு மேந்தி யிரந்து குடித்தேகரன்
சருகா யுலர்ந்து சலிப்பறுவ தெக்காலம். 15

ஆசானக் காலை யணைத்திருத்து மோந்துகலக்
தாசாடிப் பேசி யுணர்வருள்வ தெக்காலம். 16

வாசிவா வென்று வருந்தெள் ளமுதமுண்டு
பேசிகான் வாழ்ந்தே பிழைதீர்வ தெக்காலம். 17

எக்காலகண்ணி முற்றுப்பெற்றது.

ஆக பாடல் 780.

கண்மணிமாலைக் கண்ணி

அத்து விதமே யறிவகண்டி தாகாரங்
காத்த வியமேயென் கண்ணே பராபரமே. 1

தற்பரமே சிற்பரமே தானென்று நின்றுதவுங்
கற்பகமே யற்புதமே கண்ணே பராபரமே. 2

உடலே யுயிரே யுளங்குளிர்ந்த செந்தேனின்
கடலே நிறையமுதே கண்ணே பராபரமே. 3

கொட்டிவைத்த முத்தே குவித்தநவ ரத்தினமே
கட்டிப்பசும் பொன்னேயென் கண்ணே பராபரமே. 4

சட்டரச வர்க்கமே சார்ந்தோர்க்குச் சந்தனமே
கட்டழகுப் பெண்ணேயென் கண்ணே பராபரமே. 5

செல்லப் பெருக்கே திரண்டமணிப் பொக்கிஷமே
கல்விக் களஞ்சியமே கண்ணே பராபரமே. 6

இன்னமுதே கண்டே யெனக்கேற்ற முக்கனியே
கன்னலரும் பாகேயென் கண்ணே பராபரமே. 7

பீச்சாத் திரண்டமுதே பிரியாப் பெருவாழ்வே
காய்ச்சாச்செம் பொன்னேயென் கண்ணே பராபரமே. 8

நற்பவளக் கொம்பே நவின்றமணி பெட்டகமே
கைப்பொருட்கு மெய்ப்பொருளே கண்ணே பராபரமே. 9

பட்டைக் கருப்புவட்டே பானைகொண்டசர்க்கரையே
கட்டிக் கரும்பேயென் கண்ணே பராபரமே. 10

துன்பக் கடலைத் தொலைத்தோர் திகைதீர்க்குங்
கம்பமற்ற பாற்கடலே கண்ணே பராபரமே. 11

பொய்ப்பொருள்க ளெல்லாம் புறக்கணித்த புண்ணியர்தங்
கைப்பொருள் சித்தேயென் கண்ணே பராபரமே. 12

பவக்கடலை நீக்கிப் பரிவாய்க் கரையேற்றுங்
கவிழா மரக்கலமே கண்ணே பராபரமே. 13

தம்பனங் கொண்டே தரித்துநின்ற வோங்காரக்
கம்பத்தடி யானேனென் கண்ணே பராபரமே. 14

மலிகாதல் கொண்டலையான் மண்ணிற் கவிழ்ப்பதற்கோ
கலகம் விளைத்துவிட்டாய் கண்ணே பராபரமே. 15

தெள்ளிய வான்சோதி தெளிந்துமெல்ல வந்ததையுங்
கள்ளப் படுத்திவிட்டாய் கண்ணே பராபரமே. 16

புண்ணீ ரொழுகிப் புழுங்கு மனத்தினர்போற்
கண்ணீர் கலங்கவிட்டாய் கண்ணே பராபரமே. 17

பித்தர்கள் போலும் பிதற்றிக்கா கம்போலுங்
கத்திக்கத்திச் சாகவிட்டாய் கண்ணே பராபரமே. 18

போற்றாமற் சிந்தை பொருதுசமர்க் காற்றாமற்
காற்றாய்ப் பறக்கவிட்டாய் கண்ணே பராபரமே. 19

கெற்பதற்கே யொப்பாக நிற்பதற்கோ வென்றலையில்
கற்பித்து விட்டுவிட்டாய் கண்ணே பராபரமே. 20

சொல்லாச் சுயஞ்சோதிச் சுடர்கொழித்த நெஞ்சுகருங்
கல்லாகச் செய்துவிட்டாய் கண்ணே பராபரமே. 21

அவிழ்ந்தவிழ்ந்து சிந்தையுன்மீ தாசைவைத்த தத்தனையுங்
கவிழ்த்துப்பா ழாக்கிவிட்டாய் கண்ணே பராபரமே. 22

ஓசைமணி மண்டபத்தி னூட்புகா வண்ணமெனைக்
காசினியிற் சுற்றவிட்டாய் கண்ணே பராபரமே. 23

வீண்காத றந்ததல்லால் வேற்றிலுனைக் கண்ணாலுங்
காண்கவரி தாக்கிவிட்டாய் கண்ணே பராபரமே. 24

சேத்துமத்தி னீப்போலென் சிந்தைதனைத் தேங்கவுனைக்
காட்டி மறைத்துவிட்டாய் கண்ணே பராபரமே. 25

துட்டமா மாயையினிற் சுட்டெரிந்த கொள்ளிக்
கட்டைவிற காக்கிவிட்டாய் கண்ணே பராபரமே. 26

வேல்விழியார் காம வேட்கை யளற்றிலெனைக்
கால்மாற்ற விட்டுவிட்டாய் கண்ணே பராபரமே. 27

வீடுகா டென்று விதித்ததுவு மல்லாமற்
காடுவீ டாகவிட்டாய் கண்ணே பராபரமே. 28

ஓடாம லோடி யுலகைவலஞ் சுற்றுதற்கோ
காடோட வாக்கிவிட்டாய் கண்ணே பராபரமே. 29

ஈடோயா னுன்றனக்கு மென்மீதி லேனுவிக்
காடிகயஞ் செய்துவிட்டாய் கண்ணே பராபரமே, 30

அச்சமிலாப் புல்வேட ரைவருக்கு மென்னறிவைக்
கைச்சூறை யாக்கிவிட்டாய் கண்ணே பராபரமே. 31

வில்லங்க மற்று விளக்கொளிபோ னின்றநெஞ்சைக்
கல்லங்க மாக்கிவிட்டாய் கண்ணே பராபரமே. 32

மண்ணாதி மூவாசை மாமாயை முக்கூட்டுங்
கண்ணியுட்சிட் டாக்கிவிட்டாய் கண்ணே பராபரமே. 33

கொண்டணைத்துக் கொள்ளும் குணங்குடியான் சீரடியைக்
கண்டணைக்க நீயருளாய் கண்ணே பராபரமே. 34

எட்டி லெழுதொண்ணா விறையேயுன் றன்வடிவைக்
காட்டிக் கொடுத்தருளாய் கண்ணே பராபரமே. 35

மைச்சினிச்சி போலு மணக்கோலப் பெண்போலுங்
கைச்சரசஞ் செய்தருளாய் கண்ணே பராபரமே. 36

நிதியாசை யற்று நிரஞ்சனமாய் நின்றிடநற்
கதியாசை தந்தருளாய் கண்ணே பராபரமே. 37

நாதவிந்தால் நின்றதுவு நானென் றுபதேசங்
காதி லுரைத்தருளாய் கண்ணே பராபரமே. 38

மாதவசி யாகி மலைமுழையிற் புக்குன்மேற்
காதலொன்று தந்தருளாய் கண்ணே பராபரமே. 39

நிர்க்குணத்தைக் கொண்டு நிருவிகற்பஞ் சாதிக்கக்
கற்குணத்தைத் தீர்த்தருளென் கண்ணே பராபரமே. 40

சென்மக் தொலைத்தடிமை சின்மயமாய் நின்றிடவுங்
கன்மக் தொலைத்தருளாய் கண்ணே பராபரமே. 41

சிந்தை யொளிபரப்பிச் சிதறுவன் கண்டாயோ
கந்தனையுந் தந்தருளாய் கண்ணே பராபரமே. 42

அஷ்டாங்க யோகமதி லாசையற வேயெனது
கட்டைவெட்டு முன்னருளாய் கண்ணே பராபரமே. 43

விற்புருவத் தூடு விளங்குமொளி பந்தாடக்
கற்பித் தருளாயென் கண்ணே பராபரமே. 44

ஒப்பி லருளாழி யோடவடி யேற்குமொரு
கப்பலாய் வந்தருளாய் கண்ணே பராபரமே. 45

உனையாள்வோ மென்றடிமை யுள்ளங் குளிர்ந்திடநின்
கனிவாய் திறந்தருளாய் கண்ணே பராபரமே. 46

பொய்கோத்த மெய்யதனைப் போட்டுவிடு முன்னமெனைக்
கைகோத் தணைத்தருளாய் கண்ணே பராபரமே. 47

வாய்ச்சதெனக் கென்று மகிழ்ச்சிகொண்டு நின்றிடநின்
காட்சி யளித்தருளாய் கண்ணே பராபரமே. 48

மலைக்கு மலைதிரிந்து மனுவாக வேழைமனக்
கலக்கந் தவிர்த்தருளாய் கண்ணே பராபரமே. 49

நாணு மடவாரை நான்கைதழு வக்கனவுங்
காணுது காத்தருளாய் கண்ணே பராபரமே. 50

தொண்டரிடஞ் சென்றிடவுந் தொண்டுசெய்து நின்றிடவும்
கண்டித்து வைத்தருளாய் கண்ணே பராபரமே. 51

மூலவர்க்க மாக முழுமதிப்பா லுங்கொடுத்துக்
காலபயந் தீர்த்தருளாய் கண்ணே பராபரமே. 52

சோற்று லெடுத்த சுவரிடியா மற்பாது
காத்துமுகம் பார்த்தருளாய் கண்ணே பராபரமே. 53

மூலக் கனன்மூட்டி மூட்டிவரு காலரையுங்
காலா லுதைத்தருளாய் கண்ணே பராபரமே. 54

சிட்டனென வும்பூசை செய்தேனு மிப்பாவிக்
கட்டைகடத் தேறவைத்தாள் கண்ணே பராபரமே. 55

எட்டுமோ ரெட்டையுமெட் டெட்டுக் கமிறதனுற்
கட்டவுகல் விஷ்டம்வைத்தாள் கண்ணே பராபரமே. 56

ஆதார மாறு மடுக்கடுக் காக்கடத்திக்
காதுக்குமே லேற்றிவைத்தாள் கண்ணே பராபரமே. 57

கும்பித்தி ரேசித்துட் கொள்ளும் படிக்குதவிக்
கம்பமுனைக் காட்டிவைத்தாள் கண்ணே பராபரமே. 58

பட்டிப் பசுப்பாலைப் பக்குவத் துடன்காலைக்
கட்டிக் கறந்தளித்தாள் கண்ணே பராபரமே. 59

நில்லா வுடற்கு நிலையங் கொடுக்குமொரு
கல்லாவின் பாலளித்தாள் கண்ணே பராபரமே. 60

சோமப்பா னூட்டிச் சுரந்தவா மப்பாலுங்
காமப்பா லுங்கொடுத்தாள் கண்ணே பராபரமே. 61

மண்டைகடு மண்டலத்துண் மண்டியமு துண்டிடவுங்
கண்டங் கடத்திவைத்தாள் கண்ணே பராபரமே. 62

மூலாதா ரத்துண் முளைகொண் டுயர்ந்தெழுந்த
காலாற் கனலெறித்தாள் கண்ணே பராபரமே. 63

ஆயுங் கலையிரண்டு மாயா தடக்கியென்றன்
காய நிலைக்கவைத்தாள் கண்ணே பராபரமே. 64

அற்ப வுடலா லருந்தவமே புரிந்திடவுங்
கற்பமுறை கைக்களித்தாள் கண்ணே பராபரமே. 65

அண்டபிண்ட மென்றுநின் றாடுந் திருக்கூத்தைக்
கண்டுகளி கூரவைத்தாள் கண்ணே பராபரமே. 66

எண்ணாத வெண்ணமெல்லா மெண்ணும லென்றன்மனக்
கண்ணாடிக் குள்ளளித்தாள் கண்ணே பராபரமே. 67

எவ்வுலகுந் தானா யிருந்தவனை யான்றொழவுங்
கவ்வுமலக் கட்டறுத்தாள் கண்ணே பராபரமே. 68

அற்ப வுடல மழிந்திடுமுன் றீபமிட்ட
கர்ப்பூர மாக்கிவைத்தாள் கண்ணே பராபரமே. 69

விலங்கினங்க ளோடு வீற்றிடவு மேழைநெஞ்சு
கலங்காத வண்ணம்வைத்தாள் கண்ணே பராபரமே. 70

அடுத்துக் கெடுக்கு மரிவையர்க்கா ளாகாமற்
கடக்கக் கடத்திவைத்தாள் கண்ணே பராபரமே. 71

காற்றக் தொலைய கறவணையு காரியர்தங்
காற்றும் படாதுவைத்தாள் கண்ணே பராபரமே. 72

ஆணிப்பொன் மேரு வாழுணையு முன்னடிமை
காணுங் கருணைவைத்தாள் கண்ணே பராபரமே. 73

வனவாச மேக வரமளித்துன் பொற்பதத்தைக்
கனமா யிறைஞ்சவைத்தாள் கண்ணே பராபரமே. 74

எட்டிப் பிடித்தாலு மெட்டாது நின்றவனைக்
கட்டிப் பிடிக்கவைத்தாள் கண்ணே பராபரமே. 75

மதபேத மோதி மறைக்குமறை சொல்வதெல்லாங்
கதையாய் முடித்துவைத்தாள் கண்ணே பராபரமே. 76

அண்டபிண்ட மாயுமதற் கப்பாலு நின்றுவெளி
கண்டவனைக் காட்டிவைத்தாள் கண்ணே பராபரமே. 77

உலையி விடுமெழுகா யுள்ளம் பதைத்துருகிக்
கலங்கியதுங் கண்டிலையோ கண்ணே பராபரமே. 78

வெம்பிமிக நொந்தேன் மெலிந்தேனென் கண்ணீருங்
கம்பலையுங் கண்டிலையோ கண்ணே பராபரமே. 79

மெத்த மயலுற்று விருப்பமொடு பன்னூலுங்
கற்றுப்பா ழாக்கிவிட்டேன் கண்ணே பராபரமே. 80

பாலங் கடந்துபெரும் பாதைகட வாமலும்வீண்
காலங் கடத்திவிட்டேன் கண்ணே பராபரமே. 81

பூத்த மலரெடுத்துன் பொன்னடியை யானுமென்றுங்
காத்திருந்து பூசைசெய்வேன் கண்ணே பராபரமே. 82

விண்கொண்டு நின்று விளங்குமுனை யெக்காலங்
கண்கொண்டு காண்பேனென் கண்ணே பராபரமே. 83

ஐயோவென் செய்கிற்பே னொருமற்ற பாவியநீ
கையைவிட லாமோவென் கண்ணே பராபரமே. 84

கட்டைகடு வீடுசென்று காஞெளித்தி ருந்துணையுங்
கட்டித் தழுவேனே கண்ணே பராபரமே. 85

அல்லும் பகலு மடியேன் படுந்துயர்க்குக்
கல்லுங் கரைந்திடுமென் கண்ணே பராபரமே. 86

பொன்னைப்பு தைத்துவைத்துப் போவா ருளர்தோறுங்
கன்னங் கருநிறங்காண் கண்ணே பராபரமே. 87

பணத்தைப் பணமெனவும் பார்த்ததுண்டோ வுன்றனுக்
கணக்குத் தெரியாதோ கண்ணே பராபரமே. [கென்

கிற்கும் பொழுதாடை கெகிழ்ந்தா லுபசாரங்
கைக்குஞ் சொல்வதுண்டோ கண்ணே பராபரமே. 89

தடையி லுலகனைத்துந் தானு யிருந்துமொரு
கடுகிடையு மானுயென் கண்ணே பராபரமே. 90

உனக்கு ளெனைமறந்தோ ருள்ளக் கருத்திலுன்மாங்
கனிக்குளுரு வண்டானுய் கண்ணே பராபரமே. 91

கெக்குருகி நின்ற நிலைதோன்ருய் நிர்க்குணத்தார்
கைக்குட்படிக் தாடிகின்ருய் கண்ணே பராபரமே. 92

பதித்த மனம்வாழி பரமார்த்த மும்வாழி
கதித்த நிலைவாழி கண்ணே பராபரமே. 93

அத்துவிதம் வாழி யறிவகண்டி தம்வாழி
கர்த்தனே நீவாழி கண்ணே பராபரமே. 94

தற்பர மேவாழி தாராதுங் தக்துதவுங்
கற்பகமே வாழியென் கண்ணே பராபரமே. 95

சிற்பரமே வாழி சிவயோ கியர்வாழி
கற்பனையெல் லாம்வாழி கண்ணே பராபரமே. 96

கற்பதவி யும்வாழி கவினன் மறைவாழி
கற்பதா ரிகள்வாழி கண்ணே பராபரமே. 97

சித்தர் கணம்வாழி சின்மயக் தான்வாழி
கர்த்தவியம் வாழியென் கண்ணே பராபரமே. 98

மாதவத்தோ ரும்வாழி மவுனமுத்தி ரையும்வாழி
காதலித்தோ ரும்வாழி கண்ணே பராபரமே. 99

குவலயத்தோ ரும்வாழி குணங்குடியா ரும்வாழி
கவலையற்றோ ரும்வாழி கண்ணே பராபரமே. 100

கண்மணிமாலைக் கண்ணி முற்றுப்பெற்றது.

ஆக பாடல் 880.

மனோன்மணிக் கண்ணி.

மெய்தொழுவு மேலு மேலுகத்தி கேஸ்வரனைக்
கைதொழ வுங்கனவு கண்டேன் மனோன்மணியே. 1

கோப்பா கழுனையான் கொண்டாடிப் பாடவுநீ
காப்பாக வுங்கனவு கண்டேன் மனோன்மணியே. 2

பெண்கணிர்த்தத் தோடுனையான் பிரியா மணம்புணரக்
கண்களுறங் காக்கனவு கண்டேன் மனோன்மணியே. 3

மலர்த்திருக்கும் பொற்கமல மணவரைமி லிருவருங்கை
கலந்திருக்க வுங்கனவு கண்டேன் மனோன்மணியே. 4

மெய்மஞ்சட் குளிர்ப்புங்கண் விழிப்புமெக் களிப்புமெனைக்
கைமிஞ்ச வுங்கனவு கண்டேன் மனோன்மணியே. 5

மைத்திட்ட வுங்கயற்கண் மலரின் மலர்முலையிற்
கைபூட்ட வுங்கனவு கண்டேன் மனோன்மணியே. 6

மெய்தழுவ வும்மிருவர் மெய்யோடு மெய்செருக்கக்
கைதழுவ வுங்கனவு கண்டேன் மனோன்மணியே. 7

வாமப்பா லைப்பெருக மறுவாலி பம்வருக
காமப்பா லுண்ணக்கனவு கண்டேன் மனோன்மணியே 8

பாலனை கவுங்கான்ற பாலுணவு மென்னைவிட்டுக்
காலனே கவுங்கனவு கண்டேன் மனோன்மணியே. 9

வடியா வருளமிர்தம் வடியவடி யக்குணக்
குடியா ரொடுகனவிற் குடித்தேன் மனோன்மணியே. 10

கோடி பெருமதிகள் கூடுமொரு மதிபோல்
வாடியெம் மானேபெம் மானே மனோன்மணியே 11

கண்ணேயென் கண்மணியே கண்குளிர்ந்த கட்டழகுப்
பெண்ணே யமிர்தப் பிழம்பே மனோன்மணியே. 12

பெண்ணே மயிலினமே போனமே யென்றுனையென்
கண்ணிற் கிடக்கவென்று காண்பேன் மனோன்மணியே. 13

வன்ன வுடைக்குமுன் றன்வால வயதினுக்கும்
அன்ன நடைக்குமென்ற னைசை மனோன்மணியே. 14

கூந்த லிலங்கக் குரும்பைத் தனங்குலுங்க
சேர்ந்து நடம்புரிந்து நிற்பாய் மனோன்மணியே. 15

துவளுக் துடியிடையுந் தோகை மயினடையும்
பவள விதழுமென்று பார்ப்பேன் மனோன்மணியே. 16

மலர்மாலை கள்கிடந்து மார்பிற்பின்ன லாடுமுன்றன்
அலர்முலையும் யானென் றணைவேன் மனோன்மணியே. 17

வெய்யிற்பட் டாலும் வெதும்புமுட லாயுனது
மெய்யிற்றொட்டா லுங்கதம்பம் வீசும் மனோன்மணியே. 18

காற்றுப்பட் டாலுங் கலங்குமென்றன் மேனியுனி
பார்த்துத் தொடவின்பம் படைப்பேன் மனோன்மணியே.
பிடியாரைப் போலும் பிடிப்பேன் முலையைக்குணங்
குடியாரைப் போலுங் குடிப்பேன் மனோன்மணியே. 20
கூந்தலுக்கு நெய்தோய்த்துக் குளிர்மஞ்ச னீராட்டி
வார்த்துசிங் காரித்து வைப்பேன் மனோன்மணியே. 21
காலிற்பனி நீர்விட்டுக் கழுவிமடி மீதுவைப்பேன்
மேலிலத்த ரும்பூசி விடுவேன் மனோன்மணியே. 22
காதம் பரிமளிக்குங் கஸ்தூரி பொட்டிடுவேன்
போதுஞ்சவ் வாதணிந்து புணர்வேன் மனோன்மணியே. 23
தலைக்குமி றுக்கெண்ணெய்தடவிச்சடை பின்னிவைப்பேன்
முலைக்குவன்ன கச்சிறுக்கி முடிப்பேன் மனோன்மணியே.
கட்டாடை வர்க்கமெல்லாங் கண்டு களித்துயர்ந்த
பட்டாடைவர்க்கம்வைத்து படைப்பேன் மனோன்மணியே.
மூக்குகுத்தி காதுகுத்தி முழுவயிரத் தூக்கிவைப்பேன்
கோக்குமுத்துத் தூக்குமுத்துங் குவிப்பேன் மனோன்மணி
கைக்குஞ் சுரிகடகங் கல்லுமிழைத் துக்கொடுப்பேன் [யே.
மொய்க்குழற்குஞ் சடைப்பில்லை முடிப்பேன்மனோன்மணி
தங்கக்கொலு சுஞ்சிலம்புத் தண்டைரத்ந பாடகமுங் [யே
கொங்கைக்கு மோகனமாலை கொடுப்பேன் மனோன்மணியே
காலாழி பீலிமுதற் கன்னகையும் பொன்னகையும்
காலாட் சுமைவேண்டி னடக்கு மனோன்மணியே. 29
முடிமீ திலுமகுட முடிசூட்டு வேனற்குணங்
குடிமா தவர்கள்குலக் கொழுந்தே மனோன்மணியே. 30
சன்னிதா னத்திற் சரணஞ் சரணமென்று
சொன்ன மலர்தாவித் தொழுவேன் மனோன்மணியே.* 31

கர்ப்பூர மேற்றிக் கரத்திப வாலாத்தி
எப்பாரும் போற்ற வெடுப்பேன் மனோன்மணியே 32

முக்கால மும்பூசை முடிப்பேன்முக் காலமல்லால்
எக்கால மும்போங்க விடுவேன் மனோன்மணியே. 33

சாதக்தளி கைசமைத்துச் சாம்பிராணித் தூபமிட்டு
பாதக் தொழுதிட்டுப் படைப்பேன் மனோன்மணியே. 34

பச்சை பருப்புமுதற் பருப்பிற்பத்து வகைகடைவேன்
வச்சகறு நெய்யுருக்கி வார்ப்பேன் மனோன்மணியே. 35

முட்டை பொரிப்பேன் முழுக்கோழி யும்பொரிப்பேன்
தட்டைபீங் கானிற் றருவேன் மனோன்மணியே. 36

ஆட்டுக்கறி யும்கொள்வே னதிலனந்தம் வகைசமைப்பேன்
கூட்டுக்கறி யும்பண்ணிக் கொடுப்பேன் மனோன்மணியே.

குட்டிக் கறிதானுங் குழம்புபண்ணித் தாளித்தோர்
சட்டிக் கறியேனுக் தருவேன் மனோன்மணியே. 38

பால்பழமுந் தேனும் பலகார வர்க்கங்களும்
மேலும்மேலும் கான்பரப்பி விடுவேன் மனோன்மணியே.

அடிக்கா பிரம்பொன்வில யானைலு மீக்துகுணங் [யே
குடிக்குண்மா விளைக்கட்டிக் கொடுப்பேன் மனோன்மணி

ஆணிப்பொன் மதிலுயர்ந்த வரன்மனையுந் தீர்ப்பாக
மாணிக்க மேவிளக்கா வைப்பேன் மனோன்மணியே. 41

துலங்குமணி மண்டபமுஞ் சொர்க்கமென வுமிலங்கா
திலங்குமலங் காரஞ்செய் திடுவேன் மனோன்மணியே. 42

ரத்தினங்கள் வைத்திழைத் திராவைப் பகலாக்குஞ்
சித்திரங்கள் வகைவகையாய்ச் செய்வேன் மனோன்மணியே

மண்ணு யழுத்தாமன் மனமே முழுவதிலுங்
கண்ணாடி யுரமிருக்கக் காண்பேன் மனோன்மணியே. 44

மங்கா தொளிபரப்பும் மவுனமணி யாளுமொரு
சிங்கா சனமேடை செய்வேன் மனோன்மணியே. 45

காற்காலி கட்டில்பல கற்பவள வாசனங்கள்
நீக்கமறச் சுற்றும் நிறைப்பேன் மனோன்மணியே. 46

பாதம்பூ சித்துப் பணிவிடைகள் செய்துநிற்க
மாதர்க ளோவனந்தம் வைப்பேன் மனோன்மணியே. 47

புவனத் தரசரெல்லாம் போற்றி பணியவென்றன்
மவுன மலரணைமேல் வாழ்வாய் மனோன்மணியே. 48

கட்டிலினுங் கூடி களிகூர்ந்து கொண்டிருப்போம்
தொட்டிலினு மாடிச் சுகிப்போ மனோன்மணியே. 49

முடிமன்னர் தம்வாழ்வு முதலெவையு மெங்கள்குணங்
குடிமன்னர் தம்வாழ்வுங் கொடுப்பேன் மனோன்மணியே.

சொர்ன்ன மலைமலையாய்த் தொகைவகையி லாதளிக்குங்
கர்ண னெனவுமெனைக் காண்பாய் மனோன்மணியே. 51

போதத் தனம்புதைத்த பொக்கிஷமுங் கைகுவிப்பேன்
பாதத்தி னங்குவிழ்ந்து பணிவேன் மனோன்மணியே. 52

கிடையாப் பொருள்களெல்லாங் கிடைக்குமுன்ன நீயுமென்றுற்
படையாய் பொருள்களெல்லாம் படைப்பாய் மனோன்மணியே. 53

தானா சமுத்திரம்போற் சான்றோர்க்கெல் லாமளிப்பாய்
சேனா சமுத்திரமுஞ் சேர்ப்பாய் மனோன்மணியே. 54

முடிதூக்கு மன்னர் முதலெவரு முன்வாயிற்
படிகாக்கும் வாழ்க்கை படைப்பாய் மனோன்மணியே. 55

கவிராஜ ரும்விருது கட்டியங்கள் கூறிநிற்பார்
தவராஜ ரும்போற்றத் தவருர் மனோன்மணியே. 56

உன்மீதி லாசித் துயிர்பொருளுன் ரூட்களிப்ப
என்மீதி லாசையுனக் கிலையேன் மனோன்மணியே. 57

உள்ள துரியதெல்லா மொப்புகொண்ட பின்னலவோ
கள்ள மனம்படைக்கக் கற்றாய் மனோன்மணியே. 58

வேசைக் குணத்தை விரும்புவா யென்றறிந்தாற்
காசைப் பணத்தைகான் காட்டேன் மனோன்மணியே. 59

படையாதெல் லாமென்றாற் படைத்துப்பர தேசிகுணங்
குடியாரை யோதேடிக் கொண்டாய் மனோன்மணியே. 60

உத்தமிப்பெண்ணென் றுவக்தேனிப் போதுன்றன்
பத்தினித்தனத்தைகன்றாய்ப் பார்த்தேன் மனோன்மணியே

எண்பத் துனக்கிருக்தா விராஜ ராஜேஸ்பரியாய்
ஐம்பத்தாறு தேசமுமீ யாள்வாய் மனோன்மணியே. 62

உள்ள மணவாள னுனக்கெவனோ வென்னைவிடக்
கள்ளமண வாளனிச்சை கடிதோ மனோன்மணியே. 63

வேசியென்ற பேர்படைத்து வெளியிற்புறப் பட்டவளைத்
தாசியென்று சொல்லத் தகாதோ மனோன்மணியே. 64

ஆடாது மாடி யவிசாரி யானவுனைப்
பாடாதும் பாடிலென்ன பயமோ மனோன்மணியே. 65

மூக்கு முனக்குமுழம் மூன்றேனோ பத்தினிபோல்
காக்கு முனக்குமுழ காலேன் மனோன்மணியே. 66

பானைச்சோ றெல்லாம் பதம்பார்த்துத் தின்றதினி
யான மழியி லுயிர் மயிர்தான் மனோன்மணியே. 67

இனிக்கண் டறிக்துகொள் விவணென் பிள்ளையானுற்
தனிக்கண்ட போதுபுத்தி தருவான் மனோன்மணியே. 68

பல்லை யிதழ்க்கடிக்கப் பானை தடியொடிக்கக்
கல்லைத்தேங் காயொடைக்கக் காண்பாய் மனோன்மணியே.

தடிபோ லிருந்துனையான் சாதிகெட்ட பாழுங்குணங்
குடியார்க்கெப் படிகூட்டிக் கொடுப்பேன் மனோன்மணியே.

போனதெல்லாம் போச்சு பொழுதும் விடிக்ததினி
யானதெல் லாமனத்தி னோடேன் மனோன்மணியே 71

மல்லார்ந்து நான்படுத்து மார்பிற்றுப்பிக் கொண்டுமினும்
பல்லைக்குத்தி யுமுகர்ந்தோ பார்ப்பேன் மனோன்மணியே.

என்னைவிட்டால்மாப்பிள்ளைமா ரெத்தனையோவுன்றனுக்கே
உன்னைவிட்டாற் பெண்ணெனக்கு முண்டோ மனோன்மணியே

தடித்தனமே செய்தாலுஞ் சமுசாரத் திற்படித்து [யே
குடித்தனஞ்செய் தாலென்மனக் குறையோ மனோன்மணி

தொடுத்தணைத்துக் கொண்டேதுயில்வன்மற்றநேரமெல்லா
மெடுத்தணைத்துக் கொண்டே யிருப்பேன்மனோன்மணியே.

படுத்துப் படுத்துநெஞ்சிற் பளிச்பளிச் சென்றுமுத்தம்
கொடுத்துக் கொடுத்துநான் கொள்வேன் மனோன்மணியே.

வன்னச் செழும்பவள வாயிதழூ றல்சுவைத்துன்
கன்னத்தில் வீழ்ந்து கடிப்பேன் மனோன்மணியே. 77

கர்சிறுக்கு மாதரின்பங் கைச்சிறுக்கும் போதவின்பம்
வைச்சிறுக்குங் கொங்கையிற்கை வைப்பேன் மனோன்மணியே

தித்தித் தொழுகுகாம தேனமுர்த வூறலுண்பேன்
முத்திதழு வித்தழுவி முகப்பேன் மனோன்மணியே. 79

படியோர்க்கெல் லாமுயன்ற படியோர்க ளானகுணங்
குடியோர்கள்போலுமின்பங்கொள்வேன் மனோன்மணியே.

சேயாயு மென்மடியிற் செங்கிரை யாடியருட்
டாயாயு மங்கை தருவாய் மனோன்மணியே. 81

அங்கைதந்து தந்தே யணைத்தா ருள்ளமிர்தங்
கொங்கைதந்து தந்தே கொடுப்பாய் மனோன்மணியே. 82

தாவியணைத் தணைத்தென் ருயேயுனை யென்றிந்தப்
பாவி மடியில்வைத்துப் பார்ப்பேன் மனோன்மணியே. 83

ஏங்கியழு வேனோவுன் னிணையடியைக் காணுமற்
றூங்கிவிழு வேனோவென் றோழி மனோன்மணியே. 84

உலைபோ லெறியுமென்ற னுளங்குளிர மேல்வளர்ந்த
மலைபோ லெழுந்தருளி வருவாய் மனோன்மணியே. 85

கன்ம மறுவதெந்தக் காலமோ யானறியேன்
நன்மை தருவதெந்த நாளோ மனோன்மணியே. 86

பன்னீ ரொழுகுமுன்றன் பாத மலரையென்றன்
சென்னிமீ தென்றுமருள் செய்வாய் மனோன்மணியே. 87

தாயினுமிக் காங்கருணைத் தயாநிதியே யிவ்வுயிரை
காயினுமிக் காங்கடலே னவின்றேன் மனோன்மணியே.

கால்பிடித்துக் கண்ணில்வைத்துக் கைக்குவித்து மெய்மயங்கி
மால்பிடித்துச் சொன்னதெல்லாமகிழ்வாய் மனோன்மணியே

அடியானை யுன்னடியார்க் கடியானு மாக்கிகுணங்
குடியா னெனப்பிரியங் கொடுப்பாய் மனோன்மணியே. 90

உச்சிதவச் சிரமலையே யொப்பிலா மாணிக்கமே
கச்சிதப் பச்சைமர கதமே மனோன்மணியே. 91

செப்புரு வாணிமுத்தே சிறந்தபவ ளக்கொடியே
புட்பரா கக்கமலப் பூவே மனோன்மணியே. 92

கோமே தகமே குளிர்ந்தவயி டூரியமே
மாமேரு லேநீல மலையே மனோன்மணியே. 93

வற்று வருட்செல்வ வாழ்வேகரு ணாநிதியே
பொற்று மரைக்கமலப் பொகுட்டே மனோன்மணியே. 94

அல்லி மலரே யலர்செங்கழு நீர்மலரே
மல்லிகைக் கொத்து மலரே மனோன்மணியே. 95

பொன்மலரே பன்மலரே புகழ்தருபன் னீர்மலரே
மன்மத பாணமா மலரே மனோன்மணியே. 96

குடலை நிறைக்தொரு கொத்தலரிச் செம்மலரே
மடலவிழ்ந்த செந்தாமரை மலரே மனோன்மணியே. 97

பூக்கு மருண்மலரே புளிக்காத மாமலரே
வாக்கு மலரேகண் மலரே மனோன்மணியே. 98

வஞ்சியர்செய் மோசமுடன் மறலிசெயு காசத்திற்
கஞ்சி யுனக்கடிமை யானேன் மனோன்மணியே. 99

அடியாரும் வாழியிக்த வடியேனும் வாழிகுணங்
குடியாரும் வாழிகுணக் குன்றே மனோன்மணியே. 100

உமையாள்பாத முன்னிற்க.

ஆதியந்தங் கடந்தவுமை யாடன் பாதம்
அகண்டபரி பூரணமா மையர் பாதஞ்
சோதியந்தங் கடந்தகண பதியின் பாதந்
தொழுநிறைஞ்சிக் கரங்குவித்தும் போற்றி செய்து
வாதியந்தங் கடந்தகந்தி பாத மென்றும்
வாலைமனோன் மணியம்மை பாத மென்றும்
ஓதியந்தங் கடந்தகண்ட மிரண்ட தாக
ஒன்றுமறி யாவறிஞ ருரைசெய் தானே.

மனோன்மணிக் கண்ணி முற்றுப்பெற்றது.

ஆக பாடல் 980.

நந்தீஸ்வரக் கண்ணி.

ஆதிபந்தங் கடந்தவுமை யாளருணை தாந்தச்
சோதியந்தங் கடந்தசெழுஞ் சுடரேநந் தீஸ்வரனே. 1

முடியடியாய் நின்றநடு மூல மணிவிளக்கே
அடிமுடியாய் நின்றநடு வணையேநந் தீஸ்வரனே. 2

கர்த்தனே யானுன் கருணைத் திருவடிக்கே
எத்தனை தான் தெண்ட னிடுவேனநந் தீஸ்வரனே. 3

தீர்க்கதெண்ட னிட்டேன் றிருவடியைப் போற்றிசெய்தேன்
வாக்கு கடக்க வரமருணந் தீஸ்வரனே. 4

மாசில் பரவெளியே மவுனமணி மாளிகையில்
வாயிற் பெருவழியே மகத்தேநந் தீஸ்வரனே. 5

மகத்தோனே ஞான மழையே யருள்வெள்ள
முகத்தோனே மோன முனையேநந் தீஸ்வரனே. 6

ஞானம் விளைவேற்று நல்லசமு சாரிகட்கு
மோன மழையூற்றி முகிலேநந் தீஸ்வரனே. 7

மும்மூல யோக முழுதுஞ்சித்தி செய்துதர
உன்னாலே யாகு முயிரேநந் தீஸ்வரனே. 8

சமர்கொடுத்து வென்றேங்கு சாம்பவியைக் கைப்படுத்தித்
தமர்விடுத்து நீக்கித் தருவாய்நந் தீஸ்வரனே. 9

நல்லோர்க்கு நீகாட்ட நல்குங் குணங்குடிவாழ்
வெல்லோர்க்கு நீகாட்ட வெளிதோநந் தீஸ்வரனே. 10

இல்லி னிடங்காட்டி யிதழ்விரியுஞ் செங்கமல
வல்லி னிடங்காட்டி வைப்பாய்நந் தீஸ்வரனே. 11

சாமிதனை யுஞ்சுத்த சைதந்நிய மானசிவ
காமிதனை யும்மென்று காண்பேனங் கீஸ்வரனே. 12

உமையாளு மெய்யா யுவந்தடிமை கொள்ளும்வண்ணம்
எமையாளு மையா விறையேகங் கீஸ்வரனே. 13

கேசரத்தைக் காட்டிக் கிளரொளியா டன்னருட்பால்
ஆசரித்தே யூட்ட வருள்வாய்கங் கீஸ்வரனே. 14

சத்தி சிவமுதலாச் சாம்பவியம் பாளருளிற்
செத்த சிவமுதலா சித்தாம்கங் கீஸ்வரனே. 15

சித்தானை யீன்ற சிறுபெண்ணைக் தாளிரண்டு
பெற்றானை யென்றோ புணர்வேனங் கீஸ்வரனே. 16

பத்து வயதுடைய பாவையரை யன்றோ நீ
சித்தர்க்கெல் லாந்தாயாய்ச் செய்தாய்கங் கீஸ்வரனே. 17

காமரூபி யைநித்திய கல்யாண சுந்தரியை
ஓமரூபி யையெற்கு முதவுகங் கீஸ்வரனே. 18

கேசரியா டன்கருணை கிட்டினன்றோ வாசாம
கோசரவாழ் வெல்லாம் கொடுப்பாய்கங் கீஸ்வரனே. 19

மூலவொளி சூட்டி மோனக் குணங்குடிக்கும்
மேலைவழி காட்டி விடுவாய்கங் கீஸ்வரனே. 20

கண்டப்பா லங்கடத்தி கமலாசனத் தேற்றி
அண்டப்பா லுங்கொடுத்தே யருள்வாய்கங் கீஸ்வரனே. 21

செங்கமல பீடச் செல்வியர்தாஞ் சித்தம்வைத்தாற்
றங்கமலை கூடத் தருவாணங் கீஸ்வரனே. 22

போதகத்தைப் பூட்டிப் புருவமையத் தாயெற்கும்
வாதவித்தைக் காட்ட வருவாய்கங் கீஸ்வரனே. 23

ரசயோக சித்து காயனருளினா லடிமை
நிசயோக முற்று நிலைப்பேனந் தீஸ்வரனே. 24

மகாவித்தை காய்ப்பதற்கு மதியமிர்த ஆறதுண் டே
லகிரியுற்று நிற்பதற்கு லபிப்பாய்கந் தீஸ்வரனே. 25

குப்பை வழலையெனுங் கோழையெல்லாங் கக்கவைத்துக்
கற்ப வழலைவரக் காட்டுகந் தீஸ்வரனே. 26

கற்ப வழுவரக் காட்டிகற்ப முண்டதற்பின்
பற்ப வழலைமுறை பகர்வாய்கந் தீஸ்வரனே. 27

சூதமுத னீற்றிச் சொன்னமதி யமிர்தப்பிர
சாதமதி ஊற்றித் தருவாய்கந் தீஸ்வரனே. 28

அற்பமாங் தேகமதா யடியே னெடுத்தவுடல்
கற்பதேக மாகக் கணிப்பாய்கந் தீஸ்வரனே. 29

உமைகம்பி ணேர்வாழு மோங்கு குணங்குடியார்க்
கெமனும் பிணையாரு மெதிரோகந் தீஸ்வரனே. 30

முனீஸ்வரரி லொன்றாய் முடித்தருள்வா யாகிலெனைச்
சனீஸ்வரர் கூடச் சாட்டாய்கந் தீஸ்வரனே. 31

காலனும் போய்விடுவான் காலங் கடந்துசிறு
பாலனு மாய்விடுவேன் பரமேகந் தீஸ்வரனே. 32

கவன மணிமுதலாய்க் கட்டியென் கைக்களிக்க
மவுன மணித்தாய்க்கு வகுப்பாய்கந் தீஸ்வரனே. 33

மாயை வலைவீசி மயக்காம லென்றன்மேல்
நேய வலைவீச நிகழ்த்துகந் தீஸ்வரனே. 34

தோகை யிளமின்னார் சுகபோக மும்பரியும்
போக வழிச்சொன்னாற் போதுங்கந் தீஸ்வரனே. 35

பெண்ணா யுலகமெல்லாம் பிணக்காட தாக்கியையோ
மண்ணாய் மடிவதென்ன மாயம்கந் தீஸ்வரனே. 36

கையோகப் பித்தைவெல்லச் சமர்த்தோடு கச்சைகட்டு
மெய்யோக புத்திசொல்ல வேண்டும்கந் தீஸ்வரனே. 37

பாஷாண்டி கடோறு பலனொன்று மின்றிவெறும்
வேஷாண்டி யாக்கி விடுகாணாந் தீஸ்வரனே. 38

பிணம்பிடுங்கித் தின்னும் பேய்போற் சிலநுளையர்
பணம்பிடுங்கித் தின்பதென்ன பாவம்கந் தீஸ்வரனே. 39

பணமுடியா னென்றும் பவம்பிடியா னென்றுமெனைக்
குணங்குடியா னென்றுங் குறிப்பாய்கந் தீஸ்வரனே. 40

உன்னையன் றியேழை யோரே ரொருவரையும்
அன்னையென்று மாள வருள்வாய்கந் தீஸ்வரனே. 41

ஆத்தானைத் தேடி யலைந்தலைந்து விண்பறக்குங்
காற்றாடி யானேனென் கண்ணோகந் தீஸ்வரனே. 42

மான்பிரிந்த கன்றாய் மயங்குதற்கென் றாய்வயிற்றி
லேன்பிறந்த கண்றே யிருந்தேனாந் தீஸ்வரனே. 43

ஏனோ வெனையீன்றா ளெந்தாயிவ் வாறுசெயத்
தானோ விதானுமென்செயத் தானோகந் தீஸ்வரனே: 44

தாய்தாயே யென்றே தலைப்புரட்டக் கொண்டுவெறு
வாய்வாயை மென்றோ மடிவேனந் தீஸ்வரனே. 45

தாயைவிட்டுப் பிள்ளை தவிப்ப தறிந்தவுடன்
சேயையிட்டம் வைத்தணைக்கச் செய்வாய்கந் தீஸ்வரனே.

கன்றினுக் கேயிரங்குங் காலியென வென்னனைதான்
என்று மெனக்கிரங்க விசைப்பாய்கந் தீஸ்வரனே. 47

மாயை மணமுடித்து மயக்கா தெனையீன்ற
தாயை மணமுடித்துத் தருள்வாய்கந் தீஸ்வரனே. 48

தற்பரத்தி னல்வெளியே சர்வபரி பூரணமே
சிற்பரத்தி னேரொளியே சிவமேகந் தீஸ்வரனே. 49

முத்தரெலாம் வாழியெங்கண் மோனமணித் தாயருளுஞ்
சித்தரெலாம் வாழிசுத்த சிவமேகந் தீஸ்வரனே. 50

குற்றம் பலநீக்கிக் குணங்குடியென் றேமேவுஞ்
சிற்றம் பலமவாழி சிவமேகந் தீஸ்வரனே. 51

கட்டளைக் கலித்துறை.

மடக்கி மடக்கி வருமா யிஞ்சுஞ்சொல்லு மாண்பொருளும்
அடக்கி யடக்கிக் கிடக்குங்கண் டீர்பல வையக்துகொள்வார்
கடக்கினு மாவன வுண்மையி னுள்ளி கடையொழிந்து
கிடக்கினு மாமென் றறிதாகாடிக் கிளத்தியதே.

கந்தீஸ்வரக்கண்ணி முற்றுப்பெற்றது

ஆக பாடல் 1033.

மஸ்தான் ஸாஹிபு அவர்கள் பாடிய

கீர்த்தனைகள்.

இராகம்-புன்னாகவராளி-அடதாள-சாப்பு.

பல்லவி.

பாமுத்தன் குணங்குடி தெருவில் வரும்பவனி
பார்த்து வருவோம் வாருங்கள்.

அநுபல்லவி.

வரமுத்தர் சுரர்கணந் தரமுற்றவர்களிரு
பரமொய்த் தினியதுதி தரமுத்தி யருளுகம். (பரமுத்)

சரணங்கள்.

1. சாத்திரவேதஞ் சலாம்–சலாம் சலாமென்ன
ஜகஜோதிமின்னல் பளீர்-பளீர் பளீரென்ன
போர்த்துளம்போற்றும் றஹீம்-றஹீம் றஹீமென்ன
பிஸ்மில்லாஹிர் றஹ்மானிர் றஹீமென்றுள
அசையாம லொருநிலே விசுவாச மருளும்கம். (பரமுத்)

2. கருமமத்தளதாளந் திடல்-திடல் திடலென்ன
கைம்மணியோசை கணீல்-கணீல் கணீலென்ன
திருவருளாட்டந் திடும்-திடும் திடுமென்ன
தினத்தந்தோந் தினத்தந்தோம் மனத்தொந்தோ மனத்தொந்
தோம், உனத்தாளனைத்தையு நினைத்தபடியாக நம். (பரமுத்)

3. காசச்சரீரம் நரேல்-நரேல் நரேலென்ன
நஞ்சுவினைகள் சரேல்-சரேல் சரேலென்ன
வீசுமருட்கள் விறீல்-விறீல் விறீலென்ன
வேதவா ளெடுத்தேக்தி சோதி வாசியிலேறி
ஆதி பிஸ்மிலுட ஞேதிக் கலிமாவை கம் (பரமுத்)

4. காடாதபேர்கள் பயம்-பயம் பயமென்ன
நம்பியபேர்கள் ஜயம்-ஜயம் ஜயமென்ன
தேடிய பேர்கள் நயம்-நயம் நயமென்ன
திக்குத் திசைகளெங்கு மிக்க வொளிப்பரப்பி
ஒக்க வுலகமொரு கைக்குள் ளடக்கும் கம். (பரமுத்)

இராகம்-சௌராஷ்டிரம்-தாளம்-ஸாப்பு.

பல்லவி.

இல்லல்லாஹுவென் றென்னைமறந்துகொண்
டிருப்பா யென்னெஞ்சமே.

அநுபல்லவி

அல்லாஹுவென்று வகண்டி தகண்டமா
கல்லா யிருக்குது காணும்-ஒரு
சொல்லாலே இப்படி தோணும்-வெகு
உல்லாசமாலாயிலாஹு (இல்லல்லா

சரணங்கள்

1. அண்டபுவனங்க ளென்று மிருப்பதை
யாதென் றறியாது தானே-எங்குப
நின்று நிறைந்து மறைந்து சிறந்த
கெடிய நிராமயந் தானே-முதல
பண்டு பழகிய நாட்டத்துக் கேயது
பாவைக்கூத்தானது தானே-ப
கண்டு களித்துச் சகலமும் விட்டுக்
கரையேறி னல்கலக் தானே-தான்
சென்ற விடஞ்செயந் தானே-தன்னை
கண்டுகொண்டு லாயிலாஹு. (இல்லல்லா

2. கெட்டமனத்தை யுடைய வெருமைக்
கிடாவினைப் போலவு முண்டோ-காசைக்
கட்டிப் புதைத்துக் கடைசியிற் சாகின்ற
கழுதைகட் கும்பல லுண்டோ-சுத்த

மட்டிப் பயல்கள் மனத்தைக் கரைக்க
மருந்துகள் மாத்திரை யுண்டோ-வெகு
சட்டம தாகிய நிஷ்டையிராத
சண்டாளர்க்குச் சாஸ்திர முண்டோ-இந்தத்
துஷ்டரைப் போலவு முண்டோ-நீ
கெட்டியுடன் லாயிலாஹ. (இல்லல்லா)

3. இல்லல்லா ஹுவென் றேகானிராமல்
இணைபடவு மிருந் தேனே-மெத்த
கல்ல னோன்புடன் றொழுகையும் விட்டு
நலங்களையுமறந் தேனே-தன்னை
வெல்லுங் குருஆன் சொல்லிய தீக்ஷை
வினவாமல் விட்டிருந் தேனே-அதை
அல்லும் பகலு மறியாம லென்னுள்ளே
ஆபாச மாக்குவித் தேனே-இது
எல்லா மறிந்திடுந் தானே-சொல்லுஞ்
சொல்லுஞ்சொல்லும் லாயிலாஹ. (இல்லல்லா)

4 பூசைகள்செய்கி றேனென்று திரிந்து
புலம்பிய பாப மும் போக்கி-பெண்கள்
ஆசையி லேயநேகந் தரங்கள்
அடிபட்ட தும்லகு வாக்கி-எங்கள்
ஈசன் றிருவடி யாசையுள் ளானபின்
என்னைக்கையாலவர் தூக்கி-அந்தத்
தோஷித் தனங்க டொலையத் தொழுகற்
றுறைகளைப் போதனை யூக்கி-கெட்ட
பாசங்களை விட்டு நீக்கி-தந்த
வாசியுடன் லாயிலாஹ. (இல்லல்லா)

என்சா ணுயரத் திருக்கும் பளங்க
ளிறக்கி யுண்ணேன்மனக் கண்ணே-கெட்ட
கஞ்சாவுங்கள்ளு மாக்குமபினுங்
கலப்பதை விடுவெனு மண்ணே-நீ
தஞ்சாவூராளு மகாராஜன் பாதந்
தணிந்து நமஸ்காரம் பண்ணே-என்றன்
கொஞ்சப் பெலனுள்ள காயாபுரியென்ற
கோட்டை யிடித்திடு மெண்ணே-அவர்
அஞ்சாதிடிப்பரென் றெண்ணே-இனி
கொஞ்சிக்கொஞ்சி லாயிலாஹ. (இல்லல்லா)

6. என்ன விதமென்று சொல்வேன் முழக்க
முழங்குவ தென்னுக்குள் ளாலே-ஒரு
அன்னம்பிருந்தே யழகுபிறக்க
அசைந்தசைந் தாடுவ தாலே-அதன்
முன்னாலே யான் செய்த பாக்கியங் கண்டு
மூன்றுரை யில்லாத தாலே-அது
தன்னாலே யானந்த வெள்ளம் பெருகித்
தடையற பாய்வத னாலே-பயிர்
அன்ன பிடிப்பத னாலே-உனக்
கென்னகுறை லாயிலாஹ. (இல்லல்லா)

7. வாசனை யாகிய மாசற்ற வஸ்துவும்
வாக்கு மனத்துக் கெட்டாதே-அதில்
ஆசைக் கடல்பொங்கி யோசையுடனலே
ஆடிடு மொன்றுங் கட்டாதே-இந்த
காசச் சரீரத்தை வாசியிற் நீட்டிடில்
காசத்தை யண்ட வொட்டாதே-கல்ல

யோசனை செய்யுங் குணங்குடி வத்திடில்
யோக முனக்குக் குன்றுதே-ஒரு
மாசற்றயாகூவென் றோதே-காசில்
ஆசைவிட்டே லாயிலாஹ. (இல்லல்லா)

இராகம்-பந்துவராளி தாளம்-சாப்பு.

பல்லவி.

பெண்கொண்ட பேர்பட்ட பாட்டையுங் கேட்டையும்
பேசுவோமே நெஞ்சமே.

அநுபல்லவி.

சங்கையும் போக்கிச் சதிமான மாகச்
சகசண்டியாக்குவித் திடுவாள்-வெகு
பங்கப்படுத்தி விட்டிடுவாள்-அந்த
மங்கைய ராசைவைத் தையையோ வையத்தில் பெண்

சரணங்கள்.

1· தங்கககையு முகப்பணிச்சேலையுந்
தாவெனவேகுரங் காட்டுவாள்-என்றன்
செங்கை வளையுந் தலைக்கெண்ணெய் சீப்புஞ்
சிறப்போடு தாவென மாட்டுவாள்-வன்னக்
கொங்கைக் கிசைந்த ரவிக்கையுங் கோலப்
பணியுங் கொடுவென மூட்டுவாள்-அட
வெங்சப் பயனீயே ஞமக்கனேவென்று
வீட்டில் வராதேயென் றோட்டுவாள்-வெகு
பங்கப்பழிப்பினி காட்டுவாள்-அந்த
மங்கைய ராசைவைத் தையையோ வையத்தில். பெண்

2. ஆதியைத் தேடி யருள்பெற காடில்
அழுதழுதுமடி பிடிப்பாள்-நீதான்
ஏதென்னை விட்டுப் பிரிவது மென்றவள்
ஏங்கியேங்கிதுடி துடிப்பாள்-இன்னும்
வாதாகீ செய்யுந் தவம்பலி யாதென
வாழ்த்தி வசைகொடை கொடுப்பாள்-கெட்ட
மூதேவி புத்தி படைத்த வளாகி
முராணுக்கு மாரடி துடிப்பாள்-வெகு
வேதனையாய்மட மடப்பாள்-அந்த
வாதிக ளாசைவைத் தையையோ வையத்தில். பெண்

3. காடிக் குருவடி தேடி நடக்கின்ற
கற்செயலைக்கசப் பாக்குவாள்-எங்கும்
ஓடித் திரிந்தே யலைந்து பணங்கள்
ஒருக்காலே தேடென்று தாக்குவாள்-அவன்
தேடும் பொருடனைக் காணிலு மக்கெதிர்
தேசத்தி லாரென்றும் தூக்குவாள்-இன்னும்
ஆடென்றும் மாடென்றும் வீடென்றும் தேடென்றும்
ஆண்டவனை மறப் பாக்குவாள்-பின்பு
ஈடோன் றிலாகினை வாக்குவாள்-அந்த
கேடிக ளாசைவைத் தையையோ வையத்தில். பெண்

4. சீராட்ட மாடிமை யிட்டுப் பொட்டிட்டு
சிரம்பி வுடமைக ளிடுவாள்-வந்து
போராட்ட மாகவே சீராட்டஞ் செய்துன்றன்
புத்தியைப் போக்கடித் திடுவாள்-பின்பு
பாராட்டம் பண்ணியுன் றன்னையும் விட்டுப்
பலர்முகம் பார்த்தவன் கெடுவாள்-சுத்த

மாராட்ட மாகு மனந் தெளியார்க்கு
மருண்மழை யேபொழிந் திடுவாள்-கெட்ட
சீராட்டி யாய்வந்து முடிவாள்-அந்த
காரிக ளாசைவைத் தையையோ வையத்தில். (பெண்)

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

பாடையிலே துறவடைந்து பரமடைந்த குணங்குடியார் பகர்ந்த ஞானம், பாடையிலே துறவடைந்து பரமடைந்தா னந்தசுகம் படைத்திடாரைப், பாடையிலே போட்டுமிடுக் காட்டிவிடப் படுமுனையும் பலருமந்தப், பாடையிலே போட்டெடுக்க காள்வருமென் றறிந்திலையே பாவி நெஞ்சே.

இராகம்-கல்யாணி-தாளம்-சாப்பு.

பல்லவி.

எத்தனை யாட்டமீ யாடினும் பதைப்பற்
றிருந்திடுவாய் நெஞ்சமே. (எத்தனை)

அநுபல்லவி.

புத்தி சற்றேனும் படைத்தா யெனிலந்தப்
போதனை யேயுனைத் தேற்றும்-மூன்று
வாதனை யும்மற மாற்றும்-யோக
சாதனை மீதினு மேற்றும். (எத்தனை)

சரணங்கள்.

1\. நற்றவஞ் சித்திக்கு முத்தி தருந்தச
காதத்தை யுஞ்சுத்தி யாக்கும்-கட்டிச்

சுற்று மறுதலக் கட்டு மகிழ்க்கிடச்
  சோடசப் பின்னலை நீக்கும்-பாயும்
பத்தோ டிரண்டு கலையுமெட் டாகப்
  பராபர மும்முகம் பார்க்கும்-கல்ல
சுத்த மயப்படி கச்சுயஞ் சோதிச்
  சுழிமுனை யுந்தலை காக்கும்-எமன்
உத்தியோ கத்தன்னைப் போக்கும்-வந்து
வெற்றிக் குணங்குடி வாய்க்கும். (எத்தனை)

2. காற்பசு தன்னை வெளியில் விடாமலுங்
  கட்டி தொழுவினின் மாட்டும்-வீட்டிற்
பாற்பசு வைப்பக்கு வத்துடன் வைத்ததன்
  பாலைக் கறந்துனக் கூட்டும்-ஏழை
போற்பசி தன்னையும் போக்கித் தபசுக்குப்
  போவென்ன நேர்வழி காட்டும்-அதன்
மேற்படைக் காலா லுதைத்துவுதைத் தின்னும்
  விட்டேனோ வென்றுகை நீட்டும்-உன்றன்
மாற்படி யாவையுஞ் சாட்டும்-மாட்டை
மேய்ப்பக் குணங்குடி யோட்டும். (எத்தனை)

3. வஞ்ச மறலி வாவிடு தூதான
  வஞ்சிய ராசைவிட் டோடும்-மெத்தப்
பிஞ்ச பழங்கந்தை யானபுன் மாயையைப்
  பேயர் தலையினிற் போடும்-காணும்
தஞ்சமென் றென்குரு நாதன் றிருவடி
  தன்னை தொழுதிட நாடும்-இனி
என்செய லேது மிலையென் றவரிடம்
  ஏங்கியேங்கிசையப் பாடும்-நின்று

அஞ்சாம லஞ்சியே வாடும்-மிக்க
கெஞ்சிக் குணங்குடி தேடும். (எத்தனை)

4. இடைபிங் கலைக்கிடை யில்லடை யுஞ்சுழி
எளிதிற் றடையற மீறும்-பாயும்
மடைகண்டு வருமதி யமுதமுட் கொண்டு
வரவரக் காயமுந் தேறும்-இந்த
உடலோ டிருந்து தபஞ்செய்ய வுங்கற்பம்
உண்டெம கண்டமும் மாறும்-பின்பு
குடங்கவிழ் நீரென்ன நீசெய்பவங்களும்
கொட்டுண்டு மண்மீது சாறும்-உன்னைத்
தொடரிரு வினைவெந்து நீறும்-அருள்
படருங் குணங்குடி யேறும். (எத்தனை)

5. ஆதார மாறிலுஞ் சேதாரம் வாரா
தடுக்கடுக் காகவே விடுக்கும்-எமன்
பாதை பார்த்து நிற்குங் கண்ட மெனுமயிர்ப்
பாலத்தையுமெள்ளக் கடக்கும்-பின்பு
காதுகண் ணுக்கொடு மூக்குமொன்றாகக்
கவிந்துமக் காளத்தை யடக்கும்-என்றுஞ்
சூதான மாகிய வெட்ட வெளிசென்று
சொக்கி மயக்குண்டு படுக்கும்-குரு
நாத னருளடை கிடைக்கும்-பரஞ்
சோதிகுணங்குடி யடுக்கும். (எத்தனை)

6. உந்தியின் கீழ்நின்று நித்த சுழிமுனை
ஓங்காரக் கோதண்டம் பிடிக்கும்-வருஞ்
சந்திரன் சூரியன் மேல்வைத்துத் தாக்கிச்
சமர்பொருதுஜெயம் படைக்கும்-சற்றே

குத்தி யிருந்திளைப் பாறித்தெளிந்து
குசாலாகச் சாய்ந்தங்கே படுக்கும்-அதற்
கத்தியுஞ் சந்தியு முச்சிமுக் காலமும்
ஆசரித்துப் பூசை நடக்கும்-தேவ
இந்திரன் போனின்று நடக்கும்-இங்கே
வந்து குணங்குடி கொடுக்கும். (எத்தனை)

7. சொல்லித் திரிதற் கறிவுகற்றதோஷ
தோஷத்தை நாசத்தி லாக்குங்-கற்றும்
நல்ல வறிவற்ற புலையரை காண்கி
னடுங்கி யுடலெங்கும் வேர்க்கும்-மலே
கெல்லி யெலிபிடித்த கதைபோற் காசுக்
கேயலே யாதுனைக் காக்கும்-பாயும்
வல்லயம் போல்வரு மாயை யாஞ்சண்டி
மாட்டுக்கும் மாசண்டி யாக்கும்-கரு
கெல்லிக் கனிக்கைக்குள் வாய்க்கும்-அருள்
மூல்லேக்குணங்குடி பூக்கும். (எத்தனை)

8. காமக்குரோதக் களையைக் களைந்து
கடுஞ்சுழி காற்றிலே தூற்றும்-யோக
பூமிக்குள் மோன வித்தைப்பதித்துப் பரி
பூரண மாய்பயி ரேற்றும்-மேற்
சோமன் மதிவட்டமீது சுழிமுனைச்
சொக்கித் தெளிந்திடத் தேற்றும்-தாயை
வாமம் வைத்துப்பூசை பண்ணிப் பணிந்திட
வாரி யமிர்தத்தை யூற்றும்-நல்ல
சேமத் துடனுனைப் போற்றும்-என்றுஞ்
சேமக்குணங்குடி யேற்றும். (எத்தனை)

9. இல்லத் துறந்து வரும்பல தொல்லைகள்
எல்லா மெடுத்தெடுத் தெரியும்-மூடும்
வல்லிரு ளாகிய மாமாயை தந்த
மயக்கும் விட்டுவிட்டுப் புரியும்-ஒரு
எல்லையில் பேரின்ப வெள்ளப் பெருக்கில்
எடுத்துண்டுந் தன்வயி னிறையும்-பின்பு
அல்லும்பக லுஞ் சுகானந்த நிஷ்டையில்
அண்டமும் பிண்டமுந் தெரியும்-யெங்கும்
சொல்லு மருண்மழை சொரியும்-மெத்த
நல்ல குணங்குடி புரியும். (எத்தனை)

10. கூசிகுலாவு மடவாரைக் கொஞ்சிக்
குலாவாம லுங்கையை விடுக்கும்-வன
வாசத்துக்கேகித் தவம்புரி தற்கிச்சை
வைத்துவைத் துத்துடி துடிக்கும்-கெட்ட
ஆசைப் பசாசைத் துரத்தித் துரத்திவந்
தண்டவொட்டாமலே யடிக்கும்-ஞான
தேசிகன் பாதார விந்தத்தையே மோனச்
சின்முத்திரையாகப் பிடிக்கும்-உப
தேசத்துக் காரைபந் தடிக்கும்-நமக்
கீசன் குணங்குடி கிடைக்கும். (எத்தனை)

11. செத்தாலும் வைத்தடி வாங்காம னிற்கின்ற
தீரத்தையேதிர மார்க்கும்-சற்றும்
மெத்தாதி புத்திவந் தெற்றும் லுன்றனை
மேவி விழுந்துகை தூக்கும்-எங்கள்
சித்தாதி கட்கருள் செய்தகன் முத்தியுஞ்
சித்தியும் வெற்றியும் வாய்க்கும்-சின்னூ

எத்தா லினிப்பிழைப் போமென வெண்ணாமல்
எங்கோ னருட்பாது காக்கும்-ஒரு
மித்த பவங்களைப் போக்கும்-மோன
வித்தைக் குணங்குடி வாய்க்கும். (எத்தனை)

12. எண்ணாத வெண்ணத்தி னூடே படர்க்தெழும்
இன்ப வினோதத்தை வீட்டும்-கெட்ட
மண்ணாள மூவாசை மண்ணைகவுகல்ல
மானாபி மானத்தை யோட்டும்-என்றன்
கண்ணே மணியேயென் கண்ணுதலே யெனக்
கண்ணீரு முண்ணீரு மூட்டும்-பின்பு
தண்ணீரு மண்ணுங் கலந்தது போற்சிந்தை
தத்தளிக்க நிலை காட்டும்-கடம்
பண்ணும் பரவெளி கூட்டும்-உய்யும்
வண்ணக் குணங்குடி காட்டும். (எத்தனை)

13. வித்தக னார்சொன்ன புத்திபுன் மாயையை
வேங்கைப் புலியெனச் சாடும்-எம்மை
வெற்றிகொண் மாதர் முயக்களற் கேணி
விரிவோ டவுங்காயப் போடும்-உன்னைப்
பெற்றார் பிறந்தார் சுற்றத்தார் முதலான
பித்தர்க் கெல்லாமுகம் வாடும்-கல்ல
பத்தரை மாற்றுப் பசும்பொன்னை யொத்த
பரவொளி பம்பர மாடும்-மேலுன்
கத்த னருளுன்னை கூடும்-காரும்
சித்தக் குணங்குடி யாடும். (எத்தனை)

14. எங்கு நிறைந்த பெரும்பொரு ளென்னுள்
இருந்துகொண் டேவிளை யாடும்-ஒரு
கங்கு கரையறப் பொங்கிப் பாவிக்
கருணைக் கடல்வந்து மூடும்.அருள்
வங்கமுந் தங்காம லிங்குவந் தென்னை
மகிழ்ந்தடுத் தேற்றிக்கொண் டோடும்-காணும்
மங்காத தங்க மவுனப் பொருளு
மலைமலை யாகக்கை கூடும்-இன்னும்
பங்கு கொடுக்கவு நாடும்-யோகந்
தங்கும் குணங்குடி சூடும். (எத்தனை)

15. வாசாம கோசர வான்பொரு ளென்றன்
மடிமீது செங்கீரை யாடும்-மோன
தேசிகன் பாதார விந்தந்தந்தெய்த்தத்
தெய்யெனக் கூத்துகள் போடும்-எங்கள்
ஈசன் றிருவரு டாளுணை கொட்டிப்பேர்
இன்பக் கோலாகலம் பாடும்-எம
பாச மறுத்துக்கொண் டென்ன சுமட்டமும்
பாய்ந்து மடமடென் றோடும்-கோட்டை
வாயிற் கடந்துட் சென் றுடும்-மேலே
பேசுங் குணங்குடி கூடும். (எத்தனை)

கொச்சகம்.

ஐயையோ வென்விதியை யாரிடத்திற் சொன்னாலும்
ஐயையோ வென்றே யழுங்கவலை கொள்வார்தாம்
ஐயையோ வையகத்தி லாருமிலை யுன்னையன்றி
ஐயையோ வடிமையைக்கை யணைப்பாய் குருபரனே.

இராகம்-பைரவி-சாப்பு-தாளம்.

பல்லவி.

ஐயையோ நான்என்ன செய்வேன் என்விதிவசம்
ஆருடனே சொல்லி யழுவேன்.

அநுபல்லவி.

மெய்யெடுத்ததும் பொய்யாய் வீணாள்கழிந்து போச்சுப்
பொய்யிலாதவென் னையனருளது
கையு மெய்யுமாய்க் கண்ணிற்கா ணேனே. (ஐயை)

சரணங்கள்.

1. பார்க்கப் பலவித மறைவாய் சமையலான
பதினாலு லோகமு நிறைவாய்
வாக்கு மனமுமதி னேக்க மதுவாய்நின்றுக்
தீர்க்கமா யறியாமற் றேடியே
பார்க்குள்ளே யலைக் தலைந்துங்கா ணேனே (ஐயை)

2. முன்னோர்செய்திடுபாவ லாபமோ பாதகமோவென்
மூதேவி தனங்கொள்பிர தாபமோ
என்னகொடுமைகளோ வென்றலைவிதிதானோ
இன்னபேதமில் லாதசோதியை
இன்னுமென்னுட் கண்ணிற் காணேனே. (ஐயை)

3. ஆசாபாசங்களெல் லாத்தையும்விட்டும் அனுதினமும்
ஆசுதவெள்ளத்து ளகப் பட்டும்
ஓசைமணிபூரகத் துள்ளேங்குத்தேடியும்
வாசமெய்த்த குணங்குடிப்பர
தேசியெய்த்து மிலேத்துக்காணேனே. (ஐயை)

இராகம்-கேதாரகௌளம்-ஆதிதாளம்.

பல்லவி.

சூத்திரப் பாவை கயிறற்று வீழுமுன்
சூக்ஷக் கயிற்றினைப் பாரடா-அதி
சூக்ஷக் கயிற்றினைப் பாரடா.

அநுபல்லவி

க்ஷேத்திரம் ரண்டினும் நேரேயிலங்கிய
நீடொளிபோன்றது தேடரிதாகிய
காத்திர முள்ளது யாவும் பொதிந்தது
கையினுங் காலினு மெட்டப்படாததோர், (சூத்தி)

சரணங்கள்

1. சாத்திரவேதஞ் சதகோடி கற்றாலும்
சமயநெறிகளி னாசாரம் பெற்றாலும்
பாத்திரமேந்திப் புறத்தி லலைந்தாலும்
பாவனை யாவுட னுள்ளமுலைந்தாலும்
மாத்திரை யேனு மெமன்வரு மப்போது
மற்றொன்று தவா துதவா துதவாது
சூத்திரமாகிய தோணிகவிழுமுன்
சுக்கானை நேர்படுத் திக்கணமேசொன்னேன். சூத்தி

2. உற்றுற வின்முறை யார் சூழ்ந்திருந்தென்ன
ஊருட் சனங்களெல் லாரும்பணிந்தென்ன
பெற்றாரும் பெண்டிரும் பிள்ளையிருந்தென்ன
பேணும் பெருஞ்செல்வ வாணவத் தாலென்ன
கத்தன் பிரிந்திடிற் செத்தசவமாச்சு
காணாது காணாது கண்டதெல் லாம்போச்சு

எத்தனை பேர்கின்று கூக்குர லிட்டாலும்
எட்டாமற் போய்விடுங் கட்டையல்லோ விந்தச் (சூத்தி)

3. மாயாப் பிறவி வலையை யடைத்திட
மாருத் தியான மனத்தி னிணைத்திடக்
காயா புரிக்கோட்டை கைக்கு ளகப்படக்
காணு மணிச்சுடர் தானே விளங்கிட
ஆயு மறிவுடன் யோகத்தி லெழும்
ஆநந்தத் தேனையுண் டன்புட னேதொழும்
தாயா யுலகத்தை யீன்ற குணங்குடித்
தற்பரனைக்கொண் டுவப்புட னேசென்று. (சூத்தி)

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

வங்கெனுமோர் மொழியாதி பீடமியோ கத்தினது மகிமை பெற்றோர், வங்குசொறி யுங்கொடுக்கும் பெண்களல் குற் புண்களுக்குண் மடிய மாட்டார், வங்கு சொறி யுங் கொடுக்கும் பெண்களல்குற் புண்களுக்குண் மடியா வண்ணம், வங்கெனு மூப தேசமெங்கள் குணங்குடிமா தவனெனக்கும் வைத்தி டானே. (1)

இராகம் சாவேரி-சாப்பு-தாளம்.

பல்லவி.

வங்கெனு மூபதேச மெங்கள் குணங்குடி
வள்ளலென் றோதுவனே.

அநுபல்லவி.

அங்கென்றே ஷட்சரங் கும்பித் தடங்கவும்
ஐம்பத்தோ ரக்ஷரங் தம்பித்தொங்கவும். (வங்கெ)

சரணங்கள்.

1. உடல்பொரு ளவியோ டெவையுங்கைக் கொள்ளவும்
உவந்தென்னை யுமுய்யக் கொள்ளவும்
கொடிக்குமுன் மனவாசி மேலேறிக் கொள்ளவும்
நாலேணி மேலேறிக் கொள்ளவும்
படுமுடிச் சானவா ருதாரம் விள்ளவும்
படிக்குப் படிகடந்து கொள்ளவும்
கடினத்துடன் கண்டதையுங்கிழே தள்ளவும்
காதளா வுக்குமேற் கொள்ளவும்
கடன மிடும்பரி துள்ளாட்ட மெடுக்கவும்
கடித்து கடித்துக்கொண் டாட்டங் கொடுக்கவும்
இடைபிங் கலைகண்டத் தாட்ட மெடுக்கவும்
எனக்குப் பயந்தெம ேனாட்டம் பிடிக்கவும். வங்கெ

2. கம்பமற்றவருட் கடவுள்வாய் மடுக்கவும்
களகளென்றேசும்மா குடிக்கவும்
செம்பொற் கமலா சனமீதிற் படுக்கவும்
செங்கிரை யாடித் துடிக்கவும்
வம்பரைப் போல்விளை யாட்டிப் படிக்கவும்
வாசியி லேறி கடிக்கவும்
ஒன்பது வாயிலி னிலையைப் பிடிக்கவும்
ஒளியினோடு காலை மடிக்கவும்
தம்பிரா னொனுமெல்லை சூட்டவும்
தாக்குச் சுழிமுனை வில்லை பூட்டவும்
எம்பிரா னென்னுங் கல்லை யோட்டவும்
எனக்குப் பயந்தெமன் பல்லைக் காட்டவும். வங்கெ

3. தொட்டுப தேசித்த வுடன்சோதி தட்டவுந்
தொடுமுன்னே சிவயோகங் கிட்டவும்

எட்டுக் கயிற்றிலென்கால்ரண்டுங் கட்டவும்
எட்டிய வன்காலைக் கட்டவும்
கட்டைப் பனைதனி லுங்களைக் கட்டவும்
கள்ளுக் கள்ளாய்ச் சும்மா கொட்டவும்
கொட்டிய கள்ளுண்டபின் போதை மூட்டவும்
குதிகொண்டு கெக்கரி கொட்டவும்
நிஷ்டை படைத்தனு பூதி மிஞ்சவும்
நிருவி கற்பச மாதிதுஞ்சவும்
இஷ்டப்படிக்கரு ளின்று கொஞ்சவும்
எனக்குப் பயக்தெம னின்றுகெஞ்சவும். (வங்கெ)

4. கத்தன் றிருவடி பெற்றவனுகவும்
கட்டை கடத்தேற லாகவும்
கற்றவ முற்றவஞ் சித்தனு மாகவும்
காவு மக்காளத்து ளேகவும்
பத்து வகைகாத முஞ்சுத்த மாகவும்
பத்தோ டிருகலை சாகவும்
ஒற்றைக்காலான் மயிர்ப் பாலத்தி லேகவும்
ஒருபாய்ச் சலிற்றுண்டிப் போகவும்
வைத்த தீக்ஷையுந் திருத்த மாகவும்
வாலையம்பிகை பொருத்த மாகவும்
எய்த்த வெருத்த மெருத்த மாகவும்
எனக்குப் பயக்தெம னெருத்தன் சாகவும். வங்கெ

இராகம்-புன்னுகவராளி-ஆதிதாளம்.

பல்லவி.

யானே உனைநம்பினேன்—குணங்குடி
யானே யென்னாண்டவனே.

அனுபல்லவி.

யானே யுனைநம்பினேனென்சாகச் செய்வையோ
யானாக நின்றென்னை நான்சாகா செய்வையோ
பேய்நாய் கண்டசிறு மானாகச் செய்வையோ
பெருமானு மெம்பெரு மானாகச் செய்வையோ. (யா)

சரணங்கள்.

1. பாவைய ரைப்பாவி கூடிடச் செய்வையோ
பாவையர்க் குப்பயந் தோடிடச் செய்வையோ
பாவங்கள் வந்தெனை மூடிடச் செய்வையோ
பாவமெல் லாம்விட்டுச் சாடிடச் செய்வையோ
பாவிகள் போன்முகம் வாடிடச் செய்வையோ
பரஞ்சோதி யம்பர மாடிடச் செய்வையோ
பாவாணர் போல்வீணிற் பாடிடச் செய்வையோ
பரிபூரணனந்தம் பாடிடச் செய்வையோ (யா)

2. சண்டாள ரைவாழ்த்திக் கொண்டாடச் செய்வையோ
சற்குருவைப் போற்றி கொண்டாடச் செய்வையோ
தொண்டாசை யென்னையுந் துண்டாடச் செய்வையோ
தொண்டாசை தன்னையுந் துண்டாடச்செய்வையோ
முண்டரைப் போற்றிண்டு முண்டாடச் செய்வையோ
முத்தி தந்துதுதி கொண்டாடச் செய்வையோ
வண்டாய் துவண்டு துவண்டாடச் செய்வையோ
வந்தரு டந்தெனைப் பந்தாடச் செய்வையோ. (யா)

3. வெட்டவெளியிலென்னை விட்டிடச் செய்வையோ
வித்தகன் பாதத்தைக் கட்டிடச் செய்வையோ
பட்டதெல்லாம்கேடு கெட்டிடச் செய்வையோ
பட்டதற் கும்பலன் கிட்டிடச் செய்வையோ

கெட்டை மனம்போனாப் பட்டிடச் செய்வையோ
சீசனும் குரு கொட்டிடச் செய்வையோ
மட்டிலேன் தெண்ணமை விட்டிடச் செய்வையோ
வரியும் பகிச்சூழ் விட்டிடச் செய்வையோ. (வா)

4. மதபேத போதப் பகுத்திடச் செய்வையோ
மதமற்ற ஞானம் படித்திடச் செய்வையோ
விதியற்ற இச்சை பெருக்கிடச் செய்வையோ
வேதாந்த நிலைமை பெருக்கிடச் செய்வையோ
விதிவிதென் துனியைப் பெறுத்திடச் செய்வையோ
விதிவென்று வலியைப் பெறுத்திடச் செய்வையோ
மதிவென்று கவியைக் குடுத்திடச் செய்வையோ
மதியாசிர் தந்தைக் குடுத்திடச் செய்வையோ. (வா)

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

எல்லாரு மானிடரோ வெள்ளைக்குணக் குடியானவோ நிறைந்திருந்தனர், எல்லாரு மானிடரா வெள்ளைக்குணக் குடியானவ நிறைந்த வேண்டும், எல்லாரு மானிடரோ வெள்ளைக் குணக்குடியானவ நிறைவே வேண்டுமே, எல்லாரு நிறைந்த வெள்ளைக் குணக்குடியாளர் பொற்பதமெய் கெய்திடவே.

இராகம்–அசாவேரி–சாப்பு–தாளம்.

பல்லவி.

வெள்ளைக் குணக்குடி மாண்டவன் பாதத்தை
என்றிருப் பாவேன் கிடைத்திடுமோ.

அநுபல்லவி.

பொல்லாத் திறனாறுந் தன்மயமாக்குறும்
பூரணமய மாய்நின்ற காரணக் கடவுளை. (எங்கள்)

சரணங்கள்.

1. கட்டுக் கடங்காவிழி கட்டுக்கட்டுக் கலைகளைக் [கலைப்
கொடுத்துக் கொடுத்தவிழ்த்துப் பிடித்துப் பிடித்துமேல்
பூட்டிப் பூட்டியருள் சூட்டிச் சூட்டித்தரும்
பூரணமய மாய்நின்ற காரணக்கடவுளை. (எங்கள்)

2. முத்தியித் தாய்ப்பதித்தும் பொய்த்தவிர் மலைத்தும்
மூன்றுமண்டலத்தைப் பூட்டி மூடுகொலைவினைகளைந்தும்
புத்திய மெய்ஞ்ஞான பூத்த பொற்பையும் புதைத்தருளும்
பூரணமய மாய்நின்ற காரணக் கடவுளை. (எங்கள்)

3. வாதனை மாற்றிபோத சாதனை தேற்றிதேற்றி
வாக்கு மனமணுகா வாழ்வினை வாய்த்திவேத்துப்
போதும் போதுமெனப் போதித் தருள்புரியும்
பூரணமய மாய்நின்ற காரணக் கடவுளை. எங்கள்

4. எப்பாற்றுக் குஞ்சிறந்த தப்பாற்றுக் குஞ்சிறந்த
எப்பாற்றுக் குஞ்சிறந்த சொற்பதம் போற்றிறந்த
பொற்பிரசவைக் கொப்பளிக்கும் அற்புத வப்பூரணமே
பூரணமய மாய்நின்ற காரணக் கடவுளை. (எங்கள்)

அறுசீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்.

அன்னெறியி லென்னெஞ்சு செல்லச் சூலக் குறு- குறுமைகள் அகலவே, அன்னெறி செலுத்தமையுதித் தெளிவிட அவ்வை கொண்டுன் பார்த்திடலே, அன் னெறியுனையன்றித் தெளிய வல்லோர் யாருமிலே

அன்றெழுது மெழுத்தழித்தென் மண்டையிற்று னல்லெழுத்தோன் றழுத்திடானே.

இராகம்—பியாகடை—அடதாள—சாப்பு.

பல்லவி.

ஆண்டவ னென்செய்வனோ—குணங்குடி
ஆண்டவ னென்செய்வனோ.

அநுபல்லவி.

ஆண்டவ னணைத்தென்னை யருகில்வைத் திடுவனோ
தீண்டியும் பார்க்காமற் றெருவில்விட் டிடுவனோ. (ஆ)

சரணங்கள்.

1. தேனைப் பழித்தபே ரின்பங் கொடுப்பனோ
தேவடி யார்கள்சிற் றின்பங் கொடுப்பனோ
மோன வருட்பரி வட்டங் கொடுப்பனோ
முற்றுமுட் டாளெனும் பட்டங் கொடுப்பனோ. (ஆ)

2. உச்சிக்குள் வைத்த பொருளைக் கொடுப்பனோ
உச்சந் தலையிவிரண்டு குட்டுக் கொடுப்பனோ
மூச்சுட ரோடுசோம வட்டங் கொடுப்பனோ
முற்றுமுட் டாளெனும் பட்டங் கொடுப்பனோ. (ஆ)

3. வற்று வருட்செல்வங் கொள்ளை கொடுப்பனோ
மண்ணைத்தா னள்ளிக்கை கொள்ளக் கொடுப்பனோ
முத்தி தருமோன வட்டங் கொடுப்பனோ
முற்றுமுட் டாளெனும் பட்டங் கொடுப்பனோ. (ஆ)

4. காக்கக் காளவாயிற் காக்கக் கொடுப்பனோ
தாய்போல வாயில்தோறுங் காக்கக் கொடுப்பனோ

மூக்குமுனை யில்வன்னி வட்டங் கொடுப்பனோ
முற்றுமுட் டாளனுளும் பட்டங் கொடுப்பனோ. (ஆ)

5. சிட்டனு கவும்வாசி கட்டிக் கொடுப்பனோ
செட்டையிற் றூனிரண்டு தட்டிக் கொடுப்பனோ
முட்டமுட்டச் சட்ட திட்டங் கொடுப்பனோ
முற்றுமுட் டாளனுளும் பட்டங் கொடுப்பனோ. (ஆ)

6. கண்டங் கடக்கத்தான் காட்டிக் கொடுப்பனோ
காலனுக் கென்னைத்தான் காட்டிக் கொடுப்பனோ
முண்டம் படாசிலே விட்டுக் கொடுப்பனோ
முற்றுமுட் டாளனுளும் பட்டங் கொடுப்பனோ. (ஆ)

7. செத்துப் போமுன்காய சித்தி கொடுப்பனோ
செத்துப்போ வென்றுசா பத்தைக் கொடுப்பனோ
முத்தமிட் டிட்டுகல் லிஷ்டங் கொடுப்பனோ
முற்றுமுட் டாளனுளும் பட்டங் கொடுப்பனோ. (ஆ)

இராகம்—செஞ்சுருட்டி—சாப்பு—தாளம்.

பல்லவி.

ஐயையோ வென்விதிவசம் ஆருடன் சொல்வேன்.

அநுபல்லவி.

வையுமுடல் மெய்யென் றெண்ணிப்பொய்ய னுகினேன். (ஐ)

சரணங்கள்.

பெண்டுபிள்ளை யென்று மன்மபித்துக் கொள்ளுதே-காம
என்றும்இருப் போமெனவுஞ் சண்டை துள்ளுதே. (ஐ)
பழிக்கோ வென்னுடலைப் படைத்து வளர்ப்பேன்-இதைப்
புழுக்கோ காய்கரிக்கோ பிடுங்கக் கொடுப்பேன். (ஐ)

கையில்வெண்ணை தனைவிட்டு நெய்யைத்தேடுகிறேன்-எங்
ஐயன்பா தந்தனைவிட்டுப் பொய்யைக்கூடுறேன் [கள்

மாதுமக்களென்று மென்மதி மயங்குதே-இது
சூதுசெய்வாரோடு கூடி வாதுபேசுதே. (ஐ)

வாக்குமன மணுகாது வான்பொரு ளுள்ளே-அதை
நோக்கிநோக்கிப் பார்ப்பார்க்கு வாய்க்குமோ கொள்ளை.

புந்திமகிழுண்டு டுக்கச் சிந்தை துள்ளுதே-ஐயோ
அந்தகா ரந்தன்னை யகமாக்கிக் கொள்ளுதே. (ஐ)

காயிலை யுதிர்ந்த சருகு கனிதின்று-காம்
ஆயுமறை முடிவைத் தேடிப்போவது மென்று. (ஐ)

தேகத்தினென்பு வெளியாக வாடினோர்-அவர்
ஆகமச் சொற்படிக்கே யருளைக் கூடினோர். (ஐ)

ஆழிகரையின்றி நிலைநிற்க வில்லையோ-யான்
பாழி லலையாதெனக் கோர்பாதை யில்லையோ. (ஐ)

ஆசை பாசமற்றவ ருளைப் படைப்பார்-அவர்
தேசிகன் குணங்குடித் தெருவி லிருப்பார். (ஐ)

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

என்றலையி லிட்டபொல்லா விதியானற் குணங்குடி வாழ் வினைக்கு நில்லை, என்றலையி லிட்டபொல்லா விதிக் கென்னைவிட்டாலு மேகு நில்லை, என்றலையி லிட்டவிதிக் கினி யெவர்பட்டுத் தொலைப்பா ரெனநின் றேங்கி, என் றலையி லிட்டவிதி தனை நினைந்து பாவியா னிலைகின் றேனே.

இராகம்-ஆகிரி-அடதாள-சாப்பு

ஏதேது செய்திடுமோ பாவிவிதி-ஏதேது செய்திடுமோ

அநுபல்லவி.

ஏதேது செய்து மெனே மோசஞ் செய்யுமோ
மாதவஞ் செய்து மனுவாகச் செய்யுமோ. (ஏதே)

சரணங்கள்.

1. சற்றுகல் லறிவற்ற மாடாகச் செய்யுமோ
சாகா வரம்பெற்றுக் காடேகச் செய்யுமோ
கற்றறி மூடர்கட் கிடாகச் செய்யுமோ
கர்த்தன் குணங்குடி வீடாகச் செய்யுமோ. (ஏதே)

2. கத்திக்கத் திப்பாவி செத்திடச் செய்யுமோ
கர்த்தன் திருவருள் பெற்றிடச் செய்யுமோ
கொத்தும்பெண் ணறவெனைக் கொத்திடச் செய்யுமோ
குணங்குடி வாழ்க்கைவக் தெய்திடச் செய்யுமோ

3. செத்த பிணத்தோடு சேர்ந்திடச் செய்யுமோ
சித்தர் கணத்தோடு சார்ந்திடச் செய்யுமோ
மெத்தப் பணத்தேடி மாய்ந்திடச் செய்யுமோ
மேலைக் குணங்குடி வாழ்ந்திடச் செய்யுமோ. ஏதே

4. பாழான காயத்தைப் பாழாகச் செய்யுமோ
பாழாகப் போமுன்முப் பாழாகச் செய்யுமோ
தேளான பெண்களுக் காளாகச் செய்யுமோ
தேறிக் குணங்குடிக் காளாகச் செய்யுமோ. (ஏதே

5. தேவடி யாள்வீட்டு நாயாகச் செய்யுமோ
தேவடி யாளுமென் றாயாகச் செய்யுமோ

காவு ருசிகொண்டு பேயாகச் செய்யுமோ
காதன் குணங்குடிக் கேயாளாகச் செய்யுமோ. ஏதே

இராகம்-பரிசு-சாப்பு-தாளம்

பல்லவி.

அல்லாஹு வென் னுங்கள்-சதாகாலம்
அல்லாஹு வென் னுங்கள்.

அநுபல்லவி

அல்லாஹு வென் னுங்கள் அஞ்ஞானத் தனைவிட்டு
எல்லாரும் வெளிப்பட்டு இப்போ தெதிர்ப்பட்டு. (அல்

சரணங்கள்.

1. வருத்தசோதி மெய்ஞ்ஞான வாரியை மனமுன்ன
வஞ்சமில் பரமார்த்த குருவரு ளியதென்ன
செகஜால வலைதன் னுட் சிக்கிப்ப லவுமின்ன
சிற்சொரூபந்தெரியாமற் செத்திறந்துபோமுன்னம்.

2. அல்லாஹு வென்ற வரும் பொருளாமென்ன
அனந்த மறைகளு மப்படி யேபன்ன
கல்லறி வாளரு காளுமெடுத்துச் சொன்ன
கன்மை யெல்லாகமக் குண்மையி லேமன்ன. (அல்)

3. ஆசாபாச மென்னும் அழிப்புத்தி களுமற்று
அளவிட்டறிய வொண்ணு தருள்ஞா னந்தனைப்பெற்று
மாசற் றொளிருமுன் மனமிரு வினையற்று
மாதாபி தாவெனு மயக்கமுழு வதுமற்று (அல்)

4. மும்மலக் காட்டினை முழுவதையு மரித்து
மூல நெருப்பினை மூட்டமூட்டவிரித்து

சின்மய ஜெகஜோதித் தெளிதரவேதெரிந்து
தேசிகன் குணங்குடி தெருவீதி யிலிருந்து. (அல்)

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

புனிதகுணங் குடிவாழ்க்கை போகஃமற் பொங்கு மிச்சைப் பொங்கிப் பொங்கிப், புனிதகுணங் குடிபடைத்துப் போத பரிபூரண போதகமும் பூண்டு, புனிதகுணங் குடியானைப் போற்றாது போற்றுவார் போலுமந்தப், புனித குணங் குடியானைப் போற்றியிந்தப் புல்லனும்வாய் புலம்புவானே.

இராகம்-ஆனந்தபைரவி-அடதாள-சாப்பு.

பல்லவி.

கத்திக்கத்தித் தொண்டையுங் கட்டிச்செத்தேனே
காணுமெங்கள் குணங்குடிச் சித்தனே.

அநுபல்லவி.

முத்தனே முத்தனே முத்தனேயென்றும்
கர்த்தனே கர்த்தனே யென்று முனைத்தேடி. கத்தி

சரணங்கள்.

1. நாயனே நாயனே நாயனே யென்றும்
மாயனே மாயனே மாயனே யென்றும்
தூயனே தூயனே தூயனே யென்றும்
நேயனே நேயனே யென்று முனைத்தேடி. (கத்தி)

2. ஏகனே யேகனே யேகனே யென்றும்
யோகனே யோகனே யோகனே யென்றும்

மோகனே மோகனே மோகனே யென்றும்
வாகனே வாகனே யென்று முனைத்தேடி. (கத்தி)

3. காதனே காதனே காதனே யென்றும்
நீதனே நீதனே நீதனே யென்றும்
போதனே போதனே போதனே யென்றும்
தூதனே தூதனே யென்று முனைத்தேடிக். (கத்தி

4. சித்தனே சித்தனே சித்தனே யென்றும்
சுத்தனே சுத்தனே சுத்தனே யென்றும்
பத்தனே பத்தனே பத்தனே யென்றும்
அத்தனே அத்தனே யென்று முனைத்தேடிக் (கத்

5. ராஜனே ராஜனே ராஜனே யென்றும்
போஜனே போஜனே போஜனே யென்றும்
தேசனே தேசனே தேசனே யென்றும்
வாசனே வாசனே யென்று முனைத்தேடிக். (கத்தி

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

கண்டதெல்லாங் கனவாகக் கண்ட குணங் குடியார் கற்கருணை காட்டில், கண்டதெல்லாங் கனவாகக் கண்டருள் கொண்ட வராகக் கருணை காட்டுங், கண்டதெல்லாங் கனவாகக் கண்டருள்கொண் டவர்போலக் கன்மி யாலே, கண்ட தெல்லாம் கனவாகக் கண்டிடவோர் கனவேனுங் கண்டிலேனே.

இராகம்-காம்போதி-ரூபகம்-தாளம்.

பல்லவி.

கனவுங்கண் டிலனே-பாவியொரு
நினைவுங்கண் டிலனே.

அநுபல்லவி.

கனவுங் கண்டிலன் காட்சி கொடுக்கவுங்
கர்த்த னருளடை காத்துக் கிடக்கவும்
மனமுந் தேறிப்போய் வாழ்வை விடுக்கவும்
மாகுணங் குடிமெய் வாழ்வைப் படைக்கவும். (கனவு

சரணங்கள்.

1. மானுபி மான மடமையைப் போக்கவும்
மாதர்க் கடிமைப் படாதெனைக் காக்கவும்
வானுதிபூத லயம்வந்து வாய்க்கவும்
வாசாம கோசர வாழ்க்கையுஞ் சாய்க்கவும்
மோன மவுனமணி மாலை கோக்கவும்
மூக்கு முனையைச் சுழிமுனை யாக்கவும்
ஞானத் திருநட நாதமுங் கேட்கவும்
நாதன் குணங்குடிப் பாதையும் பார்க்கவும். (கனவு

2. நாதாந்த மோன குருபதம் போற்றவும்
நாவை மடக்கியக் காளத்து ளேற்றவும்
வேதாந்த வீட்டின் வெளிவாயில் சாத்தவும்
வித்தகன் வந்து விளக்கெடுத் தேற்றவும்
சீத மதிதன் னமிர்தத்தை யூற்றவும்
சின்முத்தி ரையைவைத் தென்மனந் தேற்றவும்
பூத லயத்துட் பொறிகளைத் தாழ்த்தவும்
புண்ணியன் குணங்குடி பொங்கிட வாழ்த்தவும். (கனவு

3. பாங்கா யுதவுமெங் கோன்வங் தடுக்கவும்
பஞ்சகோ சமென்னுங் கோட்டை பிடிக்கவும்
ஓங்கார வீட்டினுக் குள்ளே யடுக்கவும்.
ஒன்றுக்கு ளொன்றா யொடுக்கிப் படுக்கவும்
தேங்காய் மரத்தினிற் கள்ளு வடிக்கவும்
தேறத் தெளித்துத் தெளித்துக் குடிக்கவும்
மாங்காயுள் வண்டாய் மயங்கிக் கிடக்கவும்
வாசி குணங்குடி வாயி லடைக்கவும். (கனவு)

4. கள்ளக் கருத்துகள் கட்டோடே வேகவும்
கன்மங் தொலைந்து கடைத்தேறிப் போகவும்
கொள்ளித் தேளான மனமாயை சாகவும்
கூர்விழி யாரிஷ்டங் கொட்டுண்டு போகவும்
உள்ளத் திருக்குமற் றுத்தம ருகவும்
ஒப்புர வுந்தப்பி யூரைவிட் டேகவும்
வெள்ளத் திருக்கரு ணையூடு கோகவும்
மெய்யன் குணங்குடிப் பைய னுமாகவும். (கனவு)

5. வேசைய ராசையை வேரோ டறுக்கவும்
வெற்றிக் கொடிகட்டி மீசை முறுக்கவும்
பேசறி யாவுமர் போறு ளிருக்கவும்
பேயரைப் போலும் பிதற்றிச் சிரிக்கவும்
வாசிகடத்தி வழியைக் குறுக்கவும்
வாசற்படி கிட்டவந்து நெருக்கவும்
ஓசைமணிமண்ட பத்தைத் திறக்கவும்
உச்சங் குணங்குடிக் குட்சற் றிருக்கவும். (கனவு)

6. என்னைக் கெடுக்குமென் றன்னைக் கெடுக்கவும்
என்குரு பாதத்தை யெட்டிப் பிடிக்கவும்

பின்னிய பாசந்தன் பின்னல் விடுக்கவும்
பித்தம் பிடித்த மனத்தை யொடுக்கவும்
மன்னும் பரவொளி யும்பந் தடிக்கவும்
மாயைப் பசாசினை மண்ணில் மடிக்கவும்
கன்னலை யொத்தபே ரின்பம் படைக்கவும்
கர்த்தன் குணங்குடிச் சித்துங் கிடைக்கவும். (கன

7. வஞ்ச மறலிக்கு மஞ்சா திருக்கவும்
வஞ்சி யரைமுத்தங் கொஞ்சா திருக்கவும்
கஞ்சா வபின்வர்க்கங் கசப்பா யிருக்கவும்
காசாசை கொண்டு கலங்கா திருக்கவும்
நஞ்சாப் ரபஞ்சர்க்கு நஞ்சா மிருக்கவும்
நவகண்ட யோகநா லஞ்சா மிருக்கவும்
நெஞ்சம் பதைப்பற்ற நெஞ்சா மிருக்கவும்
நித்தன் குணங்குடி நித்த மிருக்கவும். (கனவு)

8. பட்டிப் பசுவையுங் கட்டியே போடவும்
பாற்பசு வுங்கட் டவிழ்த்துக்கொண் டோடவும்
மட்டங் குதித்துக் குதித்துக்கொண் டோடவும்
மதிமண்ட லஞ்சென்று மருவியூ டாடவும்
கட்டமு துண்டு களைதீர காடவும்
காலனை யுங்காலைக் கொண்டுதை போடவும்
பட்டப் பகற்போ லருள்வந்து மூடவும்
பாக்ய குணங்குடிப் பாக்யனைக் கூடவும். (கனவு)

9. மண்ணுன மூவாசை மாட்டேனென் றோடவும்
மாறு வனுபூதி வந்தெனை மூடவும்
எண்ணுத வெண்ணமெல் லாம்விட்டுப் போடவும்
என்றன் பிரானரு ளென்றனைத் தேடவும்

புண்ணுளர் போலும் புலம்பிகொள் வாடவும்
போதப் பரவொளி பம்பர மாடவும்
விண்ணுடர் போற்றி செயவினை யாடவும்
மேலைக் குணங்குடி சாலையைக் கூடவும். (கனவு)

10. அத்துவி தப்பிர ணவம்வக் தெற்றவும்
ஆனந்த மான பரமும்வக் தெற்றவும்
கர்த்தவி யத்தின் கடாக்ஷம்வக் தெற்றவும்
கங்கற்ற பொருள் கங்கைவக் தெற்றவும்
முத்திக்கு வித்தான மோனம்வக் தெற்றவும்
முப்பாழ் முடிவான மோக்ஷம்வக் தெற்றவும்
சத்துச்சித் தானந்தஞ் சற்றுவக் தெற்றவும்
சாந்தக் குணங்குடி தானுவக் தெற்றவும். (கனவு)

11. கண்டன வெல்லாங் கனவாகக் காணவும்
கண்ணுடிக் குள்ளொளி போன்முகங் காணவும்
தொண்டரசை மூன்றுக் தொலைக்திடக் காணவும்
சுத்தமா யப்படி கச்சுடர் காணவும்
எண்டிசை யுக்தொழு மெங்கோனைக் காணவும்
ஏகபராபர வாகனைக் காணவும்
கண்டங் கடக்தகா தாக்களைக் காணவும்
கடவு ளெனுங்குணங் குடியானைக் காணவும். (கனவு

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

கம்பினபெருக் கருடருகற் குணங்குடியா னைகுரு நாதன் பாதம், கம்பினபேர்க் கும்பர்களும் பணிசெய்வ ரெனமறைகள் வில்லை யாலே, கம்புமன்பர் போலுமிக் தப் பாவியே னைக்காரு காடிகாடி, கம்பினதற் கந்தகுணங் குடியான்செய் ததுவுமென்ன ஞாயக் தானே.

இராகம்-செஞ்சுருட்டி-சாப்பு-தாளம்.

பல்லவி.

நம்பினதற்குக் குணங் குடியான் செய்த
ஞாயத்தை யென்ன சொல்வேன்.

அநுபல்லவி.

பம்பரம்போற் சுற்றி யயராமலு மழியாப்
பதிதந்தெனைப் பதித்திடவும்-பர
கதிவந் தெனக்கெதிர்த் திடவும்-ஞான
மதியுந் தெனக்குதித் திடவும். (நம்பின)

சரணங்கள்.

1. உள்ளதெல் லாங்கொள்ளை கொண்டுகொண் டேயொரு
ஓட்டையோ டென்கையிற் கொடுத்தான்-கேளுங்
கள்ளரைப் போற்கொள்ளை கொண்டதும் பற்றும்மற்
காவற் கிடங்கினு மடைத்தான்-அந்தக்
கொள்ளிக் கண்ணனென்னை யுள்ளுக்குள் ளேவிட்டுக்
கொல்லாம லேகொன்று மடித்தான்-ஒரு
எள்ளள வேனு மிரக்கமில் லாமலே
என்கா லுக் கும்விலங் கடித்தான்-சொந்தத்
தொள்ளியைப் போல்வைத்தும் படைத்தான்-காய
மூள்ளு மூள்ளாகவும் வடித்தான். (நம்பின)

2. பஞ்சைகள் போலென்றன் பாட்டிற் றிரிந்தேன்
பிடாரியைப் போல்வந்து பிடித்தான்-யார்க்கும்
அஞ்சாத கண்டனேவாவென் றெனைப்பார்த்
ததட்டிப் பல்லைப்பல்லைக் கடித்தான்-யானுங்
கெஞ்சக் கெஞ்சவாயை மூடுமூ டென்றென்னைக்
கீழேகா லைவாரி யடித்தான்-கள்ளும்

கஞ்சா வபின்வகை கொள்வார்க் கேயான் றேடின
கன்மமெல் லாம்வாரிக் கொடுத்தான்-என்னைக்
கஞ்சிக்குச் சாம்படிக் கடித்தான்-அவன்
கெஞ்சி லிருந்ததை முடித்தான். (நம்பின)

3. பெற்ற தகப்ப னமக்கிவன் றுனென்றும்
பெற்றோர் பிறந்தாரை மறந்தேன்-கொஞ்சப்
புத்தியி னலவன் பின்னாலே யேகான்
புழுக்கப் பயல்போலுந் திரிந்தேன்-என்னை
முற்றிலுங் காப்பாற்று வானென்று நம்பி
முடிமேலு மேற்றிக்கொண் டிருந்தேன்-அதைச்
சற்றேனு மெண்ணமை லென்முக நோக்கிநீ
சாவக் கடவதென் றறைந்தான்-இன்னும்
மெத்த மெத்தவெல்லாம் பறைந்தான்-ஒரு
மித்து நின்றிப்படிக் கிறைந்தான். (நம்பின)

4. உண்டுடுத் துப்பூண்டு சையோகித் துச்செல்வத்
தோடுறு நாளில்வக் தடுத்தான்-எந்தச்
சண்டாள னென்னத்தைக் காதிலு ரைத்தானோ
சடுதியில் வந்தென்னைக் கடுத்தான்-உள்ள
பண்டம் படுதலை யெல்லாங் கைக்கொண்டுமென்
பண்டக சாலையுங் கெடுத்தான்-தன்னை
அண்டின பேபெல்லா மாளாக வும்வாரி
அளவற்ற பாக்யத்தைக் கொடுத்தான்-பின்னுந்
தொண்டுசெய் யென்றென்னைத் தடுத்தான்-யாலுங்
கொண்ட மூவாசையை விடுத்தான். (நம்பின)

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

எங்கள் குணங்குடி யானே தனக்கேதா னவனே
மின்னங் கேளீர், எங்கள் குணங்குடி யானே யெனக்கு

மவன் றனக்குமிடை யில்லை யென்றான்,'எங்கள் குணங் குடியானே தனக்கு மற்றை யெவர்க்குமா யெங்கு மானல், எங்கள் குணங் குடியானை யென்றைக்கோ காண்பேனென் றிரங்கினேனே.

இராகம்-தன்னியாசி-சாப்பு-தாளம்.

பல்லவி.

எங்கள் குணங்குடியானை என்றைக்கோ காண்பேன்.

அநுபல்லவி.

தங்குபே ரின்பந்தருமென் றம்பிரானை. (எங்)

சரணங்கள்.

1. அங்கிங்கென்ற தெங்கும் பிரகாச மாய்கின்ற
செங்கமல பீடமிசை செங்கீரை யாடும். (எங்)

2. சாசுவத மானந்த சகசநிஷ் டையில்
ஓசைமணித் தீபமதி லொன்றிக் கொண்டுளான். (எங்)

3. பொற்பிரபைக் கொப்பான கர்ப்பூர தீபம்போல்
விற்புருவ மையமணி விளக்காய்கின்ற. (எங்)

4. உனக்குள் காணுகவும் என்றனக்குள் நீயாகவும்
எனக்குள் காணுனக்குள்நீ யென்றதாய்கின்ற. (எங்)

5. அவனன்றி யணுவொன்று மசையா தெனுமொழிக்
கிவனென்று சொல்லவும் வல்லவ னாகியேகின்ற. (எங்)

6. அண்டபிண்ட மதற்கு மப்புறத்துக் கப்புறமுங்
கொண்டபெரும்பெருமையுங் கொண்டபெரும்பொருளான

7. ஆர்க்கு மரிதாகிய பேராசை மிகவுங்கொண்டு
பார்க்கக் கண்ணாயிரமும் படைத்துக் கொண்டுகான்.

8. நோக்கினுலுநோக்கொண்ணுது நொக்குக்குநோக்காய் நின்று
வாக்கு மனமற்ற பெருமா னவனாய்கின்ற. (எங்)

9. பொன்னில் மாதராசையும் பூமிதனக் கேயளித்து
மன்னுமுனி வர்க்குதவு மன்னவன் ருனை. (எங்)

10. வஞ்சாம னவஞ்சி யருமஞ்சி யொஞ்சவும்
அஞ்சிபுலவேடருமென் றனைக்கெஞ்சி யஞ்சவும். (எங்

11. பெண்கொண்ட பேர்போலெனை யு மண்கொண்டே போமுன்
கண்கொண்டமணியாய்கின்று காட்சியேதரவும்.

கொச்சகக்கலிப்பா.

என்னை மறந்தே னிருந்தேன் வெகுகாலம்
என்னை மறந்திப்போ திறந்தா லிதுகலமோ
என்னை யறிவா லறிய வெளியில்மகிழ்
என்னை யறி வித்தாளா யெந்தாய் குருபாமே.

இராகம்-ஆனந்தபைரவி-ஏக-தாளம்.

பல்லவி.

என்னை யறிந்தேனே-இனி
ஏகாந்த மானேனே.

அநுபல்லவி.

தன்னை மறந்து தலைகீழாய் நில்லாமல்
என்னை மறந்து முனைவினைக் திட்டபோது.

சரணங்கள்.

1. பார்க்குந் தினக்தோறும், பரிபூரணங் கண்டேனே
நோக்கு மிடக்தோறும், நல்லதூரினிற் சென்றேனே
ஏற்கை யுடனே யிருள்வெளி யாயிட
வாக்கு மனமறத் தாக்கிய போதினில். (என்னை)

2. உப்புக் குரித்தான, உடலுக்கு விருக்தேனே
செப்ப முடனழகா, யெற்கது சிங்கா சனக்தானே
சப்பரம் போலதைத் தப்பாமற் சோடித்தும்
இப்புற மப்புற மொப்புற வாக்கும்போது. (என்னை

3. காடுமலைக ளெங்கும், பெருங்கானல் பிறந்ததுபோல்
ஆடிய சக்கரமா, யகண்டா திசைக்ததினுல்
பாடிய நூலினைப் பார்த்தலை யாமலவ்
வேடிக்கை வீட்டில் விளையாடும் போதினில் என்னை

4. கன்ன மிடுங்கருவி, கரணங்களைச் சுட்டேனே
சின்னப் படுஞ்சடத்தைச், சிறைச்சாலையி விட்டேனே
நின்னைய மான குணங்குடி காதனை
உன்னியெல் லாம்புறமோட் டியபோதினில். (என்

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

பெண்களுக்குப் பேயுமன மிரங்கிடுமென் றெவ்வுலகும்பேசக் கேட்டேன், பெண்களுக்குப் பேயுமன மிரங்கியொரு பேச்சேனும் பேசக்கேளேன், பெண்களுக்கு மண்களிக்கப் பெற்றபிள்ளை யாகியென்மேற் பிரியம்வைத்த, பெண்களுக்குக் குணங்குடி வாழ் வெய்தும்படிக் குபதேசம் பேசுவேனே.

இராகம்-சௌராஷ்டிரம்-முகாரி-சாப்பு-தாளம்.

பல்லவி.

தாய்மார்களே பாவி சொல்வதைத் தான்சற்றுத்
தன்னாமற் கேட்டுக் கொள்வீர்.

அநுபல்லவி.

பூமா தேவியானே யாக நரகத்திற்
போகாம லும்பாது காக்குந்-தீயில்
வேகாம லும்கையைத்தூக்கும்-பாவி
ஆகாம லுமுகம் பார்க்கும். (தாய்)

சரணங்கள்.

1. பொன்னுசை காட்டிப் புருடருமையொரு
புண்யமும் செய்யாமற் கொடுப்பார்-பின்பு
சொன்னத்தை வாரி யிறைப்பார்-கடைசியில்
தோட்டி கையி லுமை விடுப்பார்-உங்கட்
கென்னசொன் னலும் தெரியவில்லையினி
ஏதுபதே சத்தைப் படிப்பேன்-ஐயோ
தன்னாலே தாங்கெட்டா லன்னுவி யென்செய்வான்
தண்ணீரைக் கண்ணினுல் வடிப்பன்-அவன்
சொன்னதைக் கேட்கிற்கை பிடிப்பன்-உன்னை
முன்னே குணங்குடி கொடுப்பன் (தாய்)

2. பெண்ணாலே கெட்டோமென் றுங்களைத்திட்டாத
பேரை யுலகத்திற் கண்டிலேன்-என்றன்
கண்ணுனே யுங்களுக் கொத்தாசை சொல்லிக்
கருத்தி லுவப்பாரைக் கண்டிலேன்-நாளு
மண்ணுசை வாசை மயக்கங்கொண்டே பாவ
மண்ணை வாயிற்போட்டுக் கொள்ளுதீர்-இன்னும்

நண்ணருஞ் சொர்க்கப் பதத்தையும் விட்டு
நரகக் கனல்மூட்டிக் கொள்ளுறீர்-அதை
எண்ணமற் றுன்விட்டு நீக்கினல்-உமக்
கண்ணல் குணங்குடி வாய்க்குமே. (தாய்)

3\. புதுப்பானே தன்னையுங் கரிப்பானே யாக்குவார்
பொன்னுன மேனியும் போக்குவார்-சோதி
மதிப்போ லிவர்முகம் வரவோடுபோலாக
வாலேப் பருவத்தைப் போக்குவார்-இன்னும்
முதுகிற் கூனுமாக்கிக் கோலுங்கை கொடுத்துங்கள்
மூர்க்கமெல் லாமறப் போக்குவார்-இவள்
கதிகெட்ட கிழகாரி யென்று புறத்திண்ணேயிற்
கடத்திவைத் துயிரையும் போக்குவார்-அந்தச்
சதிகேட ருறவைத்தா னீக்கினல்-பர
கதிதருங் குணங்குடி வாய்க்குமே. (தாய்)

4\. தாங்காத மையலுந் தருகுவர்-பின்பும்மைத்
தளரு நரை யெருமை யாக்குவார்-தூக்குவார்
தூங்கி விழுந்தொத்த லாககரம் பென்புக்
தோலுந் துருத்தியு மாக்குவார்-முகம்
வீங்கித் தலேநடுங்கிக் கையுங்கா லுமுடங்கி
வேடிக்கை யாங்கிழவி யாக்குவார்-மூச்சை
வாங்கிக் கொக்குக்கொக்கென் றிருமி யிருமிக்கொண்டு
வலிக்குங் கிடைபிணமு மாக்குவார்-அந்த
தீங்கர்க ளுறவைத்தா னீக்கினல்-அருள்
ஓங்குங் குணங்குடி வாய்க்குமே. (தாய்)

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

மீசையுள் ளாண்பிளேச் சிங்கமா வார்களோ முகத்தின் மயிர் விரித்தோரெல்லா, மீசையுள் ளாண்பிளேச் சிங்க

மெவனவன்காண் குணங்குடிபரல் விரைந்து கொண்டோன், மீசையுள் ளாண்பிளேச் சிங்கமாகாதா னெவைக்காவான் விசையோ டென்பேரல், மீசையுள் ளாண்பிளேச் சிங்கமென் கூட மூலேவிட்டு வெளிவாரதோ.

கண்டனம்

இராகம்-அடாணு-சாப்பு-தாளம்.

பல்லவி.

மீசையுள் ளாண்பிள்ளேச் சிங்கங்களென் கூட
வெளியினில் வாருங்கள் காணும்.

அநுபல்லவி.

காசி நிரம்பவு மயிர்தா-னிரண்டுகால்
நடுவினு மொரு கூடை மயிர்தான்
ரோசங் கெடுவார்க ளென்கடை மயிர்தான்-குணங்
குடிகொண்டா லென்னுயிர்க் குயிர்தான். (மீசை)

சரணங்கள்.

1. படிக்கும் படிகடக்கப் படிக்காலோபிகள் மோக்ஷப்
பதமற்றுப் போனுலும் போகட்டும்-அவர்
முடிக்கு முடிதரித்து முடியமுடிய வாழ்ந்து
முடிந்து முடிபோனுலும போகட்டும்-இன்னுங்
குடிக்க கஞ்சியு மற்றுக் குண்டிக்குந் துணியற்றுக்
குருடாராய்ப் போனுலும் போகட்டும்-என்னே
அடித்தாலுமெலும்பெல்லா மொடிந்தாலு மவர்க்கஞ்சேன்
அடித்தா லடித்துக்கொண்டு போகட்டும்-அந்தக்

கெடுவார்க ளென்கடை மயிர்தான்-குணங்
குடிகொண்டா லென்னுயிர்க் குயிர்தான். (மீசை)

2. மடையரெல் லாங்கூடிக் கூத்தாடிக் கூத்தாடி
வையாளி போட்டாலும் போடட்டும்-இன்னும்
விடிய விடியவும் பரத்தையர் மடிகளில்
விளையாடி னும்விளை யாடட்டுங்-கள்ளுக்
குடியரெல் லாங்கள்ளைக் குடித்துக் குடித்தவர்கள்
குடிகெட்டுப் போனாலும் போகட்டும்-ஞானம்
படியாரெல்லா மென்னைப்பழித்துப் பழித்துக்கொண்டு
பகைத்தாற் பகைத்துக்கொண்டு சாகட்டும்-அந்தக்
கெடுவார்க ளென்கடை மயிர்தான்-குணங்
குடிகொண்டா லென்னுயிர்க் குயிர்தான். (மீசை)

3. நெடுமரம் போலோங்கி வளர்ந்து மறிவற்றவர்
நெருப்புண்ணப் போனாலும் போகட்டும்-அவர்
இடுகுட்டிச் சுவரைப்போ லிருக்தென்ன விறந்தென்ன
எப்படிப் போனாலும் போகட்டும்-இன்னுங்
கொடும்பு மிடும்பும் வம்புங் குடிகேடுங் குடிகொண்டு
கூத்தாடி னாலுங்கூத் தாடட்டும்-என்னை
மடியிற்கை போட்டிழுத் தலகினா லடிபோட்டு
மல்லாடி னாலுமல் லாடட்டும்-அந்தக்
கெடுவார்க ளென்கடை மயிர்தான்-குணங்
குடிகொண்டா லென்னுயிர்க் குயிர்தான். (மீசை)

4. கடுகாய்க் குட்டிகளான படுகுட்டிகண் மாயைக்
கதவிடுக் கினிற்பட்டே சாகட்டும்-புலிக்
கடுவாய்க்குங் கொடிதான படுபோக்கிலி கள்சும்மா
கடுகாகில் விழுந்தே வேகட்டும்-சுற்றக்

கெடுபூண்டாக மூளைத்த கொடுமாடு பிடுங்கிகள்
கெடுபூண்டுக ளாய்த்தானே போகட்டும்-இன்னும்
கெடுமாம் போற்சொத்த மடவொப் பாக்குடிக்கிகள்
கெடுமாம் போற்றுனே யாகட்டும்-அந்தக்
கெடுவார்க ளென்கடை மயிர் தான்-குணங்
குடிகொண்டா லென்னுயிர்க் குயிர் தான். (மீசை)

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

சாகாமற் செத்திருக்குஞ் சற்குருவின் குணங்குடியைச் சார்ந்தோ மாகிற், சாகாமற் செத்திருக்குஞ் சாயுச்ய பதந் தருஞ் சாட்சாதி யாக்குஞ், சாகாமற் செத்திருக்குந் தன் மயத்தோர்க்குற்ற பெருந் தகையுங் காட்டுஞ், சாகாமற் செத்திருக்கு முத்தியுஞ் சித்தித்திடுங்காண் டனக்குந் தானே.

இராகம்-பரிசு-ஆதி-தாளம்.

பல்லவி.

போவோங் குணங்குடிக் கெல்லோரும்-புறப்படுங்கள்
போவோங் குணங்குடிக் கெல்லோரும்.

அநுபல்லவி.

பாவங்கள் சோர்ந்திடும் காய்ந்திடும் நீங்கிடும்
பாய்ந்திடு மோய்ந்திடுந் தீய்ந்திடு மிக்ஷணம். (போ)

சரணங்கள்.

1. அண்டம் புவனங்கொண்ட நிஷ்டை-சாதிக்கவறியா
மூண்டம் முழுதும்பட்ட கட்டை-மணித்தேரோடு

தண்டிகை யானைகுதிரை யொட்டை-வைத்தேறிவாழுஞ்
சண்டியுட லொடலொட்டை-மின்னார்களின்பங்
கொண்டு மயங்கிக்காம வெட்டை-கஞ்சுண்டுசாமி
ரண்டுங் கெட்டவனேபேய் மட்டை-அவனுக்கந்தத்
தொண்டாசை கால்ரண்டுந்தான் குட்டை-விழிகுருடர்
நண்டளந்த நாழியவர் நமக்கேண்கா ணந்தத் தெஷ்டை (போ)

2. கோத்திர ளானகாய பொய்க்கூடு-ஒருவருக்குஞ்
சாற்றுக் காகா நாற்றக் கருவாடு-சொறிமலமூ
மூர்த்திரமு மூற்றிவைத்த வோடு-இடுமடையர்
போற்றுதற் கேற்றசண்டி மாடு-உயிர்விடுக்குங்
கூற்றுவன்கை யாயுதத்திற் கிடு-எக்தெங்தத்திக்கிற்
பார்த்தாலும் பிறலுள்ள வீடு-சமைத்தெடுத்த
சோற்றுற் குவித்துவைத்த மேடு-இவையறியார்
ஏற்றபடி கெட்டலைவ ரேனமக்கு மந்தக்கேடு. (போ)

3. செட்டுசெய்ய வேண்டிய தில்லை-பரதேசிகள்
சட்டியெடுப்பதுவுந் தொல்லை-பிச்சைக்கஞ்சிக்குத்
திட்டமுடன் வேணுமோ கல்லை-உறங்குதற்குக்
குட்டிச் சுவர்களிலுண் டெல்லை-ஈடுகமக்குப்
பட்டணத்தி லெவரு மில்லை-அறிவுகெட்ட
மட்டி யறியானிந்தச் சொல்லை-மனக்குரங்கைக்
கட்டுவைத்தா லுங்காட்டும் பல்லை-அதைப்பிடித்த
துட்டமாமாயைப் பசாசைத்துரத்தி துரத்திக்கொல்ல (போ)

4. சோம னுதயம் பாடுசாயும்-எழுஞ்சூரியன்
காய மில்லாமலறத் தேயும்-பரவெளியில்
கேம முடன்சுழினை யாயும்-மதியமிர்த
வாம மடைதிறந்து பாயும்-தத்வரதியோடு

காமக் குரோதங்களை தீயும்-தீயாதுயோக
பூமி விளையுமரு ணேயம்-விளைந்தபோகம்
நாமோ கைக்கொள்ளும்படி ஞாயம்-கிடைப்பதற்குச்
சாமுன்செத்த சற்குருபாதம் சார்ந்திருப்பதுவேயுபாயம் ()

5. கொங்கும் நுரையுமாகப் பொங்கும்-காமக்கடலுன்
மூங்கும் பாவியுடலைச் சொங்குஞ்-சொறிசிரங்கும்
வங்கும் கமகமென்று திங்கும்-நரம்புந்தோலுந்
தொங்கு மினுமினுப்பு மங்கும்-இல்லந்துறந்த
சிங்கங் கட்கில்லை காணும் பங்கம்-மேனியுயர்ந்த
தங்க மயமாய்கின் றிலங்கும்-அவர்கட்கன்றோ
தங்குஞ் சாயுச்யபதந் தங்கும்-நமக்குமதிற்
பங்குந் தந்துதவிப் பராபர மருளிரங்கும். (போ)

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

ஐயன்குணங் குடியானை யன்றிவே றுண்டென்று ளாய்ந்து பார்த்தேன், ஐயன்குணங் குடியானை யன்றிவே றொன்று மென்னுளாயக்காணேன், ஐயன்குணங் குடியானே யானேயென்றறிந்தபின் பென்னறிவாய்கின்ற, ஐயன் குணங்குடியானே யதிமோகத்திரு நடனமாடு வானே.

இராகம்-தோடி-சாப்பு-தாளம்.

பல்லவி.

அதிமோகத்திருநடனம் புரிந்தானெங்கள்
ஐயன் குணங்குடியான்.

அநுபல்லவி.

அதிமோகத்திரு நடனம் புரிந்தானேயன்
ஆர்க்குந்தெரியா தென்றன் மூக்கு முனைக்குமேனின்று.

சரணங்கள்.

1. கஞ்சினிகளைப்போலுங் காலுங் காலிற்சதங்கைதொட்டுக்
கானின்மயில் போனின்று களித்து நடனமிட்டு
வஞ்சியர்க்காளாக்க வருமூவாசையை விட்டு
வஞ்சகமனைக்காலா லுதைத்தொருகான் மட்டு
மடித்துக் கொண்டெனைக்கையிற் பிடித்துக்கொண் டருண்
முறை, படிந்துக்கொண்டுளத்தன்பு துடித்துக்கொண்ட.

2. முத்துக் கெதிர்நின்று முச்சுடரும்பம்பர மாட
மோகமணிமாலை பொன்முலைமேற்பின்னலு மாட
வருத்தபரஞ்சோதிசின் றருகிற்பாய்ந்து பந்தாட
வாலையம்பிகைகாலை மடித்து நடனமாட
வடித்துக்கொண்டமிர்தத்தைக் குடித்துக்கொண்டானந்தம்
படித்துக்கொண்டடிக்கடி கடித்துக்கொண்ட. (அதி)

3. பஞ்சரிக்கும்பல மறைகூடாளங்கள் போடப்
பரிபூரணனந்தம் படிந்துமத்தளம் போடக்
கொஞ்சுமனவசியுங் கொஞ்சிவையாளிகள் போடக்
கோலாகலங்கள்பாடிக் கூத்துமேற்கூத்துகள் போடக்
கூதித்திக்கொண் டவன்றன்னை மதித்துக்கொண்டரு
டன்னை பதித்துக்கொண்டெனை வாழ்த்தித் துதித்துக்
கொண்ட. (அதி)

4. கலசநிறையமிர்த கதிருமிழ்மதிப் பாலை
களகளெனவேபூட்டிக் களைதீர்க்கமணி மாலை

மலைபோலெழுந்துவந்து மகிழ்ந்திந்தப்பயன் மேலே
மாறுக்கருணை வைத்துத்தலைமேற் காலே
மடித்துக்கொண் டவன்பல்லைக் கடித்துக்கொண் டெமன்கையை
ஒடித்துக்கொண்டு மெய்த்தவம் முடித்துக்கொண்ட. (அதி

கீர்த்தனைகள் முற்றுப்பெற்றது.

ஆனந்தக் களிப்பு.

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

எங்கள் குணங்குடியானே யெண்ணரும்பே ரருளாய் நின் றிலங்கையாலே, எங்கள் குணங்குடியானே யெண்ணரும்பே ரருளே யென்றிறைஞ்ச வேண்டும், எங்கள் குணங் குடியானே யெண்ணரும்பேரருளே யென் றிறைஞ்சி நின்றால், எங்கள்குணங் குடியானே யெண்ணரும்பேரரு ளாய்நின் றிரங்குவானே.

எங்கள் குணங்குடி யானே-நமக்
கின்னுமருள்புரிவா னடிமானே. (எங்கள்)

அத்துவிதப் பொருள்காப்பாம்-எனக்-கானந்தமான பராபரங்காப்பாம், கர்த்தவியத்தருள் காப்பாம்-என்று-நாட் டத்தன் காரணங்காப்பருளித்தான்—எங்கள் குணங்குடி யானே.

முத்தரெல்லாரையும் போற்றுய்-தவ-மோன நிலைக் குருநாதனைப் போற்றுய், சித்தரெல்லாரையும் போற்றுய்-என்று-சிறக்குந்தன் போற்றுத லேயருளித்தான்—எங்கள் குணங்குடியானே. (2)

கட்டுப்படாவச் சுமட்டங்-காலைக்-கட்டவறி யாரைக் காலினால் வெட்டும், வெட்டிய கால்களை வெட்டும்-என்று-வேகத்துடனே விதித்தருளித்தான்—எங்கள் குணங்குடி யானே. (3)

மூலப்பிராணனே நோக்கும்-நோக்கின்-முத்தியின் வீடு முமக்கேவந்து சாய்க்கும், வாலப்பிராயமும் வாய்க்கும்-என்று-வாசியினேற்ற மகிழ்ந்தருளித்தான்—எங்கள் குணங் குடியானே. (4)

பன்னிரு கால்வெளி மானே-வெளி-பாயாம லுள்ளே யடங்கிடத்தானே, சென்னியிலூறுஞ் செந்தேனே-என்று-சிந்தை வைத்துக்கட்டித் தந்தருளித்தான்—எங்கள் குணங் குடியானே. (5)

தேகாபிமானத்தை வெல்லும்-யோக-நிஷ்டை பெற் றோர்க்கு மனமதிற் செல்லும், மோகாதி போகத்தை வெல் லும்-என்று-முற்றச்செய்தே முழுதும் மருளித்தான்—எங்கள் குணங்குடியானே. (6)

ஆயுங்கலையைக் குறைக்கும்-ஆரும்-அங்கணக்கோபுர வாயிற் றிறக்கும், பாயும்மதிப்பால் சுரக்கும்-என்று-படிக் கும் படியேறும்படிக் கருளித்தான்—எங்கள் குணங்குடி யானே. (7)

மூலகனலினை மூட்டும்-ஒளி-மூக்குமுனையிற் றிருகட னங் காட்டும், பாலைக்கறந்துனக் கூட்டும்-என்று-பட்சம் வைத் தென்னைப் படைத்தருளித்தான்—எங்கள் குணங் குடியானே. (8)

கண்டங்கடத்தி வைத்தேற்றும்-இன்னும்-காரண மான கடவுளைப் போற்றும், மண்டியமிர்தத்தை தேற்றும்-என்று- மாசிலுபதேசம் வைத்தருளித்தான்—எங்கள் குணங்குடி யானே. (9)

கற்பமுறைகையிற் காட்டும்-வருங்-காலரைக் காலானு தைத்துவிட் டோட்டும், அற்பவுடற் கமுதாட்டும்-என்று-ஆசை பூட்டிபூட்டி யாண்டருளித்தான்—எங்கள் குணங் குடியானே. (10)

ஓங்கார தீக்ஷையுஞ் சொல்லும்-காணும்-உன்றனைக் கொல்லுமனந் தனைக்கொல்லும், ஆங்காரந் தன்னையும் வெல்லும்-என்று-ஆதரித்தா தரித்தாண் டருளித்தான்— எங்கள் குணங்குடியானே. (11)

நீங்காது போகமும் வாய்க்கும்-தீப-நெற்றிக் கண்மத் தியில்வைத் தொளியாக்கும், தூங்காத தூக்கமுந் தூங்கும், என்று-தூண்டித் தூண்டி முச்சுடரருளித்தான்—எங்கள் குணங்குடியானே. (12)

பாங்காக ஞானம் படைக்கும்-ஐந்து பாழ்ம்புல வேடரைப் பல்லை யுடைக்கும், தாங்காத மையல் கிடைக்கும்-என்று-சாதுரியமாய்த் தடுத்தருளித்தான்—எங்கள் குணங்குடியானே. (13)

மேஹாரு வெட்டியைக் கூடும்-கூடி-மேலைமுச் சந்தியில் வையாளியோடும், காலாரிக்கொள்ளவு காடும்-என்று-காட்டாமற் காட்டிக் கணித்தருளித்தான்—எங்கள் குணங்குடியானே. (14)

வஞ்சிய ராசையை விள்ளும்-விழி-மாயா மயக்கத்தை வீணென்று தள்ளும், கொஞ்சிக் குதிரைமேற் கொள்ளும்-என்று-கோபத்தைக்காட்டிக் குணமருளித்தான்—எங்கள் குணங்குடியானே. (15)

பாலைப் புசித்திட வேண்டும்-என்று-பராபரமுன்றன் பார்வைக்குத் தோன்றும், காலைப்பிடித்திட மீண்டும்-என்று- கள்ளத்தனமாய்க் கதியருளித்தான்— எங்கள் குணங்குடியானே. (16)

தூலத்தை யுங்கெட்டியாக்கும்-பின்பு-சூக்ஷத்தைக் கண்ண மிக வெளிதாக்கும், ஞாலத்தையும் விட்டு நீக்கும்-என்று-ஞாயமொப்பித்து கவின்றருளித்தான்—எங்கள் குணங்குடியானே. (17)

முண்டங் கென்று முபதேசம்-ஓதும்-முன்காலினைதங் கலீரென்றுபேசும், கண்டங்கடக்கவும் கூசும்-என்று-கண் டங் கடக்குங் கணக்கருளித்தான்—எங்கள் குணங்குடி யானே- (18)

தங்குதல் தம்பித்தலாகும்-நின்று-தங்காது கும்பித் தல்ரே சித்தலாகும், பொங்குதல் பூரித்தலாகும்-என்று-பூசை முறையும் புகன்றருளித்தான்—எங்கள் குணங்குடி யானே. (19)

முப்பாழ் முடிந்ததும் புத்தி-அந்த-மூன்றுக்கு முத்தி நடந்ததுசித்தி, அப்பாழ் விடிந்ததுவெற்றி-என்றே-யாரு மறியாவறி வருளித்தான்—எங்கள் குணங்குடியானே. ()

பொற்பிரபைபோ லொளி பூணும்-அதிற்-பொல்லாத காயமிறந்திடுங்காணுஞ், செப்புதற்கும் மனநாணும்-என்று-செப்பித்திரித்திச் சிரித்தருளித்தான் — எங்கள் குணங்குடி யானே. (21)

சோம்பலுந்தூக்கமு நீக்கும்-போது-சுகமது கொள்ள வும் போகாமலாக்கும், பாம்பான பெண்ணை போக்கும்-என்று-பாவி முகத்தையும் பார்த்தருளித்தான்—எங்கள் குணங்குடியானே. (22)

ஓங்கார வீடு கிடைக்கும்-அதன்-ஒன்பது வாயிலு மொக்க வடைக்கும், தேங்காயுங் கல்லை யுடைக்கும்-என் றும்-தேங்காய் தனைத்தின்னும் பாங்கருளித்தான்-எங்கள் குணங்குடியானே. (23)

கத்தனருளுங் கைகூடும்-முகக்-கண்முன் பரவொளி பம்பராடும், வித்தகனைத் தினந்தேடும்-என்று-வேதத்தி னால் விவரித்தருளித்தான்—எங்கள் குணங்குடியானே. ()

பூட்டை யுடைத்திட வேணும்-மனப்-பூட்டை யுடைக்க வைராக்கியம் வேணும், ஓட்டை யுடைத்துக் கொள்காணும்-என்றே-ஒருவர்க்குமாகா வுரையருளித் தான்—எங்கள் குணங்குடியானே. (25)

மூடியமாயைவிடியு-முன்னே-மோசப்படுத்து மூவாசை மடியும், ஓடியமிர்தம் வடியும்-என்றே-ஓதாமலோதி யுரைத் தருளித்தான்—எங்கள் குணங்குடியானே. (26)

எட்டெட்டை யோரெட்டுகட்டுங்-தூக்கும்-எண்ணுன் கையுமந்தவோ ரெட்டுகட்டும், முட்டுமீ ரெட்டையுங் கட்டும்-என்று-முன்னுன் கைகட்டி முடித்தருளித்தான்—எங்கள் குணங்குடியானே. (27)

பொங்குந்திரு வருள்வாழி- பரி- பூரணமான பரம் பொருள் வாழி, தங்குங் குருவருள்வாழி-என்று-தன்னருள் வாழியைத் தானருளித்தான்—எங்கள் குணங்குடியானே.

ஆனந்தக்களிப்பு முற்றுப்பெற்றது.

வாழி விருத்தம்.

வாழிமேல் வாழிவாழி மருள்வாரி வாழிவாழி
வாழிமேல் வாழிவாழி மருணேயம் வாழிவாழி
வாழிமேல் வாழிவாழுஞ் சிவஞானம் வாழிவாழி
வாழிமேல் வாழிவாழுங் குணங்குடி வாழிவாழி.

ஆக பாடல் 1011

மஸ்தான் ஸாஹிபு அவர்கள் பாடல் முற்றிற்று.

பிஸ்மில்லாஹி.

மஸ்தான் ஸாஹிபு அவர்கள்

திருப்பாட லகராதி.